தமிழ்நாடு அரசு

# அரசியல் அறிவியல்



## மேல்நிலை முதலாம் ஆண்டு

### தொகுதி – I

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டது

## பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனிதநேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு - 2018

(புதிய பாடத்திட்டத்தின் கீழ்
வெளியிடப்பட்ட நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்

© SCERT 2018

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்

www.textbooksonline.tn.nic.in



11th Std Political Science Tamil_Unit-0_Introduction.indd 2 6/21/2018 9:23:30 AM

# புத்தகத்தினை எவ்வாறு பயன்படுத்துவது?



**அறிமுகம்**
அலகைப் பற்றிய ஓர் சுருக்கமான விளக்கம்.

**விரைவு குறியீடு**
மாணவர்கள் தங்களின் அறிவை மேலும் விரிவுபடுத்திக் கொள்வதற்காக அவர்களைச் செயலூக்கப்படுத்தப் பயன்படும் பல்வேறு தகவல்களை உள்ளடக்கிய ஓர் குறியீடாகும்.

**கற்றலின் நோக்கங்கள்**
அந்தந்த அலகுகளின் முடிவில் மாணவர்கள் எதனைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற எதிர்பார்ப்பினை விளக்குகிறது.

**வரைபட விளக்கங்கள்**
அரசியல் நிகழ்வுகளின் கோட்பாடு மற்றும் நடைமுறை ஆகியவைகளை இணைத்து முறைப்படியாக விளக்க உதவும் ஒரு வரைபடம்.

**உங்களுக்குத் தெரியுமா?**
ஒரு தகவலைப் பற்றிய வியப்பான கருத்துக்களை மாணவர்களுக்குத் தருதல்.

**அருஞ்சொற்பொருள்**
பாடத்தில் கூறப்பட்டுள்ள சில சிறப்பான மற்றும் அதிக பரிச்சயமில்லாத சிறப்புச் சொற்களை மாணவர்கள் புரிந்து கொள்வதற்காக கொடுக்கப்படும் ஒரு விளக்கமாகும்.

**அறிவுப் பெட்டிகள்**
கொடுக்கப்பட்டுள்ள உள்ளடக்கத்திற்கு மேலும் கூடுதலாக உள்ளீடு செய்தல்.

**மதிப்பிடுதல்**
பாடத்தகவல்களை மாணவர்கள் புரிந்து கொண்ட விதம் பற்றி சரியான முடிவினை எய்துவதற்கானது.

**செயல்பாடு**
நம் பாடத்தினைப் பற்றி மேலும் சிறப்பாக புரிந்து கொள்ளவதற்கான ஒரு கூடுதல் செயலாகும்.

**மேற்கோள் நூல்கள்**
பாடங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்களை நன்றாகப் புரிந்து கொள்ளுவதற்காக மாணவர்கள் படிக்க வேண்டிய நூல்களின் பட்டியல்.

**விவாதம்**
மாணவர்களுக்கிடையே ஓர் பிரச்சனையை பற்றிய முறையான விவாதத்தை நடத்தி அதன் மூலம் ஒரு புதிய கருத்துத் தொகுப்பினை புரிந்து கொள்ளுமாறு செய்வதாகும்.

**மேலும் கூடுதலாக படிப்பதற்கான நூல்கள்**
பாடங்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்களைப்பற்றிய விரிவான மேல்தகவல்களை பெறவிரும்பும் மாணவர்கள் படிக்க வேண்டிய நூல்களின் பட்டியல்.

**நிகழ் ஆய்வு**
உண்மையாக வாழ்க்கை சூழலில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தினைப்பற்றி அறிவியல் அடிப்படையில் ஆய்ந்து எய்தப்படும் ஒரு ஆய்வு முடிவாகும்.

**வலைத்தள இணைப்புகள்**
வலைத்தளங்களின் இணைப்புகளால் கிடைக்கும் தகவல்களின் இணையதளப் பட்டியல்.

**உரையாடல்**
ஒரு பாடத்தினைப்பற்றி தெளிவாக புரிந்து கொள்வதற்காக நடத்தப்படும் ஒரு கருத்துப் பரிமாற்றமாகும்.

**தகவல் தொடர்பு தொழில்நுட்பம்**
மின்னணு சாதனங்களின் மூலம் மாணவர்களின் கற்றறிதல் மற்றும் சிறந்த கற்றுவித்தல் முறைகளையும் உள்ளடக்கியது.

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**
தலைசிறந்த அரசியல் சிந்தனையாளர்களின் கருத்துகளை மாணவர்களிடையே அவர்களின் அறிவுப்பெருக்கத்திற்காக எடுத்தாள்வதாகும்.

**சொற்களஞ்சியம்**
முக்கியமான வார்த்தைகளை மாணவர்கள் தமிழ்ப்படுத்தி புரிந்து கொள்வதற்காக உதவுவதாகும்.



11th Std Political Science Tamil_Unit-0_Introduction.indd 3 6/21/2018 9:23:31 AM

# அரசியல் அறிவியலில் வேலை வாய்ப்புகள்

**அரசியல் அறிவியல் மாணவர்களுக்கு ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. இவ்வாய்ப்புகளை உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்பு என என்று இரண்டு வகைகளாக நாம் காணலாம்.**

## A. அரசியல் அறிவியல் பாடத்தில் உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்புகள்

பன்னிரெண்டாம் வகுப்பு முடிந்தவுடன் கீழ்கண்ட படிப்புகளை மாணவர்கள் படிக்கலாம்.

- இளங்கலை (B.A)
- முதுகலை (M.A)
- இளமுனைவர்(M.Phil)
- முனைவர் (Ph.D)

நமது மாநிலத்தில் பல்வேறு அரசு கல்லூரிகள், அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் பல்கலைக் கழகங்களில் அரசியல் அறிவியல் பாடம் கற்பிக்கப்படுகிறது.

### A. 1) அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகள்

1. மாநில கல்லூரி, சென்னை
2. அரசு கலை கல்லூரி, கோயம்புத்தூர்
3. திருவள்ளுவர் அரசு கலை கல்லூரி, இராசிபுரம்,
4. லோகநாத நாராயணசாமி அரசு கலை கல்லூரி, பொன்னேரி, திருவள்ளுவர் மாவட்டம்.
5. அரசு கலை கல்லூரி, திருவெறும்பூர், திருச்சி
6. அரசு கலை கல்லூரி, சேலம்–07
7. இராஜேஸ்வரி வேதாசலம் அரசு கலை கல்லூரி, செங்கல்பட்டு
8. சென்னை கிறிஸ்துவ கல்லூரி, தாம்பரம், சென்னை.
9. பசும்பொன் முத்துராமலிங்க தேவர் கல்லூரி, உசிலம்பட்டி, மதுரை
10. பெரியார் அரசு கலை கல்லூரி, கடலூர்–1
11. பசும்பொன் முத்துராமலிங்க தேவர் நினைவு கல்லூரி, கமுதி, இராமநாதபுரம் மாவட்டம்.
12. SIET மகளிர் கல்லூரி, தேனாம்பேட்டை, சென்னை.
13. அண்ணா ஆதர்ஸ் மகளிர் கல்லூரி, சென்னை.

### A. 2) மாநில பல்கலைக் கழகங்கள்



நமது மாநிலத்தில் பல்வேறு பல்கலைக் கழகங்களில் அரசியல் அறிவியல் பாடம் கற்பிக்கப்படுகிறது அவையாவன:

1. சென்னை பல்கலைக் கழகம், சென்னை
2. அண்ணாமலை பல்கலைக் கழகம், சிதம்பரம்
3. மதுரை காமராஜர் பல்கலைக் கழகம், மதுரை
4. பாரதியார் பல்கலைக் கழகம், கோயம்புத்தூர் (அஞ்சல் வழி கல்வி மட்டும்)
5. அழகப்பா பல்கலைக் கழகம், காரைக்குடி (அஞ்சல் வழி கல்வி மட்டும்)
6. தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக் கழகம், சென்னை
7. மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம், திருநெல்வேலி (அஞ்சல் வழி கல்வி மட்டும்)

### A. 3) மத்திய பல்கலைக் கழகங்கள்

அரசியல் அறிவியல் பாடம் பல மத்திய பல்கலைக் கழகங்களில் கற்பிக்கப்படுகின்றது. எடுத்துக்காட்டு.

1. டெல்லி பல்கலைக் கழகம்
2. பாண்டிச்சேரி பல்கலைக் கழகம்
3. ஹைதராபாத் பல்கலைக் கழகம்
4. இந்திரா காந்தி திறந்தநிலை பல்கலைக் கழகம், புதுடெல்லி
5. காந்தி கிராம கிராமிய நிகர்நிலை பல்கலைக் கழகம், திண்டுக்கல்
6. ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம், புதுடெல்லி



11th Std Political Science Tamil_Unit-0_Introduction.indd 4
6/21/2018 9:23:31 AM

## A. 4) ஒருங்கிணைந்த பட்ட படிப்புகள்

இந்திய தொழில்நுட்ப நிறுவனம், சென்னை (IIT) ஐந்து வருட ஒருங்கிணைந்த முதுகலை பட்ட வகுப்புகளை மேம்பாட்டுப் படிப்புகள் மற்றும் ஆங்கில படிப்புகள் ஆகிய பாடங்களில் நடத்துகின்றது.

## A. 5) ஜவஹர்லால் நேரு பல்கலைக் கழகம், புதுடெல்லி

- மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகத்தின் தேசிய கல்வி நிறுவன தரவரிசையில் இந்தியாவில் இரண்டாவது இடத்தில் இப்பல்கலைக் கழகம் உள்ளது.
- இப்பல்கலைக்கழகத்தின் முதுநிலை, இளமுனைவர் பட்டப்படிப்புகள் அரசியல் அறிவியல் பாடத்திலும் பன்னாட்டு அரசியல் பாடத்திலும் வழங்கப்படுகின்றன.
- தேசிய அளவிலான நுழைவுத்தேர்வில் வெற்றிபெற்றால் மட்டுமே இப்பல்கலைக் கழகத்தில் சேர முடியும். முதுகலைப் படிப்பிற்கு கல்வி உதவித் தொகையை இப்பல்கலைக் கழகம் வழங்குகிறது. பல்கலைக் கழக மானியக்குழுவினால் நடத்தப்படும் தேசிய தகுதித் தேர்வில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு ஆய்வுப்படிப்பில் ஈடுபடும்போது கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

  இது ஒரு உறைவிடப் பல்கலைக் கழகமாகும். விருப்பப்படும் மாணவருக்கு விடுதி வசதி உள்ளது. மத்திய அரசாங்கம் அதிக நிதி வழங்குவதால் உலகத்தரமான கல்வி கிடைக்கப்பெறுகிறது.

  இப்பல்கலைக் கழகத்தில் அருமையான ஒன்பது மாடி நூலகம் உள்ளது.

  இது ஒரு மத்தியப் பல்கலை கழகம் மட்டுமல்ல, உண்மையிலேயே தேசிய பல்கலைக் கழகமாகும். எல்லா மாநிலங்களிலிருந்தும் மாணவர்கள் வந்து இங்கு படிக்கின்றனர்.

## A. 6) சென்னை மேம்பாட்டுப் படிப்புகளுக்கான நிறுவனம். (MADRAS INSTITUTE OF DEVELOPMENT STUDIES).

புகழ்பெற்ற பொருளாதார வல்லுனரான முனைவர். மால்கம் எஸ்.ஆதிசேசய்யா இக்கல்வி நிறுவனத்தை சென்னை அடையாறில் தொடங்கினார்.
இங்கு சமூக அறிவியல் பாடங்களில் ஆய்வு படிப்புகளை மாணவர்கள் மேற்கொள்ளலாம். அரசியல் அறிவியல் பாடத்தில் அரசியல் அமைப்புகள், ஆட்சி மற்றும் அதிகார பகிர்வு, வறுமை, பாகுபாடு, சமத்துவமின்மை,பாலினம்,சாதி மற்றும் பாரபட்ச முறைகளைப் பற்றிய படிப்புகள் போன்றவற்றில் மாணவர்கள் ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.

## A. 7) டாடா சமூக அறிவியல் கல்வி நிறுவனம் (TISS)

- இக்கல்வி நிறுவனம் மும்பை. ஹைதராபாத், கவுகாத்தி, துர்காபூர் ஆகிய இடங்களில் வளாகங்களை கொண்டுள்ளது.
- சமூக மற்றும் மனிதசேவையில் திறமைசாலிகளை உருவாக்குவது இக்கல்வி நிறுவனத்தின் நோக்கமாகும்.
- அரசியல் அறிவியல் மாணவர்கள் இக்கல்வி கூடத்தில் பல்வேறு தலைப்புகளில் ஆய்வுப்படிப்பை மேற்கொள்ளலாம். மேம்பாட்டு படிப்புகள் சட்டம், உரிமைகள் மற்றும் அரசமைப்பிலான ஆளுகை, சமூகப்பணி, பொதுக் கொள்கை மற்றும் ஆளுகை மனிதவள மேம்பாடு, பாலின படிப்புகள் போன்றவைகளில் ஆய்வுப்படிப்புகளை மாணவர்கள் மேற்கொள்ளலாம்.

## B. வேலை வாய்ப்புகள்.

அரசியல் அறிவியல் மாணவர்களுக்கு ஏராளமான வேலை வாய்ப்புகள் உள்ளன. அவர்கள் கீழ்கண்ட துறைகளில் சாதிக்கலாம்.

- நிர்வாகம்
- அரசியல்
- ஊடகத்துறை
- கல்வித்துறை (பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் ஆய்வு நிறுவனங்களில் கற்பித்தல் பணி)
- சமூகப்பணி
- காவல் நிர்வாகம்
- நீதித்துறை
- மற்ற போட்டி தேர்வுகள்
- அரசு சாரா நிறுவன மேலாண்மை.

## B. 1) மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையம் (UPSC)

- மத்திய அரசுப்பணியாளர் தேர்வாணையம் (Union Public Service Commission ) மத்திய அரசு பணிகளுக்காக பல்வேறு தேர்வுகளை நடத்துகின்றது. இவைகளில் குடிமைப் பணி தேர்வு என்பது மிக முக்கியமான தேர்வாகும். ஏறக்குறைய 24 வகையான மத்திய அரசு பணிகளுக்காக குடிமைப் பணி தேர்வு நடத்தப்படுகின்றது. இந்திய ஆட்சி பணி (IAS), இந்திய காவல் பணி (IPS), இந்திய வெளியுறவு பணி(I FS) போன்ற உயரிய பணிகளுக்கு இத்தேர்வு நடத்தப்படுகின்றது.
- இந்திய ஆட்சி பணி (IAS) அதிகாரிகள் உதவி ஆட்சியர், ஆட்சியர், இணைச் செயலர், துறைச் செயலர், முதன்மைச் செயலர் தலைமைச் செயலர் போன்ற பதவிகளில் பணி செய்வார்கள்.
- இந்திய காவல் பணி (IPS) அதிகாரிகள் காவல் உதவி கண்காணிப்பாளார், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், காவல் மண்டல தலைவர், காவல்துறை தலைமை.



11th Std Political Science Tamil_Unit-0_Introduction.indd 5
6/21/2018 9:23:31 AM

- இயக்குநர் போன்ற பதவிகளில் பணி செய்வார்கள்.
- இந்திய வெளியுறவு பணி (IFS) அதிகாரிகள் மூன்றாம் செயலர், இரண்டாம் செயலர், முதன்மை செயலர், வெளியுறவு செயலர் போன்ற பதவிகளில் பணி செய்வார்கள்.
- குடிமை பணி தேர்வு மூன்று கட்டங்களில் நடத்தப்படுகிறது. அவை முதல் நிலை தேர்வு, முதன்மை தேர்வு மற்றும் நேர்காணல் ஆகியவையாகும்.இம்மூன்று நிலைகளிலும் அரசியல் அறிவியல் பாடம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

### முதல் நிலை தேர்வு (Preliminary Test)

இது தகுதி காண் தேர்வாகும். இதில் இரண்டு தாள்கள் உள்ளன. அவை பொது அறிவு மற்றும் திறனறிவு தாள்கள் ஆகும். ஒவ்வொரு கேள்விக்கும் நான்கு பதில்கள் இருக்கும் சரியான பதிலை மாணவர்கள் தேர்ந்தெடுத்து OMR விடைத்தாளில் நிரப்பவேண்டும். ஏறக்குறைய இருபது சதவீத கேள்விகள் அரசியல் அறிவியல் பாடத்தில் இருந்து கேட்கப்படுகின்றன.

### முதன்மை தேர்வு(Main Exam)

- இந்நிலையில் ஏழு தாள்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். மதிப்பெண்கள் பொதுஅறிவுத்தாள் 250 மதிப்பெண்ணை பெற்றிருக்கிறது. இது முற்றிலும் இந்திய அரசியல், சர்வதேச உறவுகள் சம்மந்தப்பட்ட தாளாகும். மேலும், கட்டுரைத்தாளுக்கு 250 மதிப்பெண்கள் உள்ளன. பெரும்பாலும் அரசியல் அறிவியல் பாடங்களில் இருந்தே கேள்விகள் உள்ளன. மேலும் அரசியல் அறிவியலை விருப்பப்பாடமாக எடுத்தால் இரண்டு விருப்பப்பாட தாள்களுக்கு மொத்தமாக 500 மதிப்பெணகள் உள்ளன. முதன்மைத் தேர்வுக்கு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும் 1750 மதிப்பெண்களில் குறைந்தது 500 மதிப்பெண்கள் (இரண்டாவது பொது அறிவுத்தாள் மற்றும் கட்டுரைத்தாள்) அரசியல் அறிவியல் பாடத்தில் இருந்து வருகின்றன. அரசியல் அறிவியலை விருப்பப்பாடமாக எடுத்தால் 1000 மதிப்பெண்களுக்கான வினாக்களுக்கு விடையளிப்பது எளிது.

### நேர்காணல் (Personal Interview)

குடிமைப்பணித் தேர்வில் கடைசிநிலை நேர்காணலாகும். இதற்கு 275 மதிப்பெண்கள் உள்ளன. அரசியல் அறிவியல் பாடத்திலிருந்து அதிக அளவில் கேள்விகள் கேட்கப்படுகின்றன.

### B. 2) தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் (TNPSC)

நமது மாநில அரசுக்கு பணியாளார்களை தேர்வு செய்வதற்காக TNPSC எழுபது வகையான தேர்வுகளை நடத்துகிறது. குரூப் 1, குரூப் 2, குரூப் 4, கிராம நிர்வாக அலுவலர் போன்ற பதவிகள் இவற்றில் முக்கியமானவை ஆகும். இத்தேர்வுகளில் பொது அறிவு அதிக முக்கியத்துவம் பெறுகிறது. ஏறக்குறைய 20 சதவீத கேள்விகள்இந்திய அரசியல் மற்றும் சர்வதேச உறவுகளில் இருந்து கேட்கப்பெறுகின்றன.

- TNPSC நடத்தும் தேர்வுகளில் மிகமிக முக்கியமானது குரூப் 1 தேர்வு ஆகும். உதவி ஆட்சியர், மாவட்ட கண்காணிப்பாளர், உதவி காவல் கண்காணிப்பாளர், மாவட்ட வேலை வாய்ப்பு அதிகாரி, மாவட்ட தீயணைப்பு அதிகாரி, வணிகவரி உதவி ஆணையர் போன்ற பணிகளுக்காக இத்தேர்வு நடத்தப்படுகிறது. இத்தேர்வு மூன்று நிலைகளில் நடத்தப்படுகிறது. அவை முதல் நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு மற்றும் நேர்காணல் ஆகியவையாகும். இந்திய அரசமைப்பு, தமிழக அரசியல், சர்வதேச உறவுகள் ஆகியவற்றிலிருந்து பெரும்பாலும் கேள்விகள் அதிக அளவில் கேட்கப்பெறுகின்றன. இக்கேள்விகளை அரசியல் அறிவியல் மாணவர்கள் நம்பிக்கையுடன் எதிர்கொள்ளலாம். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வணையத்தின் பிற பணி ஆட்சேர்ப்பு தேர்வுகளிலும் குறிப்பிட்ட சதவீதத்திலான அரசியல் அறிவியல் கேள்விகள் கேட்பது உறுதியாகும்.

### B. 3) கல்லூரி மற்றும் பல்கலைக்கழகப் பேராசிரியர் பணி

தமிழக கல்லூரிகளில் உதவிப் பேராசிரியர் மற்றும் இணைப் பேராசியர் என்று இரண்டு வகை ஆசிரியர் பதவி நிலைகள் உள்ளன. பல்கலைக்கழகங்களில் உதவிப் பேராசிரியர், இணைப் பேராசிரியர் மற்றும் பேராசிரியர் ஆகிய மூன்று பதவி நிலைகள் உள்ளன. கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் பேராசிரியராக பணியாற்ற வேண்டுமென்றால் தமிழ்நாடு அரசின் மாநிலத் தகுதி தேர்வையோ அல்லது பல்கலைக்கழக மானியக் குழுவின் தேசிய தகுதித் தேர்வையோ எழுத வேண்டும். அரசியல் அறிவியல் பாடத்தில் முதுகலை முடித்தவர்கள் இத்தேர்வுகளை எழுதலாம்.

### B. 4) பள்ளி கல்வி பணி

- தமிழகப் பள்ளிகளில் ஆசிரியராகப் பணிபுரிவதற்கு ஆசிரியர் தேர்வுவாரியம் (Teachers Recruitment Board) நடத்தும் தேர்வுகளில் வெற்றி பெறவேண்டும்.

### B. 5) ஊடகங்களில் வாய்ப்புகள்

- அரசியல் அறிவியல் மாணவர்களுக்கு ஊடகத்துறையில் வாய்ப்புகள் பிரகாசமாக உள்ளன. அச்சு ஊடகம், செய்தி, தொலைக்காட்சி ஊடகங்கள், வலைதள ஊடகங்கள் என்று பல்வேறு தளங்களில் வாய்ப்புகள் உள்ளன.
- பொதுவாக ஊடகங்கள் அரசியல், சமூகம், சுற்றுச்சூழல், பண்பாடு, சர்வதேச நிகழ்வுகள் ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றன. அரசியல் அறிவியல் பயின்றவர்கள் பெரும்பாலும் இத்தளங்களில்தான் பயணிக்கின்றனர்.
- ஊடகத்துறையில் சிறப்புறுவதற்கு அரசியல் அறிவியல் பாடம் உறுதுணையாக நிற்கும். அரசியல் அறிவியலில் இளங்கலை முடித்தபின் ஊடகவியலை மாணவர்கள் பயிலலாம்.



11th Std Political Science Tamil_Unit-0_Introduction.indd 6 6/21/2018 9:23:31 AM

1. இந்திய பொதுத்தகவல் தொடர்பு நிறுவனம், புதுதில்லி (Indian Institute of Mass Communication)
2. ஆசிய இதழியல் கல்லூரி, சென்னை (Asian College of Journalism)

## B. 6) காவல் சேவைப் பணி

- அரசியல் அறிவியல் மாணவர்கள் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக்குழுமம் நடத்தும் தேர்வுகளை எழுதி சார்பு ஆய்வாளர், இரண்டாம் நிலை காவலர், இரண்டாம் நிலை சிறைக்காவலர் மற்றும் தீயணைப்போர் போன்ற பணிகளில் சேரலாம்.

## B. 7) சட்டத்துறையில் வாய்ப்புகள்

- அரசியல் அறிவியலும், சட்டமும் மிகவும் நெருங்கிய பாடங்களாகும். பன்னிரெண்டாம் வகுப்பில் அரசியல் அறிவியல் படிக்கும் மாணவர்கள் சட்டக் கல்லூரிகளில் ஐந்து வருட ஒருங்கிணைந்த சட்டப்படிப்பில் (Bachelor of Arts & Bachelor of Law (B.A. B.L) படிக்கலாம் அல்லது கல்லூரி படிப்பை முடித்த பிறகு மூன்று வருட (Bachelor of Law (B.L) சட்டப்படிப்பில் சேரலாம்.
- சட்டப்படிப்பை படிக்கும் மாணவர்கள் Common Law Admission Test (CLAT) மற்றும் All India Law Entrance Test (AILET) எழுத வேண்டும்.
- தமிழகத்தில் அரசு சட்டக் கல்லூரிகள் கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, செங்கல்பட்டு, திருநெல்வேலி, சென்னை ஆகிய ஊர்களில் உள்ளன. இக்கல்லூரிகள் டாக்டர். அம்பேத்கார் சட்டப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
- தேசிய அளவில் முக்கிய சட்டக் கல்லூரிகள் பல உள்ளன.
  1. இந்திய சட்ட பல்கலைக்கழகத்தின் தேசிய சட்ட பள்ளி, பெங்களூர்
  2. தேசிய சட்டப்பள்ளி, ஜோத்பூர்.
  3. தேசிய சட்டப்பல்கலைக்கழகம், போபால்.
  4. தேசிய சட்டக்கல்லூரி, மும்பை.
  5. தில்லி பல்கலைக்கழகத்தின் சட்டப்புலம்.
  6. NALSAR சட்டப் பல்கலைக்கழகம், ஹைதராபாத்.
  7. தேசிய சட்டப்பள்ளி, திருச்சிராப்பள்ளி
- சட்டக் கல்வி முடித்தபிறகு மாணவர்கள் வழக்குரைஞராக பணியாற்றலாம். உயாநீதி மன்ற, உச்சநீதிமன்ற நீதிபதிகளாகவும் பணியாற்றலாம்.

## D. 9) பன்னாட்டு அளவிலான கல்வி மற்றும் வேலைவாய்ப்புகள்

- உலக அளவில் புகழ்மிக்க பல்கலைக் கழகங்களில் அரசியல் அறிவியல் மற்றும் பன்னாட்டு உறவுகள் பற்றிய பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன..
  1. ஹார்வர்டு பல்கலைக் கழகம், அமெரிக்கா
  2. பிரின்ஸ்டன் பல்கலைக் கழகம், அமெரிக்கா
  3. கலிபோர்னியா பல்கலைக் கழகம், அமெரிக்கா
  4. பெர்க்லே பல்கலைக் கழகம், அமெரிக்கா
  5. யேல் பல்கலைக் கழகம், அமெரிக்கா
  6. ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம், இங்கிலாந்து
  7. ஆஸ்திரேலியா தேசிய பல்கலைக் கழகம், ஆஸ்திரேலியா
- அரசியல் அறிவியல் மாணவர்களுக்கு சர்வதேச வேலைவாய்ப்புகள் பெருமளவில் உள்ளன. ஐக்கிய நாடுகள் சபை, உலக வங்கி, உலக வர்த்தக நிறுவனம், சர்வதேச நீதி மன்றம் போன்றவற்றில மாணவர்கள் பணியாற்றலாம்.
- அரசியல் அறிவியல் பாடம் என்பது ஒரு நீச்சல் வீரனின் திறமை போன்றது. நீச்சல் அடிக்கும் திறன் இருந்தால் ஆற்றிலும் நீந்தலாம், கடலிலும் நீந்தலாம். அரசியல் அறிவியல் மாணவர்கள் அறிவு, எண்ண ஓட்டம் மற்றும் திறமைகளிலிருந்தால் நமது மாநிலத்திலும், நாட்டிலும், உலகத்திலும் என எங்கும் சாதிக்கலாம்.

## அரசியல் அறிவியல் நிறுவனங்களின் இணையதளங்கள்:

| தேசிய அளவில் | சர்வதேச அளவில் |
|---|---|
| 1. http://www.jnu.ac.in | 1. http://www.columbia.edu |
| 2. http://www.mids.ac.in | 2. http://www.yale.edu |
| 3. http://www.tiss.edu | 3. http://anu.edu.au |
| 4. http://www.unom.ac.in | 4. http://www.cam.ac.uk |



11th Std Political Science Tamil_Unit-0_Introduction.indd 7 6/21/2018 9:23:32 AM

## பொருளடக்கம்


| தலைப்பு | பொருளடக்கம் | பக்கம் |
| --- | --- | --- |
| **அலகு : 1**<br>**அரசியல் அறிவியலின் அறிமுகம்** | *1.1* அரசியல் அறிவியலின் பொருள், வரையறை மற்றும் தோற்றம்<br>*1.2* அரசியல் அறிவியலின் தன்மை<br>*1.3* அரசியல் அறிவியலின் பரப்பெல்லை<br>*1.4* அரசியல் அறிவியல் என்பது ஒரு அறிவியலா? அல்லது ஒரு கலையா?<br>*1.5* அரசியல் அறிவியலைப் படிப்பதற்கான அணுகுமுறைகள் | 1 |
| **அலகு : 2**<br>**அரசு** | *2.1* அரசு என்பதன் பொருள் மற்றும் வரையறை<br>*2.2* அரசின் முக்கிய கூறுகள்<br>*2.3* சமுதாயம், அரசு மற்றும் அரசாங்கம்<br>*2.4* நவீன அரசுகளின் பணிகள்<br>*2.5* மக்கள் நல அரசு என்ற கருத்தாக்கம்<br>*2.6* மென்மை அரசு என்ற கருத்தாக்கம்<br>*2.7* மிகை மேம்பாட்டு அரசு என்ற கருத்தாக்கம்<br>*2.8* காலனியாதிக்க காலத்துக்கு பிந்தைய அரசு என்ற கருத்தாக்கம் | 28 |
| **அலகு : 3**<br>**அரசியல் அறிவியலின் அடிப்படைக் கருத்தாக்கங்கள் பகுதி I** | *3.1* இறையாண்மை<br>*3.2* சமத்துவம்<br>*3.3* சுதந்திரம் | 50 |
| **அலகு : 4**<br>**அரசியல் அறிவியலின் அடிப்படைக் கருத்தாக்கங்கள் பகுதி II** | *4.1* சட்டம்<br>*4.2* குடியுரிமை<br>*4.3* உரிமைகள் மற்றும் கடமைகள்<br>*4.4* அரசியல் கடப்பாடு<br>*4.5* சொத்து | 92 |


9LEQDD
மின்னூல்

9LNLF1
மதிப்பீடு

B146_11_PSCI_TM
இணைய வளங்கள்



11th Std Political Science Tamil_Unit-0_Introduction.indd 8 6/21/2018 9:23:32 AM

| | | |
|---|---|---|
| **அலகு : 5**<br>**மக்களாட்சி** | 5.1 மக்களாட்சியின் வரையைறை மற்றும் வகைகள்<br>5.2 மக்களாட்சிக் கோட்பாடுகள்<br>5.2.1 மக்களாட்சியின் தொன்மைக் கோட்பாடு<br>5.2.2 மக்களாட்சியின் மார்க்சிய கோட்பாடு<br>5.2.3 மக்களாட்சியின் உயர்ந்தோர் குழாம் கோட்பாடு<br>5.2.4 மக்களாட்சியின் பன்மைவாதக் கோட்பாடு<br>5.2.5 மக்களாட்சியின் ஆழ்விவாதக் கோட்பாடு<br>5.3 மக்களாட்சியை அளவிடுதல் மற்றும் மதிப்பிடுதல்<br>5.4. இந்திய மக்களாட்சியின் சாதனைகள்<br>5.5 இந்திய மக்களாட்சியின் சவால்கள் | 132 |
| **அலகு : 6**<br>**அரசாங்கத்தின் வகைப்பாடுகள்** | 6.1 அறிமுகம்<br>6.2 அரசாங்கத்தின் பொருள், வரையறை மற்றும் தன்மை<br>6.3 ஒற்றையாட்சி முறை அரசாங்கம்<br>6.4 கூட்டாட்சி முறை அரசாங்கம்<br>6.5 நாடாளுமன்ற முறை அரசாங்கம்<br>6.6 குடியரசுத்தலைவர் முறை அரசாங்கம்<br>6.7 அரசாங்கத்திலிருந்து ஆளுகை வரை பற்றிய கருத்தாக்கம்<br>6.8 அரசாங்கத்தின் செயல்திறனை எவ்வாறு மதிப்பிடுவது? | 165 |
| **அலகு : 7**<br>**அரசியல் சிந்தனை** | 7.1 பிளாட்டோ<br>7.2 அரிஸ்டாட்டில்<br>7.3 புனித தாமஸ் அக்வினாஸ்<br>7.4 நிக்கோலோ மாக்கியவல்லி<br>7.5 தாமஸ் ஹாப்ஸ்<br>7.6 ஜான் லாக்<br>7.7 ஜுன் ஜாக்குவஸ் ரூசோ<br>7.8 ஜான் ஸ்டூவர்ட் மில்<br>7.9 காரல் மார்க்ஸ் | 198 |


**பாடநூலில் உள்ள விரைவு குறியீட்டைப் (QR Code) பயன்படுத்துவோம்! எப்படி?**

- உங்கள் திறன்பேசியில், கூகுள் playstore /ஆப்பிள் app store கொண்டு QR Code ஸ்கேனர் செயலியை இலவசமாகப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியைத் திறந்தவுடன், ஸ்கேன் செய்யும் பொத்தானை அழுத்தித் திரையில் தோன்றும் கேமராவை QR Code–இன் அருகில் கொண்டு செல்லவும்.
- ஸ்கேன் செய்வதன் மூலம் திரையில் தோன்றும் உரலியைச் (URL) சொடுக்க, அதன் விளக்கப் பக்கத்திற்குச் செல்லும்.



11th Std Political Science Tamil_Unit-0_Introduction.indd 9 6/21/2018 9:23:32 AM

## THE CONSTITUTION OF INDIA

### PREAMBLE

WE, THE PEOPLE OF INDIA , having solemnly resolved to constitute India into a SOVEREIGN SOCIALIST SECULAR DEMOCRATIC REPUBLIC and to secure to all its citizen :

JUSTICE, social , economic and political ;

LIBERTY of thought, expression, belief, faith and worship ;

EQUALITY ofv status and of opportunity ;

and to promote among them all

FRATERNITY assuring the dignity of the individual and the unity and integrity of the Nation ;

IN OUR CONSTITUENT ASSEMBLY this twenty - six day of November, 1949, do HEREBY ADOPT, EANACT AND GIVE TO OURSELVES THIS CONSTITUTION.



11th Std Political Science Tamil_Unit-0_Introduction.indd 10 6/21/2018 9:23:32 AM

அலகு 1

# அரசியல் அறிவியலின் அறிமுகம்



9LXHGN

## 1.1 அரசியல் அறிவியலின் பொருள், வரையறை மற்றும் தோற்றம்

### அரசியல்

அரசியல் என்றால் என்ன? எனது சிறு வயது முதலே தேநீர் கடைகள், உணவகங்கள், பேருந்துகள், இப்படி எங்கே போனாலும் இந்த வார்த்தையை அடிக்கடி கேட்கிறேனே!... இதனைப்பற்றி பேசும்போதெல்லாம் பலரும் மிகவும் தீவிரமாக மாறிவிடுகிறார்களே!... அதனாலேயே நானும் இந்த அரசியல் என்றால் என்ன என்பதை தெரிந்து கொண்டே ஆக வேண்டும்!!







11th Std Political Science Tamil_Unit-1.indd 1 6/20/2018 6:00:38 PM

**இப்பாடப்புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளதைப் போல மூன்று பத்திகளை உனது குறிப்பேட்டில் வரைக.**

## K-W-L செயல்பாடு

**K-W-L - (என்றால் என்ன என்பதை அறிந்து கொள்ளுங்கள்)**

| அரசியல் | | |
|---|---|---|
| எனக்கு என்ன தெரியும்? | நான் என்ன தெரிந்து கொள்ள விரும்புகிறேன்? | நான் என்ன தெரிந்து கொண்டேன்? |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

### கற்றலின் நோக்கங்கள்

- இந்த அறிமுக அத்தியாயம் அரசியல் என்பதன் பொருள் மற்றும் மக்களின் வாழ்வில் அது எந்த விதமான தாக்கத்தினை ஏற்படுத்துகிறது என்ற நுண்ணறிவைத் தருவதாகும்.
- அரசியல் அறிவியலின் வரையறைகளையும் மற்றும் அதன் மாறிவரும் தன்மையினையும் ஆராய்தல்.
- அரசியல் அறிவியலின் பரப்பெல்லையை விளக்குதல்
- அரசியல் அறிவியலைப் படிப்பதில் உள்ள பல்வேறு அணுகுமுறைகளை வெளிக்கொணர்தல்
- அரசியல் அறிவியலுக்கும் பிற சமூக அறிவியல் பாடங்களுக்கும் உள்ள உறவினை விவாதித்தல்

அரசியல் என்ற சொல் கிரேக்க மொழியில் நகர அரசு என்ற பொருள்படும் "பொலிஸ்" (Polis) என்ற சொல்லோடு நெருங்கிய தொடர்புடையதாகும். அரசியலைக் கற்பது என்பதை பொ.ஆ.மு. ஐந்தாம் நூற்றாண்டில் கிரேக்கத்தில் வாழ்ந்த பிளாட்டோ (Plato) (428 BCE - 347 BCE) மற்றும் அரிஸ்டாட்டில் (Aristotle) (384 BCE - 322 BCE) ஆகிய அரசியல் தத்துவஞானிகளின் அளப்பரிய பங்களிப்பினால் தொடங்கப் பட்டதாகும். இருபதாம் நூற்றாண்டிற்கு முன்பு வரையிலும் அரசியலைக் கற்றறிவது என்பது வரலாறு மற்றும் தத்துவம் போன்ற பிற துறைகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது எனலாம்.

அரசியல் என்பது அடிப்படையில் நன்னெறியைப் பற்றிய கல்வியாகும். அரசியல் பாடத்தின் பார்வை அரசு பற்றிய கருத்தாக்கங்கள், அரசியல் நிறுவனங்கள், அவற்றின் செயல்பாடுகள் போன்றவற்றோடு, அரசுகளுக்கிடையேயான உறவுமுறைகள் பற்றியதாகவும் மட்டுமே இருந்தது. 19-ஆம் மற்றும் 20-ஆம் நூற்றாண்டுகளில் அரசியல் பாடத்தின் பார்வையானது சுதந்திரம் மற்றும் சமத்துவம் ஆகிய இரண்டிற்கும் இடையேயான பிரச்சனைகளைச் சுற்றியே இருந்து வந்தது. 21-ஆம் நூற்றாண்டில் அரசியல் பாடத்தின் மையக்கரு சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு ஆகிய இரண்டிற்கும் இடையேயான மோதல்கள் பற்றியதாகவே இருந்து வருகிறது. இது தவிர மேம்பாடு, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை, பாலின சமத்துவம், பன்னாட்டு அமைதி மற்றும் ஒத்துழைப்பு போன்றவை அரசியலின் முக்கியமாகக் கருதப்படாத பிற மையக் கருக்களாக இருந்தன.



**அரசியல் என்பது அனைவருக்கும் இன்றியமையாததாகும்**

வரலாற்றுக்காலம் முதலே அரசியலின் மையக்கருத்து பற்றி அரசியல் தத்துவஞானிகளுக்கு இடையே மாறுபட்ட



11th Std Political Science Tamil_Unit-1.indd 2 6/20/2018 6:00:39 PM

கருத்துக்களே நிலவி வந்தது. அரசியல் அறிவியலின் தந்தை என்று அழைக்கப்படுபவரும், மாபெரும் கிரேக்க சிந்தனையாளருமான அரிஸ்டாட்டில் அரசியல் பற்றிய உண்மைகள் மற்றும் அரசுக்கும் மக்களுக்கும் உள்ள உறவு முறைகளையும் முறைப்படி படித்து அறிந்துகொள்வதே அரசியல் பாடத்தின் முக்கிமான பணி என்கிறார். அவர் மேலும் பல்வேறு அரசியல் முறைமைகளைப் பற்றி வகைப்படுத்தி விளக்குகிறார். அரசியல் பாடத்தின் உருவாக்கம் மற்றும் மேம்பாட்டுக்கு பிளாட்டோவும், அரிஸ்டாட்டிலும் பெரும் பங்களிப்பினை ஆற்றியுள்ளனர். அரிஸ்டாட்டில் தனது குருவான பிளாட்டோவின் அரசியல் வகைப்பாட்டினை மேலும் வரலாற்று ரீதியாக பகுப்பாய்வு செய்து விளக்கியுள்ளார். இவர்கள் இருவரும் பல்வேறு வகையான அரசாங்கங்கள் எவ்வாறு செயல்படுகின்றன என்பதனை புரிந்து கொள்ள முயற்சி செய்தனர்.

இடைக்காலத்தில் புனித ரோமானிய பேரரசின் காலத்தில் அரசியல் அதிகாரம் முழுவதும் பேராலயங்களின் கட்டுப்பாட்டில் இருந்ததால் அரசியல் பற்றி பேசும் இடமாக பேராலயம் மட்டுமே இருந்தது. **புனிதஅகஸ்டின்**(St.Augustine) போன்ற தத்துவஞானியின் நூலான 'கடவுளின் நகரம்' (The City of God) எனும் படைப்பில் அரசியல் தத்துவம் என்பது மதத்தின் ஒரு அங்கமாகவே வலியுறுத்தப்பட்டுள்ளது. இப்படியாக இடைக்கால ஐரோப்பிய தத்துவஞானிகள் மற்றும் கிரேக்க சிந்தனையாளர்கள் அனைவருமே அரசியல் என்பதனை அரசின் ஒரு அங்கமாகக் கருதாமல் மதம் மற்றும் பக்தி சார்ந்ததாகவும், சமூகம் சார்ந்ததாகவும் மட்டுமே பார்த்து வந்தனர் என்பது இங்கே குறிப்பிடத்தகுந்ததாகும்.

இத்தாலிய மறுமலர்ச்சிக் காலத்தின் போது நிக்காலோ **மாக்கியவல்லி** (Niccolo Machiavelli) என்பவர்தான் செயலறிவிலான கூர்நோக்குதல் மற்றும் பட்டறிவின் (empiricism) அடிப்படையில் அரசியல் அமைப்புகள் மற்றும் அரசியல் நடத்தைகள் பற்றிய தனது மதச்சார்பற்ற அணுகுமுறையின் மூலம் நவீன அரசியல் அறிவியல் பாடத்திற்கு அடிகோலினார் என்று கூறலாம். அமெரிக்க அரசியல் அறிவியல் அறிஞர் **ஹெரால்ட் லாஸ்வெல்** (Harold Lasswell) என்பாரின் கூற்றுப்படி அரசியல் அறிவியல் என்பது "யார், எப்போது, எதனை, எப்படி அடைகிறார்கள்?" என்பது பற்றியதாகும். "எல்லா சமூகங்களும்

**செயல்பாடு**

அர்த்தசாஸ்திரம் பற்றிய தகவல்களை சேகரித்து வகுப்பில் அவற்றினைப் பற்றி விவாதிக்கவும்.

உங்களுக்குத் தெரியுமா?

### மகிழ்ச்சி பற்றிய அரிஸ்டாட்டிலின் கருத்து

மகிழ்ச்சி என்பது வாழ்க்கையின் ஒரு முக்கியமான அம்சம் என்பது அரிஸ்டாட்டிலின் கருத்தாகும். ஒரு மனிதன் தற்காலிக இன்பத்தை தேடுவதில் நேரத்தை செலவிடுவதைக் காட்டிலும், நிரந்தரமான மகிழ்ச்சியை தேடுவதே சிறந்தது என்பது அரிஸ்டாட்டிலின் கருத்தாகும். ஒருவனின் மகிழ்ச்சி என்பது பொருள் அடிப்படையிலானவற்றில் இல்லை என்பதும் அவனுடைய முழுமையான திறமை மற்றும் உண்மையான தன்மையை அறிந்துகொள்வதில்தான் இருக்கிறது என்பதும் அரிஸ்டாட்டிலின் கருத்தாகும். சுருங்கக் கூறின் மகிழ்ச்சி என்பது ஒருவனின் உள்ளேயே இருக்கிறதே தவிர வெளியில் இல்லை என்பது அவரின் கருத்து. அரிஸ்டாட்டிலின் புகழ்பெற்ற கருத்தாக்கம் ஒன்று பின்வருமாறு "மனிதனின் உயிர்வாழ்தலின் நோக்கம் மற்றும் பொருளே மகிழ்ச்சியை தேடுவதேயாகும்"



11th Std Political Science Tamil_Unit-1.indd 3 6/20/2018 6:00:39 PM

வேறுபட்ட தங்களின் விருப்பங்களையும், தேடல்களையும் அடைவதற்கு முயற்சிப்பதும், இந்த வேறுபட்ட தேடல்களின் விளைவாக எழும் மோதல்களை ஒழுங்குபடுத்த உருவானதே அரசியல்" என்பதும் லாஸ்வெல்லின் இந்த விளக்கத்தினால் நாம் உணர்ந்துகொள்ளவேண்டிய செய்தியாகும். மேலும், தற்கால சமூகங்களில் காணப்படும் பற்றாக்குறை மூலவளங்களை அதிகமான தேவைகளுக்கு முறையாக மற்றும் திறமையாக பகிர்ந்து அளிப்பதே அரசியல் எந்திரம் என்பதும் உணரப்பட வேண்டிய செய்தியாகும். **காரல்மார்க்சின்** (KarlMarx) கூற்றுப்படி "அரசியல் என்பது அரசியல் அதிகாரம் மற்றும் வகுப்பு மோதல்கள்" பற்றியதாகும். இதனையே **டேவிட் ஈஸ்டன்** (David Easton) "விழுமியங்களை அதிகாரப் பூர்வமாக ஒதுக்கீடு செய்தல்" (Authoritative Allocation of Values) என்று கூறுகிறார்.

**கலந்துரையாடல்**





**மாணவர்:** அய்யா! நமது கலந்துரையாடலில் அரசியலைப்பற்றி குறிப்பிடும்போதெல்லாம் கிரேக்க சிந்தனையாளர்களான பிளாட்டோ மற்றும் அரிஸ்டாட்டிலைப் பற்றி குறிப்பிடுகிறீர்களே! இந்திய அளவில் முதல் அரசியல் சிந்தனையாளர் என யாரைக் குறிப்பிடலாம் அய்யா!

**ஆசிரியர்:** இந்திய அளவில் திருக்குறளை எழுதிய திருவள்ளுவரை நாம் முதல் அரசியல் சிந்தனையாளர்களில் ஒருவர் எனக் கருத முடியும்

**மாணவர்:** அய்யா! பழந்தமிழ் இலக்கியம் ஒன்று இந்தியாவின் முதல் அரசியல் நூலாக கருதப்படுவதனைக் கேட்க மிகவும் ஆர்வமாக இருக்கிறது.

**ஆசிரியர்:** பொ.ஆ.மு. 300-இல் கௌடில்யரால் எழுதப்பட்ட அர்த்தசாஸ்திரம் என்ற நூல் மிகவும் பழமையான நூலாக இருந்தாலும் அது 'அரசியல் பொருளாதாரம்' என்பதில் அதிகம் கவனம் செலுத்துகிறது. ஆனால் திருவள்ளுவரின் திருக்குறள் அதிகமாக அரசியல் ஆளுகையைப் பற்றி பேசுகிறது.

**மாணவர்:** ஓ! அப்படிங்களா அய்யா! கௌடில்யரைப் பற்றி கொஞ்சம் சொல்லுங்கள் அய்யா!

**ஆசிரியர்:** மகிழ்ச்சி! பொ.ஆ.மு.300-இல் வடஇந்தியாவை ஆண்ட சந்திர குப்த மௌரியர் என்பவரின் முதலமைச்சராக இருந்தவர்தான் கௌடில்யர். அவர் எழுதிய நூலின் பெயர்தான் அர்த்தசாஸ்திரம். சமஸ்கிருதத்தில் அர்த்தம் என்றால் 'பொருள்' சாஸ்திரம் என்றால் 'அறிவு' சுருக்கமாக கூறினால் அர்த்தசாஸ்திரம் என்பது ஒரு அரசியல் பொருளாதார நூல் ஆகும்.

**மாணவர்:** அய்யா! அப்படியெனில் அரசியல் அறிவியலுக்கு திருவள்ளுவரின் பங்களிப்பு என்னவென்று கூறுங்கள்!

**ஆசிரியர்:** திருக்குறளில் இருந்து நாம், அரசின் கூறுகள், இலட்சிய அரசின் தன்மைகள், நல்ல அரசரின் குணக்கூறுகள், அமைச்சர்களுக்கான தகுதிகள், அரசு அலுவலர்களை தேர்ந்தெடுக்கத் தேவையான தகுதிகள், அதிகார ஒப்படைப்பு போன்ற பலவற்றினை அறிய முடிகிறது. திருக்குறளில் அரசு, மற்றும் அரசன் ஆகியோரின் தன்மைகள் மற்றும் பண்பு நலன்கள் பற்றி இறைமாட்சி என்ற ஓர் அதிகாரம் முழுவதும் எழுதப்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டாக,

**"படைகுடி கூழ்அமைச்சு நட்பரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு" (குறள் எண்:381)**

என்று கூறுகிறார். அதாவது ஒரு அரசன் சிறந்து விளங்குவதற்கு ஆறு அடிப்படைக் கூறுகள் அமைந்திருக்க வேண்டுமென திருவள்ளுவர் கூறுகிறார்.

(1) சிறந்த படை
(2) நல்ல குடிமக்கள்
(3) நல்ல மூலவளங்கள்
(4) அறிவார்ந்த அமைச்சர்கள்
(5) சிறந்த பாதுகாப்பு மிக்க அரண்கள்
(6) நட்பு நாடுகளின் ஆதரவு ஆகிய ஆறும் சிறந்த அரசனுக்கு வேண்டுமெனக் கூறுகிறார்.

அதே போல அரசராக இருக்க வேண்டுபவர் என்னென்ன குணநலன்களைப் பெற்றிருக்க வேண்டுமென திருவள்ளுவர் கூறுகிறாறெனில்,

**"அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும் எஞ்சாமை வேந்தர்க்கியல்பு". (குறள் எண்:382)**

அதாவது ஓர் அரசன் என்பவன்,

(1) துணிவு
(2) ஈகைக்குணம்
(3) பொது அறிவு
(4) செயலூக்கம் ஆகியவற்றுடன் விளங்க வேண்டுவது அவசியம் என்று கூறுகிறார்.

அதுபோலவே,

**"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும் நீங்கா நிலனாள் பவர்க்கு" (குறள் எண்:383)**

நிலத்தை ஆளும் அரசனுக்கு

(1) காலம் தாழ்த்தாத தன்மை
(2) கல்வியுடைமை
(3) நல்ல காரியங்களை செய்வதற்கான துணிவுடமை ஆகிய மூன்றும் அவசியமான குணம் என்கிறார் திருவள்ளுவர்.

இதுபோலவே ஒரு நாடு சிறந்த நாடாக விளங்குவதற்கு என்னென்ன தன்மைகள் அமைந்திருக்க வேண்டுமென்பதனை,

**"உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும் சேராதியல்வது நாடு" (குறள் எண்:734)**

என்ற குறளில் உண்ண உணவில்லாத பஞ்சநிலை, தீராத பல நோய்கள், எப்போதும் தாக்குவதற்கு தயாராக இருக்கும் பகைநாடுகள் ஆகிய மூன்றும் இல்லாமல் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

அதேபோல,

**"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த வகுத்தலும் வல்லது அரசு" (குறள் எண்:385)**

என்ற குறளில் வருவாயை அடையாளம் காணுதலும், அதனை திறமையாக திரட்டுவதும், திரட்டிய வருவாயை அரசுக்கருவூலத்தில் பாதுகாத்து வைப்பதும், அவ்வாறு பாதுகாத்த செல்வத்தை மக்களுக்கு முறையாக வழங்குதலும் செய்ய வல்லது தான் சிறந்த அரசு என்று வள்ளுவர் கூறுகிறார்.

**மாணவர்:** இந்தியாவின் பழம்பெரும் அரசியல் அறிவியல் நூல்கள் குறித்து தங்களிடமிருந்து தெரிந்துகொண்டதில் மிகவும் மகிழ்ச்சி அய்யா.

அரசியல் அறிஞர்கள் பலரும் அரசியல் என்பதனை அதிகாரம், முறையான ஒழுங்கமைவு, மற்றும் நீதி ஆகியவற்றை அடிப்படையாக வைத்தே விவரித்துள்ளனர். விதிமுறைகளை உருவாக்கவும், நடைமுறைப்படுத்தவும் அதன் மூலம் மனிதர்களின் செயல்பாடுகளை/நடத்தையை ஆட்கொள்ள வல்ல ஆற்றல் எதுவோ அதுவே அதிகாரம்எனப்படும். அதிகாரம்சட்டப்படியோ அல்லது சட்டப்படி இல்லாமலோ கூட இருக்கலாம். இங்கே அதிகாரம் மற்றும் அதிகாரத்துவம் என்ற இரண்டு கருத்தாக்கங்களுக்கிடையே உள்ள வேறுபாட்டினை நாம் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். சட்ட அங்கீகாரம் இல்லாமல் வெறும் ஒப்புதலை மட்டுமே பெற்றதனை **"அதிகாரம்"** (Power) என்றும், சட்ட அங்கீகாரம் பெற்ற செயல்பாட்டினை



11th Std Political Science Tamil_Unit-1.indd 5 6/20/2018 6:00:39 PM

"**அதிகாரத்துவம்**" (Authority) என்றும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். அதிகாரம் என்பது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் மூலம் செயல்படுத்தப்படும்போது மக்கள் அதனை முறையாக ஏற்றுக்கொள்கின்றனர்.

அரசியல் என்பது அரசியல் அமைப்பை உருவாக்கும் கட்டமைப்பு, விதிமுறைகள், வழிமுறைகள், செயல்முறைகள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றின் ஒழுங்கமைவிலும் அக்கறை கொண்டதாகும். பெரும்பான்மையான மக்கள் ஒரு சிலரால் ஆளப்படும்போது அத்தகைய அரசு இயந்திரம் நியாயமானதாக அமைந்திருக்கவேண்டியது அவசியமானதாகும். எனவே அதிகாரத்தினை செயல்படுத்தும்போது அது நீதியின் மீது கட்டமைக்கப்பட்டதாக இருக்க வேண்டியது முக்கியமாகும். இவ்வாறாக அதிகாரம், முறையான ஒழுங்கமைவு, மற்றும் நீதி ஆகியவை அரசியல் பாடத்தின் அடிப்படை கருத்தாக்கங்கள் ஆகும். 19-ஆம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து அரசியல் குறித்த கல்விப்புல படிப்பு அரசியல் அறிவியல் என அழைக்கப்படலாயிற்று.

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**

இவ்வுலகமே அரசியலைச் சுற்றி சுழன்று வருகிறது. ஒட்டுமொத்த மனித இனமும் ஒருவிதமான அரசியல் கூட்டமைவுக்குள் உள்ளிழுக்கப்பட்டு, அதற்கு உள்ளேயே மனிதர்களுக்கிடையேயான செயல்பாடுகளும் மோதல்களும் நிகழ்ந்து வருகின்றன.

**– டி.ஜி. ஹிட்ச்னர் (*D.H. Hitchner*)**

**கலந்துரையாடல்**



**மாணவர் 1:** அதிகாரத்துவம் என்பது சட்டபூர்வமானது எனில் மக்களாட்சி என்பது மட்டுமே சட்டபூர்வமான அரசாங்கம் என எடுத்துக்கொள்ளலாமா?

**மாணவர் 2:** இல்லை! அப்படியில்லை! முடியாட்சி, சர்வாதிகார ஆட்சி போன்றவைகளும் மக்கள் அவைகளை ஏற்றுக்கொள்ளும் வரை சட்டபூர்வமான ஆட்சிகள்தான்.

**மாணவர் 3:** ஓ! அப்படியா? இப்போது புரிந்து கொண்டேன்! இங்கிலாந்து நாட்டில் அரசியார் தலைமையில் முடியாட்சி நடப்பதற்குக் காரணம் மக்கள் அந்த அரசமைப்பிலான முடியாட்சியின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட அரசினை சட்டபூர்வமாக ஏற்றுக் கொள்வதால் அதுவும் அதிகாரத்துவமானதுதான்.

**மாணவர் 2:** மிகவும் சரியே!



மனிதன் என்பவன் இயற்கையாகவே ஓர் அரசியல் விலங்கு! இயற்கையில் ஒரு மனிதன் அரசு இல்லாமல் வாழ முடியாது! அவ்வாறு அரசின்றி வாழ்பவன் மனித குலத்திற்கு மேலானவன் அல்லது கீழானவன் ஆவான்!

**– அரசியல் என்ற நூலில் அரிஸ்டாட்டில்**

**அதிகாரம் என்பது......**



எல்லா சமூகத்திலும் ஒரு குறிப்பிட்ட அளவிலான அதிகாரம் இருக்கிறது. அது ஒரேநேரத்தில் ஒருவராலோ அல்லது ஒரு குழுவினாலோ கையாளப்படுகிறது.

**– காரல் மார்க்ஸ் (*Karl Marx*)**



அதிகாரம் என்பது ஒரு குழு மற்றொரு குழுவின் செயல்பாடுகள் மற்றும் போக்குகளைத் தங்களின் விருப்பத்திற்கு ஏற்ப மாற்றியமைக்கும் உறவுமுறையே ஆகும்.

**– டேவிட் ஈஸ்டன் (*David Easton*)**



அதிகாரம் மேலும் அதிகாரங்களை உருவாக்கி கொள்கிறது. அதிகாரமே உயர்குடியினவாதத்தின் மையச்சார்பாக அமைந்துள்ளது.

**– ராபர்ட் மிச்செல்ஸ் (*Robert Michels*)**

## அரசியல் அறிவியல்

தற்காலத்தில் **'அரசியல்'** என்ற பாடம் **'அரசியல் அறிவியல்'** என்ற பெயரில் புதியதொரு தனித்து இயங்கும் பாடமாக மாறியுள்ளது. பண்டைய கிரேக்கத்தின் சிறிய நகர அரசுகளின் விவகாரங்களைக் குறிப்பது அரசியல் என்ற சொல்லாகும். ஆனால் இப்போது அரசியல் என்ற சொல் "அரசாங்கங்களின் தற்கால பிரச்சனைகளைப் பற்றியது" என **ஆடம் கில்கிறிஸ்ட்** (Adam Gilchrist) என்ற அறிஞர் கூறுகிறார். ஒருவன் தனக்கு அரசியலின்மீது ஆர்வம் உள்ளது என்று கூறுவானெனில் அவன் அரசியல் பிரச்சனைகள், சட்டமியற்றல், தொழிலாளர் பிரச்சனைகள், கட்சி நடவடிக்கைகள் ஆகியவற்றின் மீதும் ஆர்வமாக இருக்கிறான் என்பதே பொருளாகும். ஆனால் அரசியல் கல்வி என்பது தற்கால அரசியல் நிகழ்வுகளிலிருந்து வேறுபட்டதாகும். மேலும் ஒரு நாட்டின் அரசியல் என்பது மற்றொரு நாட்டின் அரசியலிருந்து வேறுபட்டதாகும். இந்தியாவில் அரசியலைப்பற்றி நாம் புரிந்துகொண்டிருப்பது மாதிரியே உலகின் எல்லா நாடுகளிலும் அரசியல் இருப்பதில்லை. அது நாட்டுக்கு நாடு வேறுபடும். ஆனால் 'அரசியல் அறிவியல்' என்பது உலகம் முழுவதும் ஒரே பொருளில் அறியப்படுகிறது. அதனால்தான் இப்பாடத்தினை அரசியல் என்று அழைப்பதைக்காட்டிலும் அரசியல் அறிவியல் என்று அழைப்பதே சிறப்பானது ஆகும். 1948-ல் பிரான்சு நாட்டின் பாரிஸ் நகரில் கூடிய அரசியல் அறிஞர்கள் இப்பாடத்தினை அரசியல் அறிவியல் என்று மட்டுமே அழைப்பது என்பதில் ஏற்புடைய கருத்தினைக் கொண்டிருந்தனர். எனவே ஒரே பாடத்தினை 'அரசியல்' என்றும் 'அரசியல் அறிவியல்' என்றும் இரண்டு பெயர்களில் அழைக்காமல் இனி அரசியல் அறிவியல் என்று அழைப்பதே சரியானதாகும்.

இப்பாடத்தினை ஒரு தனித்தியங்கும் துறை சார்ந்த பாடமாக மாற்றியமைத்த பெருமை அமெரிக்க ஐக்கிய நாட்டையே சாரும். அதுவரையிலும் இப்பாடம் தத்துவம், வரலாறு, சட்டம், பொருளியல் போன்ற பாடங்களில் ஒரு துணைப்பாடமாகவேதான் இருந்து வந்தது. 1880-ல் **ஜான் W. பர்ஜெஸ்** (John W Burgess) என்பவர் கொலம்பிய பல்கலைக்கழகத்தில் அரசியல் அறிவியல் பாடத்திற்கென தனியாக ஒரு துறையை



11th Std Political Science Tamil_Unit-1.indd 7 6/20/2018 6:00:40 PM

உருவாக்கிய போதுதான் இப்பாடம் தன்னாட்சியான துறையாக உருவானது என்று கூறலாம். அதன் பின்பு படிப்படியாக வளர்ச்சி பெற்று 1920–களில் உலகின் பெரும்பாலான பல்கலைக் கழகங்களில் இப்பாடத்திற்கென தனியான துறைகள் ஏற்படுத்தப்பட்டன. தத்துவம், சட்டம், வரலாறு போன்ற பாடங்களின் கீழ் இயங்கிவந்த அரசியல் பாடத்தினை தனிப்பெரும் பாடமாக மாற்றியமைத்த பெருமை முழுவதும் அமெரிக்க அரசியல் அறிஞர்களையே சேரும். இப்பாடம் அதன் பிறகும், இரண்டாம் உலகப்போர் நடைபெறும் காலம் வரையிலும் கூட மிகவும் முறைசார்ந்ததாகவும் நிறுவனம் சார்ந்த அணுகுமுறையிலும் மட்டுமே இருந்தது.

நிலையான நிறுவனங்கள் சார்ந்த படிப்பாக மட்டுமே இருந்த அரசியல் பாடத்தினை சமுதாயப் பிரச்சனைகளைப் பற்றி படிக்கும் பாடமாக மாற்றியமைக்க அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி-**உட்ரோ வில்சன்** (Woodrow Wilson) என்ற அறிஞரும், **பிரான்க் குட்னவ்** (Frank Goodnow) என்ற அறிஞரும் பெரும் முயற்சிகளை எடுத்துக்கொண்டனர். அமெரிக்காவின் சிகாகோ பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த **ஆர்தர் பென்ட்லி** (Arthur Bentley) என்ற அறிஞர் இப்பாடத்தை விழுமியங்கள் நீக்கிய நடுநிலையான அரசியல் பகுப்பாய்வு செய்யும் ஆற்றல் பெற்றதாக (value-free analysis of politics) மாற்றியமைக்க பெரும்பாடு பட்டவர் ஆவார். மேலும் **சார்லஸ் ஈ. மெர்ரியம்** (Charles E.Merriam) என்ற அறிஞர் இப்பாடத்தை செயலறிவிலான கூர்நோக்குதல் மற்றும் அளவீடுகளை உள்ளடக்கியதாகவும் மாற்றியமைக்க பெரும் முயற்சிகளை எடுத்துக்கொண்டார். இம்முயற்சியில் **சார்லஸ் ஈ. மெர்ரியத்தின்** (Charles E. Merriam) "அரசியல் அதிகாரம்" என்ற நூலும், **ஹெறால்ட் லாஸ்வெல்** என்பாரின் "அரசியல்: யார், எப்போது, எதனை, எப்படி அடைகிறார்கள்?" (Politics: Who Gets What, When, How?) என்ற நூலும் அரசியலின் மையக் கருத்தாக அதிகாரம் என்னும் அம்சத்தினை உருவாக்கின.

1920– களிலும் 1930–களிலும் ஐரோப்பா மற்றும் ஆசிய நாடுகளில் நிலவிய முற்றதிகார ஆட்சிகள் மற்றும் இரண்டாம் உலகப்போரின் விளைவாக இந்த அரசியல் அறிவியல் பாடம் தனது அமைப்புகள் மற்றும் நடைமுறைகளின் மீதான கவனத்திலிருந்து மாறி அரசியல் கட்சிகள், அழுத்தக்குழுக்கள், உயர்குடியினர் நடத்தை, தேர்தல் விருப்ப நடத்தைகள், வாக்காளர் நடத்தை என ஒரு நடத்தையியல் (Behavioralism) பாடமாக மாறியது. இதன் விளைவாக **'நடத்தையியல்'** (Behavioralism) என்ற ஒரு புதிய பாடம் பிறந்தது. 'நடத்தையியல்' என்ற இந்த சொல் உளவியல் பாடத்திலிருந்து பெறப்பட்டதாகும். அதன் பிறகு 1960– களில் **'பின்தோன்றிய நடத்தையியல்'** (Post-Behavioralism) என்ற புதிய பாடமும் பிறந்தது. நடத்தையியல் என்பது அளவுக்கு அதிகமான பழமைவாத அணுகுமுறைகளை உருவாக்கியதாலேயே இந்த புதிய முறையான "பின்தோன்றிய நடத்தையியல்" உருவானது. இதில் ஒரு விந்தை என்னவெனில் இப்புதிய போக்கினை மேம்படுத்தி உருவாக்கிய **டேவிட் ஈஸ்டன்** (David Easton) என்பவரே நடத்தையியல் புரட்சியினை தொடக்கி வைத்தார். டேவிட் ஈஸ்டனின் கருத்துப்படி நடத்தையியல் என்பது யதார்த்தம் மற்றும் உண்மைத்தன்மை ஆகியவற்றுக்கு எதிரானதாக மாறிவிட்டதாக கருதப்பட்டது. ஆகவே பின்தோன்றிய நடத்தையியல் என்பது ஆய்வுகள், விழுமியங்களை மட்டுமே முழுமையாக சார்ந்திருக்காமல் துல்லியத்தன்மையையும் சார்ந்திருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இவ்வாறாக அரசியல் அறிவியலின் அறிவுசார் புரட்சி என்பது சமூகவியல், மானுடவியல் மற்றும் உளவியல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமைந்தது. மேலும் இந்த அறிவுசார் புரட்சியாளர்கள் பழமைவாத கருத்துக்களையும், குறுகிய நோக்கம் கொண்ட அணுகுமுறைகளையும் தீவிரமாக எதிர்த்தனர். முற்கால அரசியல் அறிஞர்கள் அரசு, அரசின் கூறுகள், அரசின் நிறுவனங்கள், அவைகளின் முறையான கட்டமைப்புகள் போன்றவற்றை படித்தனரே தவிர மனிதர்களின் அரசியல் நடத்தையையும்



11th Std Political Science Tamil_Unit-1.indd 8 6/20/2018 6:00:40 PM

அவர்களுக்குள் உள்ள உறவுமுறைகள் குறித்தும் படிக்கவில்லை. எனவேதான் தற்கால அரசியல் பகுப்பாய்வாளர்கள் பின்வரும் நான்கு அடிப்படைக் கூறுகளில் கவனம் செலுத்தினர்.

- ❖ பல்முனைப் பரப்பெல்லையை உள்ளடக்குவதற்கான ஒரு தேடல்
- ❖ யதார்த்தத்திற்கான தேடல்
- ❖ தெளிவும் சுருக்கமும் பெறுவதற்கான தேடல்
- ❖ அறிவுப்பூர்வ வரிசைமுறைக்கான தேடல்

**செயல்பாடு**

- ❖ **அரிஸ்டாட்டில்** (Aristotle) ஒரு மாபெரும் சிந்தனையாளராக கருதப்படுவதற்கான காரணம் என்ன? விவாதிக்கவும்.
- ❖ **பிளாட்டோவும், அரிஸ்டாட்டிலும்** (Plato and Aristotle) கிரேக்கத்தின் சமூக, அரசியல் மற்றும் பொருளாதார வாழ்க்கையில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தி உள்ளதாக கருதப்படுவது ஏன்? விவாதிக்கவும்.
- ❖ **சார்லஸ் ஈ மெர்ரியம்** (Charles E. Merriam), **உட்ரோ வில்சன்** (Woodrow Wilson) மற்றும் **ஆர்தர் பென்ட்லி** (Arthur Bentley) ஆகியோரைப்பற்றியும் அவர்கள் எழுதிய நூல்களைப்பற்றியும் படித்து அறிந்துகொள்க.

### அரசியல் அறிவியலின் வரையறை

அரசியல் அறிவியல் பற்றி பல்வேறு அறிஞர்கள் மாறுபட்ட விளக்கங்களை அளித்துள்ளனர். **கார்னர்** (Garner) இதனை 'அரசிடம் ஆரம்பித்து அரசிடமே முடியும் ஒரு பாடம்' என்கிறார், **'லீகாக்'கும்** **'சீலே'வும்** (Leacock) (Seeley) இப்பாடம் 'அரசாங்கத்தினைப் பற்றி படிக்கும் பாடம்' என்கின்றனர். ராப்சன் (Robson) மற்றும் **லாஸ்வெல்** (Lasswell) ஆகிய இருவரும் இப்பாடம் 'அதிகாரம் மற்றும் செல்வாக்கு ஆகியவைகளைப் பற்றிய படிப்பு' என்கின்றனர். சில அறிஞர்கள் இதனை ஒருங்கிணைக்கப்பட்ட மனித சமூகத்தின் அரசியல் அம்சங்களைப் படிக்கும் பாடம் என்கின்றனர். இவ்வாறாக இப்பாடத்தின் பரப்பெல்லையானது பலமுனைகளிலும் வளர்ந்துகொண்டே வருகிறது. அரசியல் அறிவியல் என்பது வரலாற்றுப்பூர்வமாக அரசு, அதன் அமைப்புகள், சட்டங்கள், அதன் செயலாக்கங்கள் பற்றிய படிப்பாகவே அறியப்பட்டது. நடத்தைசார் புரட்சிக்குப் பின்னர் தனிமனிதர்கள் மற்றும் குழுக்களின் அரசியல் நடத்தைகளும் இதன் அங்கமாகிவிட்டன. அரசியல் அறிவியல் பாடத்தில் அண்மைக்காலத்தில் சேர்ந்துகொண்ட கருத்தாக்கம் 'ஆளுகை' (Governance) என்பதாகும்.

**கலந்துரையாடல்**



**மாணவர் –1 :** என்ன ? அரிஸ்டாட்டில் மக்களாட்சியை மோசமான அரசாங்க முறை என்றாரா?

**மாணவர் –2 :** ஆமாம்! இருப்பினும் மக்களாட்சியை அரிஸ்டாட்டில் கும்பலாட்சி என்ற பொருளில் புரிந்து கொண்டார். தூய அரசியல் அமைப்பு என்பது இதை விட மிகவும் சிறந்த மற்றும் நிலையான அரசாங்க முறை என நினைத்திருப்பார்.

**மாணவர் –1 :** அப்புறம்....... தூய அரசியல் அமைப்பு (Polity) என்றால் என்ன?

**மாணவர் –2 :** தூய அரசியல் அமைப்பில் மேலான அதிகாரம் என்பது பெருவாரியாக மக்களிடம் இருப்பதுடன் அது பொது நன்மைக்காகப் பயன்படுத்துகிறது.

**மாணவர் –1 :** ஓ! அப்படியா..!.!

அரசியல் அறிவியலானது அரசு என்பதைப்பற்றியும், அதன் தன்மைகள், பல்வேறு வடிவங்கள், செயல்பாடுகள் மற்றும் அதன் மேம்பாட்டினைப் பற்றியும் படிக்கும் ஓர் அறிவியலாகும்.

**– ப்லன்ட்சிலி (*Bluntschli*)**

அரசியல் அறிவியல் என்பது அரசின் தோற்றம், மேம்பாடு, நோக்கம் மற்றும் அதன் பல்வேறு அரசியல் பிரச்சனைகளைப் பற்றி அறிந்து கொள்வதாகும்.

**– கேரிஸ் (*Garris*)**

அரசியலைக் கற்றல் என்பது ஒருங்கிணைக்கப்பட்ட ஓர் அரசுடன் மக்களின் வாழ்க்கைக்கு உள்ள தொடர்பினை படிப்பதாகும்.

**– ஹெரால்ட் லாஸ்கி (*Harold Laski*)**

அரசியல் அறிவியல் என்பது அரசாங்கம் மற்றும் அரசியல் பொருளாதாரம் என்பவைகளை வளம், உயிரியல் வாழ்க்கை, இயற்கணிதம், வரைகணிதம், விண்வெளி போன்றவற்றோடு தொடர்புபடுத்தி படிப்பதாகும்.

**– சீலே (*Seeley*)**

அதிகாரம் வடிவமைத்து பங்கிடப்படுவதை அனுபவ விசாரணை செய்வதே அரசியல் அறிவியல் ஆகும்.

**– ஹெரால்ட் லாஸ்வெல் (*Harold Lasswell*)**

அரசியல் அறிவியல் என்பது கடந்த காலத்தை வரலாற்று ரீதியாகவும், நிகழ் காலத்தினை பகுப்பாய்வு ரீதியாகவும், எதிர்காலத்தினை நன்னெறி ரீதியாகவும் படிக்க உதவும் ஒரு பாடமாகும்.

**– கெட்டல் (*Gettel*)**

ஒரு சமுதாயத்தின் எல்லைக்குள் ஒரு நகரத்திற்கோ, ஒரு அரசுக்கோ, ஒரு தேசத்திற்கோ அந்த சமுதாயத்தில் நிலவும் பற்றாக்குறையான மனிதவளம், பொருளியல் வளம் போன்றவற்றினை மனித தேவைகளுக்கும், மனித விருப்பங்களுக்கும் ஏற்ப முறைப்படுத்தி வழங்கும் செயல்முறையே அரசியல் ஆகும்.

**– டேவிட் ஈஸ்டன் (*David Easton*)**



ஓ...! இவற்றை எல்லாம் படிக்கிறபோது அரசியல் அறிவியல் என்பது குறித்த ஒருமித்த வரையறை இல்லை என்று தோன்றுகிறது

நிகழ் ஆய்வு

**"எதிர்காலத்தினை நம்பிக்கையோடு சந்திப்போம்"**

**"Tryst with Destiny"**



ஜவஹர்லால் நேருவின் வரலாற்று புகழ் மிக்க உரையான "எதிர்காலத்தினை நம்பிக்கையோடு சந்திப்போம்" என்ற உரை குறித்து 14.08.1947 அன்று இந்து நாளிதழில் வெளியான செய்தி பின்வருமாறு –

"நீண்ட வருட காலமாக நாம் நம்பிக்கையோடு காத்திருந்த எதிர்காலம் இப்போது நமக்கு முழுமையாக கிடைக்கவில்லை எனினும் மிகவும் கூடுதலாகவே உறுதிமொழியாக வந்து வாய்த்துள்ளது" என துவங்கிய பண்டித ஜவஹர்லால் நேரு அரசமைப்பு நிர்ணய சபையில் அன்றிரவு பதவியேற்கவிருந்த உறுப்பினர்களுக்கான உறுதிமொழி தீர்மானத்தின் போது பின்வருமாறு கூறுகிறார்.

"உலகமே உறங்கிகொண்டிருக்கும்போது இந்தியா இந்த நள்ளிரவில் விழித்தெழுந்திருக்கிறது. பழமையிலிருந்து புதுமை நோக்கி பயணிக்கத்தயாராகிவிட்டோம். நீண்ட காலம் ஒடுக்கி வைக்கப்பட்ட ஒரு தேசத்தின் ஆன்மா உயிர்ப்பித்திருக்கிறது. இந்த சமயத்தில் இந்திய தேசத்திற்கும், இந்திய மக்களுக்கும் சேவை செய்ய நாம் தியாக உணர்வுடன் சில உறுதிமொழிகளை எடுத்துக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம்".

"சுதந்திரமும், அதிகாரமும் நமக்கு பொறுப்புணர்வினை அதிகமாகக்கொண்டுவந்துள்ளது. அந்த பொறுப்புணர்வு இறையாண்மையுள்ள மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் இறையாண்மை கொண்ட இந்த அவையிடம் வழங்கப்பட்டுள்ளது. இந்த சுதந்திரத்தை நாம் பல வலிகளையும், துன்பங்களையும், துயரங்களையும் தாங்கி, கனத்த இதயத்துடனேயே பெற்று இருக்கிறோம். இவற்றுள் பல வலிகள் இன்னும் தொடரவே செய்கின்றன. எப்படியிருப்பினும் கடந்த காலம் முடிவுக்கு வந்து புதிய எதிர்காலம் நம் கண் முன் வந்துள்ளது.

இந்தியாவுக்கான நமது சேவை கோடிக்கணக்கான இந்திய மக்களை அவர்களின் வறுமை, அறியாமை, பிணி, சமத்துவமின்மை ஆகியவைகளிலிருந்து மீட்டெடுக்க செய்யும் சேவையை பொறுத்தே அமையும். இந்த தலைமுறையின் மிகச்சிறந்த மனிதர்களாக நாம் வாழ விரும்பினால் இந்தியர்கள் ஒவ்வொருவரின் கண்களில் இருந்து வழியும் கண்ணீரை துடைப்பதற்கு முன்வரவேண்டும். அது நமது சக்திக்கு அப்பாற்பட்டு கூட இருக்கலாம். கண்ணீரும், துன்பங்களும் தொடரும்வரை நமது பணிகளும் ஓயப்போவது கிடையாது. ஆகவே நம் கனவுகளை நனவாக்க நாம் மேன்மேலும் கடினமாக உழைக்க வேண்டும். இக்கனவுகள் இந்தியாவுக்கானது மட்டுமல்ல, உலகிற்கானது, உலகின் அனைத்து தேசங்கள் மற்றும் மக்கள் ஒன்றாக இருப்பதால் தனித்து இயங்குவதை கற்பனை கூட செய்ய முடியாது. அமைதி என்பது பிரிக்க முடியாதது. சுதந்திரமும் அது போலத்தானே, தற்பொழுது வளமும் அப்படியே ஆகும். பேரழிவும் அப்படியே இருப்பதால் இந்த ஒரே உலகில் அவற்றினை தனித்தனி பாகங்களாகப் பிரிக்க முடியாது".

**முன்பக்கத்தில் உள்ள நேருவின் பேச்சிலிருந்து நீ உணர்ந்து கொண்ட கருத்துக்களின் அடிப்படையில் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி.**

1. 'எதிர்காலத்தை நம்பிக்கையோடு சந்திப்போம்' என்ற சொற்றொடரிலிருந்து நீ என்ன புரிந்து கொள்கிறாய்?
2. நேரு வெளிச்சமிட்டுக்காட்டியிருக்கும் இந்தியாவின் சவால்களில் எவையேனும் மூன்றினை குறிப்பிடுக.
3. நமது அன்றாட வாழ்வில் சுதந்திரம், அதிகாரம், பாதுகாப்பு, அமைதி போன்றவை முக்கிய அடிப்படை அம்சங்களாக கருதப் படுவது பற்றி கலந்துரையாடுக.

**செயல்பாடு**

உனது வகுப்பினை பல குழுக்களாக பிரித்து அரசியல் அறிவியல் பாடத்தின் பல வரையறைகள் பற்றிய ஒரு கலந்துரையாடல் நடத்துக.

ஐந்து அரசியல் தத்துவஞானிகளின் படங்களை சேகரித்து அவர்களில் எவரேனும் மூவரைப் பற்றி சிறு குறிப்பு வரைக.

## 1.2. அரசியல் அறிவியலின் தன்மை (Nature of Political Science)

மனிதன் என்பவன் ஒரு சமூக விலங்கு ஆவான். மனிதன் தனிமையைவிட பிறருடன் இருப்பதையே விரும்புகிறான். மனிதன் தனது பரந்துபட்ட தேவைகளுக்கும், திருப்திக்கும் சக மனிதனைச் சார்ந்தே வாழவேண்டியுள்ளது. அதனால் மனிதர்கள் எப்போதும் சமூக குழுக்களாகவே வாழ வேண்டியுள்ளது. சமூகத்தின் ஒரு அங்கமாக விளங்கும் மனிதர்கள் பொதுவான நடத்தை விதிகளை கடைபிடித்தே வாழவேண்டியுள்ளது. இத்தகைய சமுதாயம் முறையாக ஒருங்கிணைக்கப்பட்டு விதிமுறைகளையும், கட்டுப்பாடுகளையும் கொண்டுள்ளதால் அதனை ஏற்பது மிகவும் நன்றாகும். இவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்ட சமுதாயம், அரசு, சட்டம், தனிமனித உரிமைகள், குழுவில் உள்ள உரிமைகள் ஆகியவைகளைப் பற்றியே அக்கறை கொண்டுள்ளது. இவ்வாறாக அரசியல் அறிவியல் என்பது மனித இனத்திற்கு, அரசு மற்றும் அரசாங்கத்துடனான தொடர்பினை முக்கியமாக விளக்குகிறது.

அரசியல் அறிவியல் என்பது கோட்பாடு மற்றும் செயல்முறை ஆகியவற்றை பற்றியதாகும். இது அரசியல் முறைமைகளையும், அரசியல் நடத்தைகளையும் விவரித்து பகுப்பாய்கிறது. அரசின் தோற்றம் மற்றும் வளர்ச்சி பற்றி கண்டறிகிறது. அரசுக்கும் அதன் கீழ் உள்ள சங்கங்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியனவற்றுக்கும் உள்ள தொடர்பினைப் படிக்கிறது. அரசியல் சூழல்களில் ஆடவர் மற்றும் மகளிர் ஆகியோர் என்ன செய்கிறார்கள் என்பதனை விளக்குகிறது. ஆரம்ப காலகட்டத்தில் இப்பாடம் வரலாறு மற்றும் தத்துவம் ஆகிய பாடங்களோடு இணைந்து செயல்பட்டது. 1903– இல் தோன்றிய 'அமெரிக்க அரசியல் அறிவியல் கழகம்' (American Political Science Association) இப்பாடத்தினை வரலாறு, பொருளியல் மற்றும் பல சமூக அறிவியல் பாடங்களின் பிடியிலிருந்து மீட்டெடுத்து ஒரு தனிப்பாடமாக உருவாக வழிவகை செய்தது. பிற்காலத்தில் அதிகமான அறிவியல் அணுகுமுறை ஏற்பட்ட பிறகு இப்பாடம் உளவியல் மற்றும் மானுடவியல் போன்ற பாடங்களோடு நெருங்கிய தொடர்பில் இருந்தது. நடத்தையியல் புரட்சி ஏற்பட்ட பிறகு இப்பாடம் தனிமனிதன், குழுக்கள் ஆகியவற்றின் நடத்தைகள் பற்றி ஆய்ந்தது. பின்னர் தோன்றிய நடத்தையியலால்



11th Std Political Science Tamil_Unit-1.indd 12 6/20/2018 6:00:41 PM

இப்பாடம் சமூகத்தின் அன்றாட பிரச்சனைகளையும், அரசியல் உண்மைகளையும் பற்றிய படிப்பாக மாறியது.

**செயல்பாடு**

**பிளாட்டோ** மற்றும் **அரிஸ்டாட்டில்** ஆகியோரின் முக்கியமான படைப்புகளைப் பட்டியலிடுக.

## 1.3 அரசியல் அறிவியலின் பரப்பெல்லை (Scope of Political Science)

அரசியல் அறிவியல் பாடத்தின் பரப்பெல்லை என்பது இந்தப் பாடத்தின் வரம்பு மற்றும் பாட உள்ளடக்கங்கள் பற்றியதாகும். இது அடிப்படையில் 'அரசு' என்பதைப் பற்றி படிப்பது மிகவும் பரந்த பகுதிகளை கொண்டதாகும். 'அரசு' என்பது ஒரு குறிப்பிட்ட எல்லைப் பகுதிக்குள் தனது சொந்த மக்களின் முறையான மற்றும் மகிழ்ச்சியான வாழ்வுக்கு வழிசெய்யும் அரசாங்கத்தையும் கொண்டதாகும். மனித நடத்தை என்பது நிலையாக இல்லாமல் மாறிக்கொண்டேயிருப்பதால் இப்பாடத்தின் பரப்பெல்லை தொடர்ந்து விரிவடைந்துகொண்டே செல்கிறது. இப்பாடம் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுடன் மற்ற மனிதர்களுக்கும் உள்ள தொடர்பினைப் பற்றிய சட்டமாக்கல் பற்றி படிப்பதால், இதன் பரப்பெல்லையானது பொருளியல், வணிகவியல், சமூகவியல், சட்டம் என பலவகையாக விரிவடைந்து கொண்டே செல்கிறது.

1948-ல் நடந்த பன்னாட்டு அரசியல் அறிவியல் சங்கமாநாடு இப்பாடத்திற்கு பின்வரும் பரப்பெல்லைகளை குறிப்பிட்டது.

- ❖ அரசியல் கோட்பாடு
- ❖ அரசியல் நிறுவனங்கள்
- ❖ அரசியலின் இயக்கவியல்
- ❖ பன்னாட்டு உறவுகள்

அரசியல் அறிவியல் பாடத்தின் பரப்பெல்லையை மேற்கண்ட நான்கு உபதலைப்புகளில் அடக்கிவிட முடியாது என்பதால் பின்வரும் படவிளக்கம் அரசியல் அறிவியலின் பரந்த பரப்பெல்லையை விளக்குகிறது.




அரசியல் அறிவியல் பாடமானது அரசு மற்றும் அரசாங்கங்களின் பிரச்சனைகளைப் பற்றி முக்கியமாகப் படிக்கிறது. தனது குடிமக்களை ஆள்வதற்கான சட்டங்களை உருவாக்கும் அதிகாரத்தினை அரசு பெற்றுள்ளது. அரசு தனது அதிகாரங்களை அரசாங்கங்கள் மூலமாக செயல்படுத்துகிறது. அரசாங்கம் என்பது அரசின் ஒரு முகமை ஆகும். அரசு என்பது அரசாங்கங்களை உள்ளடக்கியதாக இருப்பதால் பிளண்ட்சிலி (Bluntschli) போன்ற அரசியல் கோட்பாட்டாளர்கள் அரசியல் அறிவியலின் பரப்பெல்லையை மிகவும் குறைத்து அது 'அரசு' என்பதைப் பற்றி மட்டும் படிப்பதாக கூறுகின்றனர். அரசாங்கம் என்பது அரசின் ஒரு பகுதியே ஆகும். அதே சமயம் கார்ல் டாஷ் (Karl Deutsch) போன்ற அறிஞர்கள் 'அரசியல் அறிவியல் என்பது அரசாங்கங்களைப் பற்றி மட்டுமே படிப்பது' என்கின்றனர். ஹெரால்ட் லாஸ்கி (Harold Laski) போன்ற அறிஞர்கள் 'அரசியல் அறிவியல் என்பது அரசுகள் மற்றும் அரசாங்கங்கள் ஆகிய இரண்டையும் படிப்பதாக' வாதிடுகின்றனர். அரசு மற்றும் அரசாங்கம் ஆகிய இரண்டுக்கும் அடிப்படையான வேறுபாடுகள் இருந்தாலும் அவைகளின் பரப்பெல்லைகளை ஆயும்போது ஒன்றினை விட்டு மற்றதை தனியாகப்

படிக்க முடியாது. அரசியல் அறிவியலின் பரப்பெல்லையானது, அரசின் கடந்த காலம், நிகழ் காலம் மற்றும் எதிர்கால வளர்ச்சிகளையும் அரசின் மேம்பாட்டினையும் பற்றிப் படிப்பதாகக் கூறலாம்.

அரசியல் கோட்பாடு என்பது அரசியல் அறிவியலின் ஒரு முக்கியமான பகுதியாகக் கருதப்படுகிறது. அரசியல் கோட்பாடு என்பது அரசியல் சிந்தனைகள் மற்றும் அரசியல் தத்துவங்களை உள்ளடக்கிய அரசியல் அறிவியலின் முக்கிய கருத்தாக்கங்களை விவரிக்கும் ஒரு பாடமாகும். அரசியல் அறிவியல் பாடமானது அரசியல் நிறுவனங்களின் தன்மை, அமைப்பு மற்றும் செயல்பாடு ஆகியவைகளைப் பற்றியதாகும். இப்பாடம் மேலும் பலவகையான அரசமைப்புச் சட்டங்களையும் மற்றும் பிற அரசாங்கங்களை ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்யும் பணியினையும் செய்கிறது. இப்பாடத்தின் பரப்பெல்லை தற்கால அரசியல் மற்றும் அரசாங்கங்களின் சக்திகளை உள்ளடக்கியதாக அமைந்துள்ளது. இப்பாடம் அரசியல் கட்சிகள், தன்னலக்குழுக்கள் மற்றும் அழுத்தக்குழுக்கள் ஆகியவைகளைப் பற்றி படிப்பதாகவும் அமைந்துள்ளது. அரசியல் இயக்கவியல் பற்றிய செயலறிவிலான கற்றலாக தனிமனிதர்கள், குழுக்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகிவைகளின் நடத்தைகள் பற்றியும் ஆராய்கிறது. முக்கியமாக அரசியல் அறிவியல் என்ற பாடம் தனி மனிதனுக்கும், அரசுக்கும் உள்ள உறவுமுறைகளின் மீது பெரிதும் ஆர்வம் காட்டுகிறது. இதன் விளைவாக தற்கால அரசியல் அறிஞர்கள் அரசியல் அறிவியலின் நடத்தையியல் மற்றும் முறைமை அணுகுமுறையின் அடிப்படையில், அரசியல் அறிவியல் பாடத்தின் பரப்பெல்லையை மிகவும் விரிவுபடுத்தியுள்ளனர். இதனால் 'அரசியல் சமூகமயமாதல்', 'அரசியல் பண்பாடு', 'அரசியல் மேம்பாடு', 'முறைசாரா அமைப்புகள்', 'அழுத்தக் குழுக்கள்' போன்றவைகளும் அரசியல் அறிவியல் பாடத்தின் பரப்பெல்லைக்குள் வருகின்றன.

மேலும் அரசியல் அறிவியலின் பரப்பெல்லையின் கீழ் தூதாண்மை (Diplomacy), பன்னாட்டுச் சட்டங்கள், பன்னாட்டு அமைப்புகள் போன்றவைகளும் உள்ளடங்கியுள்ளன. அரசாங்கம் சார்ந்த மற்றும் அரசாங்கம் சாராத நிறுவனங்களின் அரசியல் பிரச்சனைகளின் மீதான பொதுக்கொள்கைகளை வகுப்பது பற்றியும் அரசியல் அறிவியல் பாடம் தனது பரப்பெல்லையில் உள்ளடக்கியுள்ளது.

## 1.4. அரசியல் அறிவியல் என்பது ஒரு அறிவியலா? அல்லது ஓர் கலையா? (Is Political Science, a Science or an Art?)

அரசியல் அறிவியல் என்ற இந்த பாடம் ஒரு கலைப் பாடமா? அல்லது ஒரு அறிவியல் பாடமா? என்பது பற்றியான ஒரு பெரிய விவாதமே அரசியல் அறிவியல் அறிஞர்களிடையே நிலவி வருகிறது. சில அறிஞர்கள் இப்பாடமானது அரசு மற்றும் அரசாங்கம் என்பது பற்றிய ஒரு அறிவியல் பாடம் என்று கருதுகின்றனர். மற்றும் சிலரோ இப்பாடத்தினை மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள ஒரு கலைப் பாடம் என்கின்றனர். இப்பாடத்தின் தன்மை, வழிமுறைகள், அணுகுமுறைகள் ஆகியவற்றின் அடிப்படையில் அறிவியல் தன்மை மிகவும் குறைவாக காணப்படுவதால் **அகஸ்டே கோம்டே** (Auguste Comte) மற்றும் **மைட்லேன்ட்** (Maitland) போன்ற அறிஞர்கள் இப்பாடத்தினை ஒரு கலைப் பாடமாகக் கருதுகின்றனர். ஏனெனில் இப்பாடத்தில் தொடர்ச்சி, மேம்பாட்டுதன்மை, அடிப்படை தெளிவு போன்றவைகளும், உலகம் முழுவதும் ஒப்புக்கொள்ளக் கூடிய பொதுவான கொள்கைகளும், அறிவியல் பூர்வ அணுகுமுறைகளும், பரிசோதனை முறைகளும் மிகவும் குறைவாகவே இருக்கிறது என்று இவர்கள் வாதிடுகின்றனர். மேலும் நம்பகத்தன்மை, சரிபார்ப்புத்தன்மை, தெளிவு, துல்லியம் போன்ற தூய அறிவியலின் கூறுகள் இப்பாடத்தில் இல்லை என்பதும் இவர்களின்



11th Std Political Science Tamil_Unit-1.indd 14 6/20/2018 6:00:41 PM

வாதமாகும். தூய அறிவியல் பாடங்களான இயற்பியல், வேதியியல், போன்ற பாடங்களில் உள்ளது போல காரணங்களையும் விளைவுகளையும் (Cause and Effect) தொடர்புப்படுத்தி உருவாக்கும் பொதுக்கோட்பாடுகள் உலகம் முழுதும் இப்பாடத்தில் ஒரே மாதிரியாக இல்லை என்பதனால் இப்பாடத்தினை ஒரு கலைப் பாடம் என்றே பல அறிஞர்களும் கருதுகின்றனர்.

இப்பாடத்தினை ஒரு கலைப் பாடமே என்று வாதிடுவோர் மத்தியில் அரிஸ்டாட்டில்தான் இதனை ஒரு மேலான அறிவியல் என்று முதன்முதலாக அழைத்தார். **ப்லன்ட்சிலி** (Bluntschli), **மாண்டெஸ்கியூ** (Montesquieu), **போடின்**, (Bodin), **ஹாப்ஸ்** (Hobbes) போன்ற அறிஞர்கள் இந்த கருத்தினை ஒப்புக்கொண்டு இப்பாடம் ஒரு அறிவியல் பாடமே என்கின்றனர். முனைவர் **கார்னர்** (Dr.Garner) போன்றோர் இப்பாடத்திலும் முறைமையான அணுகுமுறை, உற்றுநோக்கல், பரிசோதனை போன்றவை இருப்பதாக கூறுகின்றனர். தூய அறிவியல் பாடங்களில் உள்ளதுபோல உலகம் முழுவதும் ஒப்புக்கொள்ளப்பட்ட கோட்பாடுகள் அரசியல் அறிவியல் பாடத்தில் முழுக்க இல்லாமல் போனாலும் கூட இந்த அரசியல் அறிவியல் பாடத்திலும் பல கருத்துக்களை பொதுமைப்படுத்தி நிரூபிக்க முடியும் என்பது இவர்களின் கருத்தாகும். உதாரணமாக சமூக நல மேம்பாட்டுக்கும், பன்மைத் தன்மை கொண்ட சமுதாயங்களுக்கும் மக்களாட்சியே சிறந்த ஆட்சிமுறை என்ற கருத்து பொதுவானதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த கருத்து முடிவு முற்காலம், இடைக் காலம்,

### அரசியல் அறிவியல் என்றால் என்ன?

❖ **அரசியல் அறிவியல் என்றால் என்ன?**

அரசு அரசாங்கம் மற்றும் அரசியல் பற்றிய அறிவியல் பூர்வ படிப்பே அரசியல் அறிவியல் எனலாம்.

❖ **அரசியல் அறிவியல் பாடம் எதுவாக இல்லை?**

அரசியல் அறிவியல் என்பது அனைத்து விடைகளையும் தன்னகத்தேகொண்ட முழுநிறைவான அறிவியலாக இல்லை.




❖ **அரசியல் அறிவியல் ஓர் அறிவியலா? அவ்வாறெனில், அது எங்ஙனம் அறிவியல் தன்மையுடையதாகிறது?**

'அரசியல்' என்ற இந்த பாடம் அமெரிக்க அரசியல் அறிவியல் சித்தனையாளர்களின் அறிவியல் பூர்வ அணுகு முறைகளுக்குப் பிறகுதான் "அரசியல் அறிவியல்" எனப் பெயரிட்டு அழைக்கப்பட்டது. எனினும் தூய அறிவியல் பாடங்களான இயற்பியல், வேதியியல், உயிரியல் போன்ற பாடங்களுக்கு இணையாக இந்த அரசியல் அறிவியல் பாடத்தினைக் கருத முடியாது. ஆகவே, மனித நடத்தையைப் பற்றியதாக இருப்பதால் மற்றொரு புறத்தில் அரசியல் அறிவியல் என்பது அரசு மற்றும் அரசாங்கத்தைப் பற்றிய அறிவியலாகும் என வாதிட்டனர்.அரசியல் அறிவியல் பாடத்தினை ஓர் சமூக அறிவியல் பாடம் என்று அழைப்பதுதான் பொருத்தமானதாக இருக்கும்.

நவீனகாலம் ஆகியவற்றில் பல்வேறு வகையான ஆட்சி முறைகளை ஆய்வுக்கு உட்படுத்திய பின்னரே உருவாக்கப்பட்டது. ஆனால் அதே சமயத்தில் இப்பாடத்தின் தன்மை, வழிமுறை, கோட்பாடுகள் ஆகியன பற்றி ஒத்த கருத்துக்களை ஏற்படுத்த முடியவில்லை. ஏனெனில் இப்பாடத்தில் அரசியல் நிறுவனங்கள் அனைத்திலுமே மனித உறவுகள் தொடர்பில் இருக்கின்றன. மனிதனோடு தொடர்புடைய எந்த ஒரு செயல்பாடும் நிலையானதாக இல்லாமல் மாறக்கூடியதாகும். இந்த காரணத்தாலேயே இப்பாடத்திற்கு முழுமையான அறிவியல் என்ற தகுதியினை கொடுக்க இயலவில்லை. எப்படியிருப்பினும் ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம், சமத்துவமின்மை, எழுத்தறிவின்மை, வறுமை போன்றவை சமுதாயத்தினை பெரிதும் பாதிக்கும் காரணிகள் என்பதை அனைத்து அரசியல் அறிஞர்களும் ஏகமனதாக ஒப்புக்கொள்கின்றனர்.

அதேபோல 'காரணங்கள் மற்றும் அதன் விளைவுகள்' பற்றிய தூய அறிவியல் கோட்பாடு அரசியல் அறிவியலுக்கு பொருந்தாது என்று கூறினாலும் 'வறுமை, வேலையின்மை போன்ற காரணிகள் புரட்சியினை ஏற்படுத்திவிடும்' என்பது அரசியல் அறிவியலிலும் 'காரண விளைவுக் கோட்பாடு' (Cause and Effect Theory) உள்ளதைக் காட்டுகிறது. எனவேதான் சில அரசியல் அறிஞர்கள் இப்பாடத்தினை ஒரு அறிவியல் பாடம் என தொடர்ந்து கூறிவருகின்றனர்.

எப்படியிருப்பினும், அரசியல் அறிவியலை இயற்கை அறிவியலுடன் ஒப்பிட முடியாமல் இருந்தாலும் அது அரசு மற்றும் அரசாங்கத்துடனான தனிமனிதர்களின் உறவினைப் பற்றிய ஓர் சமூகவியலாகும். அரசியல் அறிவியல் என்பது கலையா அல்லது அறிவியலா என்பது கற்பதற்கு எடுத்துக் கொண்ட பொருள் மற்றும் அதனைக் கற்றறிய பயன்படுத்தும் அணுகுமுறையைப் பொறுத்ததாகும்.

**செயல்பாடு**



படத்தில் காணப்படும் ஆளுமை யார் என்பதைக் கண்டு பிடித்து அவருடைய இரண்டு முக்கிய படைப்புகளைப் பற்றி குறிப்பு எழுதுக.

**கலந்துரையாடல்**

**மாணவர் 1:** அரசியல் அறிவியல் பாடம் ஒரு முக்கியமான பாடமாக தோன்றுகிறதே!.

**மாணவர் 2:** ஏன் அப்படிச் சொல்கிறாய்?

**மாணவர் 1:** ஏனெனில் இப்பாடம் அரசியல் வாழ்க்கையை பகுப்பாய்வு செய்வதன் மூலம் நமது சமூக வாழ்க்கையின் பல பிரச்சனைகளைப் புரிந்து கொண்டு தீர்வு காண உதவுகிறது.



**மாணவர் 3:** அதோடு மட்டுமல்ல, **பிளாட்டோ, அரிஸ்டாட்டில்** மற்றும் **ஹாப்ஸ்** போன்ற எண்ணற்ற அரசியல் அறிஞர்கள் தங்களை சமூக விமர்சனங்கள் மற்றும் மறுகட்டமைப்பில் ஈடுபடுத்திக் கொண்டனர்.



11th Std Political Science Tamil_Unit-1.indd 16 6/20/2018 6:00:42 PM

**செயல்பாடு**

எந்த ஒரு சமுதாயத்திலும் அரசியல், பொருளாதாரம், சமூகம் மற்றும் மதம் சம்மந்தமான பலவித செயல்பாடுகள் ஒரே நேரத்தில் தொடர்ந்து நடந்து கொண்டேயிருக்கின்றன. இந்த செயல்பாடுகள் அனைத்திலும் தனிமனிதர்கள், குழுக்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவை தவிர உட்புற, வெளிப்புற அமைப்புகளும் உள்ளன. இத்தகைய செயல்பாடுகள் மற்றும் அதில் ஈடுபட்டுள்ள அனைவருமே அரசின் சட்டங்களால் ஆளப்படுவதுடன் கட்டுப்படுத்தப்படுகின்றனர்.

குடிமக்களுக்கும் அரசின் சட்டங்களை மதித்து ஏற்று கொள்வதற்கான கடப்பாடு உள்ளது. சட்டத்திற்கு மேலானவர் என்று எவருமில்லை. சட்டங்களை மீறுவது தண்டனைக்குரிய குற்றமாகும். அவ்வாறு சட்டத்தினை கடைபிடிக்காத நபர்களை தண்டிப்பதும் சமுதாய அமைதி மற்றும் ஒழுங்கிணை நிலைநாட்டி அதன் மூலமாக சட்டத்தினை கடை பிடிப்பவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளிப்பதும் அரசின் கடமையே ஆகும். இதனால் அறியப்படுவது என்னவெனில் ஒருவர் விரும்பினாலும் அல்லது விரும்பாவிட்டாலும் அவர் அரசின் கீழ் அதன் சட்டத்திற்கு உட்பட்டு வாழ்வது அவசியமாகிறது.

**கீழ்க்கண்டவற்றைக் குறித்துக் கொள்க.**

பிறந்த குழந்தைக்கும் கூட சில அடிப்படை உரிமைகள் உண்டு. பள்ளிகள் முதலிய கல்வி நிறுவனங்களில் சேருவதற்கு வயது வரம்புகள் உண்டு. வயதுச் சான்றிதழ் பெறுவதற்கு நகராட்சி நிர்வாகத்திடம் சென்று விண்ணப்பிக்க வேண்டும்.

உனது படிப்புமுடிந்த உடன் நீ வேலைக்கு சேருவதற்கு உனக்கு சான்றிதழ்கள் தேவைப்படும். நீ சம்பாதிக்க ஆரம்பித்த உடன் அரசாங்கத்திற்கு வரி செலுத்திட வேண்டும். ஒரு குறிப்பிட்ட வயதில் நீ திருமணம் செய்து கொள்வாய்.



எச்சரிக்கை! நீயும் உன்னை திருமணம் செய்து கொள்ள போகும் பெண்ணும் சட்டவிதிகளின் படி குறிப்பிட்ட திருமண வயதினை அடைந்திருக்க வேண்டும். பிறகு உனக்கென்று ஒரு வீடு வாங்குவதாயின் நீ வங்கிகளில் கடன் பெற தகுதி உண்டு. தொடர்ந்து நீ வாங்கிய வீட்டுக்காக உள்ளாட்சி நிர்வாகத்திடம் சொத்து வரி கட்டவேண்டும்.

ஒரு குறிப்பிட்ட வயதில் நீ ஓய்வு பெற வேண்டிய நிலை ஏற்படும். ஓய்வு கால பலன்கள் சட்டத்தால் வரையறுக்கப் பட்டுள்ளன. உனது காலத்திற்குப் பின் உனது சொத்துக்களை உனது வாரிசுகள் அடைவதற்கும் வாரிசு சான்றிதழ் தேவைப்படும்.

மேலும் நீ வாழும் காலத்தில் உனது உயிர், உடைமைகள் போன்றவற்றுக்கு சட்டத்துக்கு உட்பட்ட பாதுகாப்பு உண்டு. காவல்துறை, ராணுவம், நீதித்துறை போன்ற பல துறைகளும் சட்டப்படியான உனது பாதுகாப்புக்காகவே உள்ளன. ஒவ்வொரு செயல்பாடும் சட்டத்திற்குட்பட்டவை ஆகும். இன்னும் சில நாடுகளில் இராணுவ பணி அனைவருக்கும் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

கல்வி, வணிகம், சமூக நடவடிக்கைகள், தேர்தல் பங்கேற்பு, உனது உரிமைகள், உனது சுதந்திரம், உனது அன்றாட செயல்பாடுகள் ஆகிய அனைத்தும் சட்டத்தின்படியான சில விதிமுறைகளுக்கு உட்பட்டே அமைந்துள்ளது.

நினைவில் வைத்துக் கொள். இவைகள் அனைத்துமே அரசு, அதன் முகமையான அரசாங்கம், அதன் கீழ் இயங்கும் நிர்வாக இயந்திரங்கள் சட்டமன்றம், நிர்வாகத்தினர் மற்றும் நீதித்துறை ஆகியவற்றால் மட்டுமே செயலாக்கம்செய்யப்படுகின்றன.எனவேதான் அரசியல் அறிவியலைப் பற்றி அனைவருக்கும் படிப்பது மிகவும் அவசியமானதாகும்.



11th Std Political Science Tamil_Unit-1.indd 17 6/20/2018 6:00:42 PM

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**

*நீ யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். நீ எப்படியாக வேண்டுமானாலும் மாற விரும்பலாம். நீ அரசியலின் மீது ஆர்வம் இல்லாமல் கூட இருக்கலாம். ஆனால் அரசியல் உன் மீது ஆர்வமாக இருக்கிறது!*

**– மார்ஷல் பெர்மன் (Marshall Bermen)**

## 1.5 அரசியல் அறிவியலை படிப்பதற்கான அணுகுமுறைகள்

அணுகுமுறை என்பது ஒரு அரசியல் நிகழ்வினைக் கண்டுணர்ந்து பின்பு அதனை விளக்குவதற்காக ஏற்படுத்தப்பட்டது ஆகும். அரசியல் அறிவியலை பற்றி அறிந்து கொள்ள பல்வேறு அணுகுமுறைகள் உள்ளன. அவைகளை பாரம்பரிய அணுகுமுறைகள் மற்றும் தற்கால அணுகுமுறைகள் என்று இரண்டு வகையாகப் பிரிக்கலாம். பாரம்பரிய அணுகுமுறைகள் என்பவை அனுமானங்கள் மற்றும் கருத்தறிவு அடிப்படையிலானவை. தற்கால அணுகுமுறைகள் என்பவை அனுபவ அறிவு மற்றும் அறிவியல் தன்மையை அடிப்படையாக கொண்டவை ஆகும்.






11th Std Political Science Tamil_Unit-1.indd 18 6/20/2018 6:00:42 PM

## I. பாரம்பரிய அணுகுமுறை (Traditional Approach)

### அ) தத்துவார்த்த அணுகுமுறை (Philosophical Approach)

இந்த அணுகுமுறைதான் அரசியலைக் கற்பதற்கான மிகவும் பழமையான அணுகுமுறையாகும். இதனை அனுமானங்கள் மற்றும் மனோதத்துவ அல்லது நன்னெறி சார்ந்த அணுகுமுறை என்றும் கூறலாம். இந்த அணுகுமுறைப்படி அரசு, அரசாங்கம் மற்றும் மனிதனின் அரசியல் நடத்தையைப் பற்றிய படிப்பானது சில இலக்குகள், நீதிநெறிகள் மற்றும் உண்மைகள், ஆகியவற்றை அடைவதில் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. இந்த அணுகுமுறைப்படி இந்த அரசியல் அறிவியல் பாடம் நன்நெறி உலகத்தோடு நெருக்கமாக கொண்டு செல்லப்படுகிறது. ஆனால் இந்த அணுகுமுறை மிகவும் மேலோட்டமானதாகவும் மிகுந்த யூகங்கள் அடிப்படையிலானதாகவும் இருப்பதாக பல விமர்சகர்கள் கருதுகிறார்கள்.

### ஆ) வரலாற்று அணுகுமுறை (Historical Approach)

இந்த அணுகுமுறையானது 'அரசியல் அறிவியல்' என்ற இந்த பாடம் கடந்த காலங்களில் அரசுகளும், அரசாங்கங்களும், அரசியல் நிறுவனங்களும் எவ்வாறு தோன்றி படிப்படியாக வளர்ச்சி பெற்று வளர்ந்து வந்தன என்பதை அறிந்துகொள்வதில் இருந்து தொடங்குகிறது. தனி மனிதர்களும், அவர்களின் தனிப்பட்ட விருப்பங்களும் எவ்வாறு அரசியல் அமைப்புகளின் வெற்றி தோல்விகளுக்கு காரணமாக இருந்தன என்பதைப்பற்றியும், அதனால் கற்றுக்கொண்ட பாடங்கள் எவ்வாறு எதிர்கால அரசியல் அமைப்புகளுக்கு உதவின என்பதும் இந்த அணுகுமுறையினால் பெறப்படும் சில தகவல்களாகும். தற்கால அரசியல் பிரச்சனைகளைப் புரிந்து கொள்வதற்கு அதே போன்ற வரலாற்று நிகழ்வுகள் அறியப்பட்டன. இதனை விமர்சிப்பவர்கள் கூறுவது என்னவென்றால் பழங்காலத்தைப் பற்றிய பல தகவல்கள் பிரகாசமாக தோன்றிய போதிலும் அவைகளில் சில மேலோட்டமான ஒற்றுமைகள் தந்து பல சமயங்களில் நம்மை தவறான பாதைக்கு கொண்டு சேர்த்து விடும் என்பது இவர்களின் வாதமாகும்.

### இ) சட்ட பூர்வ அணுகுமுறை (Legal Approach)

அரசியல் அறிவியலைப் பற்றி கற்பது என்பது அரசினால் ஓர் அரசியல் அமைப்பினை நிர்வகிக்க உருவாக்கப்பட்ட சமூக நிறுவனங்களுடனான தொடர்புடையதாகும். மேலும் அரசு என்பது சட்டம் மற்றும் ஒழுங்கு பற்றியதாக இருப்பதால் அரசியல் கோட்பாட்டாளர்கள் நீதித்துறை நிறுவனங்கள் மீது அதிகக் கவனம் செலுத்துகின்றனர். இந்த அணுகுமுறையானது சட்டத்தினை, உருவாக்கி அதனை செயல்படுத்தும் ஒரு நிறுவனமாகவே அரசினைப் பார்க்கின்றது. சில அரசியல் விமர்சகர்கள் இந்த அணுகுமுறை மிகவும் குறுகிய பார்வையிலானது என்பதுடன் சட்டம் மற்றும் ஒழுங்கினைச் செயல்படுத்துவதைத் தவிர அரசுக்கு பல்வேறு பணிகள் உள்ளனவென்றும், சட்டம் என்பது தனி மனித வாழ்வின் ஒரே ஒரு அம்சம் பற்றியதாகும் என்றும், சட்டத்தை வைத்தே மனிதனின் அரசியல் நடத்தையை முழுமையாகப் புரிந்து கொள்ள முடியாது எனவும் குறிப்பிடப்படுகின்றனர்.

### ஈ) நிறுவனம் சார்ந்த அணுகுமுறை (Institutional Approach)

அரசியலின் முறையான அமைப்புகளான சட்டமன்றம், நீதித்துறை மற்றும் செயலாட்சித் துறை ஆகிய துறைகளின் செயல்பாடுகளின் அடிப்படையில் அரசியல் அறிவியலை அணுகுவது நிறுவனம் சார்ந்த அணுகுமுறையாகும். இந்த அணுகுமுறையை கட்டமைப்பு அணுமுறை (Structural Approach) என்றும் சிலர் கூறுகிறார்கள். இந்த அணுகுமுறையில் பல்வேறு முறைசாரா அமைப்புக்களைப் பற்றி படிப்பதோடு பல்வேறு வகையான அரசாங்கங்களும் ஒப்பீட்டு



11th Std Political Science Tamil_Unit-1.indd 19 6/20/2018 6:00:42 PM

முறையில் படிக்கப்படுகின்றன. இந்த அணுகுமுறையில் முறை சார்ந்த மற்றும் முறை சாராத அமைப்புக்களை மட்டும் கவனத்தில் எடுத்துக்கொள்கிறார்களே தவிர அதனுடன் தொடர்புடைய மனிதர்களின் நடத்தையினை கவனத்தில் எடுத்துக் கொள்வதில்லை என்பது ஒரு குறைபாடாகும்.

## II நவீன அணுகுமுறைகள் (Modern Approach)

### அ) சமூகவியல் அணுகுமுறை (Sociological Approach)

சமூகவியல் அணுகுமுறையானது சமூக உறுப்பினர்களின் அரசியல் நடத்தையை சமூக சூழலில் புரிந்து கொள்வது குறித்து வலியுறுத்துகிறது.அரசு என்பது அடிப்படையில் ஒரு சமூக உயிரினமாகும். எனவே, அரசியல் என்பதை சமூக காரணிகளின் மூலம் புரிந்து கொள்ளமுடியும். ஆனால், அரசியல் அறிஞர்கள் சிலர் அரசியல் அறிவியல் பாடத்தில் சமூகவியல் பிரச்சனைகளுக்கு அதிகக் கவனம் மற்றும் அதிக முக்கியத்துவம் கொடுப்பது அரசியல் அறிவியலின் தனித்தன்மைக்கு ஏற்புடையதன்று என்று கருதுகின்றனர்.

### ஆ) உளவியல் அணுகுமுறை (Psychological Approach)

உளவியல் அணுகுமுறையானது அரசியல் மற்றும் சமூக நிறுவனங்கள் உளவியல் விதிமுறைகளின் அடிப்படையில் இயங்க வேண்டுவதின் அவசியத்தை விளக்குகின்றன. இவ்வணுகுமுறை அரசியல் தலைவர்களைப் பற்றிய உளவியல் பகுப்பாய்வினால் அரசியலைப் பற்றி குறிப்பிடத்தகுந்த அறிவு வெளிப்படுவதாக என அனுமானிக்கிறது. இருந்தபோதிலும் இந்த அணுகுமுறையானது சமூகவியல், சட்டம் மற்றும் பொருளியல் காரணிகளை புறந்தள்ளுகிறது என்பது இந்த அணுகுமுறையின் ஒரு குறையாகக் கருதப்படுகிறது.

### இ) பொருளியல் அணுகுமுறை (Economical Approach)

பொருள்களின் உற்பத்தி மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகிய இரண்டும் ஒரு அரசுக்கு மிக முக்கியமான பணிகள் என்பதால் அரசியல் அறிவியலை பொருளியல் அடிப்படையில்தான் படிக்க வேண்டும் என்று கூறுவது பொருளியல் அணுகுமுறையாகும். பொருளாதார விவகாரங்களை ஒழுங்குபடுத்தும் அரசின் பங்கு மற்றும் அரசினுடைய அரசியல் நடைமுறையுடனான பொருளாதாரத்தின் தொடர்பு பற்றியும் இந்த அணுகுமுறை வலியுறுத்துகிறது. ஒரு மனிதனின் அரசியல், மற்றும் பொருளாதார வாழ்வினை புரிந்து கொண்டு தொடர்புபடுத்துவது இந்த அணுகுமுறையாகும். இருந்தபோதிலும் இந்த அணுகுமுறையில் பொருளாதார விவாகரங்களை மட்டுமே கருத்தில் கொண்டு உளவியல் மற்றும் சமூகவியல் பிரச்சனைகளைப் புறந்தள்ளுவது என்பது ஒரு குறைபாடாகும்.

### ஈ) நடத்தையியல் அணுகுமுறை (Behavioural Approach)

நடத்தையியல் அணுகுமுறையானது அரசியல் நடத்தை என்பதனை மையமாகக் கொண்டதாகும். ஓர் அரசின் கீழ் வாழும் மனிதர்களின் மனப்பாங்கு மற்றும் முன்னுரிமைகளை அரசியல் சூழலில் கற்பதற்கு இந்த அணுகுமுறை அதிகக் கவனம் செலுத்துகிறது. இந்த அணுகுமுறை அரசியலை முறைமைவாதம் மற்றும் கருத்தறிவுவாதத்தின் அடிப்படையில் கற்பதலிருந்து விலகி மனிதனின் அரசியல் நடத்தையை படிப்பதில் கவனம் செலுத்துகிறது. இருந்தபோதிலும் சில அரசியல் அறிவியல் விமர்சகர்கள் நடத்தையியல் அணுகுமுறை அரசியல் அறிவியல் பாடத்தை அறிவியல் முறைகளின் தவறான கருத்தாக்கப் புரிதலோடு அணுகுவதாக குற்றம் சாட்டுகின்றனர்.

### உ) மார்க்சிய அணுகுமுறை (Marxist Approach)

பிற தற்கால அணுகுமுறைகளைக் காட்டிலும் மார்க்சிய அணுகுமுறை அடிப்படையில் மிகவும் வேறுபட்டதாகும். இந்த அணுகுமுறையானது வர்க்கப் போராட்டத்தில் அரசு என்பது ஒரு தவிர்க்க முடியாத விளைவினால் உருவான அமைப்பு என்று கூறுகிறது. மேலும் அரசியல் மற்றும் பொருளியல் சக்திகள் ஆகியவை ஒன்றோடு ஒன்று உட்செயல்பாட்டிலான தொடர்பு கொண்டவை என்பதனையும், இவை இரண்டையும் ஒன்றைவிட்டு ஒன்றினைப் பிரிக்க முடியாது என்பதனையும் விளக்குகிறது. இந்த அணுகுமுறை பொருளியல் காரணிகளுக்கு அளவுக்கு அதிகமான முக்கியதுவம் கொடுப்பதாகவும், பிற முக்கியமான காரணிகளை இந்த அணுகுமுறை கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை என்பதும் இந்த முறையை பற்றிய விமர்சகர்களின் கருத்தாகும்.

மேற்கண்ட பல அணுகுமுறைகளையும் பகுப்பாய்வு செய்து பார்க்கிறபோது, ஒவ்வொரு அணுகுமுறையிலும் ஒருசில குறைபாடுகள் இருப்பினும் ஒவ்வொரு விதத்தில் அவை முக்கியமானவைதான் என்பதும், அரசியல் அறிவியலை முழுமையாகப் புரிந்து கொள்ள இந்த அணுகுமுறைகள் அனைத்துமே பயன்படுகின்றன என்பதும் உணரப்படுகிறது.

## III அரசியல் அறிவியலுக்கும் பிற சமூக அறிவியல்களுக்கும் இடையேயான தொடர்பு

### அ) அரசியல் அறிவியல் மற்றும் வரலாறு (Political Science and History)

அரசும் அதன் நிறுவனங்களும் வரலாற்றின் படிப்படியான வளர்ச்சியால் உருவானவை ஆகும். அரசு தனக்குரிய பல பொதுவான சட்டங்களையும், கொள்கைகளையும் வரலாற்று உண்மைகளின் அடிப்படையிலேயே கண்டறிந்துள்ளது என்பது உண்மை ஆகும். அரசியல் வரலாறு என்பது அரசியல் நிகழ்வுகளையும், அரசியல் இயக்கங்களையும் விவரிப்பதாகும். ஃபிரிமேன் (Freeman) என்பவரின் கூற்றுப்படி "வரலாறு என்பது கடந்தகால அரசியல், அரசியல் என்பது நிகழ்காலத்தின் வரலாறு" என்பது ஒரு சரியான மற்றும் பொருத்தமான விளக்கமாகும். ஜான் சீலே (John seeley) தனது மேற்கோளில் "அரசியல் அறிவியல் இல்லாத வரலாறு பழமே இல்லாத ஓர் மரம் என்றும் அதேபோல வரலாறு இல்லாத அரசியல் அறிவியல் என்பது வேர் இல்லாத ஓர் மரமாகும்" என்று விளக்குகிறார். இந்த உதாரணம் இந்த இரண்டு பாடங்களுக்கும் உள்ள நெருங்கிய உறவு முறையை தெளிவாக உணர்த்துகிறது.

### ஆ) அரசியல் அறிவியல் மற்றும் பொருளியல் (Political Science and Economics)

பொருளியல் என்பது அரசியல் அறிவியலின் ஒரு கிளைப்பிரிவு என்று பண்டைய கிரேக்கர்கள் கருதினார்கள். அவர்கள் அரசியல் அறிவியல் பாடத்தினை அரசியல் பொருளாதாரம் (Political Economy) என்றே அழைத்தனர். அரசியல் பொருளாதாரம் என்ற பாடமானது அரசியல் நிறுவனங்களும், அரசியல் சூழல்களும் பொருளியலுடன் நெருங்கிய உறவுமுறையில் இருப்பதனை விளக்குகிறது. நாட்டிலுள்ள ஒவ்வொரு குழுக்களும் தங்களது பொருளியல் விருப்பங்களை நிறைவு செய்து கொள்ள அரசியல் செயல்பாடுகளையும், அரசியல் சூழல்களையும் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்தக்கொண்டு செயல்படுகிறார்கள். இந்த இரண்டு பாடங்களையும் இணைக்கும் பல கருத்துக்கள் பாடத்தில் இருக்கின்றன. இவை ஒரே நோக்கம் கொண்டதாக இருப்பதுடன் மக்களுக்கு சிறந்த வாழ்வினைத் தரும் நோக்கமுடையதாகும்.

### இ) அரசியல் அறிவியல் மற்றும் அறவியல் (Political Science and Ethics)

அறவியல் என்பது அரசியலோடு நெருங்கிய தொடர்புடைய சமுதாயத்தில், தனிமனிதர்களுடைய நடத்தையைக்

கட்டுப்படுத்தும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஆகியவற்றை உருவாக்குவதுடன், நீதிநெறி முறைமையோடும் தொடர்புடைய அறவியலாகும். அறவியல் என்பது நீதி முறைமையின் அறிவியலாகும். அதேபோல அரசியல் அறிவியல் என்பது அரசியல் முறைமையின் அறிவியல் ஆகும். அரசியல் அறிவியல் மற்றும் அறவியல் ஆகிய இரண்டு பாடங்களும் மனித சமுதாயத்தை மிகவும் சரியான மற்றும் மாண்பான வாழ்வினை நோக்கி நெறிப்படுத்துவனவாகும்.

### ஈ) அரசியல் அறிவியல் மற்றும் சமூகவியல் (Political Science and Sociology)

அரசியல் அறிவியலும், சமூகவியலும் ஒன்றோடு ஒன்று நெருங்கிய தொடர்புடைய பாடங்களாகும். அரசு மற்றும் பிற அரசியல் நிறுவனங்கள் அனைத்தும் எவ்வாறு தோன்றி வளர்ந்தன என்பதன் அடைப்படைத் தகவல்களை சமூகவியல் பாடமே நமக்கு தரமுடியும். அரசியல் அறிவியல் பாடத்தினை கொள்கை அறிவியல் (Policy science) பாடம் என்றும் கூறுகின்றனர். அரசின் பொதுக்கொள்கை (Public Policies)களை வகுக்க மக்களின் சமூக தேவைகளைப் பற்றிய அறிவு மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிறது. சமூகவியல் அறிவு இல்லாமல் எந்தவொரு நாட்டின் அரசியலையும் சிறப்பாக நடத்தமுடியாது. அதேபோல சமூகவியலுக்கு அரசியல் அறிவியிலானது அரசின் அமைப்பு மற்றும் பணிகள், அரசின் திட்டங்கள் மற்றும் கொள்கைகள் சமுதாயத்தை எவ்வாறு பெருமளவில் பாதிக்கிறது என்பன பற்றிய தகவல்களைத் தருகிறது.

### உ) அரசியல் அறிவியல் மற்றும் உளவியல் (Political Science and Psychology)

உளவியல் என்பது மனித நடத்தையின் அனைத்து அம்சங்களையும் பற்றி படிக்கும் ஒரு பாடமாகும். அரசியல் அறிவியல் என்பது மனிதர்களின் அரசியல் நடவடிக்கைகளைப் பற்றிய ஒரு பாடமாகும். உளவியல் என்பது தனிமனிதர்கள் மற்றும் குழுக்களின் குறிப்பிட்ட நடத்தைப் பாங்கிற்கு முக்கியத்துவம் அளிக்கிறது. உளவியல் பாடம் அரசியல் கட்சிகளின் நடத்தை மற்றும் அரசிலுள்ள பிற குழுக்களின் செயல்பாடுகள் ஆகியவற்றினை புரிந்து கொள்ள அரசியல் அறிவியலுக்கு உதவி செய்கிறது. பார்க்கர் (Barker) என்ற அறிஞர் கூறியது போல "மனிதர்களின் பல புதிரான நடவடிக்கைகளைப்பற்றி அறிந்து கொள்ளும் விடைப்பகுதி உளவியல் பாடத்திலேயே உள்ளது". நமது முன்னோர்கள் உயிரியல் அடிப்படையில் சிந்தித்தார்கள் என்றால் நாம் உளவியல் அடிப்படையில் சிந்திக்கிறோம் என்கிறார்.

### ஊ) அரசியல் அறிவியல் மற்றும் பொதுநிர்வாகம் (Political Science and Public Administration)

அரசியல் அறிவியலும், பொது நிர்வாகமும் மிகவும் நெருங்கிய தொடர்புடைய பாடங்களாகும். பொது நிர்வாகப்பாடத்தில் வரும் 'பொது' என்ற வார்த்தை அரசாங்கத்தை குறிக்கும். பொது நிர்வாகம் என்பது அரசு சாரா அமைப்புகளையும் உள்ளடக்கியதாகும். பொது நிர்வாகம் என்பது அரசாங்கத்தின் கொள்கைகளை செயல்படுத்துவதாகும். அரசியல் அறிவியல் என்பது பொதுக் கொள்கை உருவாக்க நடைமுறையாகும். அரசியல் அறிவியல் மற்றும் பொது நிர்வாகம் ஆகிய இரண்டு துறைகளின் நோக்கங்களுமே ஒப்புமை உள்ளவையாகும். இவை இரண்டுமே வளங்களைத் தகுந்த முறையில் பயன்படுத்துவதுடன் சமூக நலனை மேம்படுத்துகின்றன. இவ்வாறு அரசியல் அறிவியல் பாடம் என்பது ஆளுகை (Governance) என்பதனை முறையாகப் படிக்க உதவும் ஒருபாடமாகும். அரசியல் அறிவியல் பாடத்தில் அறிவியல் பூர்வமான முறைகளும், செயலறிவிலான பகுப்பாய்வும் செயல்படுத்தப்படுகின்றன. அதில் செயலறிவிலான புலனாய்வுகள் இருப்பினும், துல்லியமான முன்கணிப்புகள் மிகவும் குறைவாகவே உள்ளன. அரசியல் அறிவியலானது அரசு, அதன் அங்கங்கள் மற்றும் நிறுவனங்களை ஆராய்கிறது. மேலும்

அரசியல் அறிவியல் பாடத்தில் சமூகம், பண்பாடு, பொருளாதாரம் மற்றும் உளவியல் காரணிகள் அதிகம் கலந்துள்ளன. பிற சமூக அறிவியல் பாடங்கள் அனைத்திலிருந்தும் அரசியல் அறிவியல் பாடம் நிறைய கருத்துக்களையும், தகவல்களையும் பெற்றிருந்தாலும் அதிகாரத்தின் மீதான அதன் தனிக்கவனம் அதனை பிற துறைகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுகிறது. அரசியல் அறிவியல் என்ற இப்பாடத்தில், அதிகாரம், ஒப்பீட்டு அரசியல், பன்னாட்டு உறவுகள், அரசியல் கோட்பாடுகள், பொதுச்சட்டங்கள், பொதுக்கொள்கைகள், என அரசியல் அறிவியலில் பல உட்பிரிவுப்பாடங்களில் கவனம் செலுத்தப்படுகிறது. அரசியல் அறிவியலைக் கற்பதன் மூலமாக அரசியல் நடைமுறைகள், அரசாங்க முறைமை மற்றும் குடிமக்களின் வாழ்வில் அது எங்ஙனம் தாக்கத்தினை ஏற்படுத்துகிறது என்பதன் அடிப்படைகளைப் புரிந்து கொள்ள முடியும்.

### செயல்பாடு

- அரசியல் எவ்வாறு உனது அன்றாட வாழ்வில் தாக்கத்தினை ஏற்படுத்துகிறது என்பதைப்பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
- உனக்கு மிகவும் விருப்பமான அரசியல் சிந்தனையாளரின் வாழ்வு மற்றும் படைப்புகளைப் பற்றிய படங்களை சேகரிக்கவும். அரசியல் அறிவியலுக்கு அவருடைய பங்களிப்பினைப் பற்றி வகுப்பில் அனைவருக்கும் விளக்கவும்.

### அருஞ்சொற்பொருள்: Glossary

**ஆழமான விசாரணை: (Inquiry):** கேள்விகள் அல்லது விசாரணையின் மூலமாக தகவல்களை பெறும்முறையாகும்.

**அரசியல் முறைமைகள் (Political Systems):** பல்வேறு அரசமைப்புச் சட்டங்களின் அடிப்படையில் அமைக்கப்படும் வேறுபட்ட அரசாங்க வகைகளாகும்.

**அர்த்தசாஸ்த்திரம் (Arthasastra):** பொ.ஆ. மு. 3-ஆம் நூற்றாண்டில் கௌடில்யரால் எழுதப்பட்ட அரசியல் பொருளியல் மற்றும் நிர்வாக ஆளுகை பற்றிய நூலாகும்.

**நகர அரசு (City-State):** ஒரு நகரத்தில் வாழும் சிறிய சமூகம் சார்ந்த குறைவான மக்கள் தொகைக்கான ஒரு சிறிய அரசு.

**அரசியல் நடத்தை (Political Behaviour):** அரசியல் நடத்தை என்பது பொதுவாக அதிகாரம் தொடர்பான செயல்பாடாகும் அதிலும் குறிப்பாக அரசாங்கம் தொடர்பானது எனலாம். இதற்குத் தகுந்த உதாரணம் வாக்களித்தலாகும்.

**வர்க்க முரண்பாடு (Class Conflict):** சமூகம் மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வு மிக்க இருவேறு வர்க்கங்களுக்கிடையேயான மாறுபட்ட விருப்பங்களால் நடக்கும் போராட்டம்.

**அதிகாரத்துவம் (Authority):** ஓர் தனிநபர் அல்லது நிறுவனத்தால் சட்டபூர்வமாக பயன்படுத்தப்படும் சக்தி அல்லது அதிகாரம் அது சட்டபூர்வ அதிகாரப் பயன்பாடு எனவும் அழைக்கப்படுகிறது.

**உயர்குடியினவாதம் (Elitism):** சமூகத்தின் ஒரு சிலருக்கு பாரம்பரியம், உள்ளுணர்வு, அதிக அறிவு, செல்வம், சிறப்புத்திறமைகள், அனுபவம் போன்றவைகளின் அடிப்படையில் மற்றவர்களைவிடவும் சிறப்புத் தகுதிகளையும், அதிகாரங்களையும் வழங்குவதாகும்.



11th Std Political Science Tamil_Unit-1.indd 23 6/20/2018 6:00:42 PM

**நம்பிக்கை (Tryst):** சில நேரங்களிலும் அல்லது சில இடங்களிலும் எதிர்காலத்தினை திறமையோடு சந்திக்க செய்யும் ஏற்பாடு.

**அரசியல் இயக்கவியல்(Political Dynamics):** அரசியல் நிறுவனங்கள் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு தொடர்ச்சியாக மாறிக்கொண்டே இருக்கும் தன்மை..

**பொதுக்கொள்கை (Public Policy):** அரசாங்கத்தின் சட்டங்கள் அதிலும் குறிப்பாக விதிகளில் தெளிவாக விளக்கப்படாத அடிப்படைக் கொள்கையாகும்.

**ஒப்பீட்டு பகுப்பாய்வு (Comparative Analysis):** ஒன்றுடன் மற்றொன்றை ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்வதாகும். இதில் மாற்றுகள், நடைமுறைகள், பொருட்கள், தகுதிகள், தகவல் திரட்டல் முறைமைகள் ஆகியவை மற்றும் அதே போன்றவை உள்ளன.

**அரசியல் (Politics):** நாட்டின் நிர்வாகம் மற்றும் அதன் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உறவுகள் பற்றியும், அரசாங்கம் மற்றும் ஆளுகையைப் பற்றியும் படிக்க உதவும் ஒரு கலை அல்லது அரசாங்கம்பற்றிய அறிவியல் சார்ந்த பாடம் எனலாம்.

**அரசியல் அறிவியல் (Political Science):** அரசு மற்றும் அரசாங்க முறைமைகளை பற்றி அறிவதுடன் அரசியல் நடவடிக்கைகளைப் பற்றி அறிவியல் பூர்வமாகப் படிக்கும் ஒரு பாடம்.

**நடத்தையியல் (Behaviouralism):** அரசியல் நடத்தையினை முன்கணித்து நடுநிலையுடன் அதனை அளவிடுதலாகும்.

**பின்தோன்றிய நடத்தையியல் (Post-Behaviouralism) :** நடத்தையியலின் பழமைவாதத்திற்கு எதிராக உருவானதுடன் பொருத்துமை மற்றும் துல்லியத்தன்மையை வலியுறுத்தி உருவானதாகும்.

**முடியாட்சி (Monarchy) :** ஒரு நாட்டின் இறையாண்மை முழுவதும் பகுக்கப்படாமல் ஒரு தனிமனிதனிடம், பாரம்பரியமாக வழங்கப்படும் ஒரு ஆட்சி முறையாகும்.

**பிரபுக்களாட்சி (Aristocracy) :** சமூகத்தின் உயர் நிலையில் இருக்கும் ஆள்வதற்குத் தகுதியானவர்கள் என அறியப்பட்ட சிலரால் நடத்தப்படும் ஒரு ஆட்சி முறை.

**மக்களாட்சி (Democracy) :** மக்களின் விருப்பத்தினை பூர்த்தி செய்ய மக்களே தங்களுக்காக உருவாக்கிய ஒரு ஆட்சி முறையாகும்.

**முற்றதிகாரம் (Totalitarianism) :** மனிதனின் அனைத்து நடவடிக்கைகளையும் கட்டுப்படுத்த வல்ல முழுமையான அதிகாரம் கொண்ட அரசு உள்ள ஆட்சி முறை.

**சிறுகுழுவாட்சி (Oligarchy) :** ஒரு சிறு குழு அனைத்து அதிகாரங்களையும் பெற்று ஊழல் மற்றும் சுயநலம் அடிப்படையில் ஆளும் ஆட்சி முறையாகும்.

**ஏகாதிபத்தியம் (Imperialism) :** ஒரு பேரரசு அல்லது நாடு தனது ஆதிக்க அதிகார வரம்பினை வேறொரு நாட்டின் மீது செலுத்தி அதனைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அல்லது சார்பு நாடாக்குவதாகும்.

**காலனியாதிக்கம் (Colonialism) :** ஒரு நாடு தனது கட்டுப்பாட்டில் உள்ள மற்றொரு நாட்டின் மீதோ அல்லது அதன் நிலப்பரப்பின் மீதோ அல்லது மக்களின் மீதோ கட்டுப்பாடு செலுத்தி அதனை ஆட்சி செய்வது ஆகும்.

**மாறாதநிலை வாதம் (Metaphysical) :** "மெட்டா" மற்றும் "பிசிக்ஸ்" என்ற இரண்டு வார்த்தைகளின் தொகுப்பு 'மெட்டா' என்பது 'அப்பாற்பட்ட' என்றும் 'பிசிக்ஸ்' என்பது 'இயற்பியல்' என்றும் பொருள்பட, இந்த மாறாத நிலைவாதம் என்பது இயற்பியலுக்கு அப்பாற்பட்ட ஒரு மாறாத நிலை என்று கூறவேண்டும். இதனை யூகத்திலான தத்துவம் என்றும் அழைக்கலாம். இது மெய்ஞானம் என்றும் வழங்கப்படுகிறது.

**கருத்தறிவு (Normative) :** சரியான நடத்தை, பேச்சு, எழுத்து, ஆகியவைகளின் அடிப்படையில் அனுமானித்து எடுக்கப்படும் தரநெறியிலான கருத்துமுடிவாகும்.

**பின்னூட்டம் (Feed back) :** ஒரு செயல்பாடு அல்லது நடவடிக்கையின் விளைவுகள் அல்லது எதிர்ச்செயலைக் குறிப்பதாகும்.

## மதிப்பிடுதல் (Evaluation)

9H7DIB

### I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும் :

1. 'பாலிடிக்ஸ்' என்ற வார்த்தை "பொலிஸ்" (Polis) சொல்லிலிருந்து வந்தது. இந்த "பொலிஸ்" என்ற சொல்லின் பொருள்.

   (அ) நகர அரசு (ஆ) காவல்படைகள்
   (இ) அரசியல் (ஈ) காவல்அரசு

2. "அரசியல் என்பது யார், எதனை, எப்போது, எப்படிப் பெறுகிறார்கள்" என்ற அரசியலின் மையக் கருத்தினைக் கூறியவர்

   (அ) ஹெரால்ட் லாஸ்கி (ஆ) ஹெரால்டு லாஸ்வெல்
   (இ) சார்லஸ் ஈ மெர்ரியம் (ஈ) பிரான்க் குட்நவ்

3. டேவிட் ஈஸ்டனின் கருத்துப்படி அரசியல் என்பது

   (அ) விழுமியங்களை அதிகாரபூர்வமாக பங்கீடு செய்வதாகும்
   (ஆ) மூலவளங்களை அதிகாரபூர்வமாக பங்கீடு செய்வதாகும்
   (இ) அதிகாரத்தினை அதிகாரபூர்வமாக பங்கீடு செய்வதாகும்
   (ஈ) வலிமையை அதிகாரபூர்வமாக பங்கீடு செய்வதாகும்

4. இந்திய அளவில் மிகப்பழமையான அரசியல் சிந்தனையாளர் என யாரைக் கூறலாம்?

   (அ) கௌடில்யர் மற்றும் திருவள்ளுவர்
   (ஆ) வால்மீகி மற்றும் வராகமிகிரர்
   (இ) சரகர் மற்றும் சுசுருதர்
   (ஈ) வியாசர் மற்றும் ஆரியபட்டர்

5. 'சட்ட அங்கீகாரம்' என்ற சொல் எந்த கருத்தாக்கத்துடன் தொடர்புடையது

   (அ) சட்டப்படிப்பு (ஆ) அரசு மற்றும் அரசாங்கம்
   (இ) சட்டப்படியான சொத்து உரிமை (ஈ) வலிமை மற்றும் அதிகாரம்

6. 'அதிகாரம் அதிகாரத்தை ஈன்றெடுக்கிறது என்றும் அதுவே உயர்குடியினவாதத்தின் மையக்கருத்தாக விளங்குகிறது' என்று கூறியவர்

   (அ) ராபர்ட் மிட்செ (ஆ) ஹெரால்ட் லாஸ்கி
   (இ) டேவிட் ஈஸ்டன் (ஈ) சார்லஸ் ஈ மெர்ரியம்

7. 'அரசியல் அறிவியலின் தந்தை' என அழைக்கப்படுபவர் யார்?

   (அ) அரிஸ்டாட்டில் (ஆ) சாக்ரடிஸ்
   (இ) பிளாட்டோ (ஈ) மாக்கியவல்லி



11th Std Political Science Tamil_Unit-1.indd 25 6/20/2018 6:00:43 PM

8. 'மனிதன் இயற்கையில் ஒரு அரசியல் விலங்கு' என்று கூறியவர் யார்?

(அ) பிளாட்டோ (ஆ) ஜீன் போடின்

(இ) அரிஸ்டாட்டில் (ஈ) மாக்கிய வல்லி

9. அரசியல் அறிவியலை மதம் சார்ந்த அணுகுமுறையிலிருந்து செயலறிவிலான கூர்நோக்கலுடன் கூடிய மதச்சார்பற்ற பார்வைக்கு மாற்றியவர் யார்?

(அ) தாமஸ் ஹாப்ஸ் (ஆ) நிக்கோலோ மாக்கியவல்லி

(இ) ஜான் லாக் (ஈ) ஜெ.ஜெ.ரூசோ

10. "வரலாறு என்பது கடந்தகால அரசியல்" என்றும் "அரசியல் என்பது நிகழ்கால வரலாறு" என்றும் கூறியவர் யார்?

(அ) ஹெரால்ட் லாஸ்வெல் (ஆ) ஃப்ரீமேன்

(இ) சார்லஸ் ஈ மெர்ரியம் (ஈ) ஜான் மார்ஷல்

## II பின்வரும் வினாக்களுக்கு குறுகிய விடையளி

11. அரசியல் என்ற வார்த்தை தோன்றிய விதத்தினை வரையறுக்கவும்.
12. 'எதிர்காலத்தினை நம்பிக்கையோடு சந்திப்போம்' என்ற வார்த்தையின் மூலம் நீ புரிந்து கொள்வது என்ன?
13. அதிகாரம் பற்றிய கார்ல் மார்க்சின் கருத்தினை விவரிக்கவும்.
14. 'மகிழ்ச்சி' என்பது பற்றிய அரிஸ்டாட்டிலின் கருத்துக்களை எழுதுக.
15. நேருவினால் கூறப்பட்டுள்ள ஏதேனும் மூன்று சவால்களைப் பட்டியலிடுக.
16. 'மதச்சார்பின்மை' என்னும் கருத்தாக்கத்தினைப் பற்றி எழுதுக.
17. பின் தோன்றிய நடத்தையியலின் அடிப்படைக் கருத்தாக்கத்தினை விளக்குக.

## III பின்வரும் கேள்விகளுக்கு சுருக்கமான விடையளி

18. அரசியல் அறிவியலின் தன்மையை விளக்குக.
19. 'அதிகாரம்' என்ற கருத்தாக்கத்தினை விளக்குக.
20. அரிஸ்டாட்டிலுக்கும், பிளாட்டோவுக்கும் உள்ள தொடர்பினைக் கூறுக.
21. அரசியல் அறிவியலின் தத்துவார்த்த அணுகுமுறை பற்றி கூறுக.
22. "அரசியல் இல்லாத வரலாறு பழமில்லாத மரம், வரலாறு இல்லாத அரசியல் வேர் இல்லாத மரம்" என்ற ஜான் சீலேவின் கருத்தினை விளக்குக.
23. அரசியல் அறிவியலில் சட்டபூர்வ அணுகுமுறை பற்றி விளக்குக.

## IV பின்வரும் கேள்விகளுக்கு விரிவான விடையாளி:

24. அரசியல் அறிவியல் என்பது கலையா அல்லது அறிவியலா என்பதை நிறுவுக.
25. அரசியல் அறிவியலுக்கும் பிற சமூக அறிவியல் பாடங்களுக்கும் உள்ள உறவுமுறைகளை விவரி.
26. அரசியல் அறிவியலின் பாரம்பரிய அணுகுமுறைகள் பற்றி எழுதுக.
27. பின் தோன்றிய நடத்தையியலின் அடிப்படைக் கொள்கைகளை விளக்கு.
28. அரசியல் கோட்பாடு மற்றும் அரசியல் அறிவியலை வேறுபடுத்துக.
29. அரசியல் பாடம் மதவாதத்தின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட சூழல் பற்றி எழுதுக.

### மேற்கோள் நூல்கள் (Reference books)


1. Robert Garner, Peter Ferdinand, Stephen Lawson, Introduction to Politics, Oxford University Press, New York, 2009.
2. Thomas M. Magstadt, Understanding Politics- Ideas, Institutions and Issues, 9th Edition, Wadsworth Cengage Learning, USA, 2011.
3. O.P. Gauba, An Introduction to Political Theory, Macmillan Publishers India Ltd, New Delhi, 2009.


### மேலும் கூடுதலாக படிப்பதற்கான நூல்கள் (Further readings)


1. Plato, The Republic.
2. Aristotle, Politics.
3. Laski, Harold J. A.Grammar of Politics. London: George Allen & Unwin, 1925.
4. Edward Merriam, Charles. New Aspects of Politics. Second edition. Chicago: University of Chicago Press, 1931.
5. International Encyclopedia of Political Science.


### தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பல்கலைக்கழக வெளியீடுகள்


1. அரசியலுக்கு ஓர் அறிமுகம் – ரோஜர் எச் ஸோல்ட்டா
2. அரசியல் கோட்பாடுகள் – பெ. நடராசன்
3.அடிப்படை அரசியல் கோட்பாடுகள் – ஞா.வெர்ஜின் சிகாமணி




11th Std Political Science Tamil_Unit-1.indd 27 6/20/2018 6:00:43 PM

அலகு
2

# அரசு



அன்பு மாணவர்களே, முந்தைய பாடத்தில் அரசியல் அறிவியல் பாடத்தை பற்றிய ஓர் அறிமுகத்தை பெற்றிருப்பீர்கள். அரசியல் அறிவியல் எதனுடன் தொடர்புடையது என்று சிந்தித்தீர்களா?

9HG9JY

தாவரவியல் பாடத்தின் மூலம் தாவரங்களைப் பற்றியும், சமூகவியல் பாடத்தின் மூலம் சமூகத்தைப் பற்றியும் அறிந்து கொள்ளும் போது அரசியல் அறிவியல் பாடம் மூலமாக எதனை நாம் அறிந்து கொள்கிறோம்? குறிப்பாக அரசியல் அறிவியல் படிப்பானது எதைப் பற்றியது?



## அறிமுகம்

அரசியல் அறிவியல் என்பது அரசைப் பற்றிய ஓர் முறையான படிப்பாகும். நாம் அனைவரும் ஓர் அரசின் கீழ் வாழ்ந்து வருகிறோம். இந்த உலகம் என்பதே பல்வேறு அரசுகள் அடங்கிய ஓர் வடிவமாகும். அரசு என்ற எண்ணம் அல்லது கருத்தாக்கமானது வரலாற்று ரீதியாக பார்த்தோமேயானால் ஒவ்வொரு பகுதியிலும் அதன் அரசியல், பண்பாடு, மதம் மற்றும் பொருளாதார சூழ்நிலைகளால் உருவானதேயாகும். இன்று அரசு என்ற சொல் நவீன அரசையே குறிக்கிறது. நவீன அரசானது, ஆள்வோர் மற்றும் ஆளப்படுவோரை மட்டும் உள்ளடக்கிய நவீன காலத்துக்கு முன்பிருந்த அரசுகளை விட முற்றிலும் மாறுபட்டதாகும். எனவே, எது அரசு? எது அரசு அல்ல? என்பதைப் பற்றிய ஒரு சரியான புரிதல் அரசியல் அறிவியல் மாணவர்களுக்கு அவசியம் ஆகிறது.

ஆம்! நாம் அனைவரும் ஓர் அரசின் கீழ் வாழ்ந்து வருகிறோம். எது அரசு என்ற சரியான விழிப்புணர்வு இல்லாமலேயே அதனுடன் நாம் தொடர்பும் கொண்டுள்ளோம். சாலை வசதிகள், மருத்துவ சேவை, மின்சாரம், குடிநீர் மற்றும் சுகாதாரம் போன்றவை நம்மை

### கற்றலின் நோக்கங்கள்

- 'அரசு' குறித்து விளக்கமான புரிதலை தரும் இவ்வத்தியாயம் கீழ்காணும் தலைப்புகளைக் கொண்டது.
- அரசியல் அறிவியல் ஆய்வுகளின் முக்கிய பொருள், குறிப்பாக அரசு மற்றும் அதன் செயல்பாடுகள் என்ன என்பதைப் புரிந்து கொள்ளுதல்
- அரசு குறித்து பல்வேறு சிந்தனையாளர்களின் கருத்துகளை அறிதல்
- அரசின் கூறுகளை உங்களுக்கு அறிமுகப்படுத்துதல்
- சமூகம், அரசு மற்றும் அரசாங்கம் ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்பை அடையாளம் காணுதல்
- நவீன அரசு, மக்கள் நல அரசு மற்றும் மென்மை அரசு குறித்த கருத்துகளை அறிதல்

அரசுடன் இணைப்பவற்றில் சிலவாகும். அரசு நம்மைச் சில செயல்களைச் செய்ய கட்டாயப்படுத்துகிறது, சில செயல்களைச்

செய்ய விடாமல் தடுக்கிறது. இதில் ஏதாவது ஒன்றை நாம் மீறுவோமானால் அது தண்டனைக்கு வழிவகுக்கிறது. எனவே அரசின் சட்டமும், சுதந்திரமும் அதனாலேயே வகுக்கப்பட்ட நிபந்தனைக்கு உட்பட்டது என்றே முடிவு செய்யவேண்டியுள்ளது. நமது வாழ்வும், வளமும் பாதுகாப்பாக இருப்பதை அரசு உறுதி செய்கிறது. எனவே நாம் அரசை விரும்புகிறோமோ இல்லையோ அது நம்மை அதன் மக்களாக இருப்பதற்கு விரும்புகிறது. எனவே நாம் அத்தகைய அரசைப் பற்றி படிக்க வேண்டாமா?

## 2.1 அரசு என்பதன் பொருள் மற்றும் வரையறை

அரசு என்பது உலகளாவிய ஏனைய சமூக அமைப்புகளைவிட, மிகவும் சக்தி வாய்ந்ததாகும். அரசு இயற்கையாக தோன்றிய அமைப்பாகும். 'மனிதன் (மானிடர்) ஓர் சமூக விலங்கு என்பதுடன் மனிதர்கள், அரசியல் சார்ந்து இருப்பது அவர்களின் இயல்பான தன்மை என அரிஸ்டாட்டில் கூறுகிறார். மேலும், 'ஒரு மனிதன் அரசு எனும் அமைப்பிற்குள் வாழ்வது, அவன் மனிதத்தன்மையுடன் வாழ்வது, இவை இரண்டும் ஒன்றே' என அரிஸ்டாட்டில் கருதினார். நவீன சொல்லான அரசு (State) என்பது 'ஸ்டேட்டஸ்' (Status) எனும் சொல்லில் இருந்து உருவானதாகும்.



நிக்கோலோ மாக்கியவல்லி (*1469 – 1527*) எனும் அறிஞர் முதன் முதலில் அரசு எனும் சொற்பிரயோகத்தைத் தமது படைப்புக்களில் பயன்படுத்தினார். மனிதர்கள் வாழ்வியலிற்கான அடிப்படையினை கொண்டுள்ளதனாலேயே அரசு ஒரு இன்றியமையாத அமைப்பாகக் கருதப்படுகிறது. அரசு என்பது மனித சமுதாயத்திற்கு நல்வாழ்வினை ஏற்படுத்தித் தருவதற்காக நீடிக்கிறது. மனிதர்களின் நோக்கங்கள், ஆசைகள், மற்றும் விருப்பங்கள் ஆகியவை அரசு எனும் அமைப்பின் மூலமே செயல் வடிவம் பெறுகின்றன. மனிதர்களுக்கு அத்தியாவசியமான அமைப்பாக அரசு கருதப்பட்டாலும், அரசு என்பதற்கான வரையறை இதுதான் என எந்த இருவேறு சிந்தனையாளர்களும் கருத்தின் அடிப்படையில் ஒத்துப்போவது கிடையாது.

இந்த கருத்து வேறுபாடு அரசு குறித்த ஆய்வினை மிகவும் ஆக்கப்பூர்வமானதாகவும், ஆர்வமிக்கதாகவும் ஆக்குகிறது. உதாரணமாக, அரசியல் அறிவியலில் சமூக ஒப்பந்தக் கோட்பாடு உள்ளது. தாமஸ் ஹாப்ஸ், ஜான் லாக் மற்றும் ஜீன் ஜாக்குவஸ் ரூசோ ஆகிய மூவரும் சமூக ஒப்பந்த சிந்தனையாளர்கள் என அறியப்படுகின்றனர். மனிதர்களை அரசு தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க வேண்டும் என்பது இவர்களின் உள்ளார்ந்த கருத்தாகும். ஆனால் அக்கட்டுப்பாட்டின் எல்லையினைக் குறித்து அம்மூவருக்கு இடையே ஒருமித்த கருத்து என்பது காணப்படவில்லை.

| அரசியல் சிந்தனையாளர் | மனிதனின் இயல்பு | இயற்கையின் நிலை | சமூக ஒப்பந்தம் |
|---|---|---|---|
| **ஹாப்ஸ்** | மனிதர்கள் ஒவ்வொருவரும் பிறரிடம் ஓநாய்களைப் போன்று பகைமையுடன் இருக்கக்கூடியவர்கள் | போர்ச்சூழல் | லெவியதான் (ஒற்றை ஆட்சியாளர்) |
| **லாக்** | மனிதனுக்கு முழுமையான சுதந்திரம் உண்டு | தனி மனிதச் சொத்துக்கள் பாதுகாப்பானதாக இல்லை | பொது நலக் கூட்டமைப்பு |
| **ரூசோ** | மனிதன் முழுமையான சுதந்திரம் கொண்டவன் ஆனால் அவன் ஒழுக்கக்கேடானவன் | பாதுகாப்பு மற்றும் அறநெறி கிடையாது | அரசு பொது விருப்பத்தின் வழி நடத்தப்படும் |

செயல்பாடு

## எம்மைக் கண்டுகொள்...



அரசின் சமூக ஒப்பந்தக் கோட்பாட்டினை மூன்று முக்கிய ஒப்பந்தவியலாளர்கள் உருவாக்கினார்கள். அம்மூவருமே மனிதர்கள் அரசின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டியது அவசியம் என்பதை ஒப்புக் கொண்டனர். ஆனால் அக்கட்டுப்பாடு எந்த அளவில் இருக்கவேண்டும் என ஒவ்வொருவரும் தத்தமது வழியில் தீர்மானித்தனர். அம்மூவர் யாவர்?

## அரசு – வரையறை

❖ "அரசு எனப்படுவது யாதெனில், ஓர் குறிப்பிட்ட எல்லைக்குள் சட்டத்தின் மாட்சிமையின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்ட மக்களைக் கொண்ட ஓர் அமைப்பாகும்" என்று வரையறுக்கிறார்.

**– உட்ரோ வில்சன் (Woodrow Wilson)**

❖ அரசு எனப்படுவது "குடும்பங்கள் மற்றும் கிராமங்கள் ஒன்றிணைந்து அவற்றின் நோக்கத்திற்காகவும், அவைகளின் மகிழ்ச்சியான, மரியாதைக்குரியதுமான வாழ்க்கை மற்றும் முழுமையான சுய சார்பு கொண்ட வாழ்க்கை முறையினை வாழ உதவும் ஓர் அமைப்பு அரசாகும்" என வரையறுத்தார்.

**–அரிஸ்டாட்டில் (Aristotle)**

❖ அரசு என்பது "பொதுவாக ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பினை ஆக்கிரமித்து வாழும் மிகப் பெரிய எண்ணிக்கையிலான மனிதர்களின் பெருந்திரள், தம்மிலும் எண்ணிக்கையில் குறைவாக இருக்கும் மனிதர்கள் மீது ஆதிக்கம் செலுத்துதலை நியாயப்படுத்தும் அமைப்பாகும்".

**– ஹாலந்து (Holland)**

❖ அரசினை வரையறுக்கும் போது 'மனித வர்க்கத்தின் ஒரு குறிப்பிட்ட பங்கினர் ஒரு அமைப்பாக இருந்து செயல்படுவதே அரசு' என்கிறார்.

**– பர்ஜெஸ் (Burgess)**

❖ 'அரசு என்பது அரசாங்க வடிவில் தனிமனிதன் அல்லது சங்கங்கள் இணைவதாகும். ஒரு வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பின்மீது அவர்கள் ஒன்றிணைந்து தங்களை அரசியல் ரீதியாக அமைத்துக்கொள்வது அரசு ஆகும்'.

**– சிட்ஜ்விக் (Sidgwick)**

❖ அரசு என்பது " ஓர் மக்கள் கூட்டமானது வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பில் வசித்துக் கொண்டு , அவர்கள் வெளி சக்திகளுக்கு கட்டுப்படாமல் ஒரு முறையான அரசாங்கத்தைப் பெற்று தங்களுக்குள் ஏற்பட்ட இயல்பான கீழ்படிதலை அரசிற்கு செலுத்துதல்" என விளக்குகிறார்.

**– கார்னர் (Garner)**

❖ "அரசு என்பது ஓர் நிலப்பரப்பில் அமைந்த சமுதாயமாகும். அது அரசாங்கம் மற்றும் குடிமக்கள் என பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றிற்கு இடையேயான உறவுகள் மேன்மையான அதிகாரத்தை வலுக்கட்டாயமாக பயன்படுத்துவதன் மூலமாகத் தீர்மானிக்கப்படுகிறது" என்கிறார்.

**– பேராசிரியர் லாஸ்கி (Prof. Laski)**



11th Std Political Science Tamil_Unit-2.indd 30 6/20/2018 6:03:01 PM

## 2.2 அரசின் முக்கிய கூறுகள்

மேற்கூறிய விளக்கங்களிலிருந்து, அரசு சில அடிப்படை கூறுகளைக் கொண்டிருக்கவேண்டுமென நீங்கள் எளிதாக முடிவு செய்யலாம். அரசு என்பது மக்கள் மீது அளப்பரிய ஆதிக்கம் செலுத்தவல்ல அதிகாரத்துவம் கொண்ட அமைப்புகளின் தொகுப்பாகும். எனவே, அனைத்து நவீன அரசுகளும் ஒருபுறம் அரசின் அளப்பரிய கேள்விக்கு அப்பாற்பட்ட அதிகாரத்தினையும், மறுபுறம் குடிமக்களின் சுதந்திரம் மற்றும் சலுகைகளையும் தத்தமது அரசமைப்பு சட்டத்தின் வாயிலாக சமன்படுத்துவதைக் காணலாம். எனவே அரசமைப்பு சட்டம் என்பது அரசின் அளப்பரிய அதிகாரத்துவம் செலுத்தும் தன்மையினை கட்டுப்படுத்தும் ஒரு முகமையாக கருதப்படுகிறது.

### செயல்பாடு

- ❖ அரசமைப்பு இல்லை என்றால் ஓர் அரசில் மனிதனின் நிலை என்னவாக இருக்கும்?
- ❖ அரசமைப்பு இயந்திரத்தின் செயலிழப்பு என்றால் என்ன?



### செயல்பாடு

**காரணம் கண்டறிக**

ஏ
ன்
?







- ❖ உலக நாடுகளின் நிலவியல் வரைபடங்களைப் பொறுத்தவரையில் எந்த சர்ச்சைகளும் எழாது. ஆனால் நாடுகளின் எல்லைகளைக் குறிக்கும் வரைபடங்கள் பற்றி எப்போதும் சர்ச்சைகள் நிலவி வருவதை கண்டுள்ளீர்களா? எதனால் என்று அறிந்து கொள்ளுங்கள்.
- ❖ அரசற்ற நிலை என்றால் என்ன? நாடு கடந்த திபெத்திய அரசைப் பற்றி நீங்கள் படித்துள்ளீர்களா? அரசியல் தஞ்சம் என்றால் என்ன?
- ❖ அரசு எனும் அமைப்பு இல்லையெனில் மனிதர்களின் நிலை என்னவாக இருக்கும்? அது அமைதியானதாக இருக்குமா அல்லது வன்முறைக்கு வழி வகுக்குமா? இந்த கேள்விகளை சிரியா நாட்டு (2017 ஆம் ஆண்டு) நிகழ்வுகளுடன் ஆராயுங்கள்.

**மான்டிவீடியோ** எனும் நகரில் 1933-ல் நடைபெற்ற அரசுகளின் உரிமைகள் மற்றும் கடமைகளின் மீதான மாநாடு, அரசு என்பதனைப்பற்றிய ஓர் அடிப்படை புரிதலை அளித்தது. அரசு என்பது ஓர் நிரந்தர மக்கள்தொகை, ஓர் வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பு மற்றும் அந்நிலப்பரப்பின் மீது ஆளுமை செலுத்தும் அரசாங்கம் ஆகியவற்றைக் கொண்டிருக்க வேண்டும்; அரசு அதன் மக்களை கட்டுப்படுத்தவல்லது; பிற நாடுகளுடன் பன்னாட்டு உறவுகளையும் நடத்த வல்லதாகும். இதன் விளைவாக, ஓர் அரசினை பிற அரசுகள் அங்கீகரித்தல் என்பது ஒரு அரசின் சட்டப்பூர்வ தன்மைக்கு மிக முக்கியமாகும். இறையாண்மை குறித்து கற்கும்போது நீங்கள் மேலும் இது குறித்து தெரிந்துகொள்வீர்கள்.

**அரசின் முக்கியக் கூறுகள் எவை என்பதை புரிந்து கொள்ள முயற்சிக்கலாம்**

நமது நாடான இந்தியாவை ஓர் அரசாக சிந்தியுங்கள். இந்தியா தன்னை ஓர் அரசு என தகுதியாக்குவதற்கு எவை எல்லாம் காரணங்கள் என்பதைப் புரிந்து கொள்ள முயலுங்கள். முதலில், இந்தியா ஒரு நன்கு வரையறுக்கப்பட்ட நிலப்பகுதியினைக் கொண்டதாகும். இந்தியாவில் இந்தியர்களான நாம் வசிக்கிறோம். இந்தியர்களான நமக்கு ஓர் அரசாங்கம் இருக்கிறது. இந்தியா உலக அரங்கில் ஒரு தகுந்த நிலையுடன் சுதந்திரமாக உள்ளது. நமது நாடு பிற அரசுகளின் ஆதிக்கத்திற்கு உட்படாதது. பிற அரசுகளுடனும் இந்தியா ஒப்பந்தம் மேற்கொள்ளலாம்.

நமது தூதரகங்கள் அனைத்து நாடுகளிலும் உள்ளன. அமெரிக்க ஐக்கிய குடியரசில் உள்ள இந்திய தூதரகம் அமெரிக்காவிலுள்ள இந்தியா என்றே அறியப்படுகிறது. புதுச்சேரியில் உள்ள பிரஞ்சு துணைத் தூதரகம், இந்தியாவில் உள்ள பிரான்சு என்றே அழைக்கப்படுகிறது.

**அரசு**

- மக்கள்/மக்கள் தொகை
- நிலப்பரப்பு
- அரசாங்கம்
- இறையாண்மை

## 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பு : மக்கள் தொகை 121.02 கோடி

உங்களுக்குத் தெரியுமா?

### 2011 புள்ளி விவரக் கணக்கெடுப்பு

1872ஆம் ஆண்டு தொடங்கி தற்போது 15வது புள்ளி விவரக் கணக்கெடுப்பு

மொத்த செலவு – ரூ.2,200 கோடிகள்

ஒவ்வொரு நபருக்கான செலவு – ரூ.18.19

மொத்த கணக்கெடுப்பாளர்கள் – 0.27 கோடி

விவரப்பட்டியல் தயாரிக்கப்பட்ட மொத்த மொழிகள் – 16

பயிற்சி கையேடு தயாரிக்கப்பட்ட மொழிகள் – 18

காகிதங்களின் பயன்பாடு – 8,000 மெட்ரிக் டன்கள்

உபகரணங்களின் பயன்பாடு – 10,500 மெட்ரிக் டன்கள்

**2001 புள்ளி விவரம்**

பாலின விகிதம்: 933




**2001 புள்ளி விவரம்**

பாலின விகிதம்: 940




இந்தியாவின் மக்கள் தொகை 121.02 கோடி என்று கணக்கிடப்பட்டது. இது அமெரிக்கா, இந்தோனேஷியா, பிரேசில், பாகிஸ்தான், பங்களாதேசம் மற்றும் ஜப்பான் ஆகிய அனைத்து நாடுகளின் மக்கள் தொகையின் ஒட்டுமொத்த கூட்டுத் தொகைக்கு சமமானதாகும்.

2001 – 2011 ஆகிய பத்தாண்டுக் கணக்கெடுப்புதான் அதன் முந்தைய பத்தாண்டுகளின் கணக்கெடுப்புகளைக் காட்டிலும் குறைவான மக்கள்தொகை வளர்ச்சி விகிதத்தினை பதிவு செய்த முதல் பத்தாண்டு கணக்கெடுப்பாகும்.

2001 – 2011 ஆண்டின் மக்கள் கணக்கெடுப்பினை விடவும் 18.1 கோடி மக்கள் பெருகியுள்ளதை இந்தக் கணக்கெடுப்பு காட்டுகிறது.

ஒட்டு மொத்த ஆண் பெண் பாலின விகிதம் 2001ஆம் ஆண்டிலிருந்து 2011ஆம் ஆண்டு வரையிலான பத்தாண்டுகளில் 7 புள்ளிகள் அதிகரித்து 940 புள்ளியை எட்டியுள்ளது.






11th Std Political Science Tamil_Unit-2.indd 32 6/20/2018 6:03:02 PM

### 2011 மக்கள் தொகைக்கணக்கெடுப்பு

- *1948-ஆம் ஆண்டின் மக்கள் தொகைக்கணக்கெடுப்புச் சட்டத்தின் படியும் அரசமைப்பின் வழிகாட்டுதலின் படியும் சுதந்திரத்திற்கு பிந்தைய மக்கள் தொகைக் கணக்கெடுப்பு பத்தாண்டுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது.*

- *கடைசியாக 2011-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கள் தொகை விவரக் கணக்கெடுப்பில் வீடுகளின் பட்டியல், வீடுகளின் எண்ணிக்கை ஆகியவைகளை முதன்மைப்படுத்தி புள்ளி விவரம் சேகரிக்கப்பட்டது. ஒரு வீட்டில் வசிப்பவர்களின் எண்ணிக்கை, அதன் தலைவர், அவ்வீட்டின் வசதிகள், அதன் உள்ளிருப்பு, உடைமைகள் ஆகியன அடிப்படையிலும், அவ்வீட்டின் தரை, சுவர் மற்றும் மேற்கூரை ஆகியவற்றின் தன்மை போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டும் கணக்கு எடுக்கப்பட்டது.*

- *மேலும் குடும்பத்தலைவரின் பெயர், பாலினம், வகுப்பு, வீட்டின் உரிமையாளர், வசிப்பிட அறைகளின் எண்ணிக்கை, திருமணமான தம்பதியர்களின் எண்ணிக்கை போன்றவைகளும் கணக்கெடுக்கப்பட்டது. கணக்கெடுப்பாளர்கள் வீட்டில் அமைந்துள்ள வசதிகள், குடிநீர் கிடைக்கும் முறை, கழிவறை, கழிவு நீர் வெளியேறும் வழி, குளியலறை வசதி, சமையலறை, சமைப்பதற்கு பயன்படுத்தப்படும் எரிபொருட்கள் போன்ற தகவல்களையும் திரட்டியுள்ளனர்.*

- *கணக்கெடுப்பாளர்கள் மக்களின் வங்கிப் பயன்பாடுகள் மற்றும் வானொலிப்பெட்டி, தொலைக்காட்சிப்பெட்டி, கணிப்பொறி, வலைதள இணைப்பு, தொலைபேசி, மிதிவண்டி, உந்து வண்டி, மகிழுந்து போன்ற சொத்துக்களையும் கணக்கெடுத்தனர்.*

**பின்வரும் அட்டவணையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் கீழே கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளி:**

| தசாப்தம் (பத்து ஆண்டுகள்) | மொத்த மக்கள் தொகை (மில்லியனில்) | ஆண்டு வளர்ச்சி விகிதம் |
|---|---|---|
| 1901 | 238.4 | -- |
| 1911 | 252.1 | 0.56 |
| 1921 | 261.3 | -0.03 |
| 1931 | 279.0 | 1.04 |
| 1941 | 318.7 | 1.33 |
| 1951 | 361.1 | 1.25 |
| 1961 | 439.1 | 1.96 |
| 1971 | 548.2 | 2.20 |
| 1981 | 683.3 | 2.22 |
| 1991 | 846.4 | 2.14 |
| 2001 | 1028.7 | 1.97 |
| 2011 | 1210.7 | 1.64 |



11th Std Political Science Tamil_Unit-2.indd 33 6/20/2018 6:03:02 PM

1. கடந்த தசாப்தத்தை ஒப்பிடுகையில் வேறு எந்த தசாப்தத்தில் மக்கள் தொகை குறைந்தது?
2. மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் எந்தப் பத்தாண்டுகளில் அதிகமாக இருந்தது?
3. மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் எந்தப் பத்தாண்டுகளில் மிகவும் குறைவாக இருந்தது?
4. "மக்கள் தொகை கணக்கெடுப்பு" என்பதனை வரையறு. மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் முக்கியத்துவம் என்ன?
5. 2011-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் மூன்று முக்கிய அம்சங்களைக் குறிப்பிடுக.

## மக்கள் தொகை

மக்கள்தான் அரசை உருவாக்குகிறார்கள். அரசுக்கு மக்கள் தொகை அவசியமாகும். முற்காலச் சிந்தனையாளர்கள் மக்கள் தொகையின் அளவினை விவாதத்திற்கு உள்ளாக்கினர். தத்துவ ஞானி பிளாட்டோவின் கூற்றுப்படி ஓர் இலட்சிய அரசில் 5040 குடிமக்கள் வாழ்வது போதுமானது என்று அறுதியிட்டார். அரிஸ்டாட்டிலின் கூற்றுப்படி மக்கள் தொகையினை துல்லியமாகக் கூறாமல், மிகக்குறைவாகவோ அல்லது மிக அதிகமாகவோ இருக்கக்கூடாது என்று மட்டும் அறிவுறுத்தினார். அதாவது ஓர் அரசு தன்னிறைவு பெறுவதற்கு ஏற்றவகையிலும், அதே நேரத்தில் திறம்பட ஆட்சி செய்வதற்குத் தகுந்த வகையிலும் மக்கள் தொகை இருக்க வேண்டும் என அரிஸ்டாட்டில் கருதினார். ரூசோ ஓர் இலட்சிய அரசு என்பது 10,000 மக்கள் தொகையுடையதாக இருத்தல் வேண்டும் என்று கூறினார்.

பிளாட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற முற்கால சிந்தனையாளர்கள் சிறிய கிரேக்க நகர அரசுகளான ஏதென்ஸ் மற்றும் ஸ்பார்ட்டாவை மனதில் வைத்துக்கொண்டு மக்கள் தொகை எண்ணிக்கையினை முடிவு செய்தனர். நவீன கால அரசுகள் மக்கள் தொகை எண்ணிக்கையில் வேறுபடுகின்றன. இந்தியாவின் 2011-ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 121.02 கோடி மக்களைக் கொண்டுள்ளது.

**உங்களுக்குத் தெரியுமா?**

பிளாட்டோவின் கருத்துப்படி ஒரு இலட்சிய அரசின் மக்கள்தொகை என்பது 5040 ஆகும். இந்த 5040 என்ற எண்ணிக்கையினை ஏன் அவர் தெரிவு செய்தார் தெரியுமா? இதற்கு முக்கியக் காரணம் இந்த 5040 என்ற எண்ணை 1 முதல் 12 வரையிலான எந்த எண்ணாலும் வகுக்கலாம். உதாரணமாக, இந்த எண்ணினை 12-ஆல் வகுத்தால் மீதம் உள்ளது 2 என்ற எண் மட்டுமே! நெருக்கடியான காலங்களில் மக்களை சிறு சிறு குழுக்களாகப் பிரித்து அவர்களுக்குரிய தனித்தனி அறிவிப்புகள் தருவதற்கு வசதியாகவே இந்த 5040 என்ற இந்த மக்கள் தொகை எண்ணிக்கை பிளாட்டோவினால் தேர்வு செய்யப்பட்டது.

**செயல்பாடு**

**மக்கள் தொகைக் கணக்கெடுப்பினைக் கண்டுபிடி**

- மக்கள் தொகைக் கணக்கெடுப்பு என்றால் என்ன?
- மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஏன் முக்கியமானது?
- நீங்கள் உரோமானியப் பேரரசின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடைமுறையினைப் பற்றிக் கேள்விப்பட்டு இருக்கிறீர்களா?
- இந்தியாவில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பில் பங்கேற்கும் பல்வேறு அமைப்புகளை அடையாளம் காண்க.



11th Std Political Science Tamil_Unit-2.indd 34 6/20/2018 6:03:03 PM

### நிலப்பரப்பு

நிலப்பரப்பு இல்லாமல் அரசு இருக்கமுடியுமா? நிச்சயமாக இருக்க முடியாது. மக்கள் வசிக்க இருப்பிடம் அதாவது நிலப்பகுதி அவசியமாகிறது. மேலும் மக்கள் தங்களை சமூக மற்றும் அரசியல் அடிப்படையில் தயார்படுத்திக்கொள்ள நிலப்பகுதி தேவையாகிறது. நிலப்பகுதி என்பது அந்நாட்டின் நிலம், நீர், ஆகாயம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். நவீன அரசுகள் அவற்றின் நிலப்பகுதி அளவில் வேறுபடுகின்றன. குடியுரிமைக்கு நிலப்பகுதி முக்கியமானதாகும். மக்கள் தொகை என்ற கூற்றினைப் போல் நிலப்பகுதி என்பதற்கு குறிப்பிட்ட அளவு என்பது கிடையாது. சிறிய மற்றும் பெரிய நிலப்பகுதிகள் கொண்ட அரசுகள் உள்ளன. 'நிலப்பரப்பின் மீதான இறையாண்மை அல்லது அரசின் மேலான தன்மை' என்பது அந்தந்த அரசின் எல்லைப் பகுதிக்குள் சுதந்திரமாகவும், வெளியிலிருந்து எந்த கட்டுப்பாடும் இல்லாமல் இருப்பதும் தான். இதுவே நவீன அரசுமுறை வாழ்வின் அடிப்படைக்கொள்கையாகும் என **பேராசிரியர் எலியட்** கூறுகிறார்.

இந்திய அரசின் நிலப்பகுதி 32,87,263 சதுர கிலோ மீட்டர் ஆகும். இது உலக அளவில் கிட்டத்தட்ட 2.4% நிலப்பரப்பு ஆகும். இந்திய அரசமைப்பின் முதல் உறுப்பு இந்தியாவின் நிலப்பரப்பைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது.

#### செயல்பாடு






- அரசின் நிலப்பரப்பு என்பது தொடர்ச்சியாக இருந்தாக வேண்டுமா? அல்லது சிதறியிருக்க முடியுமா? பிரெஞ்சு அரசின் நிலப்பரப்பினை ஆராயுங்கள்.
- அண்டார்டிகாவின் நிலையினை அறியுங்கள்.
- எது கடல் எல்லைக் கோடு என அழைக்கப்படுகிறது?
- மிகச் சிறிய நிலப்பரப்பினை கொண்ட அரசு எது?

#### உங்களுக்குத் தெரியுமா?

- ஒரு மக்களாட்சி நாட்டில் நிரந்தர முதலமைச்சர் என்றோ, நிரந்தர பிரதமர் என்றோ எவரேனும் இருக்க முடியுமா?
- ஒரு நபர் அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக அதிகபட்சமாக எத்தனை முறை தேர்ந்தெடுக்கப்படலாம்? ஏன் ?





11th Std Political Science Tamil_Unit-2.indd 35 6/20/2018 6:03:03 PM

### செயல்பாடு

- இந்திய அரசாங்கத்தினால் கொடுக்கப்பட்டுள்ள செய்தித்தாள் விளம்பரங்களைப் பார்த்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.
- 'அரசு' என்ற சொல்லை நீ எவ்வாறு புரிந்து கொள்கிறாய்?
- உங்களுடைய தினசரி வாழ்க்கையில் அரசாங்கத்தினால் ஏற்படும் ஏதேனும் ஐந்து தாக்கங்களைப் பட்டியலிடுக.
- ஒவ்வொருவருக்குமான விதிகளை அரசானது சட்டத்தின் வடிவில் இயற்ற வேண்டியது ஏன் அவசியமாகிறது என்று நீ கருதுகிறாய்?

### அரசாங்கம்

அரசாங்கம் என்பது அரசின் செயல்படக்கூடிய ஓர் முகமையாகும். அரசாங்கம் என்பது அரசின் அரசியல் அடிப்படையிலான ஒருங்கிணைப்பாகும். பேராசிரியர் அப்பாதுரை (A.Appadurai) "அரசின் விருப்பங்களை உருவாக்கி வெளிப்படுத்தி உடன் நிறைவேற்றும் ஓர் முகமையாக அரசாங்கம் விளங்குகிறது" என குறிப்பிடுகிறார். **சி.எப்.ஸ்ட்ராங்** (C.F. Strong) என்பவர், "சட்டத்தை இயற்றி அதனை அமல்படுத்த அரசுக்கு மேலான அதிகாரம் தேவைப்படுகிறது" என்று கூறுகிறார். அரசாங்கம் ஒரு நிலைப்படுத்தப்பட்ட அமைப்பாகும். அரசாங்கத்தினை வழி நடத்த ஆட்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதும், அவர்கள் மாறுவதும் இயல்பென்றாலும், மாறாதது அரசாங்கத்தின் கட்டமைப்பாகும். மக்கள் அவர்களுக்குரிய அதிகார பீடத்திற்கு வருவதற்கு முன்னரும் அரசு இருந்தது. அவர்கள் தங்களின் அதிகாரத்தினின்று விலகிய பின்னரும் அரசு இருக்கும்.

### இறையாண்மை

இறையாண்மை என்பது ஓர் அரசின் நான்காவது அடிப்படை கூறாகும். இறையாண்மை என்பதன் பொருள் மேலான மற்றும் இறுதியான சட்ட அதிகாரம் என்பதாகும். எந்த சட்ட அதிகாரமும் இறையாண்மையை விட உயர்ந்ததாக இருக்க முடியாது. நவீன அரசுகள் தோன்றும்போது அதனுடன் இறையாண்மை என்ற கருத்தும் உருவாக்கப்பட்டது. இறையாண்மை எனும் சொல் இலத்தீன் மொழிச்சொல்லான **'சூப்பரானஸ்'** (Superanas) என்பதிலிருந்து பெறப்பட்டது. அதற்கு உயர்ந்த அதிகாரம் என்று பொருளாகும். தொன்றுதொட்டு வரும் புரிதலின்படி இறையாண்மை என்பது முழுமையானது, நிரந்தரமானது, அனைவருக்குமானது, பிரிக்க முடியாதது, தனித்துவமானது மற்றும் மாற்றித்தர இயலாதது என்பன போன்ற பண்புகளை உள்ளடக்கியுள்ளது.

நிலப்பரப்பின் மீதான இறையாண்மையின் பெயரால் மக்கள் ஒரு அரசின் நிலப்பரப்பிலிருந்து மற்றொரு அரசின் நிலப்பரப்பிற்கு செல்வது கட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

ஆனால் ஒரு நாட்டில் இருந்து கொண்டு நீங்கள் இணையத்தைப் பயன்படுத்தி மற்றொரு நாட்டில் உள்ளவருடன் தொடர்பு கொள்ள முடியும். அரசின் பிரதான உரிமையான இறையாண்மையின் பார்வையில், இதனை நீங்கள் எவ்வாறு காண்கிறீர்கள்? முகநூல் (Facebook), கீச்சகம் (Twitter) மற்றும் வலையொளி (You Tube) போன்ற சமூக வலைதளங்கள் சில நாடுகளில் ஏன் தடை செய்யப்படுகின்றன என்பதை ஆராயவும்.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த ஜீன் போடின் (Jean Bodin) (1530 –1597) என்பவர் நவீன இறையாண்மைக் கோட்பாட்டின் தந்தையாவார். ஹெரால்டு லாஸ்கியின் (Harold Laski) கருத்துப்படி 'அரசு இறையாண்மை உடையதாக இருப்பதால்தான் பிற மனிதக் கூட்டமைப்புகளிலிருந்து வேறுபடுகிறது'.

## 2.3 சமுதாயம், அரசு மற்றும் அரசாங்கம்

சமுதாயம், அரசு மற்றும் அரசாங்கம் என்பதன் பொருள் என்ன என்று நாம் ஆராய்வோம். மேலும் அவை ஒன்றுக்கொன்று எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளன என்பதையும் காண்போம்.




**சமுதாயம், அரசு, அரசாங்கம் – இவை எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக உள்ளன?**

நாம் ஒவ்வொருவரும் ஒரே நேரத்தில் குடும்பம், சமுதாயம், மற்றும் அரசு எனும் அமைப்புகளில் வாழ்கின்றோம். இதற்கென்ன பொருள்? சமுதாயமும், அரசும் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டுள்ளன? அரசு மற்றும் சமுதாயத்துடன் அரசாங்கத்திற்கு என்ன தொடர்பு?

மனிதர்கள் வேட்டையாடி வாழ்ந்த வரலாற்று ரீதியிலான பண்டைய நிலையிலிருந்து பரிணாம வளர்ச்சியடைந்து, ஒரு இடத்தில் நிலையாய் குடி கொண்டு வாழும் நிலைக்கு வந்த பின்பு, ஒவ்வொருவரும் பொருட்களை உற்பத்தி செய்யத் தொடங்கினர். குடும்பங்களின் செறிவு சமூகம் எனவும், சமூகங்களின் செறிவு நாம் இன்று காணும் சமுதாயமாகவும் ஆனது. தனிநபர்கள், தங்கள் உளவியல் தேவைக்காக மற்றவரை சார்ந்து இருந்ததினால் குடும்பம் எனும் அமைப்பில் வாழ்ந்து வந்தனர்.

குடும்பங்கள், தங்கள் பாதுகாப்பிற்காகவே சமூகம் எனும் கட்டமைப்பின் கீழ் வந்தன. இவ்வாறு அமையப்பெற்ற சமூகங்கள், தங்களின் மேம்பட்ட பாதுகாப்பிற்காக சமுதாயம் எனும் அமைப்பினைத் தோற்றுவித்தன. சமுதாயத்தில் வாழ்பவருடைய தேவை அதே சமுதாயத்தின் ஒட்டுமொத்த கூட்டு உற்பத்தி மூலம் பூர்த்தி செய்யப்பட்டது. இவ்வாறே தனித்தனியாக ஒவ்வொரு மனிதரும் தத்தமது அன்றாட உணவிற்காக உழைப்பது, பொருள் உற்பத்தியைத் தோற்றுவிக்கும். இதனாலேயே உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், அவற்றின் மூல நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு சந்தை, மற்றும் வாணிபம் எனும் அமைப்புகள் உருப்பெற்றன. இவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சந்தைப்படுத்தப்படும் போதும், வர்த்தகம் செய்யப்படும்போதும், பலம் பொருந்திய மனிதர்களின் கட்டுப்பாட்டில் அவை செல்லும் சாத்தியமும் உள்ளது. அவ்வாறு சமுதாயமானது வலியோரின் ஆளுகைக்குள் வருமாயின், அது சமுதாயத்தின் சிதைவிற்கு வழி வகுக்கும்.

சமுதாயம் சீரழிந்து போகும் போது, அதன் தாக்கம் சமூகக்குழுக்களின் மீதும் ஏற்படும். சமூகங்கள் சிதைவு பெறும்போது குடும்பங்களும் சிதையத்தொடங்கும். குடும்பங்கள் சிதையத்துவங்கினால், ஒவ்வொருவரும் துன்புற நேரிடும். இவ்வாறு ஒரு சரி செய்ய இயலாத சீரழிவைத் தடுக்கும் பொருட்டே, மனிதர்கள் ஒன்றுபட்டு, பகுத்தறிவின் வழிகாட்டுதலின் பேரில் அரசு எனும் மாட்சிமை பொருந்திய வலிமையோடு இருக்கக்கூடிய அமைப்பின் அவசியத்தினை உணர்ந்தனர்.

மனிதர்கள் ஒருவருக்கொருவர் தம்மை அழித்துக்கொள்வதிலிருந்து அவர்களை காக்கும் நோக்கிலேயே அதிகாரங்கள் குவிக்கப்பட்டு அவ்வதிகாரங்களை நிர்பந்திக்கும் அதிகாரமும் கொண்ட 'அரசு' எனும் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. நவீன அரசுகளில் மனிதர்கள் மீதான இக்கட்டுப்பாடுகள், சட்டத்தின் வழியாக உரிய விதிமுறைகள் மூலம் மேற்கொள்ளப் படுகின்றன. மக்களாட்சியில் இச்சட்டங்கள் சட்டமன்றத்தால் இயற்றப்படும்.



11th Std Political Science Tamil_Unit-2.indd 37 6/20/2018 6:03:04 PM

இயற்றப்பட்ட சட்டங்கள், செயலாட்சி துறை மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்டும், நீதிமன்றத்தால் இச்சட்டங்களின் சட்டபூர்வத்தன்மை மற்றும் நீதிபரிபாலனத்தன்மை ஆகியன ஆய்வு செய்யப்பட்டும் வருகின்றன. சட்டமியற்றுதல், இயற்றிய சட்டத்தை அமலாக்குதல் மற்றும் அதற்கு விளக்கமளித்தல் ஆகியன அரசாங்கத்தின் பணிகளாகும். 'அதிகாரப் பிரிவினை' என்ற தலைப்பின்கீழ் நீங்கள் மேலும் இது குறித்து அறியலாம்.

## செயல்பாடு

கல்வியிலிருந்து வேலைவாய்ப்பு வரை அரசு எவ்வாறு செயலாற்றுகிறது என்பதை அடையாளம் காண்க. மேலும் விவசாயத்துறைக்கு அரசு அளிக்கும் மானியம், தொழில் துறையின் சிறப்பான செயல்பாட்டிற்காக அரசு ஏற்படுத்தும் ஒழுங்கு முறைகள் மற்றும் சேவைத்துறைக்கு அரசு அளிக்கும் ஆதரவுகள் ஆகியவற்றைக் கண்டறிக.

விவசாயம், தொழிற்சாலைகள் மற்றும் சேவைகளை ஊக்கப்படுத்த தமிழ்நாடு அரசு முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு:

### விவசாயம்

- விதைகளுக்கு அளிக்கப்படும் மானியம் மற்றும் இலவச மின்சாரம் ஆகியவை விவசாயிகளுக்கு விவசாயத்தை இலாபகரமானதாக்குகிறது.

### சேவைகள்

- சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு 2016ம் ஆண்டு தமிழ்நாட்டில் நடைபெற்றது.
- தமிழக நிதிநிலை அறிக்கையில் சேவைகளுக்கான வரிச் சலுகைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

### தொழிற்சாலைகள்

- ஒற்றைச் சாளர முறையில் அனுமதி வழங்கும் முறை
- நிலம் கையகப்படுத்துதலை எளிமையாக்குதல்
- 24 x 7 என்ற அடிப்படையிலான தடையற்ற மின் விநியோகம்.

### அரசு மற்றும் சமுதாயத்திற்கு இடையே உள்ள முக்கிய வேறுபாடுகள்





சமுதாயம் என்பது தனி நபர்கள், குடும்பங்கள், குழுக்கள் மற்றும் அமைப்புகள் ஆகியனவற்றை உள்ளடக்கியதாகும். ஆரம்பகால அரசியல் சிந்தனையாளர்கள் அரசு மற்றும் சமுதாயம் ஆகிய இரண்டும் ஒன்றே என்று கருதினர். அரசு என்பது சமுதாயத்தின் பகுதியாகும் எனினும் அதுவே சமுதாயத்தின் வடிவமாகிவிடாது.

| அரசு | சமுதாயம் |
|---|---|
| சமுதாயம் தோன்றிய பின்னரே அரசு என்ற அமைப்பு தோன்றியது. | சமுதாயமானது அரசு தோன்றுவதற்கு முன்னரே தோன்றியது. |
| அரசின் எல்லை வரையறுக்கப்பட்டது. | சமுதாயத்தின் பரப்பெல்லை பரந்ததாகும். |
| அரசுக்கு ஒரு நிலையான நிலப்பரப்பு உண்டு. | சமுதாயத்திற்கு என நிலையான நிலப்பரப்பு எதுவும் இல்லை. |
| அரசு என்பது அரசியல் சார்ந்த அமைப்பாகும். | சமுதாயம் என்பது ஓர் சமூக அமைப்பாகும். |
| அரசிற்கு சட்டங்களை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் உள்ளது. | சமுதாயத்திற்கு அத்தகைய அதிகாரங்கள் எதுவும் இல்லை. |

அரசு மற்றும் சமுதாயத்தின் உறுப்பினராகும் தன்மை என்பது ஒன்றேயாகும். ஆனால் அவை இரண்டும் தத்தமது நோக்கங்களில் மாறுபடுகின்றன. அரசு என்பது ஒரு மிகப்பெரிய ஆனால் ஒரே ஒரு நோக்கத்திற்காக உள்ளது. ஆனால் சமுதாயம், எண்ணிலடங்காத நோக்கங்களுக்கானதாகும். அவற்றில் சில பெரிய நோக்கங்கள் மற்றும் சில சமயம் சிறிய நோக்கங்கள் உள்ளன. சமுதாயத்தின் நோக்கங்கள் ஆழ்ந்ததாகவும், பரந்ததாகவும் காணப்படுகின்றன.

அரசு என்பது சட்டம் சார்ந்த ஒற்றை அமைப்பாகும். ஆனால் சமுதாயம் என்பது பல அமைப்புகளை உள்ளடக்கியதாகும். அரசு மக்களின் மீது தன் அதிகார வலிமையை பயன்படுத்தி அவர்களை கீழ்ப்படிய வைக்கிறது. ஆனால் சமுதாயமோ மக்களின் மனமுவந்த செயல்பாட்டையே ஊக்குவிக்கிறது. சமுதாயத்தின் பல்வேறு தேவைகளே அது இசைவான வழியில் செயல்படும் முறையை தேவையானதாக்குகிறது. சமுதாயத்தில் பல்வேறு அமைப்புகள் இருப்பதால், ஒருவர் தான் கட்டாயப்படுத்தப்படுவதாக கருதினால் அதிலிருந்து விடுபட்டு வேறு அமைப்பில் தம்மை இணைத்துக் கொள்வதற்கு வாய்ப்புள்ளது. நிர்ப்பந்தத்தின் மூலமாக அமைப்புகள் செயல்பட முடியாது. இதன் வாயிலாக, வலியுறுத்தும் அதிகாரமற்ற அரசும், மக்களை அவர்களின் சுய விருப்பத்துடன் தன்னகத்தே வைத்துக் கொள்ளும் தூண்டல் இல்லாத சமுதாயமும் வீழ்ச்சியடையும் என்பதை நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

### அரசு மற்றும் அரசாங்கம்

பேச்சு வழக்கில் அரசும், அரசாங்கமும் ஒரே பொருளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் உண்மையில் அரசு என்பதும் அரசாங்கம் என்பதும் வெவ்வேறானவை ஆகும். பின்வரும் அட்டவணையிலிருந்து அரசிற்கும், அரசாங்கத்திற்கும் உள்ள வேறுபாடுகளை அறியலாம்.

| அரசு | அரசாங்கம் |
|---|---|
| அரசு என்பது மக்கள் தொகை, நிலப்பரப்பு, அரசாங்கம் மற்றும் இறையாண்மை ஆகிய நான்கு கூறுகளைக் கொண்டதாகும். | அரசாங்கம் என்பது அரசின் நான்கு கூறுகளில் ஒன்றாகும். |
| அரசு மூல அதிகாரங்களை பெற்றதாகும். | அரசாங்கத்தின் அதிகாரங்கள் அரசிடமிருந்து பெற்றவையாகும். |
| அரசு என்பது நிரந்தரமானது என்பதுடன் என்றென்றைக்கும் நீடித்திருப்பதாகும். | அரசாங்கம் என்பது தற்காலிகமானதாகும். மக்கள் விருப்பத்தின் பேரில் அரசாங்கங்கள் மாற்றப்படலாம். |
| அரசு என்பது காண முடியாததும், புலனாகாததும் ஆகும். | அரசாங்கம் என்பது உறுதியானது மற்றும் காணக்கூடியது. |



11th Std Political Science Tamil_Unit-2.indd 39 6/20/2018 6:03:04 PM

## நவீன அரசு

நவீன அரசைப் பற்றி தெரிந்து கொள்ளும் முன்னர் உங்களுக்கு நவீனத்துவம் பற்றிய புரிதல் வேண்டும். நவீனத்துவம் என்றால் என்ன? நவீன அரசு என்றால் என்ன?

### செயல்பாடு





- நவீன அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்திற்கு நவீனத்துவம் ஆற்றிய பங்களிப்புகளை வரிசைப்படுத்துக. "மேலை நாட்டு பழக்கவழக்கங்கள் நவீனத்துவத்தோடு நெருங்கிய தொடர்புடையதாக கருதப்படுகிறது". "அவிஷாய் மர்காலித் (Avishai Margalit)" அவர்களின் மேலைநாட்டு பழக்கவழக்கங்கள் தொடர்பான நூல்களை பற்றி கேள்விப்பட்டுள்ளீர்களா?
- மகாத்மா காந்தியடிகள் தமது 'இந்து சுயராஜ்ஜியம்' என்னும் நூலில் நவீனத்துவத்தை எதனால் கடுமையாக விமர்சிக்கிறார்?

### விவாதம்



- காந்தியடிகள் நவீனத்துவத்திற்கு எதிரானவரா?
- காந்தியடிகளின் கருத்தை நீ ஏற்றுக் கொள்கிறாயா? வகுப்பறையில் இது தொடர்பான ஒரு விவாதத்தை நடத்துக.

நவீனத்துவம் என்பதனை வரலாற்று அடிப்படையில் பார்த்தால் மரபுகளை கேள்விக்குட்படுத்தி அதன் மூலம் காலம் தொட்டு வந்த நம்பிக்கைகளை, பழக்கங்களை, சமூக பண்பாட்டு நெறிமுறைகளை நிராகரிக்கும் காலகட்டம் நவீனத்துவமாகும். தனி மனிதத்துவத்திற்கு முன்னுரிமை, சமத்துவம், சுதந்திரம், வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் அறிவியல் மனப்பாங்கினை வளர்த்தல் போன்றவற்றிற்கு நவீனத்துவம் அடித்தளமிட்டது. நவீனத்துவம் மக்களை விவசாயம் சார்ந்த நிலையிலிருந்து தொழில்மயம், நகரமயம், மதச்சார்பின்மை நோக்கி வழி நடத்தியது. இந்த அறிவார்ந்த நகர்வானது சமுதாயம், அரசு மற்றும் அரசாங்கம் போன்றவற்றை பற்றிய புரிதல் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது. உதாரணமாக, இந்திய சமுதாயத்தை சீர்திருத்த இராஜாராம் மோகன்ராய் மேற்கொண்ட முயற்சிகள் போன்றவை இந்திய சிந்தனையாளர்கள் மீது மேற்கத்திய நவீனத்துவத்தின் தாக்கம் நேரடியாக இருந்ததற்கு சான்றாகும்.

அரசியல் அறிவியல் பாடத்தில் நவீனத்துவமானது அரசு, சுதந்திரம், சமத்துவம், நீதி முதலிய கருத்தாக்கங்களின் மீது தாக்கத்தை ஏற்படுத்தியது. உதாரணமாக, தொன்றுதொட்டு புரிந்து கொள்ளப்பட்ட அரசியல் சொற்களான தேச பக்தர்கள், புரட்சி, உரிமைகள், சலுகைகள், இறையாண்மை ஆகியவை அவற்றின் வரலாற்று பின்னணிக்கு மாற்றாகப் புரிந்து கொள்ளப்பட்டது. இதே போன்று கிரேக்க நகர அரசின் காலத்தில் அரசு என்பது முற்றிலும் வேறுவிதமாக புரிந்து கொள்ளப்பட்டது. இதற்கு முற்றிலும் மாறுபட்ட நவீன அரசு மேற்கத்திய ஐரோப்பாவில் புது வடிவம் பெற்ற அரசியல் நிறுவனமாக இடைக்காலத்தில் தோன்றியது. நவீன அரசின் அறிவுப் பூர்வமான அடித்தளம் பெரும்பாலும் 1648-ஆம் ஆண்டில் கையொப்பமிடப்பட்ட "வெஸ்ட் பாலியா உடன்படிக்கை" (Treaty of Westphalia)யின் விளைவு என்றே கூறப்படுகிறது.



11th Std Political Science Tamil_Unit-2.indd 40 6/20/2018 6:03:05 PM

## செயல்பாடு






- வெஸ்ட்பாலியா உடன்படிக்கை ஏற்பட காரணங்கள் யாவை?
- வெஸ்ட்பாலியா சமாதானம் என்றால் என்ன? கண்டறிக.

நவீன அரசின் சிந்தனை 19–ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய காலனிமயமாக்கம் மூலம் உலகின் பல்வேறு பகுதிகளுக்குக் கொண்டு செல்லப்பட்டது. இரண்டாம் உலகப் போருக்கு பின் சுதந்திரம் பெற்ற காலனி நாடுகள் இன்றளவும் காலனியாதிக்க காலத்திற்கு பிந்தைய (Post- Colonial States) அரசுகள் என அறியப்படுகின்றன. இவ்வாறு சுதந்திரம் பெற்ற தெற்காசிய நாடுகள் காலனியாதிக்க காலத்திற்குப் பிந்தைய அரசுகள் என்னும் குடையின் கீழ் வருகின்றன. இவ்வாறு உலகெங்கிலும் உள்ள காலனியாதிக்க காலத்திற்கு பிந்தைய அரசுகளை ஒன்றோடு ஒன்று ஒப்பீடு செய்யலாம். இவ்வாறான ஒப்பீடுகள் அவ்வரசுகளின் ஆட்சி முறைமைகளின் சாதக பாதகங்களை அறிந்து கொள்ள உதவும். அதன் மூலம் அவ்வரசுகளின் ஆட்சி முறைமைகளை மேம்படுத்த இயலும்.

### 2.4 நவீன அரசுகளின் பணிகள்

நவீன அரசு என்பது வளர்ச்சியடைந்த அரசு ஆகும். அது தனது மக்களை பாதுகாப்பாகவும், பத்திரமாகவும் வைத்துக் கொள்ள முயல வேண்டும். அரசு தனது எல்லைகளின் பாதுகாப்பினை உறுதி செய்யவேண்டும். தனது எல்லைகளுக்குள் வெளிநாட்டவர் எவரும் உட்புகாத வண்ணம் பாதுகாப்பாக வைத்துக்கொள்ள வேண்டும். சந்தையின் தேவைகளனைத்தும் நன்கு கட்டமைக்கப்பட்ட பேரியல் பொருளாதார கட்டமைப்பு மூலம் சமுதாயத்துடன் ஒன்றிணைக்கப்பட வேண்டும். 'முதலில் மக்கள் நன்மை' என்பதே அரசின் தாரக மந்திரமாக இருக்கவேண்டும். நவீன அரசின் ஆளுகை கொள்கை என்பது அதன் செயல்கள் மக்களின் நலனை பேணுவதாக இருக்கிறதா என்பதாகும். இவ்வாறு அத்தியாவசிய சேவைகளை செய்துதரும் அமைப்பாக நவீன அரசு இயங்குகிறது. நவீன அரசு கீழ்காணும் மூன்று முக்கிய செல்பாடுகளை மையமாக கொண்டது என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.



## இடர்காப்பு மற்றும் பாதுகாப்பு பணிகள்

அரசுகள் இன்றைய உலகளாவிய சூழலில் 'இடர்காப்பு' என்பதனை பன்மடங்கான நிலைப்பாடுகளில் பொருள் கொள்கின்றன. மனித இடர்காப்பு போன்ற சொற்கள் குடிமக்களின் நலனே முதன்மையானது என்பதையே குறிக்கிறது. தத்துவஞானி இம்மானுவேல் காண்ட் அவர்களின் "நிரந்தர அமைதி" எனும் சிந்தனையின் படி உலக நாடுகள் ஒன்றிணைந்து 'பன்னாட்டு சங்கம்' எனவும் பின்னாளில் 'ஐக்கிய நாடுகள் சபை' எனவும் ஒன்றிணைந்து இடர்காப்பு மற்றும் பாதுகாப்பு முதலியவற்றை விவாதித்து உலக அமைதியை பேணுகின்றன.

## பொருளாதார பணிகள்

அரசியல் முறைமையின் பொருளாதார செயல்பாடுகளில் தலையிடவேண்டிய கடமையில் நவீன அரசுகள் உள்ளன. மக்கள் தங்களின் திறனை உணர்ந்து மேம்படுத்திக்கொள்ள ஏதுவாக அரசு அவர்களுக்கு ஆதரவு தரவேண்டும். செயல் திறன் குறித்த அமெரிக்க அறிஞர் மார்த்தா நூசுபாம் (Martha Nussbaum) அவர்களின் கருத்து மற்றும் நோபல் பரிசு பெற்ற பொருளாதார மேதை அமர்த்தியா சென் (Amartya Sen) அவர்களின் செயல் திறன் அணுகுமுறை குறித்த சிந்தனைகளை அறிய முயற்சிக்கவும். நலிவுற்ற பிரிவினர் மற்றும் நுகர்வோரின் நலன்களை பாதுகாத்தல், லாபம் ஈட்ட இயலாத துறைகளில் முதலீடு செய்வது போன்றவை நவீன அரசின் பொருளாதார பணிகளாக கருதப்படுகிறது.

## அத்தியாவசிய சேவைகளை வழங்குதல்

'**கருவறையிருந்து கல்லறை வரை**' நவீன அரசு அதன் குடிமக்களை கவனித்துக் கொள்ள வேண்டும். உணவு, சுத்தமான குடிநீர், கல்வி, சுகாதாரம், மற்றும் சமூகப் பாதுகாப்பு ஆகியன அரசின் முதன்மையான பொறுப்புகளாகும். இந்திய அரசாங்கம் மற்றும் மாநில அரசாங்கங்கங்களின் பல்வேறு நலத் திட்டங்கள் இந்த திசையில் இருப்பதை நீங்கள் காணலாம். தமிழக அரசாங்கத்தின் மதிய உணவு திட்டம் மற்றும் அரசுப் பள்ளிக் குழந்தைகளுக்கான சத்துணவுத் திட்டம் ஆகியவை நாட்டின் பிற பகுதிகளில் பின்பற்றப்படுவது இதற்கு தக்கதொரு சான்றாகும். நவீன அரசு மக்களின் நலனைப் பேணுவதால் "மக்கள் நல அரசு" எனும் மற்றுமொரு கருத்தாக்கம் தோன்றியது

## 2.5 மக்கள் நல அரசு என்ற கருத்தாக்கம் (Concept of Welfare State)

இந்திய அரசமைப்பின் 'அரசு வழிகாட்டி நெறிமுறைகள்', மேற்கு ஐரோப்பிய நாடுகளின் மக்கள் நல அரசு பற்றிய சிந்தனையை பிரதிபலிப்பதை கவனித்து இருக்கிறீர்களா? குடிமை உரிமைகள் மற்றும் அரசியல் உரிமைகள் குறித்த அம்சங்கள் அரசமைப்பின் அடிப்படை உரிமைகளில் வைக்கப்பட்டுள்ளபோது, சமூக, பொருளாதார மேம்பாட்டினை வலியுறுத்தும் வழிமுறைகள் நான்காம் பகுதியில் 'அரசு வழிகாட்டி நெறிமுறைகள்' எனும் தலைப்பின் கீழ் அமைந்துள்ளது எதனால் என்று அறிவீர்களா? அதன் காரணமென்ன? அரசமைப்பில் உள்ள அடிப்படை உரிமையின் பகுதியாக பொருளாதார உரிமைகள் ஏன் இல்லை?

குறைந்தபட்ச மக்கள்தொகை மற்றும் அதே நேரத்தில் வளங்கள் மிகுதியாக இருப்பது, மக்கள் நல அரசு மாதிரியின் (Welfare State Model) வெற்றியை தீர்மானிக்கும் முக்கிய காரணமாகும். ஸ்கேண்டிநேவியா நாடுகள் மக்கள் நல அரசிற்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாக இருக்கின்றன. இந்தியாவின் அரசமைப்பு ஒர் நல அரசினை நிறுவ முயல்கிறபோதிலும், வளங்கள் போதாமை, அதே சமயம் பெருகும் மக்கள்தொகை ஆகியவை மக்கள் நல அரசின் இலக்குகளை எட்ட தடையாக உள்ளது.

'மக்கள் நல அரசு என்ற கருத்தாக்கம் இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், மேற்கு ஐரோப்பாவில் ஏற்பட்டதாகும். மக்கள் நல அரசில், அரசாங்கத்தினுடைய முதன்மை



11th Std Political Science Tamil_Unit-2.indd 42 6/20/2018 6:03:06 PM

சிந்தனை என்பது மனித வளர்ச்சியில் ஒரு முக்கிய பங்காற்றவேண்டும் என்பதாகும்.

குடிமக்களின் நல்வாழ்விற்கான பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டினை பேணுதல் நல அரசின் பங்காகும். குடிமக்களின் பொருளாதார மற்றும் சமூக நலன் பின்வருவனவற்றின் அடிப்படையிலானதாகும். (1) வாய்ப்புகளில் சமத்துவம் எனும் கொள்கை (2) பொருளாதார வளங்களை சமமாக வழங்குவதற்கான கொள்கை (3) குறைந்தபட்ச நல் வாழ்க்கையை தங்களால் ஏற்படுத்திக்கொள்ள இயலாதவர்களுக்கு, அவ்வாறான வாழ்க்கையினை ஏற்படுத்தித் தருதல் ஆகியனவாகும். சுதந்திரத்திற்கு முன்பு இந்தியா ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் ஒரு காலனித்துவ அரசாக இருந்தது. இந்தியர்கள் ஆங்கிலேய முடியாட்சியின் கீழ் இருந்தனர். நம் நாடு சுதந்திரம் அடைந்ததும், நாம் நமது அரசமைப்பினை உருவாக்கினோம். நமது அரசமைப்பானது மேற்கத்திய மக்கள் நல அரசின் சிந்தனைகளை உள்வாங்கியதாகும்.

**செயல்பாடு**





- மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்புத்திட்டம், கல்வி உரிமை சட்டம், தேசிய உணவு பாதுகாப்பு சட்டம் ஆகியவற்றின் அவசியத்தினை ஆராயவும். இத்திட்டங்களில் உறுதி செய்யப்பட்டுள்ள உரிமைகள், சட்ட பூர்வ உரிமைகளா? அல்லது அடிப்படை உரிமைகளா?
- கடந்த ஐந்து ஆண்டுகளில் இந்த சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஆன மொத்த செலவினை கண்டறிக.
- மக்கள் நல அரசு எனும் கருத்தாக்கத்திற்கு **ஜே.எஸ்.மில்** மற்றும் **எச்.ஜே.லாஸ்கி** அளித்த பங்களிப்புகள் குறித்து விவாதி.

## 2.6 மென்மை அரசு என்ற கருத்தாக்கம் (Concept of Soft state)

நோபல் பரிசு பெற்ற பொருளாதார நிபுணர் குன்னர் மிர்டால் (Gunner Myrdal) மேற்கத்திய அரசுகளுடன் ஆசிய அரசுகளை ஒப்பிடும்போது, ஆசிய அரசுகளில் நிலவும் சமுதாய ஒழுங்கீனங்கள் ஆசிய அரசுகளை மென்மை அரசுகளாக ஆக்குவதை கண்டறிந்தார். சமூக ஒழுங்கீனம், ஊழல் மற்றும் மிகப்பலவீனமான சட்ட அமலாக்கம் ஆகியன மென்மை அரசின் முக்கிய தன்மைகளாகும்.

முழு வளர்ச்சி பெறாத ஆளுமை திறன்கள் கொண்ட காலனியாதிக்க காலத்திற்கு பிந்தைய நாடுகள் 'மென்மை அரசுகளாக வகைப்படுத்தப்படுகின்றன. தரநிலைகளை கடைபிடிக்காமை, ஒழுக்கத்தை பராமரிக்க இயலாமை, சட்ட அமலாக்கம் செய்ய இயலாமை போன்றவை நமது நாட்டினை மென்மைஅரசாக மாற்றிவிடுகிறது. தனது மக்களாட்சி பண்புகளை மென்மேலும் மேம்படுத்திக்கொள்ள ஒரு மென்மை அரசால் இயலவே இயலாது.

ஒரு மாணவராக நீங்கள் காணும் சமுதாய ஒழுங்கீனங்களையும், அவற்றை சீர் செய்வதற்காக உங்களின் வழிமுறைகளையும் பட்டியலிடுக.

**செயல்பாடு**

- மேற்கத்திய நாடுகளில், கருவிலிருக்கும் குழந்தையின் பாலினத்தை அறிந்துகொள்ளுதல் என்பது பேறுகால மருத்துவ நடைமுறையின் ஒரு பகுதியாக விளங்குகிறது. கருவுற்ற தாய்மார்கள் பிறக்கப்போகும் தம் குழந்தைகளின் பாலினத்தை முன்னரே தெரிந்து கொள்வது வழக்கமான ஒன்றாகும்.
- ஆனால் இந்தியாவில் குழந்தை பிறக்கும் முன்னரே அதன் பாலினத்தை தெரிவிப்பதோ, தெரிந்துகொள்ள முயற்சிப்பதோ தண்டனைக்குரிய குற்றமாகும். "கருவிலிருக்கும் குழந்தைகளின் பாலினத்தை கண்டறிதல் தடைச்சட்டம்" [Pre-Conception and Pre-Natal Diagnostic Techniques (PCPNDT) Act] எனும் சட்டம் மூலம் கருவிலிருக்கும் சிசுவின் பாலினத்தை கருவுற்று இருக்கும் பெண்ணிற்கோ,அவரது உறவினருக்கோ சொல், செயல் மற்றும் பிற குறியீடுகள் வழியாக தெரிவிப்பது குற்றமாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஏன்?
- மென்மை அரசு மற்றும் மென்மை அதிகாரம் ஆகியவற்றிற்கு இடையேயான வேறுபாடுகளை கருத்தில் கொண்டு, இன்றைய சுதந்திர இந்தியாவுடன் ஒப்பிட்டு அறிக.

## 2.7 மிகை மேம்பாட்டு அரசு என்ற கருத்தாக்கம் (Concept of Over Developed State)

தெற்காசிய அரசுகள் பெரும்பாலும் நவீன மக்களாட்சி தத்துவத்தின் படி இயங்கும் அரசுகளாகும். ஆனால், அவை வளர்ச்சியில் மேற்கத்திய நாடுகளை விட பின் தங்கி இருப்பதன் காரணம் யாது? இந்நாடுகளின் ஆளுகை அமைப்புகளான நாடாளுமன்றம், அதிகாரவர்க்கம், திட்டமிடும் துறைகள் போன்றவை இறக்குமதி செய்யப்பட்டு நிலவியல் சூழலுக்கேற்ப காலனியாதிக்க காலத்திலேயே மாற்றப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருந்தாலும் வளர்ச்சி என்பது மிக மந்தமாகவே இருப்பதை காண முடிகிறது. வளர்ச்சி வேகம் மிக மெதுவாகவே இந்நாடுகளில் இருப்பதற்கான காரணம் என்ன? இதனை எடுத்துக்காட்டி ஹம்சா ஆலாவி (Hamza Alavi) பாகிஸ்தான் மற்றும் வங்கதேசம் ஆகிய நாடுகளின் ஆளுகைத்தன்மை நெருக்கடியினை விளக்குகிறார். காலனியாதிக்க காலத்திற்கு பிந்தைய நாடுகளின் செயல்படாத தன்மையினை விளக்கும்பொருட்டு மிகை மேம்பாட்டு அரசு எனும் கருத்தாக்கம் பயன்படுகிறது. காலனியாதிக்கக் காலத்தின் போதும், அதற்கு பின்னரும் தொடரும் அதிகாரவர்க்க ஆளுகைக்கட்டமைப்பு மூலமாக 'மிகை மேம்பாட்டு அரசு' புரிந்துகொள்ளப்படுகிறது.

காலனியாதிக்க கால அடிமைத்தளையில் இருந்து இந்நாடுகள் விடுபட்டாலும், புதிதாக பெறப்பட்ட அரசியல் சுதந்திரத்தின் தாக்கத்தினை அந்நாடுகளில் உள்ள நிர்வாகக்கட்டமைப்புகள் எந்த வகையிலும் உள்வாங்கவில்லை. ஐரோப்பிய காலனியாதிக்க சக்திகள் இரட்டை வேடமிட்டு, தங்கள் நாட்டு ஆரோக்கிய அரசியலினை தங்கள் ஆளுகையின் கீழ் உள்ள காலனியாதிக்க நாடுகளுக்கு வழங்கவில்லை. அவர்களின் நாடுகளில் அரசுகள் என்பவை குடிமக்களின் அரசியல் வாழ்வு, சுதந்திரம் மற்றும் பொருளாதார சுதந்திரம் போன்ற உரிமைகளை நிலை நாட்டி மக்களுக்கு அதீத சுதந்திரம் வழங்கிய அமைப்பாகக் கருதப்பட்டன. மக்கள் அரசினை தங்கள் 'செல்ல பிராணி' போன்று கருதினர். ஆனால், அதே ஐரோப்பியர்கள் அதற்கு நேர் எதிராக, தங்களின் காலனியாதிக்க நாடுகளில் அரசமைப்புகள் கொடூரமானதாக இருக்குமாறு வடிவமைத்தனர். அதிகாரக்



11th Std Political Science Tamil_Unit-2.indd 44 6/20/2018 6:03:06 PM

குவிப்பு என்பது பெரும் அளவில் காலனியாதிக்க அரசின் வசம் இருந்தது. இதனால் காலனியாதிக்கம் செய்யப்பட்ட நாடுகளில் இருந்து மிக எளிதாக செல்வங்களை சுரண்டி அவர்கள் தங்கள் நாட்டிற்கு கொண்டு செல்ல முடிந்தது. காலனியாதிக்க நாடுகளில் அவர்கள் உருவாக்கி வைத்திருந்த அதிகாரவர்க்கம் இதற்கு மிக சிறப்பாக உதவி புரிந்தது. நாட்டைச் சுரண்ட உதவிய இவ்வகை அமைப்புகளை நாடு சுதந்திரம் அடைந்த பின்னரும், பெரும் மரபாகவே கருதி பிந்தைய ஆட்சியாளர்கள் தொடர்ந்தனர். அதிகாரவர்க்கமும் தன்னை பெரிய அளவில் உருமாற்றமும் செய்துகொள்ளவில்லை.

**செயல்பாடு**

'தண்ணீர் தண்ணீர்' என்ற தமிழ்த் திரைப்படத்தைப் பார்க்க முயற்சிக்கவும். இத்திரைப்படத்தின் மையக்கருத்தினை விவாதிக்கவும்.

**தமிழ்த்திரைப்படம் 'தண்ணீர் தண்ணீர்'**




தமிழ்நாட்டில் ஒருசிறிய கிராமம் தண்ணீர் பற்றாக்குறையை எதிர்கொள்கிறது. அப் பிரச்சினையை தீர்க்க கிராமத்தவர்கள் முயற்சிக்கும் போது அவர்கள் அதிகாரவர்க்கத்தினரின் கைகளில் படும் துயரங்களை படம் வெளிப்படுத்துகிறது.

சமுதாயம் மற்றும் அதன் பொருளாதாரம் நவீனமயமாக்கப்படாத நிலையில் அவற்றை கட்டுப்படுத்தும் மாட்சிமை பெற்ற அமைப்பான அரசு மட்டும் நவீனமாக்கப்பட்டால், அது அரசையும் அதன் அங்கமான சமுதாயத்தினையும் ஒன்றோடொன்று தொடர்பில்லாத இரு வேறு கூறுகளாக ஆக்கி விடும். இது அரசு இயந்திரத்திற்கும், மக்களுக்கும் ஒரு பெரிய இடைவெளியினை ஏற்படுத்திவிடும். இவ்வகையான பிரதிநிதித்துவ மக்களாட்சியில், மக்களுக்கு எது நன்மை பயக்கும் என்பது மக்களால் தீர்மானிக்கப்படமாட்டாது. அதற்குமாறாக செல்வாக்கு மிக்க ஒரு சிலரால் மட்டுமே தீர்மானிக்கப்படும். வங்கதேசம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் நிலவும் இத்தகைய தன்மையினை 'இராணுவ அதிகாரவர்க்க சிறுகுழுவாட்சி' எனும் சொற்றொடர் மூலம் ஹம்சா ஆலாவி விளக்குகிறார். 'இராணுவ அதிகாரவர்க்கத்தின் சிறுகுழுவாட்சி' என்பது இந்தியாவின் உரிமங்கள் ஆட்சியை (Licence Raj) ஒத்துள்ளதாகும். காலனியாதிக்க கால அனுபவத்தில் இருந்து இந்தியாவில் தொடரும் அதிகாரக்குவிப்பு குறித்த கவலைகள் தொடர்ந்து மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு வருவதைக் காணலாம்.



மிகை மேம்பாட்டு அரசு என்ற கருத்தாக்கம் பற்றி முன்பு வேறு விதமாக புரிந்திருந்தேன்.

## 2.8 காலனியாதிக்க காலத்துக்கு பிந்தைய அரசு என்ற கருத்தாக்கம் (Concept of post–colonial state)

காலனியாதிக்கம் இருந்த நாடுகளில் காவல் துறையினருக்கு மக்கள் அஞ்சுவது போல், அதே நாட்டினை தனது காலனியாதிக்கத்தில் வைத்திருந்த மேற்கத்திய நாடுகளில் மக்கள் அவர்களது காவல் துறையினரைக் கண்டு அஞ்சுவதில்லை. ஏன்? என அறிக. காலனியாதிக்கத்தின் கீழ் இருந்த நம் நாட்டில் தற்போது அரசாங்க ஊழியருக்கு மக்களிடையே அதீத செல்வாக்கு மற்றும் மரியாதை நிலவுவதைக் காண்க. ஆனால் மேற்கத்திய நாடுகளில் அரசாங்க ஊழியர்கள் சாமானிய மனிதர்களுக்கு சமமாகவே நடத்தப்படுவதை அறிக. அதே நேரத்தில், காலனியாதிக்கத்தினால் அந்நாடுகளுக்கு நன்மைகள் ஏதேனும் ஏற்பட்டனவா? அவற்றை பட்டியலிடுக.



11th Std Political Science Tamil_Unit-2.indd 45 6/20/2018 6:03:06 PM

இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் காலனியாதிக்கத்தின் பிடியிலிருந்து விடுபட்டு உருவான புதிய தேசிய அரசுகள் காலனியாதிக்கத்திற்குப் பிந்தைய அரசுகள் என அழைக்கப்படுகின்றன. மேம்பாட்டு அரசுகள் எனவும் காலனியாதிக்கத்திற்குப் பிந்தைய அரசுகள் எனவும் இவை அழைக்கப்படுகின்றன. அரசின் கட்டமைப்பை பொறுத்தவரை காலனியாதிக்கத்திற்குப் பிந்தைய அரசுகளில் காலனியாதிக்க கால அரசுகளின் இயல்புகள் அப்படியே உள்ளன. ஆனால் தற்பொழுது அரசின் கட்டமைப்புகளுடைய குறிக்கோள்கள் காலத்திற்கு ஏற்றாற்போல் மாறிவிட்டதைக் காணலாம். பொதுவாக, காலனியாதிக்கத்திற்குப் பிந்தைய அரசுகளில் அதிக அளவிலான வறுமை, அரசியல் நிலையற்றத்தன்மை, மற்றும் ஆளுகையில் திறனின்மை போன்றவை காணப்படுகிறது. நவீன அரசுக்கும், மரபுசார் அதிகாரத்தை தன்னகத்தே கொண்டுள்ள சமுதாயத்திற்கும் உள்ள முரண்பாடுகளே இதற்கு காரணம் எனலாம்.

உலகின் புதிய பகுதிகளுக்குள் நுழைந்த காலனியாதிக்கச் சக்திகள், அங்கே நிலவிய பாரம்பரிய மரபுகள் மற்றும் பண்பாட்டினை அழித்ததுடன் தங்கள் மரபுகளையும் பண்பாட்டினையும் தொடர்ந்து திணித்தவாறு இருந்தனர். இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட மரபுகள் மற்றும் பண்பாடுகளுடன் மாற்றத்திற்கு உள்ளான மக்கள், தங்கள் நாடு விடுதலை அடைந்தவுடன், காலனியாதிக்க அடையாளங்களை துறந்து தங்களுக்கென சுய அடையாளங்களை ஏற்படுத்தும் உடனடி கட்டாயத்திற்கு தள்ளப்பட்டனர். அதனால் ஏற்பட்ட முரண்பாடுகளைக் களைந்து அவர்கள் தன்னம்பிக்கையுடன் தங்களின் புதிய தேசிய அடையாளத்தினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று. இது காலனியாதிக்கத்திற்குப் பிந்தைய அரசுகளில் ஆள்வோருக்கும், ஆளப்படுவோருக்கும் இடைவெளி ஏற்பட ஒரு முக்கிய காரணமானது. இன்றளவும் காலனியாதிக்கத்திற்குப் பிந்தைய அரசுகளில் ஆள்வோர் அன்னிச்சையாக நடந்து கொள்வதைக் காணலாம்.

## அருஞ்சொற்பொருள்: Glossary

**அரசு (State):** ஓர் நாடு அல்லது எல்லைப்பகுதி ஓர் ஒருங்கிணைக்கப்பட்ட சமூகமாக அமைந்து ஓர் அரசாங்கத்தின் கீழ் அமைவது அரசு ஆகும்.

**அரசாங்கம் (Government):** ஓர் நாட்டை அதிகாரப் பூர்வமாக கட்டுப்படுத்தும் அதிகாரம் பெற்ற ஒரு மக்கள் குழுவை அரசாங்கம் என்கிறோம்.

**சமுதாய ஒப்பந்தக் கோட்பாடு (Social Contract Theory):** மக்களின் ஒழுக்க நெறிகள் மற்றும் அவர்களின் அரசியல் கடப்பாடுகளும் தங்களுக்குள்ளாகவோ அல்லது தங்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலோ செய்து கொள்ளப்படும் ஓர் ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே அமைந்திருக்கிறது எனக்கூறும் ஓர் கோட்பாடு.

**அரசமைப்பு (Constitution):** ஓர் அரசோ அல்லது ஓர் நிறுவனமோ எப்படி நடத்தப்பட வேண்டும் என்பதற்கான அடிப்படை கொள்கைகளும், சட்ட விதிமுறைகளும் உள்ளடக்கிட ஓர் எழுதப்பட்ட ஆவணம்.

**இடர்காப்பு (Security):** ஓர் அரசு எந்த விதமான அச்சுறுத்தலுக்கும் அப்பாற்பட்டு விளங்கும் நிலை.

**சமுதாயம் (Society):** மக்கள் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு பெரிய குழுவாக இணைந்து, பணிகளை எப்படி பங்கிட்டுக் கொள்வது, எந்த முடிவுகளை எப்படி எடுப்பது போன்றவைகளை அவர்களுக்குள்ளேயே தீர்மானித்துக்கொள்ளும் தன்மை படைத்த ஓர் அமைப்பு சமுதாயம் எனப்படும். நாட்டு மக்கள் அனைவரையும் அல்லது அதேபோன்று பிறநாட்டினரையும் சமுதாயம் என குறிப்பிடலாம்.

**தனிமனிதத்துவம் (Individualism):** அரசின் கட்டுப்பாடுகளிலிருந்து அப்பாற்பட்டு ஓர் தனிமனிதனின் சுதந்திரமான செயல்பாடுகளை உறுதி செய்யும் கோட்பாடு.

**ஸ்கேண்டிநேவியா(Scandinavia):** இது வடக்கு ஐரோப்பாவில் உள்ள டென்மார்க், நார்வே, ஸ்வீடன் ஆகிய மூன்று நாடுகளின் ஒருங்கிணைந்த பகுதியைக் குறிப்பதாகும்.

**அதிகாரவர்க்கம்(Bureaucracy):** ஒரு நிறுவனத்தையோ, அமைப்பையோ அல்லது ஒரு நாட்டையோ எழுதப்பட்ட சட்டத்திட்ட விதிமுறைகளின் அடிப்படையில் மிகவும் எச்சரிக்கையோடு நிர்வகிக்கும் அல்லது நடத்தும் அதிக எண்ணிக்கையில் பணியமர்த்தப்பட்ட அதிகாரிகளைக் குறிப்பதாகும்.

**மேற்கத்திய நாடுகள்(Western Countries):** உலகின் மேற்குப் பகுதியில் உள்ள ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவிலுள்ள நாடுகளைக் குறிப்பதாகும்.

## மதிப்பிடுதல் (Evaluation)

9HQ5LL

### I) சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்.

1. 'அரசு' என்ற சொல்லை முதன் முதலில் பயன்படுத்திய அரசியல் அறிஞர் யார்?

   அ) நிக்கோலோ மாக்கியவல்லி    ஆ) பிளாட்டோ

   இ) அரிஸ்டாட்டில்    ஈ) லாக்

2. 'லெவியதான்' என்ற நூலை எழுதியவர் யார்?

   அ) ஹாப்ஸ்    ஆ) லாக்

   இ) ரூசோ    ஈ) மார்கந்தோ

3. கீழ்வருபவைகளில் எது அரசிலுள்ள குடிமக்களின் தகுதியை நிர்ணயிக்கும் முக்கிய காரணியாக கருதப்படுகிறது?

   அ) நிலப்பரப்பு    ஆ) அரசாங்கம்

   இ) இறையாண்மை    ஈ) மக்கள் தொகை

4. கீழ்வருபவைகளில் எது அரசின் அதிகாரத்துவத்தை கட்டுப்படுத்தும் அதிகாரமாக கருதப்படுகிறது?

   அ) அரசமைப்பு    ஆ) மதம்

   இ) நீதிமன்றத்தீர்ப்பு    ஈ) மக்கள்

5. "நிலப்பரப்பின் மீதான இறையாண்மை அல்லது அரசின் இறையாண்மை என்பது அதன் எல்லைக்குட்பட்ட பகுதி அனைத்திற்கும், வெளிநாடுகளின் கட்டுப்பாட்டிலிருந்து முழுமையான சுதந்திரம் அடைவது என்பதே நவீன அரசுகளில் வாழ்வின் அடிப்படைக் கொள்கையாகும்" என்று கூறியவர்

   அ) எலியட்    ஆ) போடின்

   இ) ஆஸ்டின்    ஈ) மாக்கியவல்லி

6. கீழ்க்கண்டவர்களில் "நவீன இறையாண்மை கோட்பாட்டின் தந்தை" என அழைக்கப்படுபவர் யார்?

   அ) ஜீன் போடின்    ஆ) ஹியுகோ குரோஹியஸ்

   இ) ஆஸ்டின்    ஈ) மாக்கிய வல்லி

7. கீழ்வருபவைகளில் எது நவீன அரசின் பணிகளை சார்ந்தது அல்ல?

   அ) இடர்காப்பு மற்றும் பாதுகாப்பு    ஆ) பொருளாதார பணிகள்

   இ) அத்தியாவசிய சேவைகளை வழங்குதல்    ஈ) மதக் கடமைகள்



11th Std Political Science Tamil_Unit-2.indd 47 6/20/2018 6:03:06 PM

8. தமிழக அரசாங்கத்தின் எந்த தலைசிறந்த திட்டம் இந்தியாவின் பிற மாநிலங்களில் பின்பற்றப்படுகிறது?

அ) மதிய உணவு திட்டம் ஆ) மழைநீர் சேகரித்தல்
இ) தாலிக்குத் தங்கம் திட்டம் ஈ) பள்ளி மாணவர்களுக்கான மிதிவண்டி

9. இந்தியாவின் அரசமைப்பில் மக்கள் நல அரசு பற்றிய சிந்தனையை உள்ளடக்கிய பகுதி

அ) பகுதி IV ஆ) பகுதி III
இ) பகுதி I ஈ) பகுதி II

## II) கீழ்வரும் கேள்விகளுக்கு மிக சுருக்கமாக பதில் அளிக்கவும்.

10. அரசியல் அறிவியல் பாடத்தின் நோக்கங்கள் யாவை?
11. நவீன அரசின் சிறப்பியல்புகளை குறிப்பிடுக.
12. ஒப்பந்த கோட்பாட்டுடன் தொடர்புடைய சிந்தனையாளர்களின் பெயர்களை எழுதுக.
13. அரசின் அடிப்படை கூறுகள் யாவை?
14. இறையாண்மையின் பண்புகளைக் குறிப்பிடுக.
15. நவீன மக்களாட்சியில் செயலாட்சித் துறை, சட்டமன்றத் துறை மற்றும் நீதித்துறையின் பணிகள் யாவை?
16. 'காலனியாதிக்க காலத்திற்குப் பிந்தைய அரசுகள்' என்றால் என்ன?
17. 'மென்மை அரசு தோன்றுவதற்கான காரணிகள் யாவை?

## III) கீழ்வரும் கேள்விகளுக்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

18. ஹாப்ஸ், லாக் மற்றும் ரூசோவின் கருத்து சிந்தனைகளை ஒப்பிட்டு வேறுபடுத்திக் காண்க.
19. அரசு உருவாவதற்கு பங்களிக்கும் காரணிகள் யாவை?
20. அரசு மற்றும் சமுதாயம் ஆகியவற்றினை வேறுபடுத்துக.
21. அரசு மற்றும் அரசாங்கத்திற்கு இடையேயான வேறுபாடுகள் யாவை?
22. "நவீனத்துவம்" என்பது பற்றி சிறு குறிப்பு வரைக.
23. நவீன அரசுகளின் பணிகளைக் கூறுக.

## IV) விரிவான விடையளிக்கவும்

24. காலனியாதிக்க காலத்திற்கு முந்தைய மற்றும் பிந்தைய அரசுகள் பற்றி கூறுக.
25. சமுதாயம், சந்தை மற்றும் அரசு ஆகியவைகளிடையே உள்ள தொடர்பினை விவாதி.
26. அரசு பற்றிய முறையான படிப்புக்கு நவீனத்துவத்தின் தாக்கத்தினால் உண்டான விளைவுகளை ஆய்க.
27. 'மக்கள் நல அரசு' என்ற கருத்து பற்றி விவரி.
28. 'மிகை மேம்பாட்டு அரசுகள்' உருவாக்கத்தில் உள்ள அம்சங்களை வெளிப்படுத்துக.



11th Std Political Science Tamil_Unit-2.indd 48 6/20/2018 6:03:06 PM

## இணைய ஆதாரங்கள் (Internet Sources)

**மேலும் கூடுதலான புரிதலுக்கு பரிந்துரைக்கப்படும் காணொளிகள் (ஆதாரம்: You Tube 'கிரியேட்டிவ் காமன்ஸ்' கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது)**

1. The origins of the welfare state - Milton Friedman https://www.youtube.com/watch?v=4QZ71-h_pWs
2. State, Nation, Political System https://www.youtube.com/watch?v=P_vIjr1mxas

**மேலும் புரிதலுக்காக பரிந்துரைக்கப்படும் இணையதளங்கள் (Web site recommended for further understanding)**

1. https://plato.stanford.edu for all the terms in this chapter

## மேற்கோள் நூல்கள் (Reference books)


1. Introduction to Political Science, R. G Gettel, Ginn and Company, New York
2. Political Theory: An Introduction, Rajesh Bhargava & Ashok Acharya, Pearson, New Delhi
3. Political Science: An Introduction, Michael G. Roskin et al, Pearson, New Delhi

அலகு
3

# அரசியல் அறிவியலின் அடிப்படைக் கருத்தாக்கங்கள் பகுதி–I



9MZ1N9

## 3.1 இறையாண்மை

### அறிமுகம்

### 3.1.1. இறையாண்மையை பற்றி நாம் விவாதிப்போம்

நீங்கள் அதிகாரம் படைத்தவரா? நீங்கள் அதிகாரம் படைத்தவர் என்பது எவ்வாறு தெரியும்? ஆனால் நீங்கள் உங்களுடைய நாடு அதிகாரம் வாய்ந்தது என்று கூறலாம். இது எப்படி என்று தெரியுமா? எவ்வாறு என்றால் நம் நாடு ஒரு இறையாண்மை மிக்க தேசமாக விளங்குகிறது.

ஒரு நாடு தன்னிச்சையாக, தன் மக்களை கட்டுப்படுத்தி பாதுகாக்கும்போது இறையாண்மையைப் பெற்றிருப்பதாக கருதப்படுகிறது. அவ்வாறு செயல்படும்போது, அந்நாட்டினை அதிகாரம் வாய்ந்ததாகவும், சுயசார்புள்ளதாகவும் ஏனைய நாடுகள் அங்கீகரிக்கின்றன. இறையாண்மை என்பது **"சூப்பரானஸ்"**(superanus) என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து தோன்றியதாகும். இது ஆங்கிலத்தில் மிக உயர்ந்த அல்லது மேலான என்றும் பொருள்படுகிறது.

ரோமானிய நீதிபதிகளும், மக்களும் இடைக்காலத்தில் இறையாண்மையை **"சம்மா பொடெஸ்டாஸ்"**(Summa Potestas): என்றும் **"ப்ளெனிடியூட் பொடெஸ்டாஸ்"**(Plenitude Potestas) என்றும் வார்த்தைகளை பயன்படுத்தி, அரசின் மேலான தன்மையை பெயரிட்டு அழைத்தனர். அரசியல் அறிவியலில் "இறையாண்மை" என்ற சொல் போடின் என்ற அறிஞர் எழுதி 1576-ல் வெளியான குடியரசு என்ற நூலில் முதன் முதலாகப் பயன்படுத்தப்பட்டது. ஒரு நாட்டின் உறுதித்தன்மை, அந்நாட்டின் இறையாண்மையை அடிப்படையாக கொண்டு




**கற்றலின் நோக்கங்கள்**

- இறையாண்மை என்பதன் பொருள் மற்றும் பண்புகள்
- இறையாண்மையின் வகைகள் மற்றும் அம்சங்கள்
- பன்மைவாதத்தின் பொருள், மற்றும் தோற்றம்

நிர்ணயிக்கப்படுகிறது. இறையாண்மை என்ற கருத்தாக்கம் அரசின் மேலான தன்மையை பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

அரசமைப்பு என்பது அரசு தொடர்பான சட்டங்களையும், விதிகளையும் எடுத்துரைக்கிறது. மேலும் அரசமைப்பு என்பது அரசின் இறையாண்மையை பிரதிநிதித்துவபடுத்துவதாகும். இந்திய அரசமைப்பின் முகவுரையில் கூறப்பட்டதுபோல, இறையாண்மை என்றால், அரசு எந்த துறை சார்ந்த சட்டத்தினை




11th Std Political Science Tamil_Unit-3.indd 50 6/20/2018 6:05:00 PM

உருவாக்கினாலும் அது அரசமைப்பின் வரையறைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

**இறையாண்மை என்றால் என்ன?**

"இறையாண்மை என்பது ஒட்டுமொத்த, மற்றும் தடையில்லாத அரசின் அதிகாரமாகும். மேலும் அதீத கட்டளைத்தன்மை உடையதாகவும் காணப்படுகிறது".

**– ஜீன் போடின் (*Jean Bodin*)**

### 3.1.2 இறையாண்மையின் பண்பியல்புகளை பற்றி நாம் படிப்போம் அவைகள் யாவை?

#### (அ) நிரந்தரமானது (Permanence)

இறையாண்மையின் முக்கிய பண்பாக அதன் நிரந்தரத்தன்மை திகழ்கிறது. அரசு இயங்கும் வரை இறையாண்மை நீடிக்கிறது. மன்னர் இறப்பதாலும், அரசாங்கம் செயல் இழந்து போவதாலும் இறையாண்மை பாதிக்கப்படுவதில்லை. இதன் எதிரொலியாகவே, "மன்னர் இறந்துவிட்டார், ஆனாலும் அரசபீடம் நீண்டு வாழ்க" என்று இங்கிலாந்து குடிமக்கள் கூறுகின்றார்கள்.

#### (ஆ) பிரத்தியோகமானது (Exclusiveness)

ஓர் சுதந்திர அரசில், இரண்டு இறையாண்மைகள் இயங்காது, அப்படி இருக்குமேயானால் அரசின் ஒற்றுமையானது சீர்குலைந்துவிடும்.

#### (இ) அனைத்தையும் முழுமையாக உள்ளடக்கியது (All comprehensiveness)

ஒவ்வொரு தனிமனிதனும் மற்றும் தனிமனிதர்கள் அங்கம் வகிக்கக்கூடிய குழுமமும் அரசின் இறையாண்மைக்கு உட்பட்டதாகும். குழுமங்கள் அல்லது சங்கங்கள் அதிக வலிமை வாய்ந்ததாக இருந்தாலும், பணம் படைத்ததாக இயங்கினாலும் இறையாண்மையின் அதிகாரத்தை தடுக்கவோ அல்லது அதற்கு கீழ்படியாமலோ இருக்க முடியாது.

#### (ஈ) மாற்றித்தர இயலாதது (Inalienability)

இறையாண்மை என்பது அரசின் உயிர் மற்றும் ஆன்மாவாக விளங்குகிறது. இது அரசை அழிக்காமல் இறையாண்மையை மாற்றித்தர முடியாததாக விளங்குகிறது.

#### (உ) ஒற்றுமை மற்றும் எக்காலத்திலும் நீடித்திருக்கும் தன்மை (Unity and Everlasting)

இறையாண்மையின் தனித்தன்மை அதன் ஒற்றுமையில் ஒன்றியுள்ளது. இறையாண்மை என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டும் செயல்படுவதில்லை. மாறாக அது அரசு இயங்கும் வரை நீடித்திருக்கும் அழியாததன்மை கொண்டதாகும்.

#### (ஊ) பிரிக்கமுடியாதது (Indivisibility)

இறையாண்மை என்பது பிரிக்க முடியாத தன்மையைக் கொண்டதாகும். இத்தன்மையே இறையாண்மையின் உயிரோட்டமாக விளங்குகிறது.

#### (எ) முழுமைத்தன்மை (Absoluteness)

இறையாண்மை என்பது நிபந்தனையற்றதாகவும், அளவிட முடியாததுமாக விளங்குகிறது. மேலும் இது கீழ்பணிதலுக்கு அப்பாற்பட்டது. தான் விரும்பிய எதையும் சாதிக்க கூடியதாக விளங்குகிறது.

#### (ஏ) சுயமானத்தன்மை (Originality)

இறையாண்மை தனது அதிகாரத்தினை சுய உரிமையினை மையமாகக் கொண்டு பெற்றிருக்கிறதே தவிர, யாருடைய தயவிலும் அல்ல.

### 3.1.3 இறையாண்மையின் இரண்டு அம்சங்கள் யாவை?

**(அ) உட்புற இறையாண்மை (Internal Sovereignty)**

ஒவ்வொரு சுதந்திர அரசிலும் ஓர் மக்கள் சபையானது கட்டளையிடுவதற்கும், கீழ்பணிதலை செயலாற்றுவதற்குமான முழு சட்ட அதிகாரத்தையும் பெற்று காணப்படுகிறது. இவ்வகையான இறையாண்மை, ஓர் அரசுக்கு உட்பட்டு வாழும் அனைத்து தனிமனிதர்கள் அல்லது அவர்கள் சார்ந்த அனைத்து சங்கங்களையும் கட்டுப்படுத்துவதற்குரிய முழு அதிகாரத்தையும் பெற்றுள்ளது.

**(ஆ) வெளிப்புற இறையாண்மை (External Sovereignty)**

எளிமையாக கூறவேண்டுமெனில் வெளிப்புற இறையாண்மை என்பது தேசிய விடுதலையாகும். அனைத்து நாடுகளும் தங்கள் வெளியுறவு கொள்கையை நிர்ணயிப்பதற்கும், அதிகாரம் படைத்த கூட்டணியோடு இணைவதற்கும் முழு அதிகாரம் பெற்று செயல்படுகின்றன. ஒவ்வொரு அரசும் ஏனைய அரசுகளை சாராமல் சுதந்திரமாக இயங்குவது வெளிப்புற இறையாண்மை எனப்படும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

ஓர் மரமானது தான் முளை விடுவதை மாற்றித்தர முடியாததைப் போன்று இறையாண்மையையும் மாற்றித்தர இயலாது. இது ஓர் மனிதன் தன்னை அழித்துக் கொள்ளாமல் தனது உயிர் அல்லது ஆளுமையை மாற்றித் தர இயலாததைப் போன்றதாகும்.

**–லைபர் (*Lieber*)**

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**

மக்கள் இறையாண்மை எனப்படுவது பெரும்பான்மை வாக்காளர்களின் அதிகாரமாகும். மேலும் இவ்வகை அதிகாரமானது, தோராயமாக, உலகளாவிய வாக்குரிமை செயல்படக்கூடிய நாட்டில் வாக்காளர்கள் பல்வேறு நிறுவப்பட்ட வழிமுறைகளின் வாயிலாக வெளிப்படுத்தும் விருப்பமாகும்.

**– முனைவர் கார்னர் (*Dr. Garner*)**

### 3.1.4 இறையாண்மையின் வகைகள்

**"நடைமுறை மற்றும் சட்டப்படியான இறையாண்மை"**

**நடைமுறை இறையாண்மை (De-facto sovereignty)**

இவ்வகை இறையாண்மை சட்ட பூர்வமாக இல்லாது, உண்மையான அதிகாரத்தை பெற்று சட்டத்தை நிறைவேற்றும் இறையாண்மையாகும்.

**சட்டப்படியான இறையாண்மை (De-jure sovereignty)**

இவ்வகை இறையாண்மை உண்மையாக நடைமுறையில் இல்லாது, சட்டபூர்வமாக மட்டுமே காணப்படுவதாகும்.






11th Std Political Science Tamil_Unit-3.indd 52 6/20/2018 6:05:00 PM

**இறையாண்மையின் வகைகளை படித்திருக்கிறீர்களா? நாம் அனைவரும் தெரிந்துகொள்வோம்.**

| பெயரளவு மற்றும் உண்மையான இறையாண்மை | சட்ட இறையாண்மை | அரசியல் இறையாண்மை | மக்கள் இறையாண்மை |
|---|---|---|---|
| **அ)** ஆதிகாலத்தில் பல அரசுகளில் முடியாட்சியே இருந்தது. மன்னர்கள் உண்மையான இறையாண்மையைப் பெற்று ஆண்டு வந்தனர் | அரசின் அதிகாரத்துவமானது இறுதிக் கட்டளைகளை வெளியிட சட்டப்படியான அதிகாரம் உண்டு. | பிரதிநிதித்துவ மக்களாட்சியில் அரசியல் இறையாண்மை என்பது ஒட்டுமொத்த மக்களையும் குறிப்பதாகும். அதாவது வாக்காளர் முறைமை மற்றும் பொதுக் கருத்தாகும். | மக்கள் இறையாண்மை என்பது பொது மக்களை மேலான தன்மையுடையவர்களாக பாவிக்கின்றது |
| **ஆ)** பிரெஞ்சு புரட்சி (1789) முடியாட்சியை முடிவுக்கு கொண்டு வந்த ஒரு வரலாற்று நிகழ்வாகும். இந்த புரட்சி அச்சூழ்நிலையை மாற்றியமைத்தது. | சட்ட அதிகாரத்துவம் படைத்தவர்கள் மூலம் சட்டத்தை நிறைவேற்றி செயல்படுத்துவதால் இது சட்ட இறையாண்மை ஆகும். | அரசியல் இறையாண்மை என்பது பொது மக்களைக் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரம் பெற்ற வர்க்கத்தை குறிப்பதாகும். | ஆதிகாலங்களில் மக்கள் இறையாண்மையானது, முடியாட்சியின் ஏதேச்சதிகாரத்தை எதிர்க்கும் ஆயுதமாக விளங்கியது. |
| **இ)** மன்னர் பெயரளவிலும், மந்திரிசபை உண்மையான இறையாண்மையையும் பெற்றிருந்தது. | சட்ட இறையாண்மை எப்போதும் உறுதியாகவும், ஆற்றல் படைத்ததாகவும் இருப்பதுடன் இறையாண்மையாளரின் அதிகாரம் முழுமையாகவும் மேலானதாகவும் விளங்குகிறது. | | |

**இங்கே ஒரு சுவாரசியமான தகவல்!**

இயக்குனரகமுறை ஆட்சியமைப்பினை தூக்கி எறிந்த பின்னர், நெப்போலியன் உண்மையான நடைமுறை இறையாண்மையை (De-facto) பெற்று விளங்கினார். ஸ்பெயினில், சட்ட இறையாண்மையை வேரோடு கலைத்து, ப்ராங்கோ நடைமுறை இறையாண்மையை (De-facto) கையகப்படுத்தினார். அப்டோபர் 28, 1922-இல் நடந்த கறுப்புச்சட்டை புரட்சிக்கு பின்னர், முசோலினி சட்டப்பூர்வமான பிரதம அமைச்சராக அதிகாரம் பெற்றார். இவர் நாடாளுமன்றத்தை கைப்பற்றி அதன் மூலம் இத்தாலியை ஆட்சி செய்தார். நாடாளுமன்றம் சட்ட இறையாண்மையையும், முசோலினி நடைமுறை இறையாண்மையையும் (De-facto) பெற்று ஆட்சி அரங்கேறியது. மேலும் **ஹிட்லரும்,** ஜெர்மனியில் இச்செயல்பாட்டையே பின்பற்றினார். இவர் சட்ட இறையாண்மையை கையகப்படுத்தியதுடன் மட்டுமல்லாது, நடைமுறை இறையாண்மையைப் (De-facto) பெற்று ஆட்சி செய்தார்.



11th Std Political Science Tamil_Unit-3.indd 53 6/20/2018 6:05:00 PM

மூன்று தசாப்தங்களாக ஸ்டாலின் ஐக்கிய சோவியத் சமதர்மக் குடியரசின், உண்மையான இறையாண்மையை பெற்று ஆட்சி செய்தார். பாகிஸ்தானில், 'ஐயூப்', ராணுவத்தின் மூலம் ஆட்சியைப் பிடித்து (De-facto) நடைமுறை இறையாண்மையை பெற்றார்.

1977-இல் ஜியா-உல்-ஹக், பூட்டோவின் ஆட்சியைக் கவிழ்த்து நடைமுறை இறையாண்மையை (De-facto) முதலிலும், பின்னர் சட்டப்படியான இறையாண்மையையும் (De-jure) பெற்று ஆட்சி செய்தார். சோவியத் நாட்டில் பொதுவுடைமை அரசாங்கத்தின் மூலம் நடைமுறை அரசாங்கம் (De-facto) போல்ஷிவிக் புரட்சிக்கு பின்னர் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது. 1917-ஆம் ஆண்டு போல்ஷிவிக் புரட்சிக்குப் பிறகு நாளடைவில் மாற்றம் அடைந்து சட்டப்படியான அரசாங்கமாக (De-jure) ஆனது.

### 3.1.5 பன்மைவாதம் என்றால் என்ன?

பன்மைவாதம் என்பது ஒருமைவாத இறையாண்மைக் கோட்பாட்டை எதிர்த்து உருவான வலிமை வாய்ந்த இயக்கமாகும். இவ்வகை இறையாண்மை அரசினுடைய மேலான மற்றும் அளவில்லாத அதிகாரத்திற்கு வகை செய்கின்றது. ஓட்டோ வீ.கீர்க் (Otto V. Gierke) அவர்களின் படைப்புகளின் மூலமாக பன்மைவாத கோட்பாடு பிரபலமடைந்தது. சமூகம் அரசைப்போல பல கூட்டமைப்புகளை பெற்று விளங்குகிறது. அரசு என்பது சமூகத்தின் பல்வேறு கூட்டமைப்புகளில் ஒன்றாகும். அரசு இறையாண்மையை குறிப்பிட்ட சமுதாயத்திற்கென வகை செய்ய முடியாது. இதன் வெளிப்பாடாக, அரசிற்கு இறையாண்மை அதிகாரம் இயல்பாகவே இல்லாமல் காணப்படுகிறது, என்று பன்மைவாதத்தினர் சவால்விடுகின்றனர்.

அரசிற்கு முன்னரே, பல சமூக, அரசியல், பண்பாடு மற்றும் பொருளாதாரம் சார்ந்த அமைப்புகள், சமுதாயத்தில் அங்கம் வகித்து இருக்கின்றன. உதாரணத்திற்கு குடும்பம் மற்றும் தேவாலயங்கள் அரசு தோன்றுவதற்கு முன்பே செயல்பட்டு வந்தன.

#### பன்மைவாதக் கோட்பாட்டின் சிந்தனையாளர்கள்

- ஹெரால்ட் ஜெ. லாஸ்கி (Herold J. Laski)
- ஜெ.என்.பிக்கீஸ் (J.N. Figgis)
- எர்னஸ்ட் பார்க்கர் (Ernest Barker)
- ஜி.டி.ஹெச்.கோல் (G.D.H.Cole)
- மேக் ஐவர் (Mac Iver)



#### பன்மைவாதக் கோட்பாடு

ஒரு அரசின் தன்மை என்பது பல்வேறு குழுக்களிடையே உருவாகும் முரண்பாடுகள் மற்றும் சச்சரவுகள் போன்றவற்றை அவைகளின் நலனை சிறப்பாக பாதுகாப்பதன் அடிப்படையிலேயே தீர்த்து வைப்பதாகும்.

#### பன்மைவாதக் கோட்பாட்டின் தோற்றம்

மக்களாட்சியில் ஆட்சியாளர்களின் அதிகாரம் வரையறைக்கு உட்பட்டது ஆகும். அமைச்சரவை அதிகாரம் வாய்ந்ததாக செயல்பட்டாலும், அரசே மேலானதாகவும், இறையாண்மை மிக்கதாகவும் விளங்குகிறது. மக்கள் நலஅரசுகளின் தோற்றத்திற்கு பிறகு, அரசின் செயல்பாடுகள் தனி மனிதர்களின் வாழ்வில் அனைத்து பரிமாணங்களிலும் வியாபித்து இருக்கிறது.

இவ்வாறான மக்கள் நல அரசானது, மக்களின் தேவைகளை நிறைவேற்றாத போது, புரட்சிகளையும், எதிர்நடவடிக்கைகளையும் சந்தித்து இருக்கிறது. இப்படிப்பட்ட எதிர்வினை என்பது மேலான மற்றும் இறையாண்மை மிக்க அரசுக்கு எதிராகத் தோன்றியதால் புரட்சி ஏற்பட்டு அதன் விளைவாகப் பன்மைவாதம் மலர்ந்தது.

## ஜான் ஆஸ்டினின் இறையாண்மை கோட்பாடு



### கோட்பாட்டின் மறு பெயர்கள்

- முழுமை இறையாண்மை கோட்பாடு
- ஒருமைவாத இறையாண்மை கோட்பாடு
- பன்மைத்துவமில்லாத கோட்பாடு
- ஒற்றைக்கோட்பாடு

### பன்மைவாதம் முக்கியமானதா?

- பன்மைவாதம் என்பது, கூட்டமைப்புகளின் முக்கியத்துவத்தையும், அதன் சுயாட்சி கோரிக்கையையும் தாங்கி நிற்கிறது.
- மக்களாட்சி மலர வேண்டுமெனில், இறையாண்மை மிக்க அரசானது சட்ட அதிகாரத்துவத்திற்கு கட்டுப்படாததாக இருத்தல் அவசியமாகும்.
- இறையாண்மையில் ஏற்படும் பிரிவினைகள் என்பது அதன் அழிவுக்கு வழிவகுப்பது உறுதியாகிறது. இறையாண்மை இல்லாத தருணத்தில் சமுதாயத்தில் அமைப்பெதிர்வாத சூழலே இருக்கும்.

### பன்மைவாதத்தின் மீதான குற்றச்சாட்டுகள் யாவை?

- இறையாண்மை மிக்க அரசு ஒற்றுமையை ஏற்படுத்தி, சமுதாயத்தில் செயல்பட்டுக்கொண்டிருக்கும் அனைத்து கூட்டமைப்புகளையும் ஒன்றுபடுத்தி ஒழுங்குமுறைப்படுத்துகிறது.
- பன்மைவாத நம்பிக்கைக்கு ஒவ்வாததாக அரசே சட்டங்களை இயற்றுகிறது.
- கூட்டமைப்புகளின் எண்ணிக்கை மிகுதியாக அதிகரிக்கும் பட்சத்தில், மக்களை பாதுகாப்பதற்கு அரசின் தேவை இன்றியமையாததாகிறது.

### இந்திய அரசமைப்பு மற்றும் இறையாண்மை

இந்திய அரசமைப்பின் முகவுரையின் படி இந்தியா ஒரு "இறையாண்மை, சமதர்மம், மதச்சார்பின்மை, மக்களாட்சிக் குடியரசாக" திகழ்கிறது. ஆனால் இதுவே இறையாண்மையின் விளக்கம் அல்லது விரிவான பொருள் விளக்கம் ஆகாது. இறையாண்மை தொடர்பான விளக்கங்கள், பல்வேறு உச்ச நீதிமன்ற தீர்ப்புகளில் காணப்படுகிறது. உதாரணத்திற்கு கோபாலன் Vs மதராஸ் அரசு(1950), மற்றும் இந்திய யூனியன் Vs மதனகோபால் (1954), வழக்குகளில் தீர்ப்பானது பின்வருமாறு கூறப்பட்டு உள்ளது.

"அரசமைப்பு சட்டத்தின் முகவுரையில், குறிப்பிட்டுள்ளபடி "இந்திய மக்களாகிய நாங்கள் ஏற்றுக்கொண்ட இறுதியான இறையாண்மை மக்களிடமே உள்ளதுடன் அரசமைப்பும் மக்களுக்கானதாகும்" என கூறியது. மேலும் சின்தெடிக்ஸ் Vs உத்திரப்பிரதேச அரசு (1990) வழக்கில், உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி இறையாண்மையின் பொருள் என்பது, "அரசிற்கு எந்த பட்டியலில் வேண்டுமென்றாலும் சட்டம் இயற்றக்கூடிய அதிகாரம் இருப்பதாகவும், ஆனால் அரசமைப்பின் வரையரைக்கு உட்பட்டே இது அமையும்" என கூறியுள்ளது.

இதுபோல, இந்திராகாந்தி Vs ராஜ்நாராயணன்(1975) வழக்கில், "இந்தியா என்பது, இறையாண்மை பொருந்திய, மக்களாட்சிக் குடியரசு என்றும், இதுவே அடிப்படைக் கூறாக அரசமைப்பின்படி காணப்படுகிறது" என்றும் கூறியுள்ளது. மேற்கூறியவற்றின் மூலம், இந்திய அரசமைப்பின்படி இறையாண்மை என்பது அரசமைப்பின் முக்கிய அம்சமாக விளங்குவதுடன் முகப்புரையின் மூலமாக மக்களே இறையாண்மை மிக்கவர்கள் என்பது தெரியவருகிறது.

சுருங்கக்கூறின், இறையாண்மை என்பது அரசமைப்பைச் சார்ந்துள்ளது. மக்களே அத்தகைய அரசமைப்பின் இறுதி ஆதாரமாக விளங்குகின்றனர்.



11th Std Political Science Tamil_Unit-3.indd 55 6/20/2018 6:05:01 PM

## செயல்பாடு

பன்மைவாதத்தின் மேம்பாட்டிற்கான காரணங்களை உங்களால் கூற முடியுமா?

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**

*பன்மைவாதத்தின் அருமைகளை ஜெர்மன் நீதிபதியான வான் கிரிய்க்கின் (Von Gierke) 1844-1921-காலத்திற்குட்பட்ட படைப்புகளில் காணலாம்.*

**– ஆர்.என். கில்கிறிஸ்ட் (R.N. Gilchrist)**

### பயிற்சி

| வகைகள் | இதன் பொருள் விளக்கம் என்ன? | இது எங்கு காணப்படுகிறது? | இது எங்கிருந்து பெறப்பட்டது? |
|---|---|---|---|
| பெயரளவு இறையாண்மை | | | |
| உண்மையான இறையாண்மை | | | |
| மக்கள் இறையாண்மை | | | |
| நடைமுறை இறையாண்மை | | | |
| சட்டப்படியான இறையாண்மை | | | |
| அரசியல் இறையாண்மை | | | |
| | | | |
| | | | |



11th Std Political Science Tamil_Unit-3.indd 56 6/20/2018 6:05:01 PM

## 3.2 சமத்துவம்

### அறிமுகம்

#### சமத்துவத்தினை புரிந்து கொள்ளுதல்

மனிதர்கள் அனைவரும் சமம் என்ற கருத்து இன்று வரை புரியாத புதிராகவே விளங்குகிறது. சமத்துவத்தை விரும்புகின்ற நாடானது சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு சட்டங்களை உருவாக்குகிறது. வளர்ந்த நாடனாலும், வளர்ச்சிகுன்றிய நாடானாலும், சமத்துவம் தொடர்பான சட்டம் போதுமானதாக இல்லை. பன்மைத்துவ சமுதாயம் நிலைநாட்டப்பட்டுவிட்டதால் சமத்துவ சட்டம் அதிகமாக எதிர்க்கப்படுகிறது. அரசியல் கோட்பாட்டில் அமைந்துள்ள சுதந்திரம் மற்றும் உரிமைகள் என்ற கொள்கைகள் சமத்துவம் என்ற மூன்றாவது கொள்கை அமைவதற்கு காரணமாக உள்ளன. உரிமைகள் என்பவை குடிமக்களுக்கும், மக்கள் குழுமங்களுக்கும் அரசால் விநியோகம் செய்யப்படுவதை சமத்துவ கொள்கையே நிர்ணயிக்கிறது.

ஒரு நாட்டின் மக்களுக்கு உரிமைகள் சரிசமமாக வழங்கப்பட்டாலும், அல்லது ஏற்றத்தாழ்வுகள் இருந்தாலும், அதனை நிர்ணயிக்கும் காரணியாக சமத்துவமே செயல்படுகிறது. எந்த அடிப்படையில் அரசு அல்லது பொது அதிகாரத்துவம் குடிமக்களையும், தனிமனிதர்களையும், மக்கள் குழுமங்களையும் வெவ்வேறு விதமாக நடத்துகிறது? சமத்துவத்தைப் பற்றி அலசுகிற போது, வெவ்வேறு கால கட்டங்களில் வேறுபட்ட புரிதல் இருந்திருக்கிறது. சுதந்திரத்துவத்தின் பார்வையில்,பொருளாதார சமத்துவத்தைவிட, சட்ட மற்றும் அரசியல் சமத்துவம் ஆகியவை முக்கியத்துவம் பெறுகின்றன. அதுவே சமதர்ம மற்றும் மார்க்சிய கொள்கை கட்டமைப்பிலான பார்வையில் அணுகுகிறபோது பொருளாதார சுதந்திரம் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது. பெண்ணியவாதிக்கு பாலின சமத்துவமும், சாதி அடிப்படையிலான இந்திய சமுதாயத்தில் சமூக சமத்துவமும் முக்கியத்துவம் பெறுகின்றன.



#### கற்றலின் நோக்கங்கள்

- சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவது என்பது நடைமுறையில் சாத்தியமில்லாத கற்பனைவாத நம்பிக்கையாகத் தெரிந்தாலும் அதனைப் புறக்கணிக்கும்பட்சத்தில், அமைப்பெதிர்வாதமும், குழப்பமும் ஏற்பட்டு மக்கள் நல அரசு என்பது பொருளற்றதாகிவிடும்.
- மாறுபட்ட பின்னணியிலிருந்து படிக்கும் மாணவர்களுக்கு சமத்துவம், சமத்துவமின்மை, சமூகம் பற்றிய கருத்துகளை அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது.
- பெண்கள், சிறுபான்மையினர், தாழ்த்தப்பட்டோர், மாற்று மொழி சார்ந்த குழுமங்கள், போன்றோரின் சமத்துவத்திற்கான போராட்டங்களின் தேவையினை கண்டறிதல்.
- தேசத்தின் குடிமகனாக நீதியை நிலை நாட்டி சமத்துவத்தை உருவாக்க தனிமனிதர்களின் பங்கேற்பினை மேம்படுத்தவும், தேசிய இலக்காக இதை நிர்ணயிப்பது அவசியமாகும்.

### 3.2.1 சமத்துவம் என்பதன் பொருள்

சமத்துவம் என்பது **"இக்குவாலிஸ்"** (aequalis) என்ற வார்த்தையிலிருந்து உருவானதாகும். இது "நியாயமான" என்று பொருள்படுகிறது. ஒரே மாதிரியான உரிமைகள், சலுகைகள், நிலைகள், வாய்ப்புகள் மற்றும் நடத்தப்படும் முறைகள் போன்றவை, சமூகத்தில் மக்களுக்கு சமமான உரிமையுடன் கிடைத்தல் ஆகியவை சமத்துவத்தை குறிப்பதாகும். மேலும் சமத்துவம் பங்கீட்டு கொள்கையாக பாவிக்கப்பட்டு உரிமைகள், வாய்ப்புகள், நடத்தும் முறைகள் ஆகியவை பயனாளிகளுக்கு நியாயமான முறையில் வழங்கப்படுதலைக் குறிக்கிறது.

மேலும் பங்கீட்டு கொள்கை என்பது, அனைவரையும், அனைத்து சூழ்நிலைகளிலும் ஒரே மாதிரியாக நடத்துவதல்ல, மாறாக சமமாக இல்லாதவர்களை சமமற்ற வகையில் நடத்துதலும் சமத்துவ கொள்கையில் ஒரு அம்சமாகும். ஆகவே சமத்துவம் என்பது சம நீதியை அடிப்படையாக கொண்டதாகவும் விளங்குகிறது. எனவே, சமமானவர்களை சமமற்றவர்களாக நடத்துவதும், சமமற்றவர்களை சமமாக நடத்துவதும் தவறானதாகும். ஆகவே இது பங்கீட்டு கொள்கையைச் சார்ந்த நீதியை உண்மையில் சார்ந்துள்ளது. ஆனால் சமமானவர்களை சமமற்றவர்களாகவோ, சமமில்லாதவர்களை சமமாகவோ நடத்துவதும் கூடாது.

**காட்சிகளை விவாதிக்கவும்**



### 3.2.2. சமத்துவத்தின் முக்கியத்துவம்

**ஏன் சமத்துவம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது?**

பல நூற்றாண்டுகளாக உலக சமுதாயத்தை வழி நடத்திய, அதிமுக்கியமான நன்னெறி மற்றும் அரசியல் நல்லியல்பு கொள்கை சமத்துவமாகும். அனைத்து மதங்களும், பிற நம்பிக்கைகளும், கூறுவது என்னவெனில் மனிதர்கள் அனைவருமே இறைவனால் படைக்கப்பட்டவர்களே என்று கூறுகிறது. இதைப்போலவே சமத்துவ கொள்கையானது, மனிதர்களை, நிறம், பாலினம், இனம், தேசம் போன்றவைகளின் பாகுபாடு காட்டாமல் சமமான மதிப்புடன் நடத்தும் அரசியல் லட்சியமாக சமத்துவம் விளங்குகிறது. மனிதநேயம் எவ்வாறு

பொதுவானதோ, அதே போன்று சகமனிதர்களை மரியாதையுடனும், மனிதாபிமானத்துடனும் நடத்த வேண்டியது அவசியம் என சுதந்திரம் வலியுறுத்துகிறது. இம்மனிதநேய நம்பிக்கையே அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் உருவாக காரணமாக அமைந்தது.

**பங்கீட்டு நீதி (Distributive Justice) என்றால் என்ன?**

பங்கீட்டு நீதிக்கு சமத்துவக் கொள்கை தேவையாகிறது. அதாவது சமத்துவமான சமூகத்தை நிலை நிறுத்துவதற்கு, சமத்துவமற்ற பங்கீடு செய்தல் அவசியம் என்பதை உறுதிப்படுத்துவதுதான் பங்கீட்டு நீதி ஆகும். உதாரணத்திற்கு, வரிவிதிப்பு விகிதமானது பணக்கார வர்க்கத்திற்கும், ஏழை வர்க்கத்திற்கும் வேறுபட்டு இருத்தல் வேண்டும். இதுபோலவே பொது வேலை வாய்ப்புக்களில் நுழைவதற்கான வரன்முறைகளில் இயல்பானவர்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும் மாறுபட்ட கொள்கை அவசியம் என்பதும் பங்கீட்டு நீதியே ஆகும்.

சமூக அமைப்புகளையும், அரசுகளையும் எதிர்த்து போராட சமத்துவ முழக்கம் மிகவும் உதவிகரமாய் இருந்தது. ஏனெனில் நவீனயுகத்தில் பணி, செல்வவளம், நிலை மற்றும் சலுகை அடிப்படையில் தற்பொழுதும் பிரிவினை இருக்கத்தான் செய்கிறது.

18-ஆம் நூற்றாண்டில் நிலப்பிரபுத்துவ ஆட்சியையும், முடியாட்சியையும் எதிர்த்து, "சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்" என்ற முழக்கத்தை பிரெஞ்சு புரட்சியாளர்கள் ஓங்கி முழங்கினர். 20-ஆம் நூற்றாண்டில் ஆசிய மற்றும் ஆப்பிரிக்க கண்டங்களில், சமத்துவ கொள்கையை நிலைநாட்டக் காலனியாதிக்கத்திற்கு எதிராக புரட்சி நிகழ்த்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, மேற்கூறிய சமுதாயங்களில் விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்டவர்களும், பெண்களும் தங்களின் சமத்துவத்திற்காக புரட்சியை மேற்கொண்டனர்.

சமத்துவம் என்பது தற்பொழுது உலகெங்கிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மாபெரும் லட்சியவாதமாக உலக அளவில் சட்டங்களிலும், அரசமைப்பிலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாறான புரட்சிகளும், எழுச்சிகளும் ஆங்காங்கே எழுந்தபோதிலும் சமத்துவமின்மை என்பது உலக சமுதாயத்தில் தற்பொழுதும் உள்ளது என்பதே வெளிப்படையான உண்மை ஆகும். அனைத்து நாடுகளிலும் வீடு மற்றும் வசதிமிக்க வாழ்க்கைக்கு நடுவே சரிவர பாரமரிக்கப்படாத கழிவறைகளும், குடிநீரற்ற நிலையும் கொண்ட பள்ளிகள் உள்ளன. உணவை வீணடிக்கும் சிலரும், பசிக்கொடுமையால் வாடும் சிலரும் இருக்கின்ற நிலை பலவித சங்கடங்களை அளிக்கிறது. சட்டப்படியான உத்திரவாதங்களுக்கும், நடைமுறையில் நாம் பார்ப்பவற்றிற்கும் இடையே நிறைய வேறுபாடுகளைக் காணலாம்.

இந்தியா, தன் அரசமைப்பின் மூலமாக பணக்காரவர்க்கத்திற்கும், ஏழை வர்க்கத்திற்கும் இடையேயான இடைவெளியினை குறைப்பதற்கு இயன்ற வரையில் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.




### 3.2.3. சமத்துவத்தின் பரிமாணங்கள்

**சமத்துவம் என்றால் என்ன?**

மனித வாழ்க்கையானது பல்வேறு வேற்றுமைகளுக்கிடையில் அமைந்துள்ளது. மனிதர்களுக்கிடையே நிறம், இனம் போன்ற வேற்றுமைகள் இருப்பதை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது. மனசாட்சியின் அடிப்படையில் தவறானது என தெரிந்தபோதிலும், சக மனிதர்களிடையே



11th Std Political Science Tamil_Unit-3.indd 59 6/20/2018 6:05:01 PM

மரியாதையும், அங்கீகாரமும் மறுக்கப்படுவது வேதனைக்குரிய நிகழ்வு ஆகும். எந்த ஒரு சமுதாயமும் அனைத்து மக்களையும் சரிசமமாக நடத்துவது இல்லை. மனிதர்களுக்கிடையேயான தேவைகள், திறமைகள் மாறுபடுகின்ற பொழுது அனைத்து மக்களையும் சரிசமமாக பார்ப்பதும், பாவிப்பதும் இயலாததாகக் கருதப்படுகிறது. சமமாக உள்ளவர்கள் சமமில்லாமல் நடத்தப்படுவதும், சமமில்லாதவர்களை சமமாக நடத்துவதும், அநீதிக்கு வழி வகுக்கின்றன. இயற்கை அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகளுக்கு அப்பாற்பட்டு சமூக ரீதியான பிறப்பு, செல்வவளம், அறிவு, மதம் போன்றவைகளில் சமத்துவமின்மை காணப்படுகிறது.

எவ்வித வரலாற்றின் இயக்கமும், சமத்துவத்தை நோக்கி செல்வது இல்லை. ஏனெனில் ஓர் ஏற்றத்தாழ்வு நிலையை சரிசெய்கின்றபோது மற்றொரு ஏற்றத்தாழ்வு நிலை உருவாகுகிற சூழ்நிலை நிலவுகிறது. இதன் விளைவாக அறியப்படுவது என்னவென்றால், அழிக்கப்படுகின்ற ஏற்றத்தாழ்வுநிலை நியாயமற்றதாகவும், புதியதாக உருவாக்கப்படுகின்ற நிலை நியாயமானதாகவும் கருதப்படுகிறது. இதனால் அரசியல், சமூக மற்றும் கல்வி சமத்துவத்தை வலுப்படுத்தவும், ஒருமுகப்படுத்தவும், புதிய தலைமுறை கடமைப்பட்டிருக்கிறது. சுதந்திரத்தைபோன்று, சமத்துவ கொள்கையும் நேர்மறை மற்றும் எதிர்மறை கோணங்களையும் பெற்று விளங்குகிறது. எதிர்மறை சமத்துவம் என்பது யாருக்கும் எந்தவித சலுகைகளும் காட்டாத சமூக நிலையையும், நேர்மறை சமத்துவம் என்பது அனைவருக்கும் சமமான வாய்ப்புகள் உள்ள சமூக நிலையையும் பற்றியதாகும்.




**லாஸ்கியின் (Laski) கூற்றுப்படி சமத்துவத்தின் விளக்கம்**

- இது சலுகைகள் இல்லாத நிலையாகும். இது சமுதாயத்தில் வாழும் ஒருவருடைய விருப்பமானது வேறொருவருடைய விருப்பத்திற்கு சமமாக கருதப்படுகின்ற சூழ்நிலை ஆகும். சமுதாயத்தில் வாழும் அனைவருக்கும் உரிமைகள் சமமானதாக வழங்கப்படும். இதுவே சமத்துவ உரிமை ஆகும்.
- போதுமான வாய்ப்புகள் அனைத்து மக்களுக்கும் வழங்கப்படுதல். ஒவ்வொரு தனிமனிதனும் தன் ஆளுமைத்தன்மையை உணருவதற்கு வாய்ப்பான சூழ்நிலைகளை உருவாக்கித்தருதல்.
- சமூகத்தின் பலன்கள் அனைவருக்கும் சமமான அளவில் கிடைக்கும்படியாகவும், எந்தவொரு அடிப்படையிலும் யாரையும் இதனை அடையவிடாமல் தடுக்கக்கூடாது. ஒரு மனிதனின் பிறப்பினை அடிப்படையாகக் கொண்ட ஏற்றத்தாழ்வுகள், ஆகியவை பாரம்பரியம் மற்றும் மரபுவழி காரணங்களின் அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகள் அர்த்தமற்றவையாகும்.
- பொருளாதார மற்றும் சமூக சுரண்டல் இல்லாத சமுதாயமாக விளங்குதல்.



பெருமளவில் இருக்கக்கூடிய ஏழை வர்க்கமும், சிறியளவில் வாழும் பணக்காரவர்க்கமும் உள்ள அரசில்,அரசாங்கத்தின் செயல்பாடுகள் பணக்கார வர்க்கத்தின் உடைமைகளை பாதுகாக்கும் பொருட்டே அமையும்.

**– ஹெரால்ட் லாஸ்கி (Herold Laski)**



11th Std Political Science Tamil_Unit-3.indd 60 6/20/2018 6:05:03 PM

**பார்க்கரின் கூற்றுப்படி சமத்துவத்தின் கருத்தாக்கம்**

- அனைவருக்கும் அடிப்படை சமத்துவம்
- சமமான வாய்ப்புகள்
- வாழ்வுக்கான சமதளத்தை உருவாக்கும் சமத்துவ நிலைகள்
- விளைப்பயன்களில் சமத்துவத்தினை ஏற்படுத்துதல்

நிகழ் ஆய்வு

**முகிலனுக்கும் ஓர் கனவு உண்டு......**

முகிலன், மதுரை அருகே சிலைமான் என்ற ஊரில் செங்கற்சூளையில வேலை செய்கிறார். அவருடன் நடந்த நேர்காணலின் தொகுப்பு பின்வருபவை.

நிருபர்: தினமும் பகல்பொழுதில் என்ன செய்வீர்கள்?

முகிலன்: காலை 6 மணிக்கு எழுந்து செங்கல்சூளையில் என் பெற்றோருக்கு உதவி செய்வேன். 11 மணியிலிருந்து 1 மணி வரை அரசுசாரா அமைப்பு நடத்துகின்ற புதுமுக வகுப்பில் செலவிடுவேன். மாலை 3 மணியளவில் மதிய உணவு உண்ணுவேன். அதன்பின் வீடு திரும்புவேன். தற்போது அருகாமையில் உள்ள பள்ளியில் பயின்று வருகிறேன். காலை 10 மணியிலிருந்து மாலை 3 மணிவரையளவில் பள்ளியில் படிப்பேன். குடும்ப வருமானம் குறைவாக உள்ளதால் பள்ளிக்கு அனைத்து நாட்களிலும் செல்வது கடினமாக உள்ளது. இதனால் வேர்க்கடலை மற்றும் பயிர் வகைகள் விற்பனை செய்வேன்.

நிருபர்: குடும்பத்தைப் பற்றி சொல்லுங்கள், உங்கள் பெற்றோர்கள் என்ன செய்கிறார்கள்?

முகிலன்: என் தாய் குடும்பத்தை கவனிக்கிறார். தந்தை செங்கல் சூளையில் வேலை செய்கிறார். எனது இரண்டு மூத்த சகோதரர்களுடன் என்னால் இருக்க முடியவில்லை என்பது வருத்தத்தை அளிக்கிறது. ஏனெனில் அவர்கள் கொல்கத்தாவில் வசிக்கின்றனர். அவர்கள் தினக்கூலிகளாக வேலை செய்கின்றனர். எனது சகோதரர் ராஜபாண்டி (19 வயது) மற்றும் முனியசாமி (16 வயது), முறையே நான்காவது, ஆறாவது படிக்கின்றபோதே பள்ளியைவிட்டு நின்றுவிட்டார்கள். எனக்கு முன்பாக அவர்கள் செங்கல்சூளையில் வேலைசெய்தார்கள். எனக்கு இரு சகோதரிகளும் உண்டு. தமிழ்செல்வி (10 வயது) தற்போது அரசாங்க பள்ளியில் மூன்றாவது பயில்கிறாள். மற்றொரு சகோதரி யாழினிக்கு தற்போது 22 வயதாகி திருமணமும் முடிந்துவிட்டது. அவள் ஐந்தாவது வரை பயின்றுள்ளாள்.

நிருபர்: நீங்கள் வளர்ந்தபின் என்னவாக விரும்புகின்றீர்கள்?

முகிலன்: எனக்கு எப்போதும் மருத்துவராவது லட்சியம் அல்லது மருத்துவ நிறுவனங்களில் பணிபுரிய விருப்பம். ஏனெனில் மக்களுக்கு உதவி செய்வது எனது உள்ளார்ந்த விருப்பமாகும்.

நிருபர்: உங்களின் கனவுகள்?

முகிலன்: ஒரு பெரிய வீட்டில் வாழ்வதும், காரில் செல்லவும் கனவுகள் உள்ளது.

**(நன்றி – தி இந்து இளைய உலகம், 1.12.2009– பக்கம்11. பெயர்கள் மாற்றப்பட்டுள்ளது)**



11th Std Political Science Tamil_Unit-3.indd 61 6/20/2018 6:05:04 PM

**செயல்பாடு**

- மாணவர்கள் தங்கள் வகுப்பு தோழர்களுடன் பின்வரும் கேள்விகளை பற்றி விவாதிக்கலாம்
- உங்கள் குடும்பத்தை பற்றி சொல்லுங்கள்? உங்கள் பெற்றோர்கள் என்ன செய்கிறார்கள்?
- நீங்கள் வளர்ந்த பிறகு எதிர்காலத்தில் நீங்கள் என்னவாக விரும்புகிறீர்கள்?
- உங்களுக்குக் கனவுகள் உள்ளனவா?
- முகிலனுடைய வாழ்க்கையிலிருந்து உங்கள் வாழ்க்கை எவ்வாறு வேறுபடுகிறது ? விளக்குக.
- ஆசிரியர்கள், மூன்று அல்லது நான்கு மாணவ இணைகளைத் தேர்வு செய்து, அவர்களின் கருத்துரைகளை வகுப்பறையில் அனைவருக்கும் அறியுமாறு செய்யலாம்.

### வாய்ப்புகளில் சமத்துவம்

சமத்துவம் என்பது அனைத்து மக்களுக்கும் சம உரிமைகளையும், வாய்ப்புகளையும் அளித்து அவர்களின் இலக்குகள் மற்றும் இலட்சியங்களை அடைவதற்குண்டான திறமைகளையும், திறன்களையும் வளர்ப்பது ஆகும். எனினும் மக்களின் நிலைமை, செல்வவளம் அல்லது சலுகைகளில் ஏற்றத்தாழ்வுகள் இருக்கின்றன என்றாலும், நடப்பு சமூகத்தில் மக்களுக்கு கிடைக்க வேண்டிய அடிப்படை தேவைகளான கல்வி, சுகாதாரம், பாதுகாப்பான வீடுகள் போன்றவைகளில் ஏற்றத்தாழ்வுகள் உண்டாகி, அதன் விளைவாக நியாயமற்ற, சமமில்லாத மற்றும் அநீதியான சமூதாயம் உருவாகியுள்ளது என்பதே மிகவும் முக்கியமானதாகும்.

### இயற்கை சமத்துவமின்மை மற்றும் சமூக சமத்துவமின்மை

இயற்கை சமத்துவமின்மை என்பது மக்களுக்கு இடையேயான திறன் மற்றும் திறமைகளுக்கு இடையேயான வேறுபாட்டினால் உருவாகிறது. இது போன்ற சமூக சமத்துவமின்மையானது, மக்களுக்கு வழங்கப்படும் சமமில்லாத வாய்ப்புகள் மற்றும் சில சமுதாயக் குழுக்களினுடைய சுரண்டலின் மூலமாக உண்டாக்கப்படுகிறது. இயற்கை சமத்துவமின்மை என்பது பிறப்பிலிருந்து உருவாகின்ற பல இயல்புகள் மற்றும் திறமைகளின் வெளிப்பாடாகும்.

ஆனால் சமூக சமத்துவமின்மை என்பது சமுதாயத்தினால் சமமற்றமுறையில் நடத்தப்படுவதால் உண்டாக்கப்படுகின்ற நிலையைக் குறிக்கின்றது. மேலும் இவ்வகை சமத்துவமின்மை என்பது இனம், ஜாதி, மதம், பாலினம்,நிறம் போன்றவற்றின் அடிப்படையில்



சமுதாயத்தில் மக்களை வேற்றுமைப்படுத்தி நடத்துவதால் உருவாகிறது. பல நூற்றாண்டுகளாக பெண்களுக்கான சம உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அதேபோல, அடிமைத்தனம் பற்றிய எதிர்க்கேள்வி கேட்கப்படும்வரை, கறுப்பின மக்கள், அடிமைகளாக நடத்தப்பட்டார்கள். மேலும் பிறப்பிலேயே உடல் ஊனமுற்றோராக பிறந்த சிலர் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் உதவி கொண்டு இயல்பான மக்களுக்கு சமமாக சமூகத்திற்கு தங்களின் பங்களிப்பினைச் செய்கின்றனர். சமீபத்தில் மறைந்த ஸ்டீபன் ஹாக்கிங்ஸின் இயற்பியல் கல்விக்கான பங்களிப்பு, அவருடைய உடல் ஊனத்தையும்



11th Std Political Science Tamil_Unit-3.indd 62 6/20/2018 6:05:04 PM

தாண்டிய குறிப்பிடத்தகுந்த பங்களிப்பாகும். அரசியல் தத்துவஞானிகள் பலர் தங்களின் கோட்பாடுகள், தத்துவங்கள் மற்றும் சித்தாந்தங்கள் மூலமாக சமமான மற்றும் நியாயமான சமூகத்தினை உருவாக்கும் வழிமுறைகள் பற்றி எழுதியுள்ளனர்.




**பின்வரும் கேலிச்சித்திரத்தை உற்றுநோக்கி அதில் காணப்படும் சமத்துவமின்மையின் வகைகளை விவரி.**

*நாம் சமத்துவத்தின் பரிமாணங்களை இப்போது தெரிந்து கொள்வோம்.*

## சமத்துவத்தின் வகைகள் (Types of Equality)

**சமத்துவத்தின் வகைகள்**

- குடிமை சமத்துவம்
- அரசியல் சமத்துவம்
- சமூக சமத்துவம்
- இயற்கை சமத்துவம்
- பொருளாதார சமத்துவம்

**சமத்துவத்தின் பல்வேறு வகைகள் யாவை?**

**குடிமை சமத்துவம்**

- மதம், மற்றும் நம்பிக்கைகள் போன்றவற்றின் அடிப்படையில் பாகுபாடு இல்லாதிருத்தல்.

**அரசியல் சமத்துவம்**

- அதிகாரத்துவத்தை அணுகுவதற்கான வாய்ப்பு
- வாக்குரிமை

**சமூக சமத்துவம்**

- சமமான வாய்ப்புகள்
- சலுகைகள்

**இயற்கை சமத்துவம்**

- இயற்கை உரிமைகள்

**பொருளாதார சமத்துவம்**

- செல்வ வளம்



11th Std Political Science Tamil_Unit-3.indd 63 6/20/2018 6:05:05 PM

நிகழ் ஆய்வு

## பொருளாதார சமத்துவமின்மையும், அரபு நாடுகளில் எழுச்சியும்

அடிப்படைப் பிரச்சினைகளான நோய், பசி, தாகம் போன்றவை தொடர்ந்து, காரணங்களாகவும், விளைவுகளாகவும் விளங்குகின்றன. வறுமைக்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. இவையாவும் ஒன்றொடொன்று தொடர்புடையது. உதாரணத்திற்கு பாதுகாப்பில்லாத சுத்தமற்ற நீர் மோசமான சுகாதாரமற்ற சூழலை உருவாகிறது. இம்மோசமான சூழல், நோயை உண்டாக்கி அதன் விளைவாக பணி செய்ய இயலாமல், வறுமைக்கும், நிரந்தர பசிக்கும் வழி வகுக்கின்றன.

ஒரு நாட்டின் நிலைத்தன்மைக்கு வறுமை என்னும் பிரச்சனை அச்சுறுத்தலாக இருக்கிறது. உதாரணத்திற்கு துனீஷியாவில் நடைபெற்ற 'மல்லிகைப்' புரட்சியில் ஆச்சரியப்படும் விதமாக, அந்நாட்டு மக்கள் ஏதேச்சதிகார ஆட்சியை எதிர்த்தது அரபு உலகத்தையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. 29 நாட்கள் நடந்த புரட்சியில், அந்நாட்டில் 23 வருடங்கள் ஆட்சி செய்த 'பென் அலி' என்பவரின் சர்வாதிகார ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. முஹமத் புவாஸ்ஸி என்ற வேலைவாய்ப்பு கிடைக்காத மனிதரை காவலர்கள் துன்புறுத்தியதால் அவர் டிசம்பர் 17, 2010–ஆம் நாள், சிடி புஸித் என்ற துனீஷிய நகரத்தில் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டது ஒட்டுமொத்த புரட்சிக்கு வித்திட்டது. மக்கள் இதன் விளைவாக "மல்லிகைப் புரட்சியை" தொடங்கினார்கள். (மல்லிகை, துனிஷியாவின் தேசிய மலராகும்). பொருளாதார வாய்ப்பில்லாமை, மற்றும் தொடர்ச்சியான காவலர் துன்புறுத்தலிலும் சிக்கித் தவித்த, அந்நகரத்து மக்கள், "ஒரு கையில் அலைபேசியையும், மற்றொன்றில் பாறையையும்" கொண்டு புரட்சியை மேற்கொண்டனர்.

கோபம், விரக்தி, இணக்கமற்ற சூழ்நிலை மற்றும் மக்களாட்சி கோரிக்கைக்கான ஒன்றிணைந்த இந்த அலையானது அரபு நாடுகள் அத்தனையையுமே உலுக்கியது. அரபு உலகத்தில் எழுந்த இந்த கிளர்ச்சிப் போராட்டம் மக்களாட்சிக்கும், சர்வாதிகாரத்திற்கும் இடையே நடந்த போராட்டம் மட்டுமல்ல. மாறாக இப்புரட்சியானது நியாயமற்ற பொருளாதார முறைமையை எதிர்த்து உண்டான மாபெரும் எதிர்ப்புப் புரட்சியாக அமைந்தது.

*நன்றி – ப்ரெண்ட்லைன், பிப்ரவரி 26, 2011.*

### அ) சமூக சமத்துவம்

சமூக சமத்துவம் என்பது பிறப்பு, சாதி, மதம், இனம், நிறம், பாலினம் மற்றும் சமூக நிலை போன்றவைகளை அடிப்படையாக கொண்டு உரிமைகள், சலுகைகள் மற்றும் வாய்ப்புகளை வழங்குவதல், பாகுபாடில்லாத சமூக அமைப்பு போன்றவை ஆகும். ஒவ்வொருவருக்கும், தங்கள் ஆளுமைகளை மேம்படுத்துவதற்கு சமமான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும். சமூக சமத்துவம் என்பது சில முக்கிய அம்சங்களை உள்ளடக்கியுள்ளது. அவை, சமூக நிலையை அடிப்படையாக கொண்ட பாகுபாட்டினை நீக்குதல், சிலருக்கு மட்டுமே உரித்தான சிறப்புச் சலுகைகளை நீக்குதல் மற்றும் அனைவருக்கும் சமமான கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்தி தருவது ஆகியவை ஆகும்.

வரலாற்றைப் பார்க்கும்போது, உலகம் முழுவதும் சில வகையான சமூக ஏற்றத்தாழ்வுகள் எதிர்க்கப்பட்டு வந்துள்ளதும் சமூக சமத்துவத்திற்கான கோரிக்கைள் எழுந்துள்ளதும் தெரிய வருகிறது.

தென்னாப்பிரிக்கா, மேற்குஆசியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளில் இருந்த அடிமைத்தனம், இந்தியாவின் உள்ள தீண்டாமை, அமெரிக்காவில் கறுப்பினத்தவர்களுக்கு எதிரான இன வேற்றுமை, யூதர்களுக்கு எதிரான ஹிட்லரின் கொள்கை, சமத்துவமின்மை போன்றவற்றை, அரசாங்க கொள்கைகளின் மூலமாக சில நாடுகளில் முடிவுக்கு கொண்டு வர முயற்சிகள் தொடர்கின்றன.

அமெரிக்காவில் மார்ட்டின் லூதர் கிங்கின் குடிமை உரிமைகள் இயக்கம் மற்றும் இந்தியாவில் அம்பேத்கரின் தாழ்த்தப்பட்டோருக்கான சமூக சமத்துவ போராட்டங்கள் போன்றவை உலக வரலாற்றில் சமூக சமத்துவம் சார்ந்த இயக்கங்களுக்கு சிறந்த உதாரணங்களாகின்றன. "அனைத்து மக்களும் சமமாக படைக்கப்-பட்டிருக்கிறார்கள்" என்கிறது அமெரிக்க சுதந்திரப் பிரகடனம்.

அகிம்சை அடிப்படையிலான அமெரிக்க குடிமை உரிமைகள் இயக்கத்தின் ஈடுஇணையற்ற தலைவராக மார்ட்டின் லூதர்கிங் ஜீனியர் கருதப்படுகிறார். 1950 மற்றும் 1960-களில் சமூக நீதிக்காக கறுப்பினத்தவர்கள், அமெரிக்காவில் ஏற்படுத்திய சம உரிமைகளைப் பெறுவதற்கான புரட்சியே குடிமை உரிமைகள் இயக்கமாகும். இந்தியாவில் டாக்டர்.பி.ஆர்.அம்பேத்கர் துவங்கிய கோடிக்கணக்கான தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்கான இயக்கமானது வரலாற்று சிறப்புமிக்கதாக இந்தியாவில் கருதப்படுகிறது. மேலும் இவ்வியக்கம் சமூக சமத்துவத்திற்கான விதையாகும்.

பிரான்சு நாட்டின் "மனிதர்கள் மற்றும் குடிமக்களின் உரிமைப் பிரகடனம்" குறிப்பிடுகையில், "மனிதர்கள் சுதந்திரமாக பிறந்த உடன் எப்பொழுதும் சுதந்திரமான மற்றும் சமமான உரிமைகளை பெற்றிருக்கிறார்கள்" என்று கூறுகிறது. 1948, டிசம்பர் 10-ஆம் நாளன்று வெளியிடப்பட்ட ஐக்கிய நாடுகள் அச்சபையின் மனித உரிமைகள் பிரகடனம் உலகமக்களின் சமூக சமத்துவத்தை உறுதி செய்துள்ளது. ஆனாலும் சர்வதேச பொது மன்னிப்பு சபையின் அறிக்கையின்படி, மேற்கூறப்பட்ட உரிமைகள் அனைத்தும் பல நாடுகளில் மீறப்படுவதாகவும், சமூக ஏற்றத்தாழ்வுகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க உலகம் முழுவதும் முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறியுள்ளது.

## ஆ) குடிமை சமத்துவம்

சிவில் என்கின்ற வார்த்தை சிவில்ஸ் (Civils) அல்லது சிவிஸ் (Civis) என்ற லத்தீன் மொழிச்சொல்லிலிருந்து உருவாக்கப்பட்டு ஆங்கிலத்தில் "குடிமக்கள்" எனப்பெயர் பெறுகிறது. குடிமை சமத்துவம் எனப்படுவது சமமான குடிமையுரிமைகளும், பிற சுதந்திரங்களும் ஒரு குடிமகனுக்குத் தரப்படுவதாகும். குடிமை சமத்துவம் என்பது அனைத்து குடிமக்களுக்கும் ஒரே மாதிரியான குடிமை சுதந்திரங்கள் மற்றும் குடிமை உரிமைகளை உள்ளடக்கியதாகும்.




"எல்லா விலங்குகளும் சமமானவை. ஆனாலும் சில விலங்குகள் மற்ற விலங்குகளைக் காட்டிலும் அதிகம் சமமானவைகள் ஆகும்."

*விலங்குகள் பண்ணை*



**விவாதம்**

'சட்டத்தின் ஆட்சி எவ்வாறு குடிமை சமத்துவத்துடன் தொடர்புடையது?'

### இ) அரசியல் சமத்துவம்

அரசின் நடவடிக்கைகளில் பங்குபெறுவதற்கு எத்தகைய பாகுபாடுமின்றி அனைத்து மக்களுக்கும் அளிக்கப்படும் சமமான உரிமைகள் அரசியல் சமத்துவம் எனப்படுகிறது. வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்பதன் மூலம் இந்தஅரசியல்உரிமைஉறுதிசெய்யப்படுகிறது.

### குடிமக்களின் அரசியல் உரிமைகளை உறுதி செய்யும் பிற காரணிகள்

- வாக்குரிமை
- தேர்தலில் போட்டியிடும் உரிமை
- அரசாங்கப்பதவிகளை வகிப்பதற்கான உரிமை.
- அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எதிராக மனு செய்தல் மற்றும் பொது கொள்கைகள் மீதான விமர்சனம் செய்யும் உரிமைகள்.

அனைத்து குடிமக்களுக்கும் ஒரே மாதிரியான அரசியல் உரிமைகள் அனுபவிப்பதற்கான வாய்ப்புகள் அரசியல் சமத்துவத்தினால் அளிக்கப்படுகின்றன. வயது வந்தோர் வாக்குரிமை என்பது அரசியல் சமத்துவத்தை அடையும் வழியாகக் கருதப்படுகிறது. அரசியல் சமத்துவம் என்பது உண்மையில் மக்களாட்சி பரிசோதனைகளுக்கான தேர்வாகும். அரசியல் அதிகாரத்தை மக்களிடையே பரவ செய்வதற்கு அரசியல் சமத்துவம் மட்டுமே போதாது. மேலும் சமூக, பொருளாதார சமத்துவம் என்பது அரசியல் சமத்துவத்தை அடைய அவசியமாகிறது.

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**

செல்வ வளங்களில் உள்ள வேறுபாடுகளை அகற்றி, ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும், நாட்டின் வளமைகளில் சமமான பங்கை அளிப்பது பொருளாதார சமத்துவமாகும்".

– ப்ரைஸ் பிரபு (Lord Bryce)

### ஈ) பொருளாதார சமத்துவம்

பொருளாதார சமத்துவம் என்பதை அனைத்து மக்களும் தங்களை முழுமையாக மேம்படுத்திக் கொள்வதற்கு நியாயமான வாய்ப்புகள் இருந்தால் மட்டுமே நியாயப்படுத்த இயலும். தகுந்த வேலைவாய்ப்பு, உரிய கூலி, போதுமான ஓய்வு, மற்றும் பொருளியல் மேலாண்மையில் சமபங்கு ஆகிய இவையனைத்தும் பொருளாதார சமத்துவத்தினை அர்த்தமுள்ளதாக்குகின்றன.

பேராசிரியர் லாஸ்கி பொருளாதார சமத்துவத்தை பற்றி கூறும் பொழுது "அரசியல் சமத்துவம் என்பது பொருளாதார சுதந்திரமின்றி, மெய்மையாவதில்லை என்றும் அப்படியில்லாத நிலையில் வழங்கப்படும் அரசியல் அதிகாரம் என்பது பொருளாதார அதிகாரத்தின் கைப்பாவையாகும்" என்று கூறுகிறார்.

இங்கு பொருளாதார சமத்துவம் என்பது சமமான வாய்ப்புகளை அனைத்து மக்களுக்கும் அளிக்கும் போது பொருளாதாரம் மேம்பாடு அடையும் எனப் பொருள்படுகிறது. மேற்கூறிய முறையானது சமதர்மத்தில் சாத்தியமாகுமேயன்றி லட்சியவாதத்தின் அடிப்படையில் முதலாளித்துவத்தில் நடக்காது எனலாம்.

### உ) வாய்ப்பு மற்றும் கல்வியில் சமத்துவம் :

வாய்ப்பு மற்றும் கல்வியில் சமத்துவம் என்பதன் பொருள் அரசு என்பது அனைத்து மக்களுக்கும் சமமான மற்றும் ஒரே மாதிரியான வாய்ப்புகள் அளிக்க வேண்டும் என்பதாகும். அனைத்துக் குடிமக்களுக்கும் தங்களது ஆளுமைகளை மேம்படுத்திக் கொள்வதற்காக சமமான மற்றும் ஒரே மாதிரியான வாய்ப்புகள் அரசினால் அளிக்கப்படவேண்டும். சாதி, மதம், இனம், மொழி, ஏழை, பணக்காரர், பாலினம் போன்றவற்றை அடிப்படையாக கொண்ட பாகுபாடுகள் நீக்கப்பட வேண்டும். இந்திய



11th Std Political Science Tamil_Unit-3.indd 66 6/20/2018 6:05:06 PM

அரசமைப்பு அனைத்து மக்களுக்கும் சமமான வாய்ப்புகள் மற்றும் சமமான கல்வியை அளிக்கிறது.

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**

"பசியோடு வாழும் ஒரு மனிதனுக்கு சுதந்திரம் என்ன நன்மையை அளிக்கமுடியும்? அவனால் அந்த சுதந்திரத்தை சாப்பிடவோ அல்லது குடிக்கவோ முடியாது.

**– தாமஸ் ஹாப்ஸ் (Thomas Hobbes)**

### 3.2.4 சுதந்திரத்திற்கும், சமத்துவத்திற்கும் இடையேயான உறவுகள்

சமத்துவம் இல்லாமல் சுதந்திரத்திற்கு எந்தவொரு விழுமியமும் கிடையாது. இவற்றை பல்வேறு பார்வைகளில் புரிந்து கொண்டு அரசியல் சிந்தனையாளர்களான ஆக்டன் பிரபு, டி டாக்வில், ஹெரால்டு லாஸ்கி (Lord Acton, De Tocqueville and Harold J.Laski) போன்றோர் அறிவார்ந்த விளக்கங்களை அளித்துள்ளனர்.

ஆக்டன் பிரபு, டி டாக்வில் (Lord Acton, De Tocqueville) போன்ற அறிஞர்கள் சுதந்திர கொள்கையின் ஆதரவாளர்கள் ஆவர். 'சுதந்திரம் இருக்குமிடத்தில் சமத்துவம் இருக்காது எனவும் அதே போல சமத்துவம் இருக்கும் இடத்தில் சுதந்திரம் இருக்காது' என்பது மேற்கூறிய சிந்தனையாளர்களின் கருத்து ஆகும். ஆக்டன் பிரபு (Lord Acton) கூறும் பொழுது, "சமத்துவத்தை நோக்கிய உணர்வுப்பூர்வமான பயணமானது சுதந்திரத்திற்கான நம்பிக்கையை வீணாக்குகிறது" என்கிறார். ஹெரால்ட் லாஸ்கி சுதந்திரத்தை பற்றி கூறும்பொழுது, "சுதந்திரமும், சமத்துவமும் ஒன்றுடன் ஒன்று இணைந்து இருப்பது நல்லியல்பு" என கூறுகிறார். மேலும் அவர் கூறும் பொழுது தடையற்ற சுதந்திரம் அளிக்கப்படும்போது, தனிமனிதர்கள் சக மனிதர்களுக்கு தீங்கு இழைக்கிறார்கள். இவ்வகை சுதந்திரம் சமுதாயத்தில் குழப்பத்தை உண்டாக்குகிறது என்கிறார். 19–ஆம் நூற்றாண்டில், தனிமனிதத்துவவாதிகள் "சுதந்திரத்திற்கு" தவறான வரையறையை அளித்துவிட்டார்கள். அவர்கள் பொருளாதார சமத்துவத்திற்கு முக்கியத்துவம் அளிக்காமல் அரசாங்கத்தின் தாராளமயக் கொள்கைக்கு மட்டுமே அழுத்தம் அளித்தார்கள் என்று ஹெரால்ட் லாஸ்கி கூறுகிறார்.

மேலும் ஹெரால்ட் லாஸ்கி, கூறுகையில் "எங்கு பணக்கார வர்க்கம் – ஏழை வர்க்கம், படித்தவர்கள் – படிக்காதவர்கள் என்ற பிரிவினை இருக்கிறதோ, அங்கு கண்டிப்பாக முதலாளி, பணியாளர் என்ற வகுப்புவாத நிலையினை காணமுடியும் என்று தெரிவித்துள்ளார்.

"தனியாருக்கு இடையேயான பரிமாற்றங்கள் அரசாங்க தலையீடுகளான கட்டுப்பாடு, சலுகைகள், வரி, மானியம் போன்றவை இல்லாமல் சுமூகமாகவும், சுதந்திரமாகவும் நடக்கும் பொருளாதார முறைமையே தாராளமயக் கொள்கை (Laisszr Faire) எனப்படும்."

மற்றுமொரு பொருளாதார நிபுணரான ஆடம் ஸ்மித், "முதலாளிகளுக்கும், தொழிலாளர் சங்கத்தலைவர்களுக்கும் இடையே சுதந்திரமான போட்டி நிலவ வேண்டும்" என்ற தனிமனிதத்துவவாதிகளின் கூற்றை ஆதரிக்கிறார். அரசாங்கமானது, பொருளாதாரம் தொடர்பான விவகாரங்களில் தலையிடுவதை தனிமனிதத்துவவாதிகள் விரும்புவதில்லை. அரசாங்கத்தினால் தேவை–வழங்கல் சூத்திரம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. பொருளாதாரம் தொடர்பான பிரச்சினைகள் இந்த சூத்திரத்தின் மூலமாக நீங்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஐரோப்பாவில் இதன் மூலம் ஆபத்தான விளைவுப்பயன்களை சந்திக்க நேரிட்டது.

முதலாளிவர்க்கமானது வாய்ப்புகள் அனைத்தையும் அதிகபட்சமான சுரண்டலுக்குப் பயன்படுத்தினால், ஏழை வர்க்கத்திற்கும், பணக்காரவர்க்கத்திற்குமான

இடைவெளி பெரிதும் அதிகமாகிறது. இதனால் உழைக்கும் வர்க்கம் அதிகம் பாதிக்கப்படுவதால் உண்டான பின்விளைவு, தனிமனிதத்துவத்தினை எதிர்க்கவும் அதனால் சமதர்மம் உதயமாகவும் காரணமாகிறது. இவ்வாறு எழுச்சிபெற்ற சமதர்மமானது தனிமனிதத்துவவாதத்தின் கொள்கைகளை மறுக்க ஆரம்பித்தது. இந்த மாற்றம் "பொருளாதார சமத்துவமில்லாமல் சுதந்திரம் என்பது பொருளற்றது" என்ற நிலை உருவாக காரணமாக அமைந்தது.

**தனிமனிதத்துவம்**

தனிமனிதர்களின் நன்னெறிக்கான அரசியல் மற்றும் சமூக தத்துவம் தனிமனிதவாதம் ஆகும்.

**சமதர்மம்**

பொருள் உற்பத்தியின் வழிமுறை, விநியோகம் மற்றும் பரிமாற்றம் இவை யாவும், ஒட்டு மொத்தமாக சமுதாயத்தில் வாழும் மக்களால் ஒழுங்குபடுத்தப்பட்டும், உரிமைப்படுத்தப்பட்டும் இருக்கப்பட வேண்டும் என்ற அரசியல் மற்றும் பொருளாதார கோட்பாடே சமதர்ம கோட்பாடு ஆகும்.

அரசியல் சுதந்திரம் ஏற்படுவதற்கு பொருளாதார சமத்துவம் மிகவும் அத்தியாவசியமாகிறது. இது சாத்தியம் இல்லாதபோது, அரசாங்கமுறையானது முதலாளித்துவ மக்களாட்சியாக மாறி அதன் விளைவாக தொழிலாளர் வர்க்கம் என்பது வாக்குரிமையை மட்டுமே பெற்று, அதன் மூலம் அவர்களுக்கு எந்தவித பயனுமில்லாமல் போகும் சூழ்நிலை உருவாகும். சுதந்திரமும், சமத்துவமும் சமதர்ம மக்களாட்சியில் மட்டுமே ஒன்றோடு ஒன்றாக இணைந்து பயணம் செய்ய முடியும். சுதந்திரத்திற்கு ஒரே ஒரு தீர்வுதான் உண்டு. அது என்னவெனில் சமத்துவம் மட்டுமே. "இதனால் சுதந்திரமும், சமத்துவமும் ஒன்றுடன் மற்றொன்று நெருக்கம் பாராட்டுகின்றன" என்று கூறுகிறார் **பொல்லார்டு.**

**சமத்துவம் தொடர்பான பிரச்சினைகள்**

- வேறுபட்ட பொருள் விளக்கங்கள் – சமமாக நடத்துதல், சமமான வெளிப்பாடுகள், மற்றும் சமவாய்ப்புகள் என்பன பற்றி தேவைக்கதிகமான வரையறைகள், பொருள் விளக்கங்கள் இந்த பரந்த வரைகூறுகளில் உள்ளன.
- ஒவ்வொரு வகைப்பாடுகளிலும் உள்ள முரண்பாடுகள் – சமமாக பாவித்தல் என்பது சமமான வெளிப்பாடுகளைத் தடுக்கிறது. அதேபோல சமமான வெளிப்பாடுகள் என்பது சமமான பாவித்தலை பாதிக்கின்றது.
- சம வாய்ப்புகள் என்பது கருத்தாக்கத்தின் அடிப்படையின் பின்னடைவு பிரச்சனையை உருவாக்குகிறது. எப்படியெனில் கல்வியும், பயிற்சியும் ஒரு வெளிப்பாடா? அல்லது ஒரு வாய்ப்பா? அதே போல ஆரம்ப நிலை வேலையில் சேர்தல் என்பது ஒரு வெளிப்பாடா? அல்லது ஒரு வாய்ப்பா? என்ற கேள்விகள் இங்கு எழுகிறது.
- சமமாக நடத்துதல் என்பது பல விதமான வாய்ப்பு வேற்றுமைகளை உள்ளடக்கியதாகும். இதன் விளைவாக வாய்ப்பு வேற்றுமைகளை பொருத்தமான வேற்றுமைகள் மற்றும் பொருத்தமில்லாத வேற்றுமைகள் என அடையாளம் காண இயலாது. உதாரணத்திற்கு உடல்பருமனைக் குறிப்பிடலாம்.
- உண்மையில் சமமான வெளிப்பாடுகள் என்பவை எப்போதும் இலக்காக விரும்பப்படுவதில்லை. சமத்துவத்தைவிட, சம நியாயமே சமூக நீதியாக பார்க்கப்படுகிறது. நியாயத்தின் ஒரு கோணமே சமத்துவமாகும்.
- ஆனாலும் சமத்துவமின்மையும் சில சமயங்களில் விரும்பப்படுகிறது, எப்படியெனில் அப்போதுதான் தகுதிக்கான, நியாயமான பரிசு கிடைக்கப்பெறும்.



11th Std Political Science Tamil_Unit-3.indd 68 6/20/2018 6:05:06 PM

### சமத்துவத்தை எவ்வாறு ஊக்குவிக்கலாம்?

சுதந்திர வாதிகளுக்கும், சமதர்மவாதிகளுக்கும் இடையேயான வேறுபட்டை நாம் உணரும்பட்சத்தில், சமத்துவ இலக்கை அடையும் வழிமுறையும் நமக்கு தெளிவடைகிறது. பின்வரும் சமத்துவத்தை ஊக்குவிக்கும் வழிமுறைகளைப் பற்றிய பரந்த விவாதம் நம்மை சில முறைகளுக்கு வழிகாட்டுகிறது. அவற்றினைப் பற்றி தெரிந்து கொள்வோம். அவைகள்,

- முறைசார்ந்த சமத்துவத்தை உருவாக்குதல்
- வேறுபடுத்தி நடத்துதலின் மூலம் சமத்துவத்தை ஏற்படுத்துதல்
- உடன்பாடான நடவடிக்கைகள் மூலம் சமத்துவம்

### ஆண்ட்ரூ ஹேவுட் (Andrew Heywood) கூறும் பல்வேறுவகை சமத்துவ லட்சியங்களைப் பற்றிய பார்வை:

#### சுதந்திரவாதிகள்

சுதந்திரவாதிகள், நம்புவது என்னவெனில் பிறக்கும்போது அனைத்து மக்களும் சமமாவர். இவர்கள் நீதிநெறி அடிப்படையில் சமமாக கருதப்படுகிறார்கள். இது முறையான சமத்துவத்தை உணர்த்துவதாகவும், குறிப்பாக சட்ட மற்றும் அரசியல் சமவாய்ப்புரிமை என்றாலும், சமூக சமத்துவம் என்பது சுதந்திரத்தை தியாகம் செய்து பெறக்கூடியதாகும். மரபுவழி சுதந்திரவாதிகள் கடுமையான தகுதிமுறையும், பொருளாதார ஊக்குவிப்புகளையும் பரிந்துரைக்கின்றார்கள். இதற்கு மாறாக தற்கால சுதந்திரவாதிகள், சமூக சமத்துவம் நிலைப்படும்பட்சத்தில், சமவாய்ப்புகள் நியாயமாக வழங்கப்படலாம் என்றுரைக்கின்றனர்.

#### பழமைவாதிகள்

சமூகம் இயற்கையிலேயே படிநிலை அமைப்புடையது என்றும், சமத்துவம் என்பதை எப்போதுமே அடைய முடியாத ஒரு கற்பனை இலக்காக கருதுகின்றனர். ஆனால் புதிய உரிமையின் அடிப்படையில், வலிமையான தொழில்முனைவோர் நம்பிக்கையின் அடிப்படையில் சமவாய்ப்புகளை வழங்கும், அதே நேரத்தில் பொருளாதார சமத்துவமின்மையின் பொருட்பயன்களையும் வலியுறுத்துகிறது.

#### சமதர்மவாதிகள்

சமதர்மச் சிந்தனையாளர்கள் சமத்துவத்தை அடிப்படையான விழுமியமாகவும், அதிலும் குறிப்பாக சமூக சமத்துவத்தை முக்கியமாக ஒப்புக் கொள்கிறார்கள். சமூக மக்களாட்சி தொடர்பான கருத்தாக்கத்தில் பல பரிமாணங்கள் இருந்தாலும், இவ்வகையான சமத்துவம் நிச்சயமாக சமூக ஒருங்கிணைப்பிலும், சகோதரத்துவத்திலும் கால்தடம் பதிக்கும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. அதோடு மட்டுமல்லாமல், சமூக சமத்துவம் என்பது நீதியை நிலைநாட்டுவதற்கும், சம நீதியிலான பங்கை அளிப்பதற்கும், சுதந்திரத்தினை பெருமளவில் நேர்மறையாக அளிப்பதற்கும் பயன்படுகிறது.

#### அமைப்பெதிர்வாதிகள்

இவ்வகை கொள்கைவாதிகள் அரசியல் சமத்துவத்தை மையப்படுத்தி தங்கள் கருத்தாக்கத்தைவலிமைப்படுத்தியுள்ளார்கள். அரசியல் சமத்துவம் தனிநபர் சுதந்திரத்தை வழங்கும் என்றும், அனைத்து விதமான அரசியல் சமத்துவமின்மையும் எதிர்க்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கிறார்கள். பயன்தரக்கூடிய வளங்களை கூட்டு சொத்துடைமை ஆக்குவதன் மூலம் சமூக சமத்துவத்தை அடையலாம் என்பது அமைப் பெதிர்வாத பொதுவுடைமைவாதிகளின் (Anarcho-Communists) நம்பிக்கையாகும்.

#### பாசிசவாதிகள்

மனித குலமே இன அடிப்படையிலான சமத்துவமின்மையுடன் இருக்கிறது. இவ்வுலகில் இப்பாகுபாடு தலைவர், தொண்டர்,

நாடுகள் மற்றும் பல இனங்களுக்கு இடையேயும் இவ்வுலகத்தில் காணப்படுகிறது. ஒருதேசமோஅல்லது இனமோஎதுவானாலும், அதில் அங்கம் வகிக்கும் நபர்கள் சமமாக பாவிக்கப்படுகிறார்கள். அவர்களின் பிரதான அடையாளமே அவர்களை கண்டறிய பயன்படுகிறது.

### பெண்ணியவாதிகள்

பாலின சமத்துவமே இக்கொள்கைவாதிகளின் குறிக்கோள் ஆகும். ஆண்களுக்கு சமமாக பெண்களும் சம உரிமைகள், சமவாய்ப்புகள் பெறுவதோடு மட்டுமல்லாமல், சமூக, பொருளாதார நிலைகளிலும் சம அதிகாரம் பெறுவதை இவர்கள் ஆதரிக்கிறார்கள். ஆனால் இவ்வாறு சமத்துவத்தை கோருவது என்பது பெண்கள், "ஆண்களின் மூலம் அடையாளம்" காணப்படுவதாக சில முற்போக்கு பெண்ணியவாதிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

### சூழலியல்வாதிகள்

உயிரி மைய சமத்துவமானது, வாழ்வின் அனைத்து வடிவங்களும் வாழவும், மலர்ந்து வளம் பெறவும் சம உரிமை உள்ளது என வலியுறுத்துகிறது. மரபார்ந்த கருத்தானது, சமத்துவத்தை மனித இனத்தை மையமாக (Anthropocentric) மட்டுமே வைத்து இயங்குகிறது என்று கூறுகிறார்கள். இதனால் மனித இனத்தை தவிர்த்து, ஏனைய மற்ற உயிரினங்களும், உருபொருளும் இதில் சேராது.

**ஹேவுட், ஆன்ட்ரு (2004), அரசியல் இலட்சியங்கள் : ஒர் அறிமுகம், நான்காம் பதிப்பு, நியூயார்க் : மேக்மில்லன் (Heywood, Andrew. (2004) political Ideologies: An Introduction, 4th ed. New York: Macmillan.)**

### முறைசார்ந்த சமத்துவத்தை நிறுவும் வழிகள்

உலக அளவில் சமூக, பொருளாதார, அரசியல் ஏற்றத்தாழ்வுகள் அனைத்தும் நடைமுறை பழக்க வழக்கங்களின் மூலமாகவும், சட்ட முறைமை வழியாகவும், குறிப்பிட்ட சில வகையான, வாய்ப்புகள் மற்றும் வெகுமதிகளை சில சமூக பிரிவுகள் அனுபவிக்க முடியாதவாறு தடுத்து நிறுத்துகின்றன. உதாரணத்திற்கு, ஏழைகளுக்கு வாக்குரிமை மறுக்கப்படுகிறது. உலகத்தின் சில பகுதிகளில், பெண்கள் பணிசார்ந்த வளர்ச்சி பாதையில் செல்வதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இந்தியாவில் நடைமுறையில் இயங்கும் சாதி முறைமையின்படி, தாழ்த்தப்பட்ட மக்கள், உடலால் உழைப்பதைத் தவிர பிற பணிகளில் ஊக்கப்படுத்தப்படுவதில்லை. இன்னும் சில நாடுகளில், சில குடும்பங்கள் மட்டுமே முக்கிய பதவிகளை வகிக்கின்றன. இவ்விதம் செயல்படும் சலுகைகள் நிலுவையில் இருக்கும் வரை சமத்துவத்தை அடைவது கடினமாகிறது. இது மாதிரியான சலுகைகளை நிறுத்தாமல் சமத்துவத்தை அடையமுடியாது.

தொன்றுதொட்டு இவ்விதமான முறைமைகள் சட்டத்தின் மூலம் வலிமைப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் விளைவாக சமத்துவத்தை அடைய வேண்டுமென்றால், அரசாங்கத்தின் தலையீடு என்பது சட்டத்தின் மூலமாக அவசியமாகிறது. நமது அரசமைப்பானது, நாட்டின் அடிப்படையான மற்றும் மேலான சட்டம் என்ற அடிப்படையில் இப்பணிகளை செய்ய முற்படுகிறது. இந்திய அரசமைப்பின் படி சாதி, மதம், இனம், பாலினம் அல்லது பிறப்பிடத்தை அடிப்படையாக கொண்ட பாகுபாடுகள் அனைத்தும் தடை செய்யப்பட்டுள்ளது. மேலும் நமது அரசமைப்பு தீண்டாமையையும் ஒழித்துள்ளது. பல்வேறு நவீன அரசுகளும், மக்களாட்சி அரசாங்கங்களும் சமத்துவக் கொள்கையை தத்தமது நாட்டின் அரசமைப்பில் இணைத்துக் கொண்டுள்ளன.

## 3.2.5 இந்திய அரசமைப்பில் சமத்துவம்

### இந்திய அரசமைப்பின் சமத்துவ கருத்தாக்கம்

இந்திய அரசமைப்பின் உறுப்பு – 14–ன் படி 'சட்டத்தின்முன் அனைவரும் சமம்

அல்லது அனைவருக்கும் சட்டத்தின் மூலம் சமமான பாதுகாப்பு' அளிக்கப்படுகிறது. இது முறை சார்ந்த சமத்துவமாகவும், முகவுரையில் கூறப்பட்டுள்ளது போல, "சமமான நிலை மற்றும் வாய்ப்புகளை" குறிக்கிறது. மேலும் இது நாட்டின் சட்டமானது அனைத்து மக்களுக்கும் சமமாக பொருந்தும் என்றும் பிறப்பிடம், சாதி, மதம், மொழி, இனம், பாலினம், நிறம் போன்றவை அடிப்படையில் பாகுபாடு காட்டக்கூடாது என்றும் தெரிவிக்கிறது என்றும், இதைப் போல உறுப்பு – 15, உறுப்பு – 14-ஐ உறுதிப்படுத்தும் நோக்குடன் இவ்வகை பாகுபாடுகளை தடை செய்துள்ளது. 'சட்டத்தின் முன் சமம்' மற்றும் 'சமமான சட்டப் பாதுகாப்பு' ஆகியவை இந்திய அரசமைப்பின் உறுப்பு – 21-ன் மூலம் வலிமைப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி 'எந்தவொரு தனி நபரும், சட்ட நடை முறையன்றி அவரது வாழ்வு அல்லது தனிப்பட்ட சுதந்திரத்தினை இழக்க வைக்க முடியாது' என்றும் விளக்குகிறது. இதன் மூலம் அறிவது யாதெனில், ஒரு தனிநபரை தண்டிக்க வேண்டும் என்றால், அதை சட்டத்தின் நடைமுறை மூலம் மட்டுமே செயல்படுத்த முடியும். இது போல ஒருதலைபட்சமாகவோ, பாகுபாடான முறையிலோ அல்லது சமமற்ற முறையில் பல தனிமனிதர்களை நடத்துதலோ தவறு ஆகிறது'.

**சுதந்திர உரிமை (உறுப்பு 14 –18)**

- சட்டத்தின் முன் சமம் (உறுப்பு -14)
- மத அடிப்படையிலான பாகுபாடுகளுக்கு தடை (உறுப்பு -15)
- பொது வேலைவாய்ப்பில் சம வாய்ப்புரிமை (உறுப்பு -16)
- தீண்டாமை ஒழிப்பு (உறுப்பு -17)
- பட்டங்கள் ஒழிப்பு (உறுப்பு -18)

**வேறுபடுத்தி நடத்துதல் மூலம் எவ்வாறு சமத்துவம் அடையப்படுகிறது?**






11th Std Political Science Tamil_Unit-3.indd 71
6/20/2018 6:05:07 PM

சில நேரங்களில் தனிநபர்களை வேறுபடுத்தி நடத்துதல் மூலம், சம உரிமைகள் உறுதிசெய்யப்படுவது அவசியமாகிறது. இதற்காக சிலவித வேற்றுமைகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுவது என்பது தவிர்க்கமுடியாததாகிறது. இயலாதவர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் இரவு நேரங்களில் பெருநிறுவனங்கள், மென்பொருள் நிறுவனங்களில் பணிபுரிய செல்லும் பெண்களுக்கு சில சிறப்பு சலுகைகள் அளிப்பது அவசியமாகிறது. மேற்கூறியவற்றில் வேறுபடுத்தி நடத்துதல் என்பது சமத்துவத்தை உயர்த்துமேயன்றி சமத்துவக்கொள்கை வரம்பினை மீறாது எனலாம். இது போலவே சமத்துவம் பாதிக்கப்படாமல் இருக்க, அரசாங்கத்தின் மூலம் சில கொள்கைகள் அவசியமாகிறது. உதாரணத்திற்கு இந்தியாவில் இடஒதுக்கீடு கொள்கையும், ஏனைய பிற நாடுகளில் "உடன்பாட்டு நடவடிக்கை"யும் (Affirmative Action) பின்பற்றப்படுகிறது.

### 3.2.6 உடன்பாட்டு நடவடிக்கை (Affimative Action)

#### உடன்பாட்டு நடவடிக்கை பற்றிய பார்வை

சட்டத்தின் மூலமாக முறைசார்ந்த சமத்துவம் நிறுவப்பட முடியாத நிலையில் 'உடன்பாட்டு நடவடிக்கை' தேவையாகிறது. நன்றாக வேரூன்றிய சமூக சமத்துவமின்மையை களைவதற்குண்டான நேர்மறையான நடவடிக்கைகளை அமல்படுத்துவது முக்கியமாகிறது.

இவை சமூக சமத்துவமின்மையின் தீவிரமான வடிவங்களை படிப்படியாகக் குறைத்து நீக்குகிறது. பெரும்பாலுமான உடன்பாட்டு நடவடிக்கையின் கொள்கைகள் தொன்றுதொட்டு காணப்படும் சமத்துவமின்மையின் விளைவுகளை சரி செய்ய திரளான ஏதுவாக வடிவமைக்கப்படுகின்றன. நமது நாட்டில் ஒதுக்கீட்டுக் கொள்கை மற்றும் கல்வியில் இடஒதுக்கீடு, வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை, போன்றவை பின்தங்கிய மக்களின் நலனுக்காக அளிக்கப்படுவது விவாதம் மற்றும் கருத்து வேறுபாடுகளுக்கு உள்ளாகி வருகிறது.

இக்கொள்கையானது சமுதாயத்தில் சில குழுக்கள் சந்திக்கும் சமூக பாரபட்சம், விலக்கல், ஒதுக்கப்படுதல் மற்றும் பாகுபாட்டிற்கு நியாயமான தீர்வாக இந்த உடன்பாட்டு நடவடிக்கை நியாயப்படுத்தப்படுகிறது. அது மட்டுமல்லாமல் நியாயமான மற்றும் சமத்துவ சமுதாயம் உருவாக வேண்டுமெனில், இவ்வகையான சிறப்பு சலுகைகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியாக இருக்க கூடும். இவ்வகையான உடன்பாட்டு நடவடிக்கைகள் அனைத்தும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு மட்டுமே இயங்கும். இந்த உடன்பாட்டு நடவடிக்கையின் மூலமான சலுகைகள், சமுதாயத்தில் ஏனைய சமூக குழுக்கள் அனுபவித்து வரும் நலனுக்கு சமமாகவும், குறைபாடுகளைக் களையவும் உதவி புரிகின்றன.

**உடன்பாட்டு நடவடிக்கை – வரையறை**

தொன்றுதொட்டு பாதிக்கப்பட்டு வரும் சிறுபான்மை மக்கள் குழுவின் பொது நலுனுக்காக அளிக்கப்படும் சலுகை கொள்கை அல்லது மேம்பாட்டுத் திட்டம், உடன்பாட்டு நடவடிக்கை எனப்படுகிறது. இந்த நடவடிக்கைகளின் மூலம் பாகுபாடுகளை மட்டுமே சந்தித்து வரும் மக்கள் குழுவிற்கு, சமதர்ம சமூகத்தை உருவாக்கும் பொருட்டு கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம், சமூக நலன் போன்றவைகளில் முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

நேர்மறையான பாகுபாட்டின் மூலமாக, அளிக்கப்படும் இடஒதுக்கீடு மற்றும் சலுகைகள் ஏனைய மக்களின் சமநல உரிமையை பாதிக்கிறது என்று எதிர்ப்பாளர்கள் கூக்குரலிடுகிறார்கள். இச்சலுகைகள் மூலம், சமத்துவம் என்ற சமதர்ம கொள்கையே பாதிக்கப்படுவதாகவும்

எதிர்ப்பாளர்கள் கூறுகின்றனர். சமத்துவம் என்பது அனைத்து மக்களையும் சமமாக பாவிப்பதாகிறது. ஆனால் இட ஒதுக்கீடானது சமத்துவ கொள்கையினை கேள்விக்குறியாக்கி தலைகீழ் பாகுபாட்டினை ஏற்படுத்துகிறது. சமத்துவம் என்பது அனைவரையும் சமமாக நடத்துதல் என்பதாக இருப்பினும், அது சாதி மற்றும் இன அடிப்படையிலான பாகுபாட்டினை மனிதர்களிடையே உருவாக்குகிறது. இதனால் சமூகம் பிரிவினையை சந்திக்கும் என்று கூறி இப்பிரிவினையை அறிஞர்கள் குறை கூறுகிறார்கள். விவாதங்கள் பல இருந்த போதிலும், கிராமம் மற்றும் குடிசைகளில் குழந்தைகளின் பள்ளி படிப்பு மற்றும் சுகாதாரம் ஆகியவை, நவீன நகர வசதிமயமான பள்ளிகளில் படிக்கின்ற குழந்தைகளின் பள்ளிப்படிப்பிலிருந்தும் சுகாதாரத்திலிருந்தும் வேறுபடத்தான் செய்கின்றன. தகுந்த விதிவிலக்கான சூழல்கள் இல்லாத பட்சத்தில் இந்த தலைகீழான பாகுபாடுமுறை சட்டப்படி தவறானது என்று சமவேலைவாய்ப்புச் சட்டம் கூறுகிறது.

| உடன்பாட்டு நடவடிக்கை | தலைகீழான பாகுபாடு |
|---|---|
| காலகாலமாக வேற்றுமையின் மூலம் பாதிக்கப்பட்டு வரும் இலக்கு குழுக்களுக்கு, தகுதிக்கு ஏற்றாற்போல் உரிய சலுகைகள் மற்றும் முன்னுரிமைகள் ஆகியவற்றினை அறிவுப்பூர்வமாக வழங்குதல். | இலக்கு குழுக்களுக்கான வேறுபட்ட சலுகைகள் அளிக்கப்படுதல். இதனால் தகுதி வாய்ந்த நபர்களை சலுகைக் குழுவிலிருந்து வெளியேற்றுதல் |

இவ்வாறான ஏழை குழந்தைகளுக்கு உயர்கல்வியை கற்பதற்கும், சிறப்புப் பயிற்சியை மேற்கொள்வதற்குத் தகுதியிருந்தும், பொருளாதார வசதி இல்லாமல் ஏழை மாணவர்கள் தடைகளை சந்திக்கின்றார்கள்

இதன் விளைவாக மற்ற வசதியான பள்ளியில் கல்வி பயிலும் மாணவர்களுடன் இவர்கள் போட்டி போட இயலாமல் போகிறது. இது மாதிரியான சமூக மற்றும் பொருளாதார சமத்துவமின்மை, சமவாய்ப்புகளை பயன்படுத்துவதற்கு தடையாக அமைகின்றன.

தற்போதைய கோட்பாட்டாளர்கள் இதனை ஏற்றுக்கொண்டாலும், சமவாய்ப்பு இலக்கு அல்லாமல், அரசு இயற்றுகின்ற சமத்துவ இலக்கினை அடைவதற்கான கொள்கைகளை எதிர்ப்பவர்களாகின்றனர்.



**சமத்துவம்**

எனக்கான உரிமைகளும், எனக்கு கிடைக்கும் வாய்ப்புகளும் மற்றவர்களுக்கும் கிடைப்பதையும், இவை எவ்வாறு என்னிடமிருந்து பிரிக்கமுடியாத ஒரு உரிமையோ அவ்வாறு மற்றவர்களுக்கும் அது போன்ற உரிமையாகும் என்பதே சமத்துவமாகும்.

**– வால்ட் விட்மேன் (Walt whiltman)**

**மாணவர்களுக்கான பயிற்சி**






11th Std Political Science Tamil_Unit-3.indd 73 6/20/2018 6:05:07 PM

## 3.3 சுதந்திரம்




### சுதந்திரத்தைப் பற்றிய அறிமுகம்

சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டவாறு நீங்கள் சுதந்திரமாக வாழ்வதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. சட்டத்தின் முக்கிய கடமையே, தனிமனிதர்களின் சுதந்திரத்தைப் பாதுகாப்பது ஆகும். ஓர் தனிமனிதனின் பாதுகாப்பு என்பது அவனது சுதந்திரத்தின் நிலையைப் பொறுத்தாகும். சட்டமும், சுதந்திரமும் ஒன்றோடு ஒன்றாக பிணைந்து, அனைவரும் சமமாக நடத்தப்பட வழிவகை செய்கின்றன. அரசின் தலையாய கடமையே, குடிமக்களின் சுதந்திரத்தை பாதுகாப்பது என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

ஒவ்வொரு தனிமனிதனையும், அரசு சில நியாயமான காரணங்களுக்காக கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது உங்களுக்கு தெரியுமா? இதனால் குடிமக்களுடைய சலுகைகள் எவ்விதத்திலும் பாதிப்படைவதில்லை. ஒவ்வொரு தனிமனிதனுக்கும், அவர்களுக்குரிய உரிமைகளை அளிப்பதும், பாதுகாப்பதும் அரசினுடைய முக்கிய கடமைகளில் ஒன்றாகும். இவ்வாறான செயல்பாடுகளில், தனிமனிதர்களுக்கிடையேயான சமத்துவத்தையும், அரசு தான் நிறைவேற்ற வேண்டியவற்றில் வைத்துள்ளது.

நாம் அனுபவிக்க விரும்பும் சுதந்திர உலகத்திற்கான பயணத்தை நாம் மேற்கொள்வோமா?

வகுப்பறை சூழலில் மாணவர்களுக்கான சுதந்திரம் வேறுபடுகிறது. மாணவர்களின் பார்வையில், சில ஆசிரியர்கள் கடுமையானவர்களாகவும், ஏனைய சில ஆசிரியர்கள் சுதந்திர மனப்போக்குடனும் நடந்துகொள்கின்றனர். மேற்கூறிய பார்வை, மாணவர்கள் தங்களுடைய சுதந்திரத்தை வகுப்பறையில் எந்த அளவிற்கு அனுபவிக்கிறார்கள் என்பதைப் பொறுத்து

### கற்றலின் நோக்கங்கள்

- சுதந்திரத்தின் பொருள், மற்றும் முக்கியத்துவத்தினை பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களை விளக்குவதன் மூலம் அறிமுகப்படுத்துதல்.
- சுதந்திரத்தின் வகைகளை தெரிந்து கொள்வதின் மூலம் மாணவர்களுக்கு பல வகையான சுதந்திரங்களையும், அதனைப் பற்றி அரசினுடைய கருத்துக்களையும் விளக்குதல்.
- ஓர் சமுதாயத்தில் குடிமகனுக்கு சுதந்திரத்தின் விழுமியங்களைப் புரிய வைப்பது மூலம், அரசு மற்றும் அரசமைப்பு அதிகாரத்துவம் பற்றியும் விளக்கி சுதந்திரம் எனும் கருத்தாக்கத்தின் முக்கியத்துவத்தினை அறிய வைத்தல்.
- சட்டத்தின் மூலமான கட்டுப்பாடு என்பதும் ஒரு வகை சுதந்திரம் என்பதை மாணவர்களுக்கு போதித்தல்.
- மக்களாட்சி மற்றும் சுதந்திரமான நீதித்துறையும், சுதந்திரத்தின் விழுமியங்களை உட்புகுத்துவதற்கான காரணிகள் என்றும், சுதந்திரத்தின் பாதுகாவலர்கள் என்றும் புரிய வைத்தல்.



11th Std Political Science Tamil_Unit-3.indd 74 6/20/2018 6:05:07 PM

அமைகிறது. மாணவர்களை ஓரளவிற்கு கட்டுக்குள் வைக்கவும், கட்டுப்பாடான சுதந்திரத்தை மாணவர்கள் அனுபவிக்கும் வகையிலுமே ஆசிரியர்கள் செயல்படுகிறார்கள். இவ்வித கட்டுப்பாடுகள், மாணவர்களின் மென்மையான நன்நடத்தைக்கும், அவர்களின் திறன்மிக்க கற்றலுக்கும் ஏதுவாக அமைகிறது. சுதந்திரம் என்னும் கருத்தாக்கத்தினைப் புரிந்துகொள்வது, மாணவர்கள் தங்கள் சக மாணவர்களிடம் உள்ள உறவுமுறை மற்றும் ஆசிரியர்களிடம் காட்டப்படும் நடத்தை மற்றும் மனப்போக்கு போன்றவற்றின் மூலமாக வகுப்பறையில் ஆரம்பிக்கிறது. குறிப்பிட்ட சந்தேகத்தை தீர்ப்பதற்கு கேள்வி கேட்பது மாணவர்களின் உரிமையாகும். அதற்கு ஆசிரியர்கள் அனுமதி வழங்குவது சுதந்திரம் ஆகிறது. சுதந்திரம் எனப்படுவது சட்டத்தால் அனுமதிக்கப்படும் செயல்பாடு ஆகிறது. அதற்கான கட்டுப்பாடுகளும் ஒரு வகையில் சுதந்திரமாக கருதப்படுகிறது.

கற்றலுக்கு உகந்த வகுப்பு சூழ்நிலை மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்துகிறது. மேலும் சுதந்திரத்தின் பொருள் மற்றும் முக்கியத்துவம் பற்றி நிறைவாக புரிந்து கொள்ள முடியும்.

சுதந்திரத்தின் தோற்றத்தினைப் பற்றி நாம் அறிவோமா?

மனிதர்களுடைய வளர்ச்சிக்கும், அரசின் மேம்பாட்டிற்கும் சுதந்திரம் அதிமுக்கியமான அடிப்படைக் கூறாகும். முற்காலத்திலும், இடைக்காலத்திலும், இங்கிலாந்து முடியாட்சி மக்களுக்குத் தேவையான சுதந்திரத்தை மறுதலித்தது வரலாற்று பதிவாகும். மக்களின் பொறுமையை சோதித்த முழுமையான முடியாட்சி புரட்சியை சந்திக்க நேரிட்டது. இங்கிலாந்து பேரரசர் ஜான் பணிய நேர்ந்ததுடன் குடிமக்களுக்கு சுதந்திரத்தை அளித்து பதவியை விட்டு விலகியதிற்கு பிறகே இந்த புரட்சி ஓய்ந்தது.

**டியூடர்** மற்றும் **ஸ்டூவர்ட்** பேரரசர்களுக்குப் பின்னால் வந்தவர்களும் முழுமையான முடியாட்சி முறையைத் தொடர்ந்ததால் "உள்நாட்டுப்போர்" வெடித்தது. சுதந்திர வேட்கையினால் உந்தப்பட்டு இப்போராட்டத்தில் அனைத்து குடிமக்களும் பங்கேற்றனர். **சார்லஸ்** மன்னர் சிரச்சேதம் செய்யப்பட்டு, பின்னர் **க்ரோம்வெல்** ஆட்சியில் இருந்தபோதும் கூட மக்களுக்கு தேவையான அடிப்படை சுதந்திரம் கிடைக்கவில்லை என்பது வரலாற்று நிகழ்வு ஆகும்.

பிரெஞ்சு குடியரசுகள் என்பவை 1792–ஆம் ஆண்டு பிரெஞ்சுப் புரட்சிக்கான பிரகடனத்திற்கு பின்னர் தொடர்ச்சியாக உருவான குடியரசுகளைக் குறிப்பதாகும். இவ்வாறு பிரான்சின் வரலாற்றில் ஐந்து குடியரசுகள் இருந்துள்ளன. முதலாவது பிரெஞ்சு குடியரசு (1972 –1804), இரண்டாவது பிரெஞ்சு குடியரசு (1848–1852), மூன்றாவது பிரெஞ்சு குடியரசு (1870–1940), நான்காவது பிரெஞ்சு குடியரசு (1946–1958) என்றும் அதன் பின்னர் ஐந்தாவது பிரெஞ்சு குடியரசு அக்டோபர் 5, 1958–இல் ஏற்படுத்தப்பட்டது. ஐந்தாவது குடியரசானது நலிந்த மற்றும் உட்கட்சி பூசல் சார்ந்த நாடாளுமன்ற அரசாங்கத்திலிருந்து மாற்றியமைக்கப்பட்ட ஒரு வலிமை வாய்ந்த மையநோக்கு மக்களாட்சியாகும்.

இவ்வாறு மக்கள் போராட்டத்தின் விளைவாக, இங்கிலாந்தில் 1688–இல் "மகத்தான புரட்சி", முடியாட்சியை எதிர்த்து அரங்கேறியது. இதில் மக்களுக்கு மகத்தான வெற்றி கிடைத்ததுடன் சில காலம் முழுமையான முடியாட்சி கட்டுப்படுத்தப்பட்டது. இதற்குப் பிறகு வெடித்த "பிரெஞ்சு புரட்சி" 1789–ல் ஏற்பட்டது. இது பல மாற்றங்களை ஏற்படுத்தினாலும், மக்களின் விடுதலை வேட்கைக்கு சரியான அளவில் தீர்வு ஏற்படாதிருந்தது. ஏனெனில் நெப்போலியனுக்கு பின்னர் ஆட்சியில் அமர்ந்தவர்களும் முடியாட்சியைத்

தொடர்ந்தார்கள். மூன்றாம் நெப்போலியனின் வீழ்ச்சிக்கு பிறகு மூன்றாவது பிரெஞ்சு குடியரசு நிறுவப்பட்டது. 1940–இல் இதன் வீழ்ச்சிக்குப் பின்னர் வரிசையாக நான்காம் குடியரசும், 1958–இல் அதன் வீழ்ச்சிக்குப் பின்னர் ஐந்தாம் குடியரசும் நிறுவப்பட்டது. இதற்கிடையே காலனி ஆதிக்கத்திற்கு உட்பட்ட நாடுகள் விடுதலைக்கான நீண்ட நெடிய புரட்சிக்குப் பின்னர் சுதந்திரத்தை பெற்றன. 19–ஆம் நூற்றாண்டில் இத்தாலியும், 20–ம் நூற்றாண்டில் இந்தியாவும் மிகுந்த தியாகங்களுக்கு பின்னரே தேசிய சுதந்திரம் அடைந்தன.



**வரலாற்று சூழல்**

- அறிவொளியின் பகுத்தறிவிற்கான விளைவாகும்
- பிரெஞ்சு புரட்சி (1789) யின் விளைவாகும்
- பிரெஞ்சு புரட்சியாளர்கள் "சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்திற்காக" பாடுபட்டனர்.
- பிரெஞ்சு புரட்சியின் சிந்தனைகள் இங்கிலாந்து எழுத்தாளர்களிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர்கள் மக்களாட்சி மற்றும் தனிமனிதனுக்கான பிரெஞ்சு புரட்சியினால் தாக்கத்திற்கு உள்ளாயினர் எனலாம்.
- தொழில்மயமாதலின் விளைவாகும்
- இயற்கை மற்றும் எளிமைக்கான ஏக்கம்

## சுதந்திரத்தின் பொருள் விளக்கம்

சுதந்திரம் என்பது "லிபர்" என்கிற லத்தீன் வார்த்தையிலிருந்து உருவாகி ஆங்கிலத்தில் "கட்டுப்பாடில்லாதது" என்று பொருள் பெறுகிறது. "லிபர்" என்கிற வார்த்தைக்கு "தடைகள் இல்லாத" எனப் பொருள்படுகிறது.

ஒருவர் எந்த சூழ்நிலையில் இருந்தாலும், தான் நினைத்ததை செய்ய முடியும் என்பது இதன் பொருளாகும். ஆனால் சுதந்திரம் என்பதை தனிமனிதர்களை தடையுடன் கூடிய சுதந்திர உரிமையை அனுபவிக்கும் விதத்தில் எடுத்துக்கொள்ளலாம்.

சட்டம் என்பது சுதந்திரத்தின் நிபந்தனையாக விளங்குகிறது. பேராசிரியர் பார்க்கரின் கூற்றுப்படி "ஒழுங்குமுறை அரசில் சுதந்திரம் சாத்தியமாகிறது. இவ்வகை அரசில் இறையாண்மையினுடைய சட்ட மற்றும் அரசியல் அம்சங்கள் ஒன்றியோ, ஏறக்குறையவோ அல்லது முழுவதுமாகவோ காணப்படுகிறது". லாஸ்கி உரைப்பது போல, "வரலாற்று அனுபவங்கள் மக்கள் வசதியாக வாழ்வதற்கும், தகுந்த முன்னேற்றத்திலான வாழ்விற்கான விதிமுறைகளையும் அளித்துள்ளது. கீழ்பணிதலை கட்டாயப்படுத்தும்போது சுதந்திரத்திற்கு உரிய நியாயமான வரையறையாக அது விளங்குகிறது".

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**

மனிதர்கள் சிறப்பாக செயல்படும் வாய்ப்பிற்குரிய சூழ்நிலையை நிர்வகிப்பதே சுதந்திரம் ஆகும்.

**– ஹெரால்ட் லாஸ்கி (Harold.J.Laski)**

**சுதந்திரம் தொடர்பான அறிஞர்களின் கருத்துக்கள்**

சுதந்திரம்என்பதுதகுதியானமகிழ்ச்சியையும், மற்றும் வேலையையும் அனுபவிப்பதற்கு உண்டான நேர்மறையான சக்தியாகும்

**– கெட்டல் (Gettel)**

சுதந்திரம் என்பது தனிமனிதர்கள், தங்கள் ஆளுமைத்தன்மையில் எந்தவித பாதிப்பும் இல்லாமல் தங்களை வெளிப்படுத்துவதாகும்.

**– ஜி.டி.எச். கோல் (G.D.H.Cole)**



11th Std Political Science Tamil_Unit-3.indd 76 6/20/2018 6:05:07 PM

சுதந்திரம் என்பதன் பொருள் தடைகள் இல்லாத நிலை என்பதல்ல, மாறாக சுதந்திரத்தை மேம்படுத்துவதில் உள்ளது

– மகாத்மாகாந்தி (Mahatma Gandhi)

உரிமைகள் இல்லாமல் சுதந்திரம் கிடையாது, ஏனெனில் உரிமைகள் இல்லாத சூழ்நிலையில் குடிமக்கள் அனைவரும் ஆளுமைத் தன்மையின் தேவைகளுக்கு அவசியமற்ற வெறும் சட்டத்திற்கு உட்பட்ட மக்களாவர்.

– ஹெரால்ட் ஜே.லாஸ்கி (Harold.J.Laski)

**சுதந்திரம் மற்றும் விடுதலை : ஓர் மாறுபட்ட அணுகுமுறை**

- சுதந்திரம் என்பது அடக்குமுறையிலிருந்தும், வெளிகட்டுப்பாடுகளிலிருந்தும் விடுபெறும் விடுதலை நிலை ஆகும்.
- எதிர்மறை சுதந்திரம் என்பது, தடைகளில்லாத, கட்டுப்பாடுகள் களைந்த முழு சுதந்திர நிலையாகும். நேர்மறை சுதந்திரம் என்பது செயல்படக்கூடிய வாய்ப்பு அல்லது செயல்படக்கூடிய உண்மை நிலையாகும்.
- 'எஜீஸ்டெம் ஜெனரிஸ்' எனும் சட்டமொழியில் கூறுவதுயாதெனில் 'சுதந்திரம்' என்ற சொல் உறுப்பு 19-ல் உள்ள பொதுவான வார்த்தையாகும். அது தனது அமைப்பினை அவ்வரசமைப்பு உறுப்பிடமிருந்து பெறுகிறது. ஆனால் உறுப்பு - 21-ல் இத்தகைய குறிப்பிட்ட வார்த்தைகள் எதுவும் பயன்படுத்தப்படவில்லை. அதில் 'சுதந்திரம்' என்ற சொல்லுக்கு முன்பாக 'தனிப்பட்ட' என்னும் குறிப்பிட்ட வார்த்தை மட்டுமே பயன்படுத்தப்பட்டது. ஆகவே 'தனிப்பட்ட சுதந்திரம்' என்பதால் பாதுகாக்கப்படும் எதுவுமே உறுப்பு - 21-க்கு தொடர்புடையதாகும்.

## சுதந்திரத்தின் இரண்டு கட்டங்கள் (Two Phases of liberty)

### நேர்மறை சுதந்திரம் (Positive Liberty)

நேர்மறை சுதந்திரம் என்பது சிலவற்றை செய்வதற்கான சுதந்திரம் ஆகும். இது தனிமனிதன் தன்னுடைய உரிமைகள் மூலம் ஆளுமை தன்மையை மேம்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கின்றது.

### எதிர்மறை சுதந்திரம் (Negative Liberty)

ஜே.எஸ்.மில்லின் கூற்றுப்படி சுதந்திரம் என்பது எதிர்மறையானதாகும். மனிதனின் மீதும், அவனது செயல்பாட்டின் மீதும் எவ்வகை கட்டுப்பாடுகளும் விதிக்கப்படக் கூடாது என்கிறார். மேலும் மனிதனின் பாதையில் எவ்வகை தடைகளும் இருக்கக் கூடாது என வலுயுறுத்துகிறார்.




### அ) இயற்கை சுதந்திரம் (Natural Liberty)

ஒருவர் நினைப்பதைத் தங்கு தடையில்லாமல் நடத்தி முடிப்பதற்கான சுதந்திரமே இயற்கை சுதந்திரம் என்ற கருத்தாக்கம் ஆகும். முற்றிலுமாக தடைகளில்லாத, கட்டுப்பாடுகளற்ற மற்றும் ஒருவர் நினைக்கக்கூடியதை செய்யக்கூடிய சுதந்திரமே இயற்கை சுதந்திரமாகும்.

அனைவருக்குமே சுதந்திரத்தைப் பற்றிய தெளிவற்ற பார்வைகள் உண்டு. அது அவரவர்களின் விருப்பத்தைப் பொறுத்து அமைகிறது. பத்து நபர்கள் சுதந்திரத்தைப் பற்றி கருத்துரைக்கிறார்கள் எனும்போது ஒரு வேளை எந்த இருவேறு நபர்களும் அவர்களின் சுதந்திரத்தைப் பற்றிய வரையறையில் ஒன்றுவது இல்லை. மேலும் சுதந்திரத்தின் கருப்பொருளையும் அவர்கள் விரும்பிய வகையில் தெளிவாக் கூறுவதில்லை. இந்தப் பொதுப்படையான அறிவியல் சார்பில்லாத சொற்பிரயோகத்தினையே இயற்கை சுதந்திரம் என்கிறோம்.

**– பேராசிரியர் ஆர்.என்.கில்ரீஸ்ட். (Professor R.N.Gilchist)**

### சுதந்திரம் பற்றிய விவாதங்கள்

**ஜான்லாக் (JohnLocke):** இயற்கை நிலையில் மனிதர்கள் வாழ்வுரிமை, சுதந்திர உரிமை மற்றும் சொத்துரிமை ஆகியவற்றினை அனுபவித்தார்கள்.

**எதிர்வாதம்:** இது முழுமையாக தவறாகும், இதற்கு காரணம் அரசு என்பது மட்டுமே மேற்கூறிய உரிமைகள் அனுபவிப்பதற்கு உத்திரவாதமளிக்கிறது. இயற்கை நிலையில் உரிமைகள் அல்லாமல் மிருகங்களுக்கு உண்டான வலிமையை மட்டுமே மனித இனம் பெற்றிருந்தது.

**ரூசோ (Rousseau):** மனிதன் சுதந்திரமாக பிறக்கிறான். ஆனால் எங்கெங்கு காணினும் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருக்கிறான்.

**எதிர்வாதம்:** ரூசோவுடைய கருத்தின்படி, மனிதனின் ஆளுமைத்தன்மை வளர்ச்சி அடைய வாய்ப்பில்லை. சமூக ஒப்பந்த கோட்பாட்டியலாளர்களின் கூற்றுப்படி சுதந்திரம் ஓர் உரிமமாக மட்டுமே வழங்கப்படுகிறது. மனிதர்களை தாங்கள் விரும்பும் செயல்களை செய்வதற்கு அனுமதித்தால், அங்கு குழப்பமே மிஞ்சுகிறது.




### ஆ) குடிமைச் சுதந்திரம் (Civil Liberty):

சட்டத்தின் ஆட்சியை பிரதிபலிப்பதே குடிமை சுதந்திரத்தின் கருத்தாக்கமாகும். இது குடிமக்கள் சமுதாயத்தில் அனுபவிக்கும் சுதந்திரம் அரசில் உள்ளது என்பதைக் குறிப்பதாகும். சட்டத்தின் வரன்முறைகளுக்கு உட்பட்டு அச்சுதந்திரம் அனுபவிக்கப்படுகிறது. குடிமை சுதந்திரத்தை, பாதுகாப்பதற்கு உண்டான உத்திரவாதத்தை அரசின் சட்டங்கள் வழங்குகின்றன.

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**

மனிதர்களுக்கிடையேயான வரையறுக்கப்பட்ட சட்டங்களும், உறுதியான நிறைவேற்றுதல் மற்றும் சட்டத்தின் முன் சமத்துவமும் மனிதனின் குடிமை சுதந்திரத்தை அடுத்த கட்ட வளர்ச்சிக்கு கொண்டு செல்கிறது.

**– கெட்டல் (Gettel)**

### இ) அரசியல் சுதந்திரம் (Political Liberty)

அரசியல் சுதந்திரத்தின் கருத்தாக்கம் என்பது குடிமக்கள் அரசியல் வாழ்வில் பங்கேற்பதுடன், அரசின் நடவடிக்கைகளில் கலந்து கொள்வதும் ஆகும். லீலாக் என்னும் அறிஞர் அரசியல் சுதந்திரத்தை 'அரசமைப்பு சுதந்திரம்' என்று கூறுகிறார். கில்கிரீஸ்ட் என்னும் அறிஞர் அரசியல் சுதந்திரத்தை மக்களாட்சியோடு ஒத்த பொருளுடையது என்று கருதுகிறார். அரசியல் சுதந்திரம் என்பது குறைந்தபட்ச உரிமைகளை உள்ளடக்கியதாகும். வாக்குரிமை, தேர்தலில் போட்டியிடும் உரிமை, பொதுக்கருத்து உரிமை, அரசாங்கத்தின் குறைபாடுகளை



11th Std Political Science Tamil_Unit-3.indd 78 6/20/2018 6:05:08 PM

எடுத்துரைக்கும் உரிமை, மனுசெய்யும் உரிமை போன்றவை இவ்வகை உரிமைகளாகும்.

### ஈ) தனிப்பட்ட சுதந்திரம் (Personal Liberty)

எந்தவொரு அடக்குமுறையோ அல்லது சட்டவிரோதமான கட்டுப்பாடுகளோ இல்லாமல் தனிமனிதர்கள் தாங்கள் நினைக்கும் காரியங்களை செயல்படுத்தும் நிலையினை இச்சுதந்திரம் எடுத்துரைக்கின்றது. மேலும் எந்த ஒரு தனிநபரின் தனிப்பட்ட வாழ்க்கையிலும், அடுத்தவர்கள் குறுக்கிட அனுமதிக்காத உரிமையும் இவ்வகையைச் சேர்ந்தது ஆகும். அனைத்து தனிநபர்களுக்குமே உடுத்துதல், உண்ணுதல், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், திருமணம் மற்றும் குழந்தைகளின் கல்வி போன்றவைகளில் தனிப்பட்ட உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. அரசு, தனிநபர் விவகாரத்தில் தலையிடுவது ஆகாது. தனிமனித சுதந்திரம் என்பது மனித சமுதாயம் சுதரந்திரமாக மேம்படுவதற்கு ஒத்துழைப்பு நல்குகிறது.




### உ) பொருளாதார சுதந்திரம்

ஒருவரின் அன்றாட வாழ்வாதாரத்திற்கான உணவை தேடி கொள்ளும் தனிநபர் சுதந்திரம் என்பது பொருளாதார சுதந்திரம் ஆகும். நியாயமான வழிமுறைகளின் மூலமாக ஒருவரின் அன்றான வாழ்வாதாரத்தைப் பூர்த்தி செய்து கொள்ள சாதி, நிறம், இனம், மற்றும் பாலினம் போன்றவைகளுக்கு அப்பாற்பட்டு சுதந்திரமாக வருவாய் ஈட்டுவதே பொருளாதார சுதந்திரம் ஆகும்.

பொருளாதார சுதந்திரம் என்றால், தனிமனிதருக்கு உண்டான, தேவைப்படுகிற அன்றாட வருவாய் மற்றும் உணவை தேடிக்கொள்ள ஏற்படுத்தப்படும் பாதுகாப்பு மற்றும் வாய்ப்புமாக நான் கருதுகிறேன். வேலையில்லா திண்டாட்டத்திலிருந்தும், போதாமை மற்றும் இல்லாமையிலிருந்து உருவாகும் பயத்திலிருந்தும் நான் விடுதலை அடைய வேணடும். ஏனெனில் இவ்வகையான பயம் ஆளுமைத்தன்மையின் வலிமையை குறைக்கச் செய்கிறது. நாளைய தேவையிலிருந்து விடுபட நான் பாதுகாப்புடன் வாழ விரும்புகிறேன்.

**– ஹெரால்டு J. லாஸ்கி (*Harold.J.Laski*)**



சுதந்திரத்தற்கான சரியான வரையறை இதுகாறும் இவ்வுலகத்தில் எழுதப்படவில்லை. மேலும் அமெரிக்க குடிமக்களுக்கு தற்சமயம்தான் அந்த வரையறை தேவைப்படுகிறது. நாம் அனைவரும் சுதந்திரத்தை அறிவித்திருக்கிறோம், ஆனால் நாம் உபயோகப்படுத்தும் அந்த வார்த்தைக்கு அர்த்தம் அதுவல்ல. ஒரு செம்மறியாட்டின் கழுத்தை பிடித்திருக்கும் ஓநாயை, மேய்ப்பவன் துரத்தியடிக்கிறான். அதற்காக அந்த செம்மறியாடு அவனுக்கு நன்றியை தெரிவிக்கிறது. ஆனால் அந்த ஓநாயோ, அவனை சுதந்திரத்தை ஒழிப்பவன் என குறை கூறுகிறது. ஏனெனில் குறிப்பாக அந்த ஓநாய்க்கும், கறுப்பு செம்மறியாட்டிற்கும் சுதந்திரம் தொடர்பான ஒத்த கருத்துகள் அமைவதில்லை. இதைப் போலவே தான் மனித இனத்திற்கு இடையேயும் தற்பொழுது சுதந்திரத்தைப் பற்றிய வேறுபாடுகள் உள்ளன.

**– ஆப்ரகாம் லிங்கன் (*Abharam Lincoln*)**



11th Std Political Science Tamil_Unit-3.indd 79 6/20/2018 6:05:09 PM

செயல்பாடு

## காலவரிசை செயல்பாடு

# கேட்டலோனியா புரட்சியின் வரலாறு

15–ஆம் நூற்றாண்டில் ஆரம்பித்த கேட்டலோனியாவின் சுதந்திரப் போராட்டம், வாக்கெடுப்பின் மூலமாக ஸ்பெயின் நாட்டில் அரசமைப்பு சட்ட நெருக்கடியை உண்டாக்கியது.

காஸ்டைல் உடனான போரில் கேட்டலோனியா, பிரான்ஸ் நாட்டுடன் கூட்டணி வைத்தல்

1640

1479

காஸ்டைல் மற்றும் அரகான் பிராந்தியங்கள் ஒன்றிணைந்து கேட்டலோனியா ஆனது.

தன்னாட்சி முடிவுக்கு வந்தது அதிகாரம் ஸ்பெயினிடம் மீளுதல்

1714

ஸ்பெயினும், பிரான்சும் அமைதியை ஏற்படுத்தின. கேட்டலோனியா மீண்டும் ஸ்பெயினுடன் இணைந்தாலும் தனது தன்னாட்சியை தக்க வைத்துக் கொண்டது.

1659

கேட்டலோனியா தன்னாட்சியை திரும்ப பெறுகிறது. காஸ்டிலன் மற்றும் கேட்டலோன் ஆகியவை அலுவல் மொழிகளாயின.

1932

1901

முதல் கேட்டலோனியா தேசிய கட்சி உருவாதல்

உள்நாட்டுப்போர் முடிவுக்கு வந்தது. பிராங்கோ படைப் பெருந்தலைவர் கேட்டலோன் அரசாங்கத்தை தடை செய்தார்.

1939

1934

கேட்டலோன் தனிநாடு பிரகடனம் குறைந்த காலத்திற்கு மட்டுமே நீடித்தது.

கேட்டலோனியா அரசாங்கத்தின் தன்னாட்சி அதிகரித்தது.

2006

1979

கேட்டலோனியா மீண்டும் தன்னாட்சியை பெற்றது

வரிக்கட்டுப்பாட்டை குறைக்க மேட்ரிட் ஒத்துக்கொள்ள மறுத்தது.

2012

2010

அரசமைப்பு நீதிமன்றத்தால் கேட்டலோன் தன்னாட்சி குறைக்கப்பட்டது..

சுதந்திரமான பொது வாக்கெடுப்பினை கேட்டலோனியா பெரும்பான்மை வாக்கின் மூலமாக நிறைவேற்றியது. இருப்பினும் ஸ்பெயினின் அரசாங்கம் கேட்டலோனியா அரசாங்கத்தினை பதவி நீக்கியதுடன் விரைவில் தேர்தலுக்கு வழி செய்தது.

2017

2014

சுதந்திர வாக்கெடுப்பு அரசியல் சட்டத்திற்கு புறம்பானது என அறிவிப்பு

Source: AFP

**வகுப்பில் கேட்டலோனியா புரட்சியின் காலவரிசையை பற்றி விவாதித்தல்**




- கேட்டலோனியா எங்கு உள்ளது?
- பிரிவினை இயக்கத்தின் வரலாற்றை விவரி.
- அரசியல்ஆட்டக்காரர்கள் யாவர்?
- பிரிவினை வாதம் எவ்வாறு ஸ்பெயினின் பொருளாதாரத்தை பாதித்தது?

### சுதந்திரம் பரவுதல்

சுதந்திரம் என்பது அரசின் முக்கிய நிலைமையாக கருதப்படுகிறது. இது மனிதர்களின் ஆளுமைத்தன்மையை மேம்படுத்துவதற்கு ஒரு வாய்ப்பாகவும் அமைகின்றது.

### ஏ) நிதி சுதந்திரம்

பிரதிநிதித்துவம் இன்றி வரிவிதிப்பு கூடாது என்பது இச்சுதந்திரத்தின் கொள்கையாகும். தங்களுடைய வரிப்பணம் எவ்வாறு செலவிடப்பட வேண்டும். யாருக்குபோய் சேர வேண்டும் என்பதில் தெளிவு வேண்டும் என்பது நடுத்தர வர்க்கத்தின் கோரிக்கையாகும்.

குடிமை மற்றும் நிதி சுதந்திரம் ஆகிய இவ்விரண்டுமே உரிமையாளர்களின் உடைமையையும், உரிமையையும் சார்ந்ததாகும். குடிமை மற்றும் நிதி சுதந்திரம் இல்லாமல் தங்களால் வாழவே இயலாது என்பது நடுத்தரமக்களின் கூற்று ஆகும். மேற்குறிப்பிட்ட சுதந்திரங்கள் முறையே இல்லாதுபோயின், தன்னிச்சையான ஆட்சியால் தாங்கள் சுரண்டப்படுவதுடன் உயிர் வாழ்வதும் இயலாத காரியம் என்பது நடுத்தர மக்களின் எண்ண வெளிப்பாடாக விளங்குகிறது.

### ஐ) குடும்பம் சார்ந்த சுதந்தரம்

பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் சமமான உரிமையை வழங்குவது இவ்வகை சுதந்திரமாகும். கொடுமையாக நடத்துதல், இம்சித்தல், மற்றும் சுரண்டல் போன்ற அநாகரீகமான செயல்களுக்கு எதிராக அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் கல்வியுரிமை வழங்க வேண்டும் என்பதே குடும்ப சுதந்திரத்தின் சிறப்பு அம்சங்களாகும்.

### ஒ) தேசிய சுதந்திரம்



அடிப்படை சுதந்திரத்தை சிறிய அளவிலான தற்காலிக பாதுகாப்பிற்காக யாரேனும் துறந்தால் அவர்கள் சுதந்திரமோ அல்லது பாதுகாப்போ கிடைப்பதற்கு தகுதியற்றவர்களாவர்.

**– பெஞ்சமின் பிராங்ளின் (Benjamin Franklin)**

ஒரு நாடு அல்லது தேசத்தில் நிலவக்கூடிய சுதந்திர சூழ்நிலையை தேசிய சுதந்திரம் என்கிறோம். ஒரு தேசமோ அல்லது சமூகமோ சுதந்திரம் மற்றும் இறையாண்மையுடன் கூடிய நிலையை அடையும் போது தேசிய சுதந்திரம் இருக்கிறது எனலாம். இதையே தேச சுதந்திரம் அல்லது தேச இறையாண்மை என்றும் குறிப்பிடலாம். அனைத்து தேசங்களும் சுதந்திரமாக இருப்பதையே விரும்புகின்றன. சுதந்திரம் இல்லாத சூழ்நிலையில், அத்தேசம் வளர்ச்சிப் பாதையில் செல்ல இயலாது.

ஏகாதிபத்தியத்தின் கட்டுக்குள் இருந்த அத்தனை நாடுகளுக்கும் விடுதலை என்பது

இறுதி முழக்கமானது. இவ்வாறாக, ஏகாதிபத்ய சக்திகளால் பாதிக்கப்பட்ட தேசங்கள் அத்தனையுமே அயல்நாட்டு ஆட்சியையும், ஆக்கிரமிப்பையும் எதிர்த்து சுதந்திரம் பெறும்வரை போராட்டத்தில் ஈடுபட்டன. ஆஸ்திரியாவுக்கு எதிரான இத்தாலியின் போராட்டம், ஹிட்லர் மற்றும் நெப்போலியனுக்கு எதிரான இங்கிலாந்தின் போராட்டம், ஆப்பிரிக்க நாடுகளின் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டம், இங்கிலாந்திற்கு எதிரான இந்தியாவின் போராட்டம் போன்ற உதாரணங்கள் தேசத்தின் சுதந்திர வேட்கை பற்றிய வரலாற்று நிகழ்வுகளாகும். இந்தியாவின் மீது சீனா 1962-ல் தாக்குதல் தொடுத்த போதும், பாகிஸ்தான் முறையே 1965, 1971-ல் தாக்குதல் நடத்திய போதும் இந்திய அரசாங்கம் தேச சுதந்திரத்தை பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

சுதந்திரம் என்பது மனிதர்களை நோக்கி வருவது அல்ல, மாறாக மனிதர்களே சுதந்திரத்தை நோக்கி எழுச்சி கொண்டு செல்ல வேண்டும். மகிழ்வுடன் வாழ்வதற்காக சிரமப்பட்டு பெறப்படுகின்ற சுதந்திரம் ஓர் ஆசீர்வாதமாகும்.

**– புது தில்லி, மத்திய செயலகத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.**

### ஓ) பன்னாட்டு சுதந்திரம்

உலக நாடுகளின் கூட்டாட்சியையும், மற்றும் பன்னாட்டு கூட்டுறவையும் ஏற்படுத்தக் கூடிய பன்னாட்டு அமைதியே இவ்வகை சுதந்திரத்தின் கருத்தாக்கமாகும். தேசிய கொள்கையில் வலிமையை ஓர் காரணியாக பயன்படுத்துவதை தாராளவாதிகள் எதிர்க்கின்றார்கள். முதலாளித்துவமானது அமைதி மற்றும் பன்னாட்டு கூட்டுறவின் மூலமாக உலக வளங்கள் மேலும் மேன்மையடையவும், ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்கு பொருட்கள் தங்குதடையின்றி செல்வதற்கும் வேண்டுகிறது. இதற்கு அரசியல் மற்றும் ஏனைய தடைகளை தகர்த்தெறியவும் இக்கொள்கை பாடுபடுகிறது. இதனால் உலக நலன்கள் மேம்பாடு அடைகின்றன.

**குறியீட்டு பொருள்**

**சுதந்திரதேவி சிலைக்கென்று ஒரு குறிக்கோள் உள்ளது. அது விடுதலையை பற்றிய உலகளாவிய நினைவூட்டலாகவும், அமெரிக்க குடிமக்களுக்கு நம்பிக்கை அளிப்பதாகவும் அமைந்துள்ளது.**



### ஆன்ட்ரூ ஹேவுட்டின் சுதந்திரம் பற்றி லட்சியவாதப் பார்வை

**தாராளவாதிகள்,** சுதந்திரத்தை தலையாய தனிமனிதத்துவ விழுமியமாக கருதி முன்னுரிமை அளிக்கிறார்கள். மரபுவழி தாராளவாதிகள் எதிர்மறை சுதந்திரத்தை ஆதரிக்கின்றார்கள். எதிர்மறை சுதந்திரம் என்பது முழுவதுமாக கட்டுபாடற்ற அல்லது விருப்புரிமை வாய்ப்பற்ற சுதந்திரமாகும். ஆனால் நவீன தாராளவாதிகள் நேர்மறை சுதந்திரம் அல்லது கட்டுப்பாடான சதந்திரத்தை பேணுகின்றார்கள். ஏனெனில் கட்டுப்பாட்டுடன் கூடிய சுதந்திரமே மனிதம் மலர்வதற்கும், தனிமனித மேம்பாட்டிற்கும் உறுதுணையாக அமையும்.

**பழமைவாதிகள்,** சுதந்திரத்தின் வலிமையற்ற பார்வையை ஆதரிக்கின்றார்கள். இவற்றையே கடமைகளையும், பொறுப்புகளையும் விருப்பத்துடன் அங்கீகரிப்பதாக கருதுகிறார்கள். அதே சமயம் எதிர்மறை என்பது சுதந்திரம் சமூகத்தின் கட்டமைப்பிற்கு அச்சுறுத்தலாக இருக்கிறது. ஆனால் அவர்கள், எதிர்மறை சுதந்திரத்தை பொருளாதார துறையிலும், சந்தைகளின் விருப்பங்களுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்ற அடிப்படையிலும் வலியுறுத்துகின்றனர்.



11th Std Political Science Tamil_Unit-3.indd 82 6/20/2018 6:05:09 PM

**சமதர்மவாதிகள்,** சுதந்திரம் பொதுவாக நேர்மறையாக புரிந்து கொள்ளப்படுகிறது, கூட்டுறவு சமூக தொடர்பு அல்லது படைப்பாக்க உழைப்பு மூலமாக சுயதிருப்தி அடைவதை சுதந்திரமாக அணுகுகின்றார்கள். சமூக மக்களாட்சிவாதிகள் நவீன சுதந்திரத்துவத்துடன் ஒத்த கருத்தாக, சுதந்திரத்தை தனிமனித திறமையின் மெய்ப்படுதலாக பாவிக்கின்றார்கள்.

**அமைப்பெதிர்வாதிகள்,** அரசியல் அதிகாரத்துவத்துடன் எவ்விதத்திலும் ஒத்துபோகாத, முழுமையான விழுமியமாக சுதந்திரம் கருதப்படுகிறது. சுதந்திரம் என்பது சுயவிருப்பமும், சுய இயக்கமுமாக தனிமனிதனின் தன்னாட்சி நிலையை ஊக்குவிக்கும் சூழ்நிலையாக பார்க்கப்படுகிறது. வெறுமனே "தனித்துவிடுதல்" என்பது சுதந்திரம் அல்ல, பகுத்தறிவிலான சுய விருப்பம் மற்றும் சுய வழிகாட்டுதலாகும்.

**பாசிசவாதிகள்,** சுதந்திரம் அனைத்து விதத்திலும், ஒவ்வாதது என்பது இவர்களின் வாதம். உண்மையான சுதந்திரம் என்பது தலைமையிடம் எந்த கேள்விக்கும் இடமில்லாமல் சரணாகதி அடைவதும், தேசத்துக்காக தனிமனிதத்தை தியாகம் செய்யவுமாக இருக்கக்கூடிய சமூகமே சுதந்திரமானது என்பது பாசிசவாதிகளின் கருத்தாகும்.

**சூழலியலாளர்கள்,** தனிப்பட்ட சுயநலத்தை உலக சூழலில் கலந்து சுய உணர்தலையும், ஒருமித்த தன்மையும், அடைவதே சுதந்திரம் என்பதாகும். அரசியல் சுதந்திரத்திற்கு முரணாக சில சமயங்களில் உள்ளார்ந்த சுதந்திரம் மற்றும் சுய அறிதலுக்கான சுதந்திரத்தையும் ஆதரிப்பவர்கள் இக்கோட்பாட்டாளர்களாவர்.

**மத அடிப்படைவாதிகள்,** ஆழ்மனதின் உள்ளார்ந்த ஆன்மீக நல்லியல்பை போற்றுவதே சுதந்திரமாக இவர்களால் கருதப்படுகிறது. இறைவனின் விருப்பத்தை வெளிப்படுத்துவதும், மதவாத அதிகாரத்துவத்திற்குத் தலைவணங்கி ஆன்மீக மன திருப்தியை அடைவதுமே சுதந்திரத்தின் பாதையாகிறது.

**ஹேவுட் ஆண்ட்ரு (2004) அரசியல் லட்சியவாதங்கள் ஓர் அறிமுகம், 4-ம்பதிப்பு, நியூயார்க்: மேக்மில்லன்** (*Heywood, Andrew. (2004) Political Ideologies: An Introduction, 4th ed. New York: Macmillan*)

## சுதந்திரம், இறையாண்மை மற்றும் சட்டம் ஆகியவை எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது?

சுதந்திரம் என்பது முழுவதுமான சட்டங்களில்லாத நிலையல்ல. அரசு ஒழுங்குமுறையில் இயங்கினால் மட்டுமே சுதந்திரம் செயல்படுகிறது.

அமைப்பெதிர்வாதம் என்பது ஒழுங்கற்ற தன்மையோ அல்லது குழப்பமான நிலையோ அன்று மாறாக அடக்குமுறையிலான மையப்படுத்தப்பட்ட அதிகாரத்துவத்தின் ஏகபோக ஆற்றல், அதிகாரத்திலிருந்து சுதந்திரம் பெறுவதாகும்.

அரசு சட்டங்களை இயற்றுகிறது. இறையாண்மை மிக்க அரசு செயல்படுவது சட்டங்களால் மட்டுமே ஆகும். சுதந்திரம், இறையாண்மை,மற்றும் சட்டம் ஆகியவற்றிற்கு இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. அமைப்பெதிர்வாதிகள் மற்றும் தொழிற்சங்கவாதிகள் போன்றோர் அரசை அழிக்க விரும்புகிறார்கள். அரசு அதிக அதிகாரம் படைத்ததாக செயல்படும்போது, தனிமனித சுதந்திரம் குறைக்கப்படுகிறது என்பது அவர்களுடைய கருத்தாகும்.

## தனிமனிதத்துவாதிகளின் கருத்துக்கள்

இவர்கள் அரசை தனிமனித சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் கருவியாக சித்தரிக்கின்றனர். இதனால் அரசின் அதிகாரம் குறைக்கப்பட வேண்டும் என உரைக்கப்பட்டு இங்கிலாந்தில் இவ்வகையான கொள்கை பல ஆபத்தான விளைவுகளை உண்டாக்கியது.

தற்போதைய காலக்கட்டத்தில் உலக அளவில் சட்டமே சுதந்திரத்தின் பாதுகாவலனாக விளங்குவதை அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். சட்டம் இல்லாவிட்டால் சுதந்திரம் இருக்காது.

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**

சட்டங்கள் இல்லையென்றால் அங்கே சுதந்திரம் இல்லை

**– ஜான்லாக் (John Locke)**

### லட்சியவாதிகளின் கருத்து

சட்டம் இல்லாவிட்டால் சுதந்திரமான சூழ்நிலை இருக்காது. லட்சியவாதிகளின் கூற்றுப்படி சட்டத்திற்கு கீழ்பணிதல் என்பது உண்மையான விருப்பத்திற்கு கீழ்பணிதல் ஆகும்.

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**

பூமியில் இறைவனின் ஆட்சியே அரசு எனப்படுகிறது. மேலும் சமூக நீதிநெறியின் உறுப்பாகவும், நன்னெறி மேலான வெளிப்பாடாகவும் அரசு விளங்குகிறது.

**– ஹெகல் (Hegel)**

### சட்டம் எவ்வாறு சுதந்திரத்தை பாதுகாக்கிறது?

- சமூகத்தில் குடிமை வாழ்வை எவ்வித பிரச்சினையும் இன்றி நடத்துவதற்குண்டான இணக்கமான சூழ்நிலையை ஏற்படுத்துகிறது. சட்டம் குற்றவாளிகளை தண்டித்து தனிமனிதர்களின் உரிமைகளை பாதுகாக்கின்றது.
- தனிமனித உரிமைகள் மற்றும் கடமைகளுக்கு சட்டம் உத்திரவாதம் அளிப்பதுடன் அவற்றை பாதுகாக்கவும் செய்கிறது. சக மனிதர்களுக்கு, ஒருவர் தீங்கு விளைவிக்கும்போதும், அவர்களின் வழியில் குறுக்கீட்டு சீர்குலைக்கும்போதும் அரசு அவர்களை தண்டிக்கிறது.
- சுதந்திரத்தின் பாதுகாவலனாக அரசமைப்பு விளங்குகிறது. அரசின் அதிகாரத்துவத்தை கட்டுப்படுத்துவதுடன் மக்களின் அடிப்படை உரிமைகளையும் பாதுகாக்கின்றது.

### சுதந்திரம் எவ்வாறு பாதுகாக்கப்படுகிறது?




### அ) மக்களாட்சி

வேறு எந்த அரசாங்க முறையையும் விட சுதந்திரம் என்பது மக்களாட்சியில் பாதுகாப்பாக இருக்கிறது எனலாம். மக்களின் அரசாங்கமாக மக்களாட்சி செயல்படுகிறது. ஏனைய ஆட்சிகளான முடியாட்சி மற்றும் சர்வாதிகார ஆட்சி ஆகியவை அதிகார குவிப்பை ஒருவரிடமோ அல்லது குழுமத்திடமோ ஒப்படைக்கின்றன. மக்களாட்சியில் எதிர்க்கட்சிகள் தகுந்த மரியாதையுடன் நடத்தப்படுகின்றன. அரசாங்கத்தை பற்றிய குறைகூறல் என்பது மக்களாட்சியில் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்பட்டு சகித்துக் கொள்ளப்படுகின்றன.

### ஆ) அரசமைப்பு

ஒரு நாட்டின் அரசமைப்பில் இருந்து தான் அரசின் அதிகாரத்துவம்/ ஆணையுரிமை பெறப்படுகிறது.

நாம் அரசமைப்பின் முகவுரையை தெளிவாகவும், கவனமாகவும் படித்து புரிந்து கொள்வோம். மக்களாட்சியைப் பற்றிய கவிதையாக இந்திய அரசமைப்பின் முகவுரை விளங்குகிறது. இது ஒட்டுமொத்த இந்திய அரசமைப்பினுடைய அடிப்படை தத்துவத்தை தன்னுள் கொண்டதாகும். அரசாங்கத்தால் உருவாக்கப்படுகின்ற சட்டமும், அதனால் நிறைவேற்றப்படுகின்ற மக்கள் நல நடவடிக்கைகளும், மக்கள் நலனிற்கு உகந்ததா, இல்லையா என்பதை ஆராய்ந்து மதிப்பிடும் தன்மை படைத்தது அரசமைப்பு முகவுரையாகும். இந்திய அரசமைப்பின் ஆன்மாவாக முகவுரை கருதப்படுகிறது.



11th Std Political Science Tamil_Unit-3.indd 84 6/20/2018 6:05:10 PM

### இறையாண்மை

உள்நாட்டு விவகாரங்களிலும், வெளி விவகாரங்களிலும் முடிவெடுக்கக்கூடிய மேலான உரிமை மக்களிடம் மட்டுமே இருக்கிறது. எந்த வெளிப்புற அதிகார அமைப்பும் இந்திய அரசாங்கத்திற்கு ஆணையிடும் அதிகாரம் கிடையாது.

### சமதர்மம்

மக்களுக்கு தேவைப்படும் வளங்களை மக்களே உருவாக்கவும், அவற்றை சமமாக பகிரவும் சமுதாயத்தில் உள்ள உரிமையாகும். அரசாங்கமானது நிலம் மற்றும் தொழில் சார்ந்த உரிமையை ஒழுங்குமுறைப்படுத்தி சமூக-பொருளாதார சமத்துவமின்மையை குறைக்கிறது.

### மதசார்பின்மை

எந்த மதத்தை வேண்டுமென்றாலும் பின்பற்றக்கூடிய முழுமையான சுதந்திரம் குடிமக்களுக்கு உண்டு. ஆனால் அலுவல் மதம் என்று ஒன்று இல்லை. அரசாங்கம் அனைத்து மதங்களின் நம்பிக்கைகளையும், சம்பிரதாயங்களையும் சமமான மரியாதையுடன் பாவிக்கும் தன்மை படைத்தது.

### மக்களாட்சி

இவ்வகை அரசாங்கத்தில் மக்கள் சமமான அரசியல் உரிமைகளை அனுபவிக்கவும், தங்களின் ஆட்சியாளர்களை தேர்ந்தெடுக்கவும், பொறுப்புடன் அவர்களை செயல்பட வைக்கவும் ஏதுவான முறை மக்களாட்சி ஆகும். அரசாங்கம் சில அடிப்படை விதிமுறைகளின் அடிப்படையில் செயல்படுகிறது

### குடியரசு

அரசின் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டவராக இருத்தல் வேண்டுமே தவிர வாரிசுரிமை அடிப்படையில் அல்ல

### நீதி

குடிமக்களை சாதி, மதம் மற்றும் பாலின அடிப்படையில் பாகுபடுத்துவது தவறாகும். சமூக ஏற்றத்தாழ்வுகள் குறைக்கப்பட வேண்டும். அரசாங்கம் அனைத்து மக்களின் நலனுக்காகவும், முக்கியமாக பின்தங்கிய மக்களின் வாழ்வாதாரத்திற்கு உழைக்கவும், செயல்படவும் வேண்டும்

### சுதந்திரம்

குடிமக்கள் சுதந்திரமாக சிந்திக்கவும், எண்ணங்களை வெளிப்படுத்தவும், எண்ணிய படி நடவடிக்கைகளில் ஈடுபடவும் நியாயமற்ற கட்டுப்பாடுகள் கிடையாது.




### சமத்துவம்

சட்டத்தின் முன் அனைவரும் சமம். பழமையான, பாரம்பரியமான ஏற்றத்தாழ்வுகள் நீக்கப்பட வேண்டும். அரசாங்கமானது அனைவருக்கும் சமமான வாய்ப்புகள் வழங்கப்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

### சகோதரத்துவம்

நான் அனைவரும் ஒரே குடும்பத்தில் வசிக்கும் அங்கத்தினர்கள் போல சக மனிதர்களையும் பாவித்து நடந்து கொள்ள வேண்டும். சககுடிமகன் யாரையும் தாழ்வாக பாவிக்கக்கூடாது.

### இந்திய மக்களாகிய நாம்
(We, the people of India)

இந்த அரசமைப்பானது, மக்களால் தங்களின் பிரதிநிதிகளின் மூலமாக உருவாக்கப்பட்டு இயற்றப்பட்டதாகும். இதை மக்களுக்கு அரசரோ அல்லது வேறு அந்நிய சக்திகளோ தரவில்லை.

## இ) அடிப்படை உரிமைகள்

அரசின் அதிகாரத்துவத்தை வரையறுப்பது அடிப்படை உரிமைகள் ஆகும். தனிமனிதர்களின் சொந்த விவகாரங்களில் அரசாங்கத்தின் தலையீடின்றி இருப்பதற்கு இவ்வகை உரிமைகள் உறுதியளிக்கின்றன.

## ஈ) அதிகாரப் பரவலாக்கம்

சுதந்திரத்தை பாதுகாப்பதற்கு அதிகாரப் பரவலாக்கம் அவசியமாகின்றது. அதிகாரங்கள் முறையே மத்திய, மாநில மற்றும் உள்ளாட்சி அரசாங்கத்திற்கு பகிர்ந்து அளிக்கும் பட்சத்தில் நிர்வாகம் திறம்பட செயலாற்ற இயலும்.

### அடிப்படை உரிமைகள்

- சமத்துவ உரிமை (உறுப்பு 14-18)
- சுதந்திர உரிமை (உறுப்பு 19-22)
- சுரண்டலுக்கு எதிரான உரிமை (உறுப்பு 23-24)
- மதச்சுதந்திர உரிமை (உறுப்பு 25-28)
- பண்பாடு மற்றும் கல்வி உரிமை (உறுப்பு 29-30)
- அரசமைப்பு பரிகார உரிமைகள் (உறுப்பு 32-35)

### அதிகாரப்பரவல் என்றால் என்ன?




**சுதந்திரமான நீதித்துறை**

குடிமக்களின் சுதந்திரத்திற்கான பாதுகாப்பு என்பது நீதித்துறையின் சுதந்திரத்தைச் சார்ந்தே அமைகிறது. நீதித்துறை சுதந்திரமாக செயல்பட வேண்டுமெனில், செயலாட்சியின் கட்டுப்பாட்டிலிருந்து தனித்திருப்பது அவசியமாகும். பொதுவுடைமை மற்றும் சர்வாதிகார நாடுகளில் மக்களுக்கு அடிப்படை உரிமைகள் வழங்கப்பட்டாலும் நீதித்துறை செயலாட்சியின் ஆதிக்கத்தில் அமைகிறது. இவ்வாறான நாடுகளில், அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதும், சுதந்திரத்தை பேணுவதும், அரசமைப்பினை நடைமுறைப்படுத்துவதும் கடினமாகும்.

**உ) பொருளாதார இடர்காப்பு**

சுதந்திரத்தின் நிபந்தனையாக பொருளாதார சுதந்திரம் அமைகிறது. "ஏழை மற்றும் பணக்காரர், படித்தவர் மற்றும் படிக்காதவர் என்ற பிரிவினை சமூகத்தில் நிலைக்கும் வரையிலும் எஜமானர் மற்றும் பணியாளர் என்ற உறவுமுறை நீடிக்கும்".

**ஊ) சட்டத்தின் ஆட்சி**

சட்டத்தின் ஆட்சி என்பது இங்கிலாந்து, அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் நடைமுறையில் உள்ளது. சாதி, இனம், நிறம், மற்றும் நம்பிக்கை போன்றவைகளில்

**சுதந்திரமான நீதித்துறை**

இந்திய அரசமைப்பு, நீதித்துறை சுதந்திரமாக செயல்படத் தகுந்த முறையிலான அம்சங்களை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் சுதந்திரமாக செயல்படும் நீதித்துறையே, மக்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும், அரசமைப்பின் மேலான தன்மையையும் பாதுகாக்கிறது.

- நீதிபதிகளின் நியமனத்திற்கு பாகுபாடற்ற நடைமுறை பின்பற்றப்படுகிறது.
- நீதிபதிகளுக்கு, உயர்ந்த தகுதிகளை நிர்ணயித்துள்ளது.
- உச்சநீதிமன்ற நீதிபதிகள் 65 வயது வரையிலும், உயர்நீதிமன்ற நீதிபதிகள் 62வயது வரையிலும் பணியாற்றுவார்கள்.

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**



வறுமை என்பது விபத்து அல்ல. அடிமைத்தனம் மற்றும் நிறவெறி போன்றவை மனிதர்களால் உருவாக்கப்பட்டவை ஆகும். இவை மனிதர்களின் நடவடிக்கைகள் மூலம் களையப்பட வேண்டியவையாகும்.

– **நெல்சன் மண்டேலா** (*Nelson Mandela*)



11th Std Political Science Tamil_Unit-3.indd 86 6/20/2018 6:05:11 PM

வேறுபாடுகள் இல்லாத சமமான ஆட்சியே சட்டத்தின் ஆட்சியாகும். சட்டத்தின் பார்வையில் அனைவரும் சமம். குற்றங்களில் ஈடுபடும் போது தண்டனைக்கு உள்ளாக வேண்டிய நிலை அனைவருக்குமே ஏற்படுகிறது.

இங்கிலாந்து சட்ட நிபுணரான ஏ.வி. டைசி 'சட்டத்தின் ஆட்சி' என்ற கருத்தாக்கத்தினை 19-ஆம் நூற்றாண்டில் மேலும் பிரபலப்படுத்தியவர் ஆவார். முற்கால தத்துவ ஞானிகளுக்கு 'சட்டத்தின் ஆட்சி' என்னும் சொற்றொடர் அறிமுகமில்லாவிட்டாலும் அக்கருத்தாக்கத்தினை அரிஸ்டாட்டில் எனும் ஞானி 'சட்டமே ஆளுகை புரிய வேண்டும்' என எழுதியுள்ளதை காணலாம்.

**எ) அரசியல் கல்வி மற்றும் காலவரம்பற்ற கண்காணிப்பு**

சுதந்திரம் என்பதை நிரந்தரமாக பாதுகாக்க முடியும். கல்வியறிவு பெற்றவர்கள் முற்றிலுமாக உரிமைகளையும் கடமைகளையும் பற்றி அறிவர். காலவரம்பற்ற கண்காணிப்பு இருந்தாலொழிய, மக்கள் தவறுகள் செய்வதை நாம் கண்டறியமுடிவதில்லை. அரசாங்கம் தன் அதிகார எல்லையை மீறி மக்களின் தனிப்பட்ட வாழ்வில் தலையிடும்போது அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் புரட்சி செய்கிறார்கள்.

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**

"குடிமக்களின் தூய உணர்விலான உத்வேகமானது, சட்டத்தின் வார்த்தைகளை விட குறைவுபடினும் அதுவே அவர்களுக்கு மிகவும் உண்மையான பாதுகாவலாகும்".

**– ஹெரால்டு. J லாஸ்கி (Harold. J. Lask)**

**செயல்பாடு**

**மாணவர்கள் கீழே அளிக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட பகுதிகளின் நிறைகள் மற்றும் குறைகளைப் பற்றி விவாதிக்கலாம்.**

*1. சுதந்திரமான நீதித்துறை 2. அதிகாரப் பரவலாக்கம் 3. சட்டத்தின் ஆட்சி 4.மக்களாட்சி*

| நிறைகள் | குறைகள் |
|---|---|
| 1.சுதந்திரமான நீதித்துறை | 1.சுதந்திரமான நீதித்துறை |
| | |
| | |
| 2. அதிகாரப் பரவலாக்கம் | 2. அதிகாரப் பரவலாக்கம் |
| | |
| | |
| 3. சட்டத்தின் ஆட்சி | 3. சட்டத்தின் ஆட்சி |
| | |
| | |
| 4. மக்களாட்சி | 4. மக்களாட்சி |



11th Std Political Science Tamil_Unit-3.indd 87 6/20/2018 6:05:11 PM

## அருஞ்சொற்பொருள்: Glossary

**இறையாண்மை(Sovereignty):** மேலான அதிகாரம் மிக்கதாக இருப்பதுடன் இவற்றை அழிக்கவோ மற்றும் பிரிக்கவோ முடியாது. சுதந்திரத்திற்கு முந்தைய இந்தியாவிற்கு இறையாண்மை கிடையாது. ஏனெனில் அதற்குக் காரணம் பிரிட்டிஷ் பேரரசு இந்தியாவை ஆட்சி செய்ததாகும். ஒரு நாடு மற்றொரு தேசத்தினால் கட்டுப்படுத்தப்படும்போது இறையாண்மை ஆள்வோரிடம் இருக்குமேயன்றி ஆளப்படுவோரிடம் அல்ல. உலகமயமாதலின் காலத்தில், இறையாண்மை மிகப்பெரிய அச்சுறுத்தலை சந்திக்கின்றது. ஏனெனில் உலகலாவிய பரிமாற்றம் என்பது தவிர்க்க முடியாததாகும்.

**முகவுரை(Preamble):** ஒரு புத்தகத்தின் முன்னுரை போன்றதே முகவுரை ஆகும். உலகின் எந்த அரசமைப்பிற்கும் முகவுரை ஒரு தொகுப்பு அல்லது அறிமுகம் ஆகும். எந்த ஒரு அரசியல் முறைமையின் அடிப்படைக் கட்டமைப்பை புரிந்து கொள்வதற்கும் முகவுரையைப் படிப்பதே தகுந்ததாகும். நம்முடைய இந்திய அரசமைப்பின் முகவுரை குறிப்பிடுவது என்னவெனில், இந்தியா என்பது மக்களாட்சி, குடியரசு மற்றும் இறையாண்மை போன்றவையாகும்.

**வயதுவந்தோர் வாக்குரிமை (Universal adult suffrages):** மக்களுக்கு எந்தவித பாகுபாடுமின்றி வாக்களிக்கும் உரிமை வழங்கப்படுவதாகும் அதாவது இனம், சாதி, நிறம், மதம், சொத்து மற்றும் இதர பிரவினை காரணிகள் இல்லாமல் வாக்கு அளிக்கும் உரிமையாகும். இந்தியா சுதந்திரம் அடைந்த உடன் வயது வந்தோர் வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டது. வல்லரசு நாடுகளான அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள், வயது வந்தோர் வாக்குரிமையை சுதந்திரம் அடைந்த உடன் அனைவருக்கும் நடைமுறைப்படுத்தவில்லை.

**நிரந்தரச்சட்டம் (Statues) :** ஒரு நாட்டின் சட்டமன்ற அமைப்பின் மூலமாக எழுதப்பட்ட சட்டமாக ஏற்படுத்தபடுத்தப்படுவதாகும். இவை தகுந்த விவாதங்களுக்கும் பின்னர் நாடாளுமன்ற சட்டங்களில் இணைக்கப்படும்.

**நீதி (Justice):** கிரேக்க சிந்தனையாளர்களால் முக்கியமான கருத்தாக்க கொள்கையாக விவாதிக்கப்பட்டது. நீதி என்பது எவ்வகையான பாகுபாடுகளையும் கடந்து நிர்வகிக்க வேண்டிய முக்கிய நிகழ்வாகும்.

**நிதி (Fiscal):** இது பணம் சார்ந்ததாகும். அனைத்து வகையான அரசாங்கங்களும் ஓர் நிதிக் கொள்கையில் கவனம் செலுத்துவது வழக்கமாகும்.

**இயற்கை நிலை (State of Nature):** சமுதாயத்தில் எவ்விதமான முறைப்படுத்தப்பட்ட அரசாங்க வடிவமும் இல்லாமல் தொன்மையான நிலையில் காணப்படுவது ஆகும்.

**அமைப்பெதிர்வாதம் (Anarchy):** இது முழுவதும் குழப்பத்துடன் காணப்படுகின்ற நிலையாகும். குறிப்பாக தற்காலத்தில் இராக் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் நிலையான அரசாங்கக் கட்டமைப்பு இல்லாமல் காணப்படுகின்ற அரசியல் நிலையாகும். இந்த அரசுகள் அமெரிக்க ஆக்ரமிப்பின் கீழ் இருப்பதே இந்நிலைக்கு காரணமாகும்.

**நகர அரசு (City – states):** இவ்வகை சிறிய அரசுகளில் மக்கள் முடிவு எடுப்பதில் முக்கிய அதிகாரம் வாய்ந்தவர்களாக காணப்படுவார்கள். இது கிரேக்க நாட்டில் 2300 ஆண்டுகளுக்கு முன்பாக செயல்பட்டது.

**வாசுதெய்வகுடும்பகம் (Vasudaivakudumbagam):** 'உலகம் ஓர் குடும்பம்' என்ற கொள்கை உடையது. இது உலகளாவிய சிந்தனை ஆகும். இது அனைத்து தேசிய அரசுகளையும் ஒன்றுடன் மற்றொன்றினை பிணைந்து ஒரு குடும்பம் போல எந்த வித பாகுபாடுமின்றி செயல்படுவதாகும்.

**எளிதில் மாற்றமுடியாதது (Inalienable):** இது எளிதில் பிரிக்கமுடியாத ஒன்றாகும்.

**அவசரச்சட்டம் (Ordinances):** குடியரசுத்தலைவர் அல்லது அளுநரால் முறையே நாடாளுமன்றம் அல்லது சட்டமன்ற கூட்டத் தொடர் நடக்காத போது தற்காலிகமாக வெளிப்படக்கூடிய உத்தரவாகும்.

**சட்டப்படியான (De-jure):** சட்டத்தின் மூலமாக அதிகாரம் பெற்றிருத்தல்.

**நடைமுறை (De-facto):** உண்மையில் யார் ஒருவர் நடைமுறையில் நிலையான அதிகாரம் பெற்றிருக்கின்றனர் என்பதாகும்.

## மதிப்பிடுதல் (Evaluation)

### I. சரியான விடையை தேர்ந்தெடுக்கவும்.

9N8HPH

1. இறையாண்மையின் தந்தை எனக் கூறப்படுபவர் யார்?
   (அ) போடின் (ஆ)ஆஸ்டின்
   (இ) பிளாட்டோ (ஈ) அரிஸ்டாட்டில்

2. ஒருமைவாத இறையாண்மை கோட்பாட்டை எடுத்துரைத்தவர்
   (அ) ஆஸ்டின் (ஆ) ஹெகல்
   (இ) மரியம் (ஈ) வில்லோபை

3. மக்களாட்சியில் இறையாண்மையின் உறைவிடமாக இருப்பது
   (அ) அரசு (ஆ) அரசாங்கம்
   (இ) மக்கள் (ஈ) ஊடகம்

4. "நான்தான் அரசு" என கூறியவர் யார்?
   (அ) ஜேம்ஸ் II (ஆ) நெப்போலியன் I
   (இ)லூயிஸ் XIV (ஈ) பிஸ்மார்க்

5. 'இரட்டை குடியுரிமை' காணப்படும் நாடு
   (அ) அமெரிக்கா (ஆ) சீனா
   (இ)ஜப்பான் (ஈ) ஆஸ்திரேலியா

6. "இறையாண்மை என்பது பொது விருப்பத்தை உறைவிடமாகக் கொண்டதாகும்" என கூறியவர்
   (அ) ரூசோ (ஆ) டி.எச்.கிரின்
   (இ)ஆஸ்டின் (ஈ) போடின்

7. 'சுதந்திரம்' என்ற நூலை எழுதியவர்
   (அ) ஜே.எஸ்.மில் (ஆ) லாக்
   (இ) ரூசோ (ஈ) போடின்

8. 'சட்டத்தின் ஆட்சி' என்பதன் முக்கிய நோக்கம் உறுதிப்படுத்துவது என்னவெனில்
   (அ) பத்திரிக்கை சுதந்திரம் (ஆ)குடிமக்களின் சுதந்திரம்
   (இ) சுதந்திரமான நீதித்துறை (ஈ) மேற்கூறிய அனைத்தும்

9. இந்திய அரசமைப்பிலுள்ள அடிப்படை உரிமைகள் பெறப்பட்ட நாடு

(அ) அமெரிக்கா (ஆ) பிரான்ஸ்
(இ) பிரிட்டன் (ஈ) ரஷ்யா

10. 'மதம் என்பது போதை பொருள்' என கூறியவர் யார்?

(அ) மார்க்ஸ் (ஆ)கலிலியோ
(இ)ரஸ்ஸல் (ஈ) பகத் சிங்

11. 'மூலதனம்' என்ற நூலை எழுதியவர் யார்?

(அ) மார்க்ஸ் (ஆ)கிரபோட்கின்
(இ)ஓவன் (ஈ) நேதாஜி

## ii. கீழ்வரும் கேள்விகளுக்கு மிக சுருக்கமான விடையளிக்கவும்

12. இறையாண்மையை வரையறுக்கவும்.
13. இறையாண்மையின் வகைகள் யாவை?
14. பாகுபாடு பற்றிய குறிப்பு வரைக.

## iii. கீழ்வரும் கேள்விகளுக்கு சுருக்கமான விடையளிக்கவும்

15. இறையாண்மையின் இயல்புகளை விவாதிக்கவும்.
16. 'எதிர்மறை சுதந்திரம்' பற்றிய சிறு குறிப்பு வரைக
17. 'அமைப்பெதிர்வாதம்' என்றால் என்ன?
18. 'சாதிய பாகுபாடு' பற்றி விவாதிக்கவும்.
19. மனித உரிமைகள் என்றால் என்ன?

## iv. கீழ்வரும் கேள்விகளுக்கு விரிவான பதில் அளிக்கவும்

20. இறையாண்மையின் கருத்து மற்றும் சிறப்பியல்புகளை ஆராய்க
21. சுதந்திரத்தின் மீறலுக்கான காரணிகளை விளக்குக
22. மதப்பாகுபாட்டின் குறைகளை விவாதிக்கவும்.
23. இந்திய அரசமைப்பிலுள்ள சமத்துவத்தை பற்றி விளக்குக.

## மேற்கோள் நூல்கள் (Reference books)


1. Agarwal .R.C.Political theory (Principles of Political science), chand & company, New Delhi, 2005.
2. Rajeev Bhargava & Ashok Acharya (Ed), Political theory: An Introduction, Thomson press, New Delhi, 2016.




11th Std Political Science Tamil_Unit-3.indd 90 6/20/2018 6:05:11 PM

## மேலும் கூடுதலாக படிப்பதற்கான நூல்கள் (Further readings)


1. Heywood, Andrew: Poltitcal ideologies: An Introduction, London, Macmillan, New York 2003.
2. Bakshi, P.Constitution of India, New Delhi 1990.
3. Basu, Durga. Das: Introduction to the constitution of India, New Delhi, 1997.
4. Ramsamy, Sushila, Ideas & concepts, Mac Milmillan, New Delhi, 2009.




11th Std Political Science Tamil_Unit-3.indd 91 6/20/2018 6:05:11 PM

அலகு 4

# அரசியல் அறிவியலின் அடிப்படைக் கருத்தாக்கங்கள் – பகுதி II

## 4.1 சட்டம்

### 4.1.1 அறிமுகம்

அரசின் இறையாண்மையால் உத்திரவாதம் அளிக்கப்படுகின்ற விதிமுறைகளும், கட்டுப்பாடுகளும் சட்டம் எனப்படுகிறது. போடின் (Bodin) கூறுவதுபோல, இறையாண்மையின் கட்டளையே சட்டம் ஆகிறது.

இதனைப் போன்று அரிஸ்டாட்டிலும், "சட்டம் செயல்படாத நிலையில் மனிதர்கள் விலங்குகளாக மாறுகிறார்கள்" என்று சரியாக சுட்டிக்காட்டுகிறார். சமுதாயத்தின் கட்டுக்கோப்பினைப் பாதுகாக்கவும், தேசத்தின் வளர்ச்சியை மேம்படுத்தவும், சட்டமானது உலகம் முழுமைக்கும் இன்றியமையாததாகிறது. சமுதாய ஒழுங்கினைப் பராமரிக்க, சட்டத்தின் அபரிமிதமான சக்தி மட்டுமே முழு தீர்வாக விளங்க முடியாது. ஏனெனில் சட்டத்திற்கு என்று ஒரு குறிப்பிட்ட வரையறை உள்ளது. குற்றவாளிகளுக்கு சட்டம் கொடுங்கோலனாகவும், குடிமக்களுக்கும், நல்லவர்களுக்கும் அதே சட்டம் பாதுகாவலனாகவும் விளங்குகிறது.

உலகத்தின் ஒரு பகுதியில் சட்டம், கடினமானதாகவும் மறுபக்கம் இணக்கமாகவும் விளங்கக்கூடிய காரணம் என்பது எப்போதும் சர்ச்சைக்குரியதாகவும், விவாதத்திற்குரியதாகவும் தொடர்கிறது. மேற்கூறிய வாதமும், விவாதமும் தத்தம் நாடுகளின் பணிகள், குறிப்பாக தண்டனைகளை பொறுத்து அமைகிறது. உதாரணத்திற்கு மக்களாட்சி நாடுகளில் நிறைவேற்றப்படக் கூடிய சட்டம், முற்றதிகார நாடுகளின் சட்டங்களை விட வேறுபட்டதாகவும், மக்கள் நலனுக்காகவுமாக செயல்படுகிறது. இதை தவிர்த்து சட்டம், ஒரு

9NHSRJ



**கற்றலின் நோக்கங்கள்**

- சட்டத்தின் சாராம்சத்தை அறிந்து கொள்வதன் மூலம் மாணவர்கள் நீதியைப் பற்றிய சிந்தனைக்கு நெருக்கமாதல்.
- சட்டத்தின் வகைகளை தெரிந்து கொள்வதின் மூலம் மாறுபட்ட சட்டங்களின் செயல்பாட்டையும், அதனால் சமூகத்தில் ஏற்படும் விளைவுகளையும் புரிய வைத்தல்.
- சட்டத்தின் ஆதாரங்களை புரிந்து கொள்வதன் மூலம் அதன் தோற்றத்தினைத் தெரிந்து கொள்ளுதல்.
- சட்டம், அரசு மற்றும் நீதிநெறி ஆகியவைகளிடையேயான தொடர்பை ஆழ்ந்துக்கூறுவதன் மூலம் மாணவர்கள் அரசினுடைய சட்டத்தின் வாயிலாக எவ்வாறு சமூகத்தில் இணைந்து இருக்கிறார்கள் என்பதை புரியவைப்பது.



11th Std Political Science Tamil_Unit-4.indd 92 6/20/2018 7:16:13 PM

நாட்டு மக்களுக்கு எந்த அளவிற்கு சுதந்திரத்தை வழங்குகிறது என்பது குறிப்பிட்ட சட்டத்தை நிர்வகிக்கும்போதும், செயல்படுத்தும் போதும் தெரிய வருகிறது. உலகின் எந்த நாட்டிலுமே சட்டத்தினை அறியாமை என்பது தண்டனையிலிருந்து தப்பிக்கும் ஒரு காரணியாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. எனவே சட்டத்தின் கருத்தாக்கத்தினை இளைய தலைமுறைக்கு அறிமுகப்படுத்துவதும், அவை அரசமைப்பு வழங்கும் அடிப்படை சட்டங்கள் மற்றும் ஒழுங்கு முறை என புரிய வைப்பதும் இன்றியமையாததாகிறது.

**அறிமுகம்**

❖ **சட்டம் என்றால் என்ன?**

அரசால் அமலாக்கம் செய்யப்படுகின்ற விதிமுறைகளின் தொகுப்பிற்கு சட்டம் என்று பொருள்.

❖ **சட்டம் – நீதி ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பு**

-சமூகத்தில் நீதியை அடைவது சட்டத்தின் குறிக்கோள் ஆகும்.

-நீதி என்பது எது சரி, எது தவறு, எது நல்லது, எது சமத்துவம் போன்றவைகளை விளக்கக்கூடிய ஒர் புலனாகாத கருத்தாகும்.

-எனவே ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் எது சரியானதோ அல்லது எது நியாயமானதோ அதைச் செய்வதாகும்.

### 4.1.2. சட்டத்தின் பொருள்

சட்டம் என்கிற வார்த்தை பண்டைய டியூட்டோனிக் (Teutonic) மொழியிலுள்ள "லாக்" என்ற வேர்ச்சொல்லிலிருந்து உருவானதாகும். 'லாக்' என்ற சொல்லானது நிலைத்தன்மை அல்லது ஒரே சீரான என்று பொருள்படுகிறது. சட்டமில்லாத சமுதாயம் மற்றும் ஆட்சி, குழப்பவாதத்திலும், கலகத்திலும் முடிவுறும். உன்மையில் சட்டமே வாழ்க்கையை ஒழுங்குபடுத்துகிறது. சட்டம் என்ற சொல் 'சீரானது' என்பதைக் குறிக்கிறது. சட்டத்தை இரண்டு வகையாகப் பிரிக்கலாம். அவை, இயற்கை சட்டம் மற்றும் மனிதச் சட்டம் ஆகியவையாகும். இயற்கை சட்டம் இயற்கையையும், மனிதச்சட்டம் மனிதர்களின் வாழ்க்கையையும் ஒழுங்குபடுத்துகிறது. அரசியல் அறிவியலில் சட்டம் என்பது மனித நடவடிக்கைகளை வழிநடத்துகிற விதிகளைக் கொண்ட தொகுப்பு ஆகும். அரசின் கடமைகளை அரசாங்கம் செயல்படுத்துகிறது. அதைப் போலவே அரசாங்கம் அரசின் விருப்பத்தை சட்டத்தின் வாயிலாக நிறைவேற்றுகிறது.

**சட்டம் பற்றிய கருத்துகள்**

❖ சட்டம் என்பது இறையாண்மையின் கட்டளை – **ஜான் ஆஸ்டின் (John Austin)**

❖ நீதி நிர்வாகத்தை செயல்படுத்துவதற்காக அரசு அங்கீகரித்த விதிமுறைகளின் தொகுப்பே சட்டம் ஆகின்றது. – **சல்மாண்டு (Salmond)**

❖ 'க்ராப்'(Krabbe) என்ற அறிஞரின் கூற்றின்படி, "சட்டம் என்பது விழுமியங்களைச் சார்ந்த தீர்ப்புகளின் வெளிப்பாடு ஆகிறது. மனித வர்க்கம் விரும்புகின்ற ஒழுங்கமைவு மற்றும் இயற்கையை சார்ந்த நீதிநெறியாகவும் சித்தரிக்கப்படுகிறது". –**க்ராப்' (Krabbe)**

❖ அரசாங்கத்தின் சக்தியாலும், அதிகாரத்தாலும் நிலைப்படுத்தப்பட்ட ஒரே சீரான விதிமுறைகளின் அமைப்பிற்கு சட்டம் என்று பொருள். மேலும் இது நிலைப்படுத்தப்பட்ட எண்ணங்களாகவும், பழக்க வழக்கங்களாகவும் கருதப்படுகிறது. – **உட்ரோ வில்சன் (Woodrow Wilson).**

❖ மனிதர்களின் புற நடவடிக்கைகளுக்காக, இறையாண்மை மிக்க அரசியல் அதிகாரம் மூலம் அமலாக்கம் செய்யப்படும் பொது விதிகளின் தொகுப்பே சட்டமாகும் – **ஹாலந்து ( Holland)**

**சட்டத்தின் நோக்கம் என்ன?**

மேக்ஐவர் (MacIver) என்பாரின் கூற்றுப்படி, "அரசின் ஆதரவில்லையெனில் ஒரு சட்டம், சட்டமாகவே இருக்க முடியாது. சட்டத்தின் நோக்கமானது உறுதியான



11th Std Political Science Tamil_Unit-4.indd 93 6/20/2018 7:16:13 PM

அடித்தளங்களை நிறுவவும், மனிதர்களின் மெய்யுறுதியை வலிமையாக்கி அதன்மூலம் சமூகத்தின் கட்டமைப்பை மேம்பட செய்வதுமாகும்". 'சட்டம்' எனும் சொல்லானது, அரசியல் அறிவியல் மூலம் மனிதர்களின் நடவடிக்கைகளின் மீது ஆளுகை செய்யவும், அவர்களின் வாழ்வை நெறிமுறைப்படுத்துவதற்குமான விதிகளின் தொகுப்பாகக் கருதப்படுகிறது. "சட்டம் அரசை உருவாக்குவது அல்ல, மாறாக அரசின் அழுத்தமே சட்டத்தை உருவாக்குகிறது" என்று நம்பிக்கையாக ஹாக்கிங் (Hocking) கூறுகிறார்.

**சட்டத்தின் நோக்கங்கள் யாவை?**

- அடிப்படை மனித உரிமைகளை பாதுகாத்தல்
- நியாயத்தை ஊக்குவித்தல்
- சச்சரவுகளை தீர்த்தல்
- நீதியை ஊக்குவித்தல்
- ஒழுங்கையும், நிலைத்தன்மையையும் ஏற்படுத்துதல்
- விரும்பத்தகுந்த சமூக மற்றும் பொருளாதார நடத்தையை ஊக்குவித்தல்
- பெரும்பான்மை விருப்பத்தை பிரதிநிதித்துவப்படுத்துதல் (சில பிரச்சனைகளில்)
- சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாத்தல்.

### 4.1.3 சட்ட வகைகளை அறிவீர்களா?

#### அ) தனியார் சட்டங்கள் (Private Laws)

குடிமக்களிடையேயான உறவுகளும், அவ்வுறவுகளை கட்டுப்படுத்தும் விதிமுறைகளும் தனியார் சட்டத்தின் மூலம் கட்டுப்படுத்தப்படுகிறது.

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**

தனியார் சட்டத்தில் சம்பந்தப்பட்டவர்கள் தனி நபர்களாகவும், அவர்களுக்கு மேலாகவும், இடையேயும் ஓர் பாரபட்சமில்லாத நடுவராக அரசு இருக்கிறது. – ஹாலந்து (Holland)

#### ஆ) பொது சட்டங்கள் (Public Laws)

குடிமக்களுக்கும், அரசுக்கும் இடையேயான உறவுகளை முடிவு செய்வது பொது சட்டமாகும். இவ்வகை சட்டத்தில் அரசு நடுவராகவும், கட்சிகாரராகவும் பார்க்கப்படுகிறது.




#### இ) அரசமைப்பு சட்டங்கள் (Constitutional Laws)

அரசை வழி நடத்தக்கூடிய அடிப்படை சட்டங்கள் அரசமைப்பு சட்டங்கள் ஆகும். அரசாங்கத்தின் செயல்பாடுகளை வரையறுத்து, தெளிவுபடுத்தக்கூடிய சட்டங்களே அரசமைப்பு சட்டங்களாகும். உதாரணத்திற்கு, குடியரசு தலைவர் தேர்தல், உச்ச நீதிமன்றத்தின் அதிகாரம் மற்றும் பொதுசட்டம், சட்டமன்றத்தால் இயற்றப்படக் கூடிய நிரந்தர சட்டத்திலிருந்து வேறுபடுகிறது. பொதுசட்டம் முன் நிகழ்வுகளை அடிப்படையாக கொண்டு உருவாவதாகும். சட்டமன்றத்தால் இயற்றப்படும் நிரந்தர சட்டமானது, எழுதப்பட்ட சட்டங்களால் ஆன முறை சார்ந்த ஒன்றாகும். இச்சட்டத்தில் பொதுமக்களின் நடவடிக்கைகளை கட்டாயப்படுத்தவோ அல்லது தடை செய்யவோ சட்டங்களும், ஒழுங்குமுறை விதிமுறைகளும் அமைந்துள்ளன. பொதுசட்டமானது நீதிபதிகள் தங்கள் தீர்ப்புகளை, முந்தைய தீர்ப்புகளை முன்னுதாரணமாக கொண்டு, அதனடிப்படையில் வழங்க அனுமதிக்கிறது. செயல்பாடுகள், ஆளுநர் நியமனமுறை போன்றவை அரசமைப்பு தொடர்பான நிகழ்வுகளாகும்.



11th Std Political Science Tamil_Unit-4.indd 94 6/20/2018 7:16:14 PM

அரசாங்கத்தின் செயல்பாடுகளையும், அடிப்படை உரிமைகளையும், அதிகாரங்களையும் பற்றியதாக இல்லாமல், குடிமக்களுடைய சமூக மற்றும் பொருளாதார நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டிருந்தால் அவை சாதாரண சட்டங்கள் எனப்படும். உதாரணத்திற்கு குழந்தை திருமணங்கள் மற்றும் மதுபானத்தின் மீதான தடை போன்றவைகள் சாதாரண சட்டங்களின் கீழ் அமைகிறது.

### (ஈ) நிரந்தர சட்டங்கள் (Statute Laws)

நிரந்தர சட்டங்கள் என்பவை மாநில சட்டமன்றத்தின் மூலமாகவும், நாடாளுமன்றத்தின் மூலமாகவும் இயற்றப்படும் சட்டங்களாகும். மக்களாட்சி நாடுகளில் பெரும்பான்மையான சட்டங்கள் நாடாளுமன்றத்தின் மூலமாகவே இயற்றப்படுகின்றன.

### உ) அவசர சட்டம் (Ordinance)

பொதுவாக அரசினுடைய சட்டங்களின் அடிப்படையில், அரசாங்கத்தின் செயலாட்சி துறை மூலம் இது பிறப்பிக்கப்படுகின்றது. இவ்வகை சட்டம், குறைந்த கால கட்டமே நீடிக்கும். நாடாளுமன்றம் இயங்காத காலங்களிலும், அவசர காலங்களிலும் குடியரசு தலைவர் மூலம் அவசர சட்டம் பிறப்பிக்கப்படும்.

### ஊ) பொது சட்டங்கள் (Common Laws)

பொது சட்டங்களானது மரபுகளையும், பாரம்பரிய பழக்க வழக்கங்களையும் அடிப்படையாக கொண்டது. ஆனால் நிரந்தர சட்டங்களை போல நீதிமன்றங்களால், அமலாக்கம் செய்யக்கூடிய தன்மை உடையதாகும். பொது சட்டங்கள் இங்கிலாந்தில் மிகவும் பிரசித்தி பெற்ற சட்டங்கள் ஆகும்.

### எ) நிர்வாக சட்டங்கள் (Administrative Laws)

அரசாங்க பணியாளர்களின் அலுவல் மற்றும் பொறுப்புகளை பற்றி விளக்கமளிப்பதுடன், ஆளுகையை முறைப்படுத்துவதற்கான சட்டம் நிர்வாக சட்டம் எனப்படும். தனி மனிதர்களுக்கும், பொதுநிர்வாக அதிகாரிகளுக்கும் இடையே சட்டத்தையும், அதன் செயல்பாட்டையும் பிரித்து நடைமுறைப்படுத்துவது நிர்வாக சட்டமாகும். மேலும் இது அரசாங்க அதிகாரிகளின் சலுகைகளை பற்றி விளக்கம் அளிக்க முயலுகிறது. இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் நிர்வாக சட்டம் பிரபலம் அடையவில்லை. பிரான்ஸ் மற்றும் சில ஐரோப்பிய நாடுகளில் இவை பிரபலமாக உள்ளன. உதாரணத்திற்கு குடிமக்களுக்கும்,அரசாங்க அதிகாரிகளுக்கும் இடையே சர்ச்சை ஏற்படும் பட்சத்தில் நிர்வாக நீதிமன்றம், நிர்வாக சட்டத்தின் மூலம் தீர்வு காண்கிறது.




### ஏ) பன்னாட்டு சட்டங்கள் (International Laws)

பன்னாட்டு சூழலில் நாகரீகமடைந்த நாடுகளுக்கு இடையேயான உறவுமுறைகளையும், நடத்தையையும் நிர்ணயிக்கும் சட்டம், பன்னாட்டு சட்டமாகும்.



11th Std Political Science Tamil_Unit-4.indd 95 6/20/2018 7:16:14 PM

பன்னாட்டு உறவுகளை ஒழுங்குபடுத்துவதற்கென்று, தனித்தன்மையுடைய பன்னாட்டு சட்டம் என்ற ஒன்று வழக்கில் இல்லை. ஆனால் ஐக்கிய நாடுகள் சபையும், உலக பொதுமக்களின் கருத்துமே, ஒவ்வொரு நாடும் தங்கள் இறையாண்மையை முழுவதுமாக அனுபவிக்க வழிவகை செய்கின்றது.

மேலும் கடல் எல்லை பாதுகாப்பு சட்டம், வான்எல்லை சட்டம் என்றும் பன்னாட்டு சட்டங்களின் பிரிவுகள், தரைவழி, கடல்வழி, ஆகாய வழி என்று நாடுகளுக்கிடையே சர்வதேச எல்லைகளை வரையறுக்கிறது. வான்எல்லைச் சட்டங்களின் மூலம் ஒரு நாட்டின் ஆகாய விமானம் இன்னொரு நாட்டின் வான் எல்லையில் பறக்கும்போது அனுமதி பெற்ற பிறகே பறக்க வழி செய்கிறது.

### 4.1.4 சட்டத்தின் மூல ஆதாரங்களை நீங்கள் தெரிந்து கொள்ள விரும்புகிறீர்களா?




### அ) வழக்காறுகள் (Customs)

சட்ட உருவாக்கத்திற்கு பழக்கவழக்கங்கள் மிகவும் உதவி புரிந்துள்ளன. பழக்கவழக்கங்களின் மூலமாக பயன்படுத்தப்பட்டுவந்த வழக்காறுகள் யாவும் நாளடைவில் அரசால் அங்கீகரிக்கப்பட்டு சட்டமாகின. ஆதிகாலத்திலிருந்து பழங்குடியினரிடையேயான சர்ச்சைகளும், பிரச்சனைகளும் அக்குடியினுடைய தலைவரின் மூலமாக அவர்களின் வழக்காறுகள் மற்றும் மரபுகளின் வழியே தீர்வு காணப்பட்டு வருகிறது. பழங்குடிகள் நாளடைவில் அரசுடன் இணைத்துக் கொள்ளப்படும் போது அம்மக்கள் பின்பற்றிய பழக்கவழக்கங்களும் படிப்படியாக சட்டங்களாக்கப்பட்டன. ஒரு நாட்டின் மரபுகளையும், பழக்க வழக்கங்களையும் அரசால் மறுதலிக்க முடிவதில்லை. இன்றளவில் இங்கிலாந்தின், பொது சட்டமானது வழக்காறுகளில் இருந்து பெறப்பட்டது என்பது ஒரு முக்கிய உதாரணமாகும்.

உதாரணத்திற்கு இந்தியாவில் தமிழ் மக்களிடையே 'ஏறு தழுவுதல்' (Bull Taming Sport)என்றபண்பாடுசார்ந்தவிளையாட்டானது 2017–ஆம் ஆண்டு 'ஜல்லிக்கட்டு சட்டம்' என்ற புதிய சட்டம் உருவாகக் காரணமாக அமைந்தது.

(2017–ஆம் ஆண்டின் 'ஜல்லிக்கட்டு சட்டம்' பற்றிய கூடுதல் தகவல்களை பின்வரும் உள்பெட்டியில் படியுங்கள். இந்த உரையை படித்து ஒவ்வொரு வார்த்தைக்கும் தகுந்தவாறு ஆறு கேள்விகளை எழுதுக. என்ன?, எங்கு?, எப்பொழுது?, எவை?, ஏன்?)

### ஆ) மதம் (Religion)

ஆதிகால சமூகங்கள் பின்பற்றிய மத சம்பிரதாயங்களும் அரசினுடைய, சட்ட உருவாக்கத்தில் பெரிதான பங்கை ஆற்றியுள்ளது. பெரும்பான்மையான நாடுகளில் மதமே சட்டத்தின் அடிப்படையாக அமைந்துள்ளது. இந்து மதச் சட்டமானது பெரும்பாலும் மனுவின் விதிமுறையிலிருந்து பின்பற்றப்பட்டு வருகிறது. இஸ்லாமியச் சட்டமானது ஷரியத் சட்டங்களின் மூலத்திலிருந்து பின்பற்றப்படுகிறது. தெய்வீகச் சட்டமானது, மனிதனின் மூலமாக கடவுள் வழங்கிய சட்டங்கள் என்று கருதப்படுகிறது. தெய்வீக சட்டத்தின் ஆதிமூலமாக கடவுளே இருப்பதாகக் கருதப்படுகிறது. கிறித்துவர்களுக்கு, அவர்களின் பரமபிதா முதன் முதலில் அருளிய பத்து கட்டளைகளே சட்டத்தின் அடிப்படையாகக் கருதப்படுகிறது.

## செயல்பாடு

### அலங்காநல்லூர் -ஜல்லிகட்டு



இந்த படம் ஏறுதழுவுதல் என்ற தமிழரின் பண்பாடு விளையாட்டான ஜல்லிகட்டு பற்றியது ஆகும். இது மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் நடைபெறும். அலங்காநல்லூர் என்றால் ஜல்லிகட்டு என்றும், ஜல்லிகட்டு என்றால் அலங்காநல்லூர் என்றும் அழைக்கப்படுமளவுக்கு அவ்வூரின் பண்பாடு மற்றும் வரலாற்றுடன் அவ்விளையாட்டு ஒன்றிணைந்துள்ளது. இது பொதுவாக பொங்கல் கொண்டாடப்படும் ஜனவரி மாதத்தில் தமிழகத்தில் நடைபெறும் ஒரு தமிழர் பண்பாட்டு விழாவாகும். நம் நாட்டில் உள்ள ஒவ்வொரு சமூகத்தினருக்கும் வாழ்வதற்கான உரிமை, சுதந்திரத்திற்கான உரிமை மற்றும் தங்கள் பண்பாட்டையும், மரபையும் காப்பதற்கான உரிமை ஆகியவை உண்டு. ஆனால் ஜல்லிகட்டு என்பதில் பண்பாட்டிற்கும், விலங்குகளின் உரிமைக்கும் இடையே முரண்பாடு தோன்றியது.

அரசமைப்பின் பகுதி மூன்றில் அடிப்படை உரிமை உறுப்பு 29(1) -இல் கல்வி மற்றும் பண்பாடு உரிமைகளுக்கு உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. 2014 -இல் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் "விலங்குகளும் புலன் உணர்வு கொண்டவை, ஆதலால் அடிப்படை உரிமை உறுப்பு 29(1) -படி வாழும் உரிமையைப் பெறுகின்றன என்றும் ஆதலால் அவற்றை துன்புறுத்துவதை அனுமதிக்க இயலாது" என தீர்ப்பு கூறியது. இந்த முரண்பாடுகள் இவ்விளையாட்டை முறைப்படுத்துவதில் பல்வேறு விளக்கங்களுக்கு வித்திட்டன.

## 5W'S மற்றும் 1 H செயல்பாடு



**குறிப்பிடத்தக்க மேற்கோள்**

உண்மையில் முற்கால ரோமானிய சட்டங்கள் பெரும்பாலும், மதநுட்ப விதிகளை விடவும் சற்றே அதிகமாக உள்ளது. அவைகள் பெரும்பாலும் சில மத சூத்திரங்களை முறையாக பின்பற்றுவதன் மூலம் மத உரிமைகளை அடையும் வழி முறைகளாக இருந்தன.

– **உட்ரோ வில்சன்** (*Woodrow Wilson*)

### இ) வழக்குமன்றங்களின் முடிவுகள் (Judicial Decisions)

**கெட்டல்**(Gettel) கூற்றின்படி, "அரசு என்பது சட்டத்தை உருவாக்க மட்டுமல்லாது, அதனை தெளிவுபடுத்துவதற்காகவும், வழக்காறுகளை செயல்படுத்துவதற்காகவும் உருவாக்கப்பட்டுள்ளது. நீதித்துறையின் செயல்பாடானது சட்டங்களை தெளிவுபடுத்தவும், சட்டங்களை நடைமுறைப்படுத்துவதுமாக அமைகிறது. நீதிமன்றங்கள் செயல்படும்போது, அவைகளின் தீர்ப்புகள் புதிய சட்டங்களாக உருவாகின்றன. அதன் பிறகே இவ்வகை சட்டங்கள் அரசு மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்படுகின்றன. எனவே, நீதிமன்ற தீர்ப்புகள் இவ்வகையில் புதிய பல சட்டங்களை உருவாக்குவதற்கு மூல ஆதாரமாக அமைகிறது. சில சமயங்களில், உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றங்களின் தீர்ப்புகள் சட்டங்களாக பாவிக்கப்படுகின்றன.

### ஈ)சமச்சீராக்கம் (Equity)

சட்டங்கள் எப்போதெல்லாம், தெளிவற்று சூழ்நிலைக்கு பொருந்தாமல் இருக்கிறதோ, அந்தச் சமயங்களில் இந்த சம நீதி பங்கிலான கொள்கைகளும், நல்லியல்புகளும், பொது அறிவு அடிப்படையில் பயன்படுத்தப்பட்டு அக்குழப்பமான சூழலுக்கான தீர்வு காணப்படுகிறது.

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**

"சமச்சீராக்கம் என்பது அசல் குடிமைச் சட்டத்தோடு இருக்கக்கூடிய விதிமுறை தொகுப்பாகும். நீதியின் அடிப்படையிலும், மரபுகளின் அடிப்பைடையிலும் உருவானதால் இவ்வுறுப்புகள் குடிமைச் சட்டத்தின் பயன்பாடுகளை மீறுமளவிற்கு தலையாய புனிதத்தன்மையை பெற்று விளங்குகின்றன".

– **சர் ஹென்றி மெய்ன்** (*Sir Henry Maine*)

**சமச்சீராக்கம்**

- ஆங்கிலேய பொதுச் சட்ட மரபை பின்பற்றும் நாடுகளில் உள்ள சட்ட விதிகளின் தொகுப்பிற்கு சமச்சீராக்கம் (Equity) என பெயரிடப்பட்டுள்ளது. இது இயற்கை நீதி என்று சில நேரங்களில் குறிப்பிடப்படுகின்ற ஒன்றை அடைய கடுமையான சட்டங்களையும் கண்டிப்பான அமலாக்கத்தையும் துணையாக கொண்டுள்ளது.
- சமச்சீராக்கம் நியாயத்தை நிலைநாட்டுவதாகவும் உள்ளது.
- சமச்சீராக்கம் என்பது பொதுச் சட்டத்திற்கு துணையாக வர்ணிக்கப்படுகிறது. இது ஆங்கிலேய பொதுச் சட்டத்தில் இடம் பெறாத பகுதிகளையும் ஒன்றிணைத்து அச்சட்ட அமைப்பை ஒரு முழுமையான ஒன்றாக ஆக்குகிறது.
- ஆங்கிலேய சட்டத்தின்படி, சமச்சீராக்கம் என்பது இங்கிலாந்து உயர் நீதி மன்றத்தால் மட்டுமே அமல்படுத்த கூடிய விதிகளின் தொகுப்பாகும்.

### உ) அறிவியல் விளக்கவுரைகள் (Scientific Commentaries)

சட்ட வல்லுநர்களின் அறிவியல் விளக்கவுரைகள், மற்றுமொரு சட்டமூலமாக விளங்குகின்றன. முதன்முதலில் இத்தகைய



11th Std Political Science Tamil_Unit-4.indd 98 6/20/2018 7:16:14 PM

அறிவியல் விளக்கவுரைகள் தோன்றியபோது, அனைவரும் அதனை ஒரு வாதமாக மட்டுமே வர்ணித்தார்கள். நாளடைவில் இதன் சிறப்புத் தன்மையும், அதிகாரமும், நீதி மற்றும் நீதிமன்ற முடிவுகளையும் விட அதிகாரத்துவம் பெற்று விளங்கியது.

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**

சட்ட நிபுணர்களின் கருத்துக்கள் பெரும்பாலான நேரங்களில் சட்டமாகவே கருதப்படுகிறது. உதாரணத்திற்கு, இங்கிலாந்தில் **கோக்** மற்றும் **ப்ளாக் ஸ்டோனின்** விளக்கவுரைகள் (Coke and Blackstone), அமெரிக்காவின் **ஸ்டோரி** மற்றும் **கென்ட்** (Story and Kent), இந்தியாவின் விஞ்நானேஸ்வரா மற்றும் அபரார்கா (Vijnaneswaa and Aprarka) ஆகியோரின் விளக்கவுரைகளைக் கூறலாம்.

**– அ. அப்பாதுரை (*A. Appadurai*)**

### ஊ) சட்டமன்றம் (Legislature)

தற்காலத்தில் பெரும்பான்மையான சட்டங்கள் சட்டமன்றத்தின் மூலமே இயற்றப்படுகிறது. சட்டத்தின் மிக முக்கிய ஆதாரங்களுள் ஒன்றாக இது உள்ளது. பிற நாட்டு அரசமைப்புகளில் உள்ள சிறந்த அம்சங்களைப் பெற்று அதை தன் சொந்த நாட்டின் நன்மைக்கு பயன்படுத்துவதற்கு சிறந்த உதாரணமாக இந்திய அரசமைப்பு உள்ளது.

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**

"குடிமக்களின் மனங்களிலிருந்து உருவாவது அரசாகும். அவர்கள் நீதிநெறி முகவர்களாவர். அதே சமயம், நல்லியல்பு இல்லாத கெட்ட குடிமக்களிடம் இருந்து உருவாவது மோசமான அரசும், மோசமான சட்டங்களுமே ஆகும்".

**– கில்கிறிஸ்ட் (*Gilchrist*)**

### இந்திய அரசமைப்பின் ஆதாரங்கள் (Sources of the Indian Constitution)

- இந்திய அரசாங்க சட்டம் 1935 – கூட்டாட்சி முறை, ஆளுநர், நீதித்துறையின் பங்கு, நெருக்கடி நிலை அதிகாரங்கள்.
- பிரிட்டன் அரசமைப்பு – சட்ட உருவாக்கமுறைகள், நாடாளுமன்ற அரசாங்கம், சட்டத்தின் ஆட்சி, ஒற்றைக்குடியுரிமை, ஈரவை அரசாங்கம்.
- அமெரிக்க அரசமைப்பு – அடிப்படை உரிமைகள், சுதந்திரமான நீதித்துறை, நீதிப்புனராய்வு, குடியரசுத் தலைவர் பதவி நீக்க நடைமுறை, உயர்நீதிமன்ற மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் மீதான குற்ற விசாரணை, துணைக்குடியரசுத் தலைவரின் பங்கு.

### 4.1.5. சட்டம் எவ்வாறு அரசுடனும், நீதி நெறியுடனும் தொடர்பு கொண்டுள்ளது?

சட்டமும், நீதிநெறியும் சமமாக பாவிக்கப்படுகிறது. நீதிநெறியானது குடிமக்களுக்கு ஒழுக்க விதிகளை போதிக்கிறது. அதேபோல, அரசால் இயற்றப்படுகின்ற சட்டமும் இந்த லட்சியத்தை அடைய பாடுபடுகிறது. மக்களின் நலனை மேம்படுத்தும் ஒரே நோக்கத்துடன் அரசு செயல்படுகிறது. சட்டத்திற்கும், நீதிநெறிக்கும் உள்ள நல்லுறவை போலவே, சட்டத்திற்கும் அரசிற்கும் இடையே உள்ளது.

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**

"தனிமனிதனின் நல்லொழுக்கத்திற்கு சரிசமமாக இயங்கக்கூடியது நல்லரசாகும். அரசியல் உடற்கூறில் ஏதேனும் ஒரு பகுதி பாதிக்கின்றபோது, ஒட்டுமொத்த உடலும் பாதிப்புறும்".

**– பிளாட்டோ (*Plato*)**

சட்டமும் ஒழுக்கமும் ஒன்றோடு ஒன்று மிகுந்த தொடர்புடையன ஆகும். ஒழுக்க விதிமுறைகள் என்பவை குடிமக்களின்



11th Std Political Science Tamil_Unit-4.indd 99 6/20/2018 7:16:14 PM

நன்னடத்தைகளுக்கு அடிப்படையாகும். நல்லியல்பு அரசு நற்குடிமக்களை பெற்று சிறந்து விளங்குகிறது. நல்லியல்பற்ற அரசானது, ஒழுக்கம் தவறிய குடிமக்களைப் பெற்று சீரழியும். அரசின் உயிர்மூச்சான செயல்பாடாக "நீதி நெறிகள்" விளங்குகின்றன.

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**

நீதிநெறியானது நல்லியல்பு கடமைகளைப் பற்றியது, ஆனால் அரசால் இயற்றப்படும் சட்டமோ சட்டக் கடமைகளை பற்றியதாகும்.

தீண்டாமையை ஒழிப்பதற்கு இந்திய அரசாங்கம் கடந்த பல ஆண்டுகளாக போராடிக்கொண்டிருக்கிறது. தீண்டாமைக்கு எதிரான பல சட்டங்களையும் இயற்றியுள்ளது. தீண்டாமை போன்ற சமூக அவலங்களுக்கெதிராக சட்டங்கள் இருந்தாலும், சாதி, மதம், இனம், வர்க்கம், நிறம் அடிப்படையில் பாகுபாடு காட்டும் கொள்கையானது பாவம் என்பதை அறிய வேண்டும். மேற்கூறியவைகளின் அடிப்படையில் சமூகத்தில் எழும் இன்னல்களுக்கு அளவே இல்லாததாக இருக்கிறது. அரசாங்கம் மக்கள் உடல்நிலைக்கும், மனநிலைக்கும் பங்கம் விளைவிக்கும் மது மற்றும் குழந்தை திருமணம் போன்றவற்றை தடுக்கும் பல சட்டங்களை இயற்றி வருகிறது. பொதுவாக மக்களாட்சியில் ஒழுக்க நெறிகளுக்கு எதிரான சட்டம் என்று ஒன்று இல்லை.

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**

நீதிநெறிகள் என்பவை அரசிற்கு அத்தியாவசியமான நிபந்தனையாக விளங்குகிறது. சட்டமும், அரசும் பொதுமக்கள் கருத்தை உருவாக்கவும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தவும் தொடர்ந்து முயற்சிகள் எடுத்துக்கொண்டிருக்கின்றன. சட்டமானது பொதுக்கருத்தை பிரதிபலிப்பதோடு நல்லியல்புகளின் மேம்பாட்டிற்கான குறியீடாகவும் விளங்குகிறது.

**– மேக்ஜவர் (*MacIver*)**

வில்சன், "அரசின் சட்டங்கள் என்பவை நீதிநெறியிலான சமூகத்தை உருவாக்குவதாகும்" என்று தெளிவாக தெரிவித்துள்ளார். இதனாலேயே சட்டத்தை உருவாக்கும் இறையாண்மையானது, சட்டத்திற்கும், நீதிநெறிக்கும் ஒரு நெருங்கிய உறவை ஏற்படுத்த விழைகிறது.

### சட்டத்திற்கும் நீதிநெறிக்கும் உள்ள வேறுபாடுகள் (The Distinction between Law and Morality)

- அரசு சட்டங்களை அமலாக்கம் செய்கிறது, சட்டத்தின் கட்டளைகளையும், கட்டுப்பாடுகளையும் மீறுபவர்கள் சட்டத்தினால் தண்டிக்கப்படுகிறார்கள்.
- சமூக விதிகளையும், சமூக நீதிநெறிகளையும் மதியாதவர்களுக்கும் எதிராக நடப்பவர்களுக்கும் சமூக புறக்கணிப்பு என்பதே மாபெரும் தண்டனையாக அமைகிறது.
- நீதிநெறி என்பது மனிதர்களின் அக மற்றும் புற நடவடிக்கைகள் தொடர்புடையதாகும். ஆனால் சட்டமோ மனிதர்களின் புற நடவடிக்கைகளுடன் மட்டுமே தொடர்புடையதாகும். இதனாலேயே மனிதர்கள் தங்கள் புற நடவடிக்கைகளின் மூலம் சட்டத்தை மீறும்போது, தண்டிக்கப்படுகிறார்கள்.
- ஒரு நபர் திருட்டோ அல்லது கொலையோ அல்லது வழிப்பறியோ செய்யும்பட்சத்தில் மட்டுமே தண்டிக்கப்படுகிறார்.
- அதே போல், ஒரு நபர் சமூகத்தில் பொய் கூறினாலோ அல்லது ஏமாற்றினாலோ அதே சட்டத்தினால் தண்டிக்கப்படுகிறார்.
- பொய் கூறுவதும், பிறருக்கு கண்டனம் தெரிவிப்பதும், விசுவாசமற்று இருப்பதும் பாவங்களாக கருதப்படுகின்றதே ஒழிய குற்றங்களாக அல்ல. ஒழுக்கமற்ற செயல்கள் கூட அரசிற்கு நன்மை பயக்குமெனில் அது சட்டபூர்வமானது தான் என்று மாக்கியவல்லி கூறுகிறார்.

**பொதுக் கருத்து !**

பொதுவான நலனுக்கான மக்களின் கருத்தாகும்.

**நீதிநெறி என்றால் என்ன?**

சமூக எதிர்மறைகளான மது, சூது, திருட்டு, வழிப்பறி, கொலை, கொள்ளை, போன்றவைகளை கட்டுப்படுத்தும் சமூக உறுப்புகள் நீதிநெறி எனப்படுகிறது. நீதிநெறிகள் தொடர்பான சட்டங்கள் எப்போதும் நிலையானவைகளாகும்.

### 4.1.6. பொதுக்கருத்தும், சட்டமும் ஒன்றுக்கொன்று எவ்வாறு தொடர்புடையவை?

மக்களாட்சி நடைமுறையில், தங்களின் பிரதிநிதிகளை தேர்ந்தெடுப்பதன் மூலம் மக்கள் அரசியலில் பங்கேற்பதுதான், மக்களாட்சியை வலிமையுள்ளதாக மாற்றுகின்றது. சட்ட உருவாக்கத்தில் மக்கள் நேரடியாக பங்கு பெறவில்லையென்றாலும், சட்ட மன்றத்தின் பிரதிநிதிகளை அவர்களே தேர்ந்தெடுக்கின்றார்கள். வாக்காளர்களின் விருப்பத்தை பூர்த்தி செய்வதற்காகவும், திருப்திபடுத்துவதற்காகவும் இப்பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவ்வாறு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்றமானது மக்களின் விருப்பத்தை பிரதிபலிக்கின்றது. சட்டத்திற்கும், பொதுக் கருத்திற்கும் இடையேயான நெருங்கிய தொடர்பை பார்ப்போம்.

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**



தற்கால அரசானது, நீதிநெறி, மதம் மற்றும் இயற்கை சட்டத்தின் லட்சியவாத அடிப்படையில் நீடிக்கிறது எனலாம். அதே சமயத்தில் அரசு, தனது சுய பாதுகாப்பிற்காக மேற்குறிப்பிட்ட ஒன்றையோ அல்லது அனைத்தையுமோ மீறுகிறது.

**– J.M. கோட்ஸீ (*J.M. Coetzee*)**

மக்களின் கருத்தை அடிப்படையாகக் கொண்டே மக்களாட்சியில் சட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. மக்கள் தங்கள் அதிருப்தியையும், கோபத்தையும் அமைதியான போராட்டங்களின் மூலமாக அரசுக்கு வெளிப்படுத்துகிறார்கள். மக்களின் பொதுநலனும், சமூக மேம்பாடும், பொதுக் கருத்தின் இரு கண்களாகும்.

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**



நீதிநெறி கடமைகளை மறுதலிப்பதும், சட்டக் கடமைகளை மறுதலிப்பதும் நீதிநெறிகளை முற்றிலும் நாசமாக்குகிறது. சட்ட மனசாட்சி மற்றும் நீதிநெறி மனசாட்சி என்ற இரு வேறு மனசாட்சிகள் ஒன்றோடு ஒன்று எப்போதும் ஒத்துவராதவைகளாகும்.

**– மேக் ஐவர் (*MacIver*)**

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**



சட்டமும், ஒழுங்கும் நீதியை நிலைநாட்டுவதற்காக இயங்குகிறது. இதை செய்ய தவறும்பட்சத்தில், சமூக வளர்ச்சியை தடுக்கும் ஆபத்தான தடுப்பு அணைகளாக இவை மாறுகின்றன.

**–மார்டின் லூதர்கிங் ஜீனியர் (*Martin Luther King. Jr*)**

**கலந்துரையாடல்**

- சட்டம்தான் சமூதாயத்தினை பாதுகாக்க கூடிய உண்மையான பாதுகாவலர் என்பதற்கான காரணங்களை விளக்குக.
- சமூக வளர்ச்சிக்கு ஏற்ற வகையிலான சட்டம் ஒன்றை பரிந்துரை செய்.



11th Std Political Science Tamil_Unit-4.indd 101 6/20/2018 7:16:15 PM

- எந்த அளவிற்கு சரியானவையாக நிகழ்காலச் சட்டங்கள் உள்ளன. அதில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் பற்றி உன் கருத்தை கூறு.



- சட்டம் உண்மையில் நமது சுதந்திரத்திற்கு தடையாக உள்ளதா?
- மக்களாட்சியில் பொதுக்கருத்தின் முக்கியத்துவத்தினை விவரி.
- சட்டமும், நீதிநெறியும் ஒன்றுடன் ஒன்று எவ்வாறு உறவு கொண்டவை என்பதை விளக்குக.
- சட்டம் மற்றும் நீதிநெறியினை எப்படி வேறுபடுத்துவீர்கள்?

## 4.2. குடியுரிமை

### 4.2.1 அறிமுகம்

அரசியல் கோட்பாட்டில், குடியுரிமை என்பது குடிமக்களுக்கான சட்டப்பூர்வமான அங்கீகாரம் மட்டுமல்லாது, நெறிமுறை நல்லியல்பிற்கு இணங்க, அரசியல் செயல்பாடுகளில் முழுமையாகவும், சமமாகவும் பங்கேற்கின்ற உரிமையையும் அனைத்து குடிமக்களுக்கும் அளிப்பதாகும். மக்களாட்சியும், குடியுரிமையும் எப்போதும் ஒரே நேர்கோட்டில் செல்லக்கூடியது ஆகும். மக்களாட்சி என்பது அரசியல் கட்சிகள், தேர்தல் முறைமைகள், சட்டத்தின் ஆட்சி போன்றவைகளிலும், குடியுரிமை என்பது தனிமனிதர்களிடத்தும் முக்கிய கவனம் செலுத்துகின்றன.

குடியுரிமையானது ஒவ்வொரு நாட்டிற்கும் வேறுபட்டதாக இருக்கிறது. தற்கால அரசுகளில், குடியுரிமையானது, குடிமக்களுக்கான உரிமைகள் மட்டுமல்லாது மக்கள் அரசுக்கு ஆற்றவேண்டிய கடமைகளையும் உள்ளடக்கியதாக காணப்படுகிறது. நீங்கள் இயற்கை குடியுரிமை (Natural Citizenship) உடையவரா அல்லது தங்கியிருத்தல், திருமணம் போன்றவற்றால் தகுதி ஆக்கப்பட்டு பெறப்படும் (Naturalized Citizenship) குடியுரிமையை வேண்டி பெற்றவரா? இவ்விரண்டிற்கும் வித்தியாசம் யாவை? இயற்கையான குடிமக்கள் என்பது இம்மண்ணில் பிறந்ததன் மூலமாக இயற்கையாக அந்த குடியுரிமையை அடைவது ஆகும். ஆனால் இயற்கையாதலான குடிமக்கள் என்போர் பின்னர் குடியுரிமையைப் பெற்றவர்களாவர்.

அரிஸ்டாட்டிலின் கூற்றுபடி, குடியுரிமை என்பது பிறப்பிடம், குடும்பம், பரம்பரை மற்றும் பண்பாட்டைச் சார்ந்து அமைவதாகும். 'ஸ்டாயிக்குகளின் (Stoics)' கருத்து வளர்ச்சியடைந்த பெருநகரங்களில் வசிப்பவர்களுக்கே குடியிரிமை வழங்கப்பட வேண்டும் என்பதாகும். கன்பூசியசின் (Confusius) கருத்து பொது நலத்தை சீரமைத்து அதில் அனைவரும் தங்கள் நலனிற்காகவும், இணக்கத் சூழலுக்காகவும் பாடுபடவேண்டும் என்பதாகும். இந்தியாவிலும் இதே போன்று வசுதேவக் குடும்பகம் (Vasudeva Kudumbakam) (ஒரே உலகம், ஒரே குடும்பம்) என்பது ஒரு நல்லியல்பு கருத்தாக்கமாக காணப்படுகிறது.

### 4.2.2 குடியுரிமை மற்றும் நகரஅரசு (Citizenship and City-State)

கிரேக்க மற்றும் ரோமானிய குடியரசுகளில் முக்கியத்துவம் பெற்ற குடியுரிமை என்பது நிலப்பிரபுத்துவ காலங்களில் முற்றிலுமாக மறைந்தது. மறுபடியும், மறுமலர்ச்சி காலக்கட்டத்தில் மனிதத்தன்மையின் விரும்பத்தக்க பகுதியாக குடியுரிமை மலர்ந்தது. பண்டைய ஏதென்சின், நகர அரசில் குடியுரிமை என்பது அரசின் கடமைகளில் பங்கேற்பதாக அறியப்பட்டது.

குடியுரிமை என்பதை அரிஸ்டாட்டில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக



11th Std Political Science Tamil_Unit-4.indd 102 6/20/2018 7:16:15 PM

கருதினார். ஏனெனில் லட்சிய அரசு என்பது சட்டத்தின் அடிப்படையிலான, சட்டத்தை மதிக்கும் குடிமக்களாலேயே சாத்தியப்படும் எனக் கருதினார். அவர் மேலும் கூறுகையில், ஒவ்வொரு மனிதனும் அரசியல் விலங்கு என்றும், நகர அரசில் மட்டுமே அவன் முழுமையடைவான் என்றும் கூறுகிறார். எனவே அரசியல் பதவிகளை விரும்புவது இயற்கை என்கிறார். மேலும் அப்பெருமகனார், குடியுரிமை என்பது குடிமக்களையும், வேற்றுநாட்டவர்களையும் மட்டுமல்லாது பிறநாட்டு அடிமைகளையும் உள்ளடக்கியதாக ஓர் ஆட்சியில் காணப்படுவதாக விளக்குகிறார். ஒரு நாட்டின் குடிமகன் என்பவன் சட்டத்துறை, நீதித்துறை தொடர்பான அலுவல்கள் மட்டுமல்லாமல் அரசமைப்பின்படி அரசியல் உரிமைகளையும், அனுபவிக்கும் உரிமை பெற்றவனாக விளங்குகின்றான்.

### 4.2.3. மார்ஷலின் பகுப்பாய்வு (Marshall's Analysis)

சுதந்திர சமூக மக்களாட்சிவாதியான மார்ஷல், குடியுரிமையையும், சமூக நிலைமைகளையும், முதலாளித்துவ அடிப்படையில் ஆராய்கிறார். அவரது கருத்தின்படி, குடியுரிமை மூன்று வகைப்படுகிறது. அவை குடிமை, அரசியல் மற்றும் சமூகம் சார்ந்த குடியுரிமைகளாகும்.

அனைத்து தனிமனிதர்களுக்கும் சுதந்திரம் என்பது குடிமை விவகாரங்களில் தேவைப்படுகிற ஒரு முக்கியமான அம்சமாகும். சட்டத்தின் ஆட்சியில், குடியுரிமை என்பது ஒரு தனித்துவம் பெற்ற அம்சமாக விளங்குகிறது. ஒரு குடிமகனாக, நமக்கு அரசியல் தொடர்பான முடிவெடுக்கும் முறைமையில் பங்குபெறுவதற்கு முழு உரிமை உண்டு. இது அரசியல் வகைப்பாட்டில் பிரதிபலிக்கிறது.

**அரிஸ்டாட்டிலின்** வரையறையின்படி "எவர் ஒருவருக்கு விவாதங்களிலும் அரசின் நீதி நிர்வாக அமைப்பிலும் பங்கேற்க அதிகாரம் இருக்கிறதோ அவரே குடிமகன் ஆவர்".

கிரேக்கர்கள் மக்களாட்சியின் கீழ் வாழும் பேறுபெற்றவர்கள். அவர்களின் அரசாங்கம் சாதாரண மக்களால் உருவாக்கப்பட்டது. அவர்கள் தங்கள் பேச்சு உரிமையின் மூலமாக மிகப்பெரிய பேச்சு சுதந்திரத்தை பெற்றிருந்தனர்.

### 4.2.4 குடியுரிமை மற்றும் கல்வி (Citizenship and Education)

இப்பிரிவில், கல்விக்கும், குடியுரிமைக்கும் உண்டான தொடர்பை பல்வேறு தத்துவஞானிகளின் கருத்துகள் வாயிலாக பார்க்கலாம்.

அரிஸ்டாட்டிலின் கூற்றின்படி, அனைத்து வகை மனிதர்களுக்கும் மூன்று பண்புகள் மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும்.

- அரசமைப்பிடம் விசுவாசம்.
- கடமைகளில் அதிகபட்ச திறனுடன் இருத்தல்.
- நல்லியல்பு மற்றும் நீதி வழுவாமை.

மக்களாட்சி நாடானது, அரசியல் மற்றும் பொருளாதார சமத்துவத்தை எப்போதும் நிலைநாட்டுகிறது. இதனால் நல்லியல்பு கொண்ட மனிதனுக்கும், நல்ல குடிமகனுக்குமான அடையாளம் எளிதில் காணப்படுகிறது.

பிளாட்டோவின் கருத்துப்படி, கல்வியே நாட்டில் நிலவும் ஊழலுக்கும், நிலைத்தன்மையற்ற அரசியலுக்குமான தீர்வாக கருதப்படுகிறது. இதனால், அப்பெருமகனார், கல்வியானது பயனுள்ளதாகவும், பொறுப்புள்ளதாகவும் அமைய வேண்டும் என கூறுகிறார். **அரிஸ்டாட்டில்**(Aristotle),**ஹியூம்**(Hume), மற்றும் **ரூசோ**(Rousseau), ஆகியோரின் கூற்றுப்படி ஓர், நாட்டின் குடிமக்களுக்கு, தங்களது நாட்டின் சக குடிமக்களின் அணுகுமுறை, எதிர்பார்ப்பு ஆகியவை பற்றிய அறிவு வேண்டும் என கூறுகின்றனர். **J.S.மில்**(J.S.Mill), மற்றும் **அலெக்ஸ் டோக்யூவில்லி**(TocqueVille), ஆகியோர் மேலே குறிப்பிட்டதற்கு மாறாக

"குடிமக்களுக்கு, அரசியலில் பங்குபெறவும், உள்ளாட்சி அரசாங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், தன்னார்வ மற்றும் நீதி கடமைகள் ஆற்றவும், சங்கங்களை நிர்வகிக்கவும், கல்வி அதிகமாக தேவைப்படுகிறது" என கூறுகிறார்கள்.

### 4.2.5. இந்தியாவில் குடியுரிமை (Citizenship in India)

இந்தியா ஒரு மதச்சார்பற்ற, மக்களாட்சி மற்றும் தேசிய அரசு ஆகும். சுதந்திர இயக்கம் எதனால் உண்டானது? பல்வேறுபட்ட மதங்கள், பிராந்தியங்கள் மற்றும் பண்பாட்டினை ஒன்றிணைக்கும் காரணகர்த்தாவாக இவ்வியக்கம் தொடங்கப்பட்டது. இந்திய பிரிவினையில் முஸ்லீம் லீக் கட்சியுடன் வேறுபாடுகள் இருந்தபோதிலும், சுதந்திர போராட்ட இயக்கத்தின் இந்திய தேசிய தலைவர்களின் மூலம், மதச்சார்பற்ற மற்றும் அனைத்து மக்களையும் உள்ளடக்கிய இந்திய தேசமாக வலிமைப்படுத்தியது.



உங்களுக்குத் தெரியுமா?

*வயதான பெற்றோர், முதியோர் பராமரிப்பு மற்றும் நலன் சார்ந்த சட்டம் (MWPSC Act) 2007-ல், முதியவர்கள் மற்றும் பெற்றோர் நலனுக்காக இயற்றப்படட்டது .*

**இச்சட்டத்தின் படி....**

- *முதியோருக்கு துரிதமாகவும், பயனுள்ளதாகவுமான நிவாரணத்தை வழங்க "பராமரிப்பு தீர்ப்பாயத்தினை" (Maintenance Tribunal) நிறுவியது.*
- *இச்சட்டத்தின்படி, பராமரிப்பு என்பது உணவு, உடுத்த உடை, இருப்பிடம் மற்றும் மருத்துவ சிகிச்சையையும் உள்ளடக்கியது ஆகும்.*
- *இச்சட்டத்தின் ஒரே நிபந்தனையாக, எவரெல்லாம் தன் சொந்த வருமானத்திலும், உடைமையின் மூலமும் தன்னை பராமரிக்க இயலாதவர்களாக இருக்கிறார்களோ அவர்கள் இப்பராமரிப்பின் கீழ் உட்படுவார்கள்.*
- *இச்சட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிகபட்ச பராமரிப்புச் செலவாக மாதம் ₹10,000 அளிக்க கட்டாயமாக்கப்பட்டது. பராமரிப்புத் தொகையானது, உரிமை கோருபவர்களின் தேவைகள் மற்றும் அவர்கள் இயல்பு வாழ்க்கையை வாழ்வதற்கான தேவைகளைப் பொருத்தும் அமைகிறது.*
- *பெற்றோர்களும், முதியோர்களும் அரசாங்கத்தின் இச்சலுகையை அனுபவிக்க, பாரமரிப்பு தீர்ப்பாயத்தின் முன் பராமரிப்பு அதிகாரியிடம் தங்கள் விருப்பங்களை முறையிடலாம். இச்சட்டத்தின்படி, வழக்கறிஞர்கள், தீர்ப்பாயத்தின் முன் எவருக்காவும் வாதாட இயலாது.*
- *முதியோர் நலனைப் பாதுகாக்கும் பொறுப்பில் இருக்கக்கூடிய யாரேனும் நன்கறிந்தே அவர்களை கைவிடும்பட்சத்தில், ₹5,000 அபராதமோ அல்லது மூன்று மாதம் சிறை தண்டனையோ அல்லது மேற்கூறிய இரண்டு தண்டனையுமோ வழக்கப்படலாம்.*

**கலந்துரையாடல்**

*ஒரு மகனாகவோ அல்லது மகளாகவோ நீங்கள் உங்கள் பெற்றோருக்கு ஆற்ற வேண்டிய கடமைகளை வகுப்பில் விவாதி.*

இவ்வலிமையான தீர்மானத்தை நாம் அரசமைப்பில் கண்கூடாக பார்க்கலாம். இந்திய அரசமைப்பானது பாரபட்சமின்றி அனைத்து மக்களுக்கும் குடியுரிமை வழங்குகிறது. பெண்கள், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர், அந்தமான் நிக்கோபரின் கடைக்கோடி சமூகங்கள் போன்றோர் இதுகாறும் அனுபவித்திராத குடியுரிமை தற்போது வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரு குடிமகனின் நற்பண்புகளை விளக்கப்படமாக தயாரித்து, உனது ஆசிரியருக்கும், நண்பர்களுக்கும் பகிர்வு செய்க.

குடியுரிமை பற்றிய சட்டங்கள், அரசமைப்பின் பகுதி இரண்டிலும் மற்றும் அவை தொடர்பான நாடாளுமன்ற சட்டங்களிலும் காணப்படுகிறது. இந்தியாவில் குடியுரிமையானது, பிறப்பு, வம்சாவழி,



11th Std Political Science Tamil_Unit-4.indd 105 6/20/2018 7:16:16 PM

பதிவு, இயல்புரிமை மற்றும் பிரதேச உள்ளடக்கத்தின் மூலம் பெறப்படுகிறது. அரசமைப்பின்படி அரசாங்கம் குடிமக்களை இனம், சாதி, பாலினம், பிறப்பிடம் போன்ற நிலைகளில் வேற்றுமைப்படுத்தல் ஆகாது. மேலும் மதம் மற்றும் மொழி சார்ந்த சிறுபான்மையின மக்களின் உரிமைகளும் பாதுகாக்கப்படுகிறது.

### 4.2.6 உலக குடியுரிமை மற்றும் தேசியக் குடியுரிமை

தேசியக் குடியுரிமை என்பது, நாம் குடியிருக்கும் நாட்டின் அரசாங்கம் நமக்களிக்கும் பாதுகாப்பும் உரிமையுமாகும். ஆனாலும் அரசிற்கு தீர்க்கக்கூடிய பிரச்சினைகள் பெருமளவில் இருப்பதால், தனிமனித உரிமைகள் அவர்களுக்கு வழங்கப்பட்டு சட்டத்தினால் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ளது.




உலக குடியுரிமை என்பது தேசிய எல்லைகளை கடந்த குடியுரிமையாகும். இவ்வுரிமையானது, பலதரப்பட்ட மக்களும், நாடுகளும் சேர்ந்த கூட்டுறவு நடவடிக்கையை வலியுறுத்துகிறது. இதனால், குடியுரிமை என்பது பல்வேறுபட்ட சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை தீர்க்கக்கூடியதாக அமைகிறது. மேலும் உலகளாவிய குடியுரிமை, உலக நாடுகளின் ஒற்றுமையையும், கூட்டுறவின் வலிமையையும் பறைசாற்றுகிறது.

**செயல்பாடு**

- 1955 –ஆம் ஆண்டின் குடியுரிமைச் சட்டம் மற்றும் அதன் தற்போதைய சட்ட சீர்திருத்தங்கள் ஆகிவைகளைப் பற்றி உனது வகுப்பறையில் கலந்துரையாடுக.
- வெளிநாடு வாழ் இந்தியர்கள் (Non-Resident Indian – NRI), கடல் கடந்து வாழும் இந்தியக் குடிமக்கள் (Overseas Citizen of India-OCI) மற்றும் இந்திய வம்சவளியினர் (Person of Indian Orgin-PIO) ஆகியோரிடையே உள்ள வேறுபாடுகளைக் கண்டுபிடி.



11th Std Political Science Tamil_Unit-4.indd 106 6/20/2018 7:16:17 PM

## 4.3. உரிமைகள் மற்றும் கடமைகள்

### 4.3.1. அறிமுகம்

உரிமைகள் என்ற வார்த்தை நம்முடைய நீதிநெறி, சட்டம் மற்றும் அரசியல் சொல்லகராதியில் பல நுற்றாண்டுகளாக இடம் பெற்றுள்ளதை நாம் காண்கிறோம். உரிமைகள் என்பது பொதுவாக உலகில் காணப்படுவது, மேலே உள்ள நீதிநெறி, சட்டம், அரசியல் ஆகிய அனைத்தும் ஒன்றாக இணைந்து உருவானதே மனித உரிமைகள் ஆகும். இந்த உரிமைகள் இன்றியமையாதவையாக நவீன காலத்தில் அமைந்துள்ளதற்கு அது அரசமைப்பிலும், பன்னாட்டு மனித உரிமை பிரகடனங்களிலும் இடம் பெற்று இருப்பது காரணம் ஆகும். மனித இனத்தில் பிறந்த அனைவரும் மனிதனாக பிறந்ததற்கான அடிப்படையில் மனித உரிமைகளை கொண்டு இருக்கின்றார்கள். இந்த அடிப்படையில் அனைத்து மனிதர்களும் சாதி, மத, இன, வகுப்பு வேறுபாடுகளைக் கடந்து நீதிநெறியிலான சமத்துவத்தின் அடிப்படையில் மனித உரிமைகளைப் பெறுகிறார்கள்.

**கற்றலின் நோக்கங்கள்**

- உரிமைகளின் பொருள் மற்றும் அதன் இயல்புகள்
- உரிமைகள் மற்றும் பொறுப்புக்களுக்கிடையே உள்ள வேற்றுமைகள்
- பல்வேறு வகையான உரிமைகள்
- அரசின் வழிகாட்டும் நெறிமுறைகள்
- குடிமக்களின் அரசியல் கடப்பாடுகள்
- குடியுரிமை
- சொத்து பற்றிய கோட்பாடுகளின் பார்வை

**பொது மக்களின் விருப்பத்திற்கு மக்களாட்சியில் மதிப்பளித்தல்**

மக்களாட்சியில் அனைத்து வயது வந்த குடிமக்களும் தேர்தலில் வாக்களிப்பார்கள். வாக்களிப்பதன் மூலமாக மக்கள் தங்களின் அரசாங்கம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்ற விருப்பத்தை வெளிப்படுத்துகின்றனர்.

தேர்தலில் பெரும்பான்மையான வாக்குகளைப் பெற்றவர்கள் வெற்றி பெறுவதும், குறைந்த வாக்கினைப் பெற்றவர்கள் தோல்வியுறுவதும் இயல்பாகும். இருப்பினும் வெற்றி பெற்ற பெரும்பான்மையினர் தோல்வியடைந்த சிறுபான்மையிரை மறந்து விட முடியாது. இரண்டு குழுக்களும் ஒன்றோடொன்று இணைந்து வாழ வேண்டும். நீங்கள் சிறுபான்மையினர் எனில் பெரும்பான்மையினரின் தேர்வினை ஏற்று கொண்டிருக்கிறீர்கள் என பொருள்படுகிறது. பெரும்பான்மையோராக இருப்பதென்பது சிறுபான்மையினரை மதிப்பதாகும். அதேபோன்று சிறுபான்மையினராக இருப்பவர்கள் பெரும்பான்மையினருடன் ஒத்துழைக்க வேண்டும். அவர்கள் விரும்புவதை அடுத்த தேர்தலில் முயற்சி செய்து பெற வேண்டும். இருப்பினும் தற்போதைக்கு அவர்கள் ஐம்பது சதவீதத்திற்கு மேலான வாக்காளர்களின் விருப்பத்திற்கு இசைந்து செல்ல வேண்டும்.

ஒருவரை ஒருவர் மதிப்பது என்பது நாம் இணைந்து சிறப்பாக வாழ உதவி செய்கிறது. மக்கள் தாங்கள் நினைப்பதை பிறரிடம் கூறுவதற்கு உரிமை உள்ள அதே நேரத்தில் பிறருடைய கருத்துக்களுக்கும் மதிப்பளிக்க வேண்டும். ஒவ்வொரு தேர்தலும் அனைத்து தரப்பினருக்கும் தாங்கள் விரும்புவதைக் கூறவும், தங்களுக்குத் தேவையானவற்றிற்காக வாக்களிக்கவும் வாய்ப்பளிக்கிறது.

### உரிமைகள் பற்றி உங்களுக்கு தெரியுமா?

சமூக வாழ்க்கையில் உரிமைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை இல்லாமல் எந்த ஒரு மனிதனும் பொதுவாக தமது சுயத்தை சிறப்பாக உணர முடியாது. மக்கள் தங்களின் உரிமைகளைப் பெற்று அனுபவிக்கும் போது மட்டுமே அவர்களின் ஆளுமைத் திறன் மேம்பட்டு சமுதாயத்திற்கு சிறந்த பங்களிப்பினை மேற்கொள்வர்.

உரிமை என்பது பொதுமக்களின் விருப்பக் கோரிக்கைகள் ஆகும். ஒவ்வொரு பண்பாட்டிலும் இத்தகைய கோரிக்கைகள் சமூகத்தினால் அங்கீகரிக்கப்பட்டு வளர்ச்சிக்கு மிக முக்கியமானதாக பார்க்கப்படுகின்றது. அதனால் தான் அரசுகள் இவற்றை நடைமுறைபடுத்துகின்றன.

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**

நீதிநெறியிலானவனாக மனிதனின் பணியை நிறைவேற்றுவதற்குத் தகுந்த அதிகாரங்களே உரிமையாகும்.

**– டி.எச்.கீரின் (*T.H.Green*)**

**ஐசையா பெர்லின் (Isaiah Berlin)** உரிமை என்பதை வரையறை செய்யும்போது நேர்மறை சுதந்திரம் மற்றும் எதிர்மறை சுதந்திரம் என்பவை பற்றி குறிப்பிடுகின்றார். நேர்மறை சுதந்திரம் என்பது பேச்சுரிமை பற்றியதாகும். உதாரணமாக ஒருவர் தன்னுடைய கருத்தை பொது வெளியில் அச்சமின்றிக் தெரிவிப்பதாகும். எதிர்மறை சுதந்திரம் என்பது உடல் சார்ந்த தலையீடு இல்லாமல் ஒருவர் சுதரந்திரமாக இருப்பதாகும்.

### இயல்புகள்

- உரிமைகள் என்பது மக்களின் பகுத்தறிவு மற்றும் தார்மீக கோரிக்கைகள் ஆகும். இது அவர்களுடைய சமூக மேம்பாட்டிற்கு முக்கியமானதாக அமைந்துள்ளது.
- உரிமை என்பது மதம், சாதி, இனம், பாலினம் என்று பாராமல், அனைவருக்கும் கிடைக்க கூடியது.
- உரிமைகள் மற்றும் கடமைகள் இவ்விரண்டும் ஒன்றோடு ஒன்று இணைந்ததாகும். "கடமைகள் இல்லை என்றால் உரிமைகள் இல்லை". "நான் சில உரிமைகளை பெற்றிருக்கிறேன் என்றால் சமுதாயத்தில் பிறருடைய உரிமைகளை மதிக்க நான் கடமைப்பட்டுள்ளேன்" என்று உணர்ந்து கொள்ள வேண்டும்.
- உரிமைகள் அனைத்தும் நீதி மன்றத்தில் வழக்கிட்டு பெறக்கூடியது ஆகும்.
- உரிமைகளை பாதுகாப்பது மற்றும் நடைமுறைபடுத்துவது அரசின் சட்டங்கள் ஆகும். மேலும் மக்களின் உரிமைகளை பாதுகாப்பது அரசின் கடமை ஆகும்.

### உரிமைகள் மற்றும் பொறுப்புகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகளை நாம் காண்போம்.

உரிமைகள் மற்றும் பொறுப்புகள் இவை இரண்டும் பிரிக்கமுடியாதவை ஆகும். உலகில் பிறக்கும் மனிதர்கள் அனைவருக்கும் அதிகமான பொறுப்புகளும் கூடவே பிறக்கின்றன. அவர்களுக்கு அதனால் இயற்கையாகவே போதுமான உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. உரிமைகள் என்பது ஒரு மனிதன் தனது அன்றாட பல்வேறு பொறுப்புகளை செய்வதற்கு உறுதுணையாக நிற்கின்றது.

### உங்களது கடமை, பொறுப்புகள் என்னென்ன?

- இந்தியாவின் ஒற்றுமையும், இறையாண்மையும் பாதுகாத்தல்.
- பொது சொத்தை பாதுகாத்தல்.
- இந்தியாவின் இயற்கை வளங்களை பாதுகாத்தல். (உதாரணமாக வன விலங்குகள், ஏரிகள், குளங்கள், காடுகள், ஆறுகள்)
- சாதி, இனம், நிறம் மற்றும் பொருளாதார நிலைமைகளைக் கடந்து அனைவரிடத்திலும் சகோதரத்துவத்தையும், நல்லிணக்கத்தையும் பராமரித்தல்.

- இந்தியாவின் பண்பாட்டையும், சமூக நல்லிணக்கத்தையும் பாதுகாத்தல்.
- தேசியக்கொடி மற்றும் தேசியகீதம் போன்றவற்றுக்கு மரியாதை செலுத்துதல்.

**பல்வேறு வகையான உரிமைகள் பற்றி உங்களுக்கு தெரியுமா?**

**அ) இயற்கை உரிமைகள் (Natural Rights)**

இந்த வகையான உரிமைகள் மனித இயல்பு மற்றும் பகுத்தறிவின் ஒரு பகுதியாகும்.

**குழந்தைகளுக்கான உரிமைகள்**

புறக்கணிப்பு, சுரண்டல், கொடூரம், சச்சரவுகள் ஆகியவைகளிடமிருந்து பாதுகாத்தல் உரிமை.



**குழந்தைகளுக்கான பொறுப்புகள்**

ஒருவருக்கு ஒருவர் தாக்குதல் மற்றும் துன்புறுத்தல் நடத்திக் கொள்ளாமல் இருத்தல்.



**குழந்தைகளுக்கான உரிமைகள்**

வீடு, பள்ளி மற்றும் அவர்கள் போகும் இடமெல்லாம் சுத்தமான சூழல் அமைதல் உரிமை.



**குழந்தைகளுக்கான பொறுப்புகள்**

செல்லும் இடங்களிலெல்லாம் சுற்றுச்சூழல் மாசுபடாமல் பார்த்துக் கொள்ளுதல்.



**குழந்தைகளுக்கான உரிமைகள்**

கல்வி பெறும் உரிமை.



**குழந்தைகளுக்கான பொறுப்புகள்**

தங்களால் எவ்வளவு கற்றுக்கொள்ள முடியுமோ அதனைக் கற்றுக் கொண்டு மற்றவர்களும் கற்றுக் கொள்வதற்கு உதவுதல்.



**குழந்தைகளுக்கான உரிமைகள்**

சுதந்திரமான மதவழிபாடு மற்றும் சிந்தனை உரிமை.



**குழந்தைகளுக்கான பொறுப்புகள்**

தங்களின் வீடு பள்ளி மற்றும் எங்கெங்கு இருக்கிறார்களோ அந்த இடங்களை சுத்தமான சூழலாக வைத்துக் கொள்ளுதல்.



இதனை பற்றி அரசியல் கோட்பாடுகள் கூறுவது என்னவென்றால் ஒவ்வொரு மனிதனும் சில அடிப்படை உரிமைகளைப் பெற்றுள்ளான். இதனை அரசாங்கங்கள் கூட மறுக்க இயலாது. மரபுவழி அரசியல் தத்துவத்தில் "இயற்கை உரிமை" என்பது நேர்மையை அடிப்படையாகக் கொண்ட சிறந்த செயலையும், தூய ஆத்மா, சரியான செயல்பாடுகள் மற்றும் அரசின் சிறந்த ஆட்சி என குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஆ) நீதிநெறி உரிமைகள் (Moral Rights)

நீதிநெறி உரிமை என்பது நன்னடத்தை, மரியாதை, நல்லொழுக்கம் ஆகியன பற்றியது ஆகும். இது அறநெறியின் படி மக்களை முழுமையாக வழி நடத்தி செல்கின்றது.

### இ) சட்ட உரிமைகள் (Legal Rights)

சட்ட உரிமைகள் என்பது நாட்டின் அனைத்து குடிமக்களுக்கும் சமமாகக் கிடைக்க கூடிய ஒன்றாகும். இதில் எவ்வித பாகுபாடும் இன்றி பின்பற்றப்படுகிறது. சட்ட உரிமைகள் என்பது அரசினால் ஏற்று கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்ட விதிமுறைகள் ஆகும். சட்ட உரிமைகள் என்பது மூன்று வகைப்படும்.

### குடிமை உரிமைகள் (Civil Rights)

இந்த வகையான உரிமைகள் ஓர் மனிதன் சமூகத்தில் நாகரிகமான வாழ்க்கையை வாழ்வதற்கு அடிப்படை உரிமைகளை வழங்குகிறது. இது அரசினால் பாதுக்காக்கப்படுகிறது. அதாவது உயிர் வாழுகின்ற உரிமை, சுதந்திரம், மற்றும் சமத்துவம் ஆகிய குடிமை உரிமைகளை அரசு நிலைநாட்டி பாதுகாக்கிறது.

### அரசியல் உரிமைகள் (Political Rights)

மக்கள் தங்களது நன்னடத்தையின் மூலம் அரசியல் நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கு வழிவகை செய்வது அரசியல் உரிமைகள் ஆகும். இது வாக்களிக்கும் உரிமை, தேர்ந்தெடுக்கப்படும் உரிமை, பொதுப் பதவி வகிக்கும் உரிமை போன்றவை ஆகும்.

### பொருளாதார உரிமைகள் (Economic Rights)

இந்த உரிமைகள் தனிமனிதனுக்கு பொருளாதார பாதுகாப்பு அளிப்பதாகும். இதன் மூலம் மக்கள் தங்களது குடிமை மற்றும் அரசியல் உரிமைகளைப் பயன்படுத்த அதிகாரம் அளிக்கப்படுகிறது. பொருளாதார உரிமை என்பது ஒருவருக்கு வேலைவாய்ப்பு உரிமை, தகுந்த பாதுகாப்பு உரிமை, சமூக பாதுகாப்புரிமை ஆகியவற்றினை அளிப்பது போன்றவை ஆகும்.




### ஈ) ஒப்பந்தம் மூலம் பெறும் உரிமைகள் (Contractual Rights)

இவ்வகையான உரிமைகள் என்பது தனி மனிதனுக்கு ஒரு குறிப்பிட்ட நிகழ்வில் வழங்கப்படுகிற வாக்குறுதிகள் அல்லது ஒப்பந்தங்கள் வாயிலாக தோற்றுவிக்கப்படுகிறது. இது ஒரு குறிப்பிட்ட சூழலில் தனி மனிதர்களுக்கு வழங்கப்படும் உறுதிகள் மற்றும் அதன் செயலாக்கங்களும் ஆகும். இதற்கு உதாரணமாக கூறவேண்டுமானால் பொருட்களை வாங்கும் உரிமை, சேவை பெறும் உரிமை, பொருள் அல்லது சேவையை விற்கும் உரிமை ஆகியவற்றினைக் குறிப்பிடலாம்.

### உ) மனித உரிமைகள் (Human Rights)

மனித உரிமைகள் என்பவை உரிமைகளில் மிகவும் உயர்ந்து இருப்பதாகும். இவை தார்மீக அடிப்படையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இது உலகளவிலான மனித குலத்தின் நல்லியல்பில் உள்ளதாகும். இது உள்நாட்டு அளவிலும், சர்வதேச அளவிலும் சட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் மூலமாக ஆதரவளிக்கப்பட்டு பாதுகாக்கப்படுகிறது.



11th Std Political Science Tamil_Unit-4.indd 110 6/20/2018 7:16:19 PM




### உரிமைகள் மசோதா மற்றும் அடிப்படை உரிமைகள் பற்றி அறிந்து இருக்கிறீர்களா?

உரிமைகள் மசோதா என்பது அமெரிக்காவில் டிசம்பர் 15-ல், 1791-ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. இது தனிமனித உரிமைகளின் உத்திரவாதங்களை மிகுந்த வலிமையுடன் மத்திய மற்றும் மாநில அரசுகளால் கருத்திணைவு அடிப்படையில் செயல்படுத்த வழிவகை செய்தது.



ஜேம்ஸ் மேடிசன் இந்த 'உரிமைகள் மசோதா'வை அறிமுகப்படுத்தினார். இது, அவர் 1776இல் வெளியிட்ட புகழ்பெற்ற வெர்ஜீனியா மனித உரிமைகள் பிரகடனத்தின் அடிப்படையில் அமைந்தது ஆகும்.

**– ஜேம்ஸ் மேடிசன் (*James Madison*)**

### ஜேம்ஸ் மேடிசன் (James Madison)

உரிமைகள் மசோதா என்பது இங்கிலாந்தின் மகாசாசனம் (Magna Carta) (1215) மற்றும் ஆங்கில உரிமைகள் மசோதா (1689) ஆகியவற்றில் இருந்து பெறப்பட்டது. இது காலனி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தினால் மன்னர் மற்றும் நாடாளுமன்றம் போன்றவற்றின் ஆதிக்கத்திற்கு எதிராக உருவாக்கப்பட்டது ஆகும். அமெரிக்காவின் உரிமைகள் சாசனம் அந்த நாட்டின் சட்டம் மற்றும் அரசாங்கத்தில் மையபங்கு வகிப்பதாகும். சுதந்திரம் மற்றும் பண்பாட்டின் அடிப்படை சின்னமாகவும் இது விளங்குகிறது.

# உரிமை சாசனம்

## முதல் பத்து அமெரிக்க அரசியலமைப்பு சட்டத்திருத்தம்




**அடிப்படை உரிமைகள்**

நிகழ் ஆய்வு **நிகழ் ஆய்வு**

*கருத்து சுதந்திரம் மற்றும் இணைய வழி சவால்கள். கீழே கொடுக்கப்பட்டுள்ள சில நிகழ்வுகளின் அடிப்படை உரிமைகள் ஒவ்வொன்றும் மீறப்படுகிறதா அல்லது ஆதரவு அளிக்கிறதா என பதிவிடுக.*

| எண். | வழக்குகள் | ஆதரவு / உரிமை மீறல் |
|---|---|---|
| 1. | ஒரு பெண் பார்வையாளர் கலைக்கூடப் பகுதிக்கு செல்வதை அவரது பாலினம் அடிப்படையில் தடை செய்தல் | |
| 2. | சிறுபான்மையினர் தங்களுக்கான தனிப்பட்ட கல்வி நிறுவனங்களை உருவாக்கி நிர்வகிக்க முடியும். | |
| 3. | ஸ்ரேயா சிங்கல் (Shreya Singhal) என்பவர் டெல்லியில் வசிக்கும் 21 வயது பெண் ஆவார். இவர் உச்ச நீதிமன்றத்தில் பொது நலமனு ஒன்றினை தாக்கல் செய்துள்ளார். அந்த மனுவில் தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் பிரிவு 66A மீதுள்ள சந்தேகத்தினால் அதனை எதிர்த்து தாக்கல் செய்துள்ளார். | |
| 4. | கேலிச்சித்திர வரைவாளர் (Cartoonist) அசிம் த்ரிவேதி மீது மகாராஷ்டிர அரசு ராஜதுரோக வழக்கு தொடுத்துள்ளது. இது அவர் இணையதளத்தில் வெளியிட்ட கேலிச்சித்திரம் காரணமாக தொடுக்கபட்டுள்ளது. | |
| 5. | வடகிழக்கு மாநில பெண் ஒருவர் பெங்களூரு மாநகரில் வசிப்பதற்கு அனுமதி மறுக்கப்படுதல். | |
| 6. | சமூக ஊடகங்கள் மீது தடைகளை விதிக்கக்கூடிய சட்டப்பிரிவுகளை உருவாக்கி, ஊடகத்தின் செயல்பாடுகள் முடக்கப்படுவது என்பது குடிமை சமூகத்திற்கு விடுக்கப்படும் சவாலாகும். | |
| 7. | 2012-ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பாகிஸ்தான் சமூக ஆர்வலர் மலாலா யூசப்ஜாய் (Malala Yousafezai) என்பவர் பெண் கல்வியை வலியுறுத்தியதற்காக தாலிபான்களால் தலையில் சுடப்பட்டார். | |



11th Std Political Science Tamil_Unit-4.indd 112 6/20/2018 7:16:23 PM

**அடிப்படை உரிமைகள்**




இந்தியா 1947-ஆம் ஆண்டு தனது சுதந்திரத்தை பிரிட்டிஷ் காலனியாதிக்க ஆட்சியிடமிருந்து பெற்றது. அதன் பிறகு இந்திய உரிமைகளைப் பெரிதும் வலியுறுத்தக் கூடிய மதச்சார்ப்பற்ற, மக்களாட்சி நாடாக உருவானது.

1947-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 29-ம் நாள் அரசமைப்பு நிர்ணய சபையானது வரைவு குழுவை உருவாக்கி அதற்கு தலைவராக டாக்டர் அம்பேத்கரை நியமனம் செய்தது. அதில் தோராயமாக 7635 சட்ட திருத்த மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட்டு அதில் 2437 மசோதாக்கள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

1950-ஆம் ஆண்டு ஜனவரி 24-ஆம் தேதி பன்னிரெண்டாவது அரசமைப்பு நிர்ணய சபையின் கூட்டத்தொடரில் இராஜேந்திரபிரசாத் முதலாவது இந்திய குடியரசு தலைவராக தேர்தெடுக்கப்பட்டார், இதன் பிறகு அரசமைப்பு நிர்ணய சபையின் சட்ட மற்றும் அரசியல் வல்லுனர்கள் அரசமைப்பு கூட்டத்தினை அதிகாரப்பூர்வ பிரதிகளில் கையெழுத்திட்டனர்.

**உங்களுக்குத் தெரியுமா?**

அரசமைப்பு நிர்ணயசபையானது இந்திய அரசமைப்புச்சட்டத்தினை வரையறை செய்ய 2 ஆண்டுகள் 11 மாதங்கள் 20 நாட்கள் எடுத்துக்கொண்டது.



இந்திய அரசமைப்பின் சட்டப் பகுதி III-இல் அடிப்படை உரிமைகள் உள்ளன. இந்த பகுதியில் நாட்டினுடைய மக்களாட்சி முறையின் அடிப்படை கூறுகளைப் பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது. இந்திய அரசமைப்பு சட்டமானது அதன் உரை மற்றும் பரப்பெல்லை அளவில் உலகில் மிகப்பெரியதாகும். அடிப்படை உரிமை பற்றி மிகவும் நுண்ணிய கருத்துக்கள் அனைத்தையும் அடிப்படை உரிமைகள் உள்ளடங்கியதாக உள்ள காரணத்தினால் தான் அது அளவிலும் பெரியதாக உள்ளது.

## செயல்பாடு

**கேலிச்சித்திரத்தைப் பார்த்து என்ன அனுமானிக்கிறீர்கள்? (தி இந்து 5.12.2012).**




தகவல் தொழில் நுட்ப சட்டப் பிரிவு 66A எதைப்பற்றிக் கூறுகிறது.____________________

______________________________________

______________________________________

**இந்தப் பகுதியில் அடங்கியுள்ள கருத்துக்களை காண்போம்.**

### சமத்துவ உரிமை (Right to Equality)

சமத்துவ உரிமை என்பது சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற உத்திரவாதத்தினை அளிக்கிறது. இது சாதி, மதம், மொழி, இனம், பாலினம் ஆகியவற்றிலான பாகுபாட்டை தடை செய்கின்றது. இது மேலும் பொது இடங்களுக்குச் செல்வதற்கு உள்ள பாகுபாட்டையும் தடைசெய்கிறது. இது



11th Std Political Science Tamil_Unit-4.indd 113 6/20/2018 7:16:24 PM

அனைவருக்கும் கோவில்கள், உணவகங்கள், விடுதிகள் மற்றும் பொதுவான கேளிக்கை இடங்கள் ஆகியவற்றிற்கு அனைவரும் செல்ல அனுமதிக்கிறது. இது மேலும் மாநிலங்கள் மற்றும் ஒன்றிய பிரதேசங்களில் உள்ள குடிமக்கள் அனைவருக்கும் சமமான பணி வாய்ப்பினை வழங்குகிறது. இது தீண்டாமையை எந்த வடிவத்திலிருந்தாலும் தடை செய்வதுடன் இதனை பெரும் குற்றமாகக் கருதுகிறது.

### சுதந்திர உரிமை (Right to Freedom)

சுதந்திரம் மற்றும் சமத்துவம் ஆகிய இரண்டுமே மக்களாட்சிக்கு தேவையான அடிப்படை உரிமைகள் ஆகும். இந்த உறுப்பு பின்வரும் உரிமைகளைக் குடிமக்களுக்கு அளிக்கிறது. சுதந்திரமான பேச்சு மற்றும் கருத்து உரிமை, பொதுஇடத்தில் ஆயுதங்களின்றி அமைதியாகக் கூடுதல், சங்கம் அமைக்கும் உரிமை, நாடு முழுவதும் சுதந்திரமாக உலவுகின்ற உரிமை போன்றவற்றை வழங்குகிறது. உங்களுக்கு தெரியுமா... இந்த உறுப்பு தான் எவரும் தாங்கள் விரும்பக்கூடிய எந்த தொழிலையும் செய்ய அனுமதிக்கிறது. ஆம். நீங்கள் ஒரு மருத்துவமனை அமைக்கலாம், மருந்தகம் நடத்தலாம் அல்லது நீங்கள் ஒரு பெரிய வணிக வளாகம் கூட அமைத்து நடத்தலாம்.

**குறிப்பிடத்தக்க மேற்கோள்**

கடமைகள் மற்றும் உரிமைகள் இரண்டும் ஒன்றிலிருந்து ஒன்றை பிரிக்க முடியாதவை, பின் உள்ள உரிமைகள் வழங்கும் சலுகைகள்தான் தனது கடமைகளை ஒருவர் செய்வதற்கு காரணமாகிறது.

**மகாத்மா காந்தி (*Mahatma Gandhi*)**

## செயல்பாடு

### மக்களாட்சி மற்றும் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல்

ஏற்றுகொள்கிறேன் / மறுக்கிறேன்

கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுக்கள் இரண்டு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளது. அதில் நீங்கள் எது சரியாக இருக்கும் என்று கருதுகின்றீர்களோ அதனை அதில் குறிப்பிடவும்.

- பெண்களுக்கும், சிறுமிகளுக்கும் கல்வி அறிவுவழங்கப்பட்டால்அதுஅவர்களுடைய குடும்பம் மற்றும் சமுதாயத்தின் வளர்ச்சியை அதிகப்படுத்துகிறது.
- பெண்கள் எப்போதும் ஆண் துணைகளைச் சார்ந்தே இருப்பார்கள். உதாரணமாக தந்தை, கணவர், சகோதரர், மற்றும் மகன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.
- பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு கல்வி அளிக்கபட்டால் பொருளாதாரம் வளரும், உடல்நலம் மேம்படும், நாடு எழுச்சியுறும்.
- பெண்கள் வீட்டை பராமரிப்பதற்கும், சமையல் செய்யவும் மட்டுமே உள்ளனர்.
- பெண்கள் மற்றும் சிறுமிகள் ஆகியோர் பொதுவாக நடனம், ஓவியம், மற்றும் சமையல் போன்றவற்றில் சிறந்தவர்களாக விளங்குவார்கள்.
- கல்வி அறிவு என்பது பெண்கள் மற்றும் சிறுமிகளுக்குக் வாழ்க்கை பாதையை அமைத்துக் கொடுக்கும். மேலும் அமைதியையும், அதிகாரத்தையும் அளிக்கும்.
- மாலாலா யூசுப்சாய் (*Malala Yousufzai*) என்ற 17 வயது பாகிஸ்தான் நாட்டு இசுலாமிய இளம்பெண் ஒருவர் பெண் கல்விக்கு தொடர்ந்து குரல் கொடுத்து வருகின்றார்.

நான் இதனை ஏற்றுகொள்கிறேன் ____________

____________________________________

____________________________________

நான் இதனை மறுக்கிறேன் ______________

____________________________________

____________________________________

## வாழும் உரிமை மற்றும் தனிநபர் சுதந்திரம் (Right to Life and Personal Liberty)

எந்த ஒரு குடிமகனுக்கும் தனிநபர் சுதந்திரம் மறுக்கப்பட கூடாது. அதாவது எந்த ஒரு மனிதனும் கைது செய்யப்படும் போது அதற்கான காரணத்தை அவனுக்கு தெரிவிக்காமல் காவலில் வைக்கக் கூடாது. மேலும் அவர் தனது சார்பாக வாதாட ஒரு வழக்குறைஞரை தேர்தெடுத்து கொள்ளும் உரிமை வழங்கப்பட வேண்டும். அவர் கைது செய்யப்பட்ட 24 மணி நேரத்திற்குள்ளாக நீதிமன்றத்தின் முன்பாக ஆஜர்படுத்தப்பட வேண்டும்.

## தடுப்புக் காவல் (Preventive Detention)

தடுப்புக் காவல் என்பது காலத்தின் கட்டாயத்தினால் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவரின் செயலை தடுப்பதற்கானதாகும். தடுப்பு காவல் என்பது ஒருவர் சட்டம் மற்றும் ஒழுங்கை அச்சுறுத்தும் வகையிலும், தேசப்பாதுகாப்பு மற்றும் அமைதிக்கு குந்தகம் விளைவிப்பதையும் தடுப்பதற்காக அரசால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை ஆகும். இதற்காக அந்த நபரைக் கைது செய்யவோ அல்லது காவலில் வைக்கவோ அரசாங்கத்திற்கு அதிகாரம் உள்ளது.

**சுதந்திரத்தின் முக்கியத்துவத்தை விளக்கும் கதை ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. படித்து மகிழுங்கள்!!!**

ஒரு அழகான இளவரசி வாழ்ந்தாள். அவள் பறவைகள் மீது அளவற்ற பற்று கொண்டிருந்தாள். அவளது அரண்மனைக்கு தினமும் காலையில் ஒரு சிறிய பறவை வந்து அவளுக்காகப் பாடிச் செல்லும். அந்த பறவையை பார்ப்பதிலும், அதன் பாட்டை கேட்பதிலும் அவளுக்கு மிக்க மகிழ்ச்சி. தினமும் இளவரசி அந்த பறவைக்காக காத்திருந்து அதனுடைய இசையை கேட்டு ரசித்து வந்தாள். அந்த பறவையை அவள் மிகவும் நேசித்ததுடன் பகல் பொழுது முழுவதையும் அதனுடன் கழித்து வந்தாள். ஒருநாள் இளவரசி அந்த பறவையை தங்க கூண்டில் அடைத்து வைத்து, சிறந்த உணவுகளை வழங்கி வந்தாள். இருப்பினும் பறவை சோகத்தில் ஆழ்ந்தது. அந்த பறவை எதையும் உண்ணவும் இல்லை. பாடவும் இல்லை. சிறப்பான உணவுகள் வழங்கப்பட்டாலும், நாளடைவில் அந்தப் பறவை மிகவும் பாதிக்கப்பட்டு உடல்நலம் குன்றத் தொடங்கியது. பாடுவதும் கிடையாது. ஒரு நாள் இளவரசி அந்த பறவையை பார்த்து "என்ன காரணம், உணவு உண்ணவும், பாடுவதற்கும் மறுக்கிறாய்?" என்று கேட்டாள். அதற்கு அந்த பறவை, "நான் கூண்டிலிருந்து விடுதலை அடைய விரும்புகிறேன்" என்று கூறியது. அக்கனிந்த மனம் கொண்ட இளவரசியும் உடனடியாக அந்த பறவையை விடுவித்து பறக்கவிட்டாள். பறவை மகிழ்ச்சியுடன் சுதந்திரமாகப் பறந்து சென்றது. மறுநாள் காலை அந்தப் பறவை வழக்கம் போல் அரண்மனைக்கு வந்து இளவரசியைப் பார்த்து மகிழ்வோடு பாடியது. இந்த கதையின் மூலம் நாம் அறிவது என்னவென்றால் பறவையே எத்தகைய சிறப்பான உணவு கொடுக்கப்படினும் அடைபட்டுக் கிடக்க விரும்புவதில்லை. நீங்கள் வளர்க்கக்கூடிய நாய் மற்றும் பூனை கூட சங்கிலியால் பிணைக்கப்பட்டுவதை விரும்புவதில்லை. மனிதன் சுதந்திரமாக பிறக்கிறான் சுதந்திரமாக வாழ விரும்புகிறான். இந்த காரணத்தினால் தான் நமது சுதந்திர போராட்ட தியாகிகள் ஆங்கிலேயரை தைரியமாக எதிர்த்து சுதந்திரத்தினை பெற்றார்கள். அடிமையாக வாழுவதைவிட செத்துப்போவதே மேல் என்று அவர்கள் நினைத்தார்கள். இது அவர்கள் விடுதலை மற்றும் சுதந்திரத்திற்குக் கொடுத்த முக்கியத்துவத்தினை வெளிப்படுத்துகிறது.

Source: http://www.publishyourarticles.net/eng/articles2/a-short-story-on-freedom/2447/



11th Std Political Science Tamil_Unit-4.indd 115 6/20/2018 7:16:24 PM

## சுரண்டலுக்கு எதிரான உரிமை (Right Against Exploitation)






நம் நாட்டில் இலட்சக்கணக்கானோர் சுரண்டலுக்கு உள்ளாக்கப்பட்டு தவறாகப் பயன்படுத்தப்படுகிறார்கள். இவர்கள் அனைவரும் சமூகத்தின் அடித்தட்டு மக்களே ஆவர். தற்போதைய நிலையில் "ஆட்கடத்தல்" (Human Trafficking) என்பது மனிதர்களுக்கு எதிரான மிகவும் ஆபத்தான சுரண்டலாக திகழ்கின்றது. ஆட்கடத்தல் செய்தல் என்பது மனிதர்களை விற்பதும், வாங்குவதும் அவர்களை அடிமைகளைப் போன்று நடத்துவதும் ஆகும். இது மட்டுமின்றி குழந்தைத் தொழிலாளர் முறையும் சுரண்டலின் மற்றொரு பகுதி ஆகும். இக்குழந்தைகள் ஊதியமின்றி பணிசெய்யக் கட்டாயப் படுத்தப்படுகிறார்கள். இந்த காரணத்தினால் தான் அரசமைப்புச் சட்டத்திலேயே அரசு சுரண்டலுக்கு எதிரான உரிமையை வழங்கியுள்ளது. இதன்படி ஆட்கடத்தல் செய்தல் மற்றும் கட்டாயப்படுத்தி பிச்சையெடுக்க வைத்தல் ஆகியவை கட்டாயப் பணி செய்ய வைத்தலின் வடிவங்களாகும். மேலும் இது பதினான்கு வயதிற்குட்பட்ட சிறார்களை தொழிற்சாலைகள், சுரங்கங்கள் அல்லது உடலுக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய எத்தொழிலும் ஈடுபட வைப்பதை தடை செய்கிறது.

## மத சுதந்திர உரிமைகள் (Right to Freedom of Religion)

இந்தியாவில் அனைத்து மக்களும் தங்களது மதம் மற்றும் நம்பிக்கையினைத் தேர்தெடுத்து அதன்வழி செல்லும் உரிமையை அரசமைப்பு சட்டம் வழங்கி உள்ளது. இதன் மூலமாக அனைவரும் தங்களது மதத்தின் படி வழிபடுவதுடன் பரப்புரையும் செய்யலாம். இந்த உரிமைகள் மதத்தில் சமூகம் மற்றும் தனிப்பட்ட அம்சங்களைக் கொண்டதுடன் நாட்டின் குடிமக்கள் அனைவரும் இதனை அனுபவித்து வருகிறார்கள்.

மத சுதந்திரத்திற்கான உரிமை அனைவருக்கும் அளித்துள்ள உத்திரவாதம் என்னவென்றால் அனைவரும் தங்களது சுய விருப்பத்தின்படி அவர்களுக்கு ஏற்புடைய மதத்தினை தழுவுதல், பின்பற்றுதல் மற்றும் அதனைப் பரப்பலாம் என்றும், மேலும் பொது ஒழுங்கு, நீதிநெறிமுறைகள் மற்றும் சுகாதார வரையறைகளுக்கு உட்பட்டு அவர்களுடைய அச்செயல்பாடுகள் அமைய வேண்டும் என்றும் கூறுகின்றது. அரசமைப்பின் உறுப்பு 26-ன்படி ஒவ்வொருவரும் மதவிவகாரங்களின் அடிப்படையில் சேவை புரிவதற்காக நிறுவனங்களை உருவாக்கி, அதற்கென அசையும் மற்றம் அசையா சொத்துக்களை உரிமையாக்கி சட்டத்தின் அடிப்படையில் நிர்வகிப்பதாகும்.

## பண்பாடு மற்றும் கல்வி உரிமைகள் (Cultural and Educational Rights)

இந்தியாவின் மதம், மொழி மற்றும் பண்பாடு அடிப்படையிலான சிறுபான்மையினர், குழுக்கள் அல்லது பிரிவினருக்கு அரசமைப்பின் மூலம் இந்த அரசியல்சாராத உரிமைகள் வழங்கப்படுகிறது.

**செயல்பாடு**

1. இந்தியாவில் எத்தனை மொழிகள், எழுத்துவடிவங்கள், மற்றும் வட்டார வழக்கு மொழிகள் உள்ளன எனக் கண்டுபிடி.
2. இந்தியாவின் ஆட்சி மொழிகள் யாவை?



11th Std Political Science Tamil_Unit-4.indd 116 6/20/2018 7:16:24 PM

எந்த குடிமகனும் அரசு நடத்தும் அல்லது அரசின் நிதியுதவி பெறும் கல்வி நிறுவனங்களில் கல்விபெறுவதற்கு உரிமையுண்டு என்பதனை மறுக்க இயலாது. இந்த உரிமையை சாதி, மதம், இனம், பாலினம், நம்பிக்கை போன்றவற்றைக் காரணம் காட்டி மறுக்க இயலாது. குடிமக்கள் தாங்கள் விரும்பும் பள்ளிகள் அல்லது கல்லூரிகளில் கல்வி கற்றும் உரிமை உள்ளது. எந்த ஒரு கல்வி நிறுவனமாவது இந்த அடிப்படையில் பாகுபாடு காட்டுமாயின் அரசின் நிதி உதவி அந்தக் கல்வி நிறுவனத்திற்கு மறுக்கப்படும். மேலும் இந்த சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் எவ்விதமான கல்வி முறையை பின்பற்ற வேண்டும் என்பதனை அரசு வலியுறுத்த முடியாது. அந்தக் கல்வி நிறுவனங்களை அவரவர்களது பண்பாட்டினை பாதுகாக்கும் வகையில் செயலாற்ற அனுமதிக்க வேண்டும்.

உங்களுக்குத் தெரியுமா?

இந்திய அரசமைப்பின் உயிர் மற்றும் இதயமாக எதனை நீங்கள் கருதுவீர்கள்?

## அரசமைப்பு சட்ட பரிகார உரிமைகள் (Right to Constitutional Remedies)

ஒரு குடிமகன் தனது உரிமையை பாதுகாத்து கொள்வதற்கு உச்ச நீதிமன்றம் அல்லது உயர் நீதிமன்றத்தினை அணுகுவதற்கு இந்த உரிமை வழி வகை செய்கின்றது. அரசமைப்பின் உறுப்பு 32-இன்படி உச்ச நீதிமன்றம் பரிகாரம் செய்யலாம். அதுவே அரசமைப்புச் சட்ட உறுப்பு 226-இன்படி உயர்நீதிமன்றம் பரிகாரம் செய்கின்றது. இதற்காக நீதிமன்றம் நீதிப்பேராணைகளை பிறப்பிக்கிறது. இவைகள், ஐந்து வகைப்படும்.

- ஆட்கொணர்வு நீதிப் பேராணை (Writ of Habeas Corpus)
- கட்டளை நீதிப் பேராணை (Writ of Mandamus)
- சான்றாய்வு நீதிப் பேராணை (Writ of Certiorari)
- தகுதி வினவும் நீதிப் பேராணை (Writ of Quo Warranto)
- தடைநீதிப் பேராணை அல்லது தடை உத்தரவு (Writ of Prohibition or Injunction)

ஆகவே அடிப்படை உரிமைகள் என்பது தனிமனித உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை பாதுகாக்கின்ற கருவியாக நம் நாட்டில் பயன்படுகிறது. அந்த வகையில் அடிப்படை உரிமைகளை செயல்படுத்தும்போது, மக்களாட்சி அடிப்படையிலான வாழ்க்கை முறையும் அதன் அடிப்படைக்கொள்கைகளான சமத்துவம் மற்றும் நீதியையும் சமூகத்தில் நிலைநிறுத்துகிறது. அடிப்படை உரிமைகள் நம் நாட்டின் சுதந்திரத்தில் ஒரு மைல்கல் ஆகும். இது வழக்கு விசாரணை மற்றும் பெருந்துன்பத்திற்குப் பிறகு நமக்கு கிடைத்துள்ளதாகும்.

**நீங்கள் புதிய உரிமைகளை பற்றி தெரிந்துகொள்ளுங்கள்!!!**

### தகவல் அறியும் உரிமை (Right to Information)

நீங்கள் அரசிடம் இருந்து ஏதேனும் தகவல் பெற வேண்டுமா? அதனை நீங்கள் தாராளமாக கேட்கலாம். அவர்கள் எப்படி வேலை செய்கிறார்கள், அதன் உறுப்பினர்கள் யார்? அவர்களுக்கு உதவி செய்வது யார்? போன்றவற்றை கேட்கலாம். அதற்கு உங்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறு என ஆச்சர்யமாக இருக்கிறதல்லவா? ஆம்! இது உண்மையே! இதற்கு தகவல் உரிமை சட்டம் 2005-இல் வழி வகை செய்து அரசாங்கத்திடம் மக்கள் தகவல்கள் கேட்பதனை சட்டப்பூர்வமாக்கியுள்ளது. இந்தச்சட்டமானது அரசாங்கங்களை வெளிப்படைத் தன்மை கொண்டதாகவும், குடிமக்களுக்கு பொறுப்புணர்வு கொண்டதாகவும் மாற்றியுள்ளது. இதன் மூலமாக அரசின் நடவடிக்கைகளை தகவலறிந்த குடிமக்கள் எளிதாகக் கண்காணிக்க முடியும். இதனால் அரசாங்கம் மக்களுக்கு கடமைப்பட்டதாக மாற்றப்பட்டுள்ளது.

### தனியுரிமை (Right to Privacy)

இந்திய மக்கள் கண்டிப்பாக தனி மனித வாழ்வின் மதிப்பு மிக்க அம்சங்களான வாழ்க்கை, சுதந்திரம் மற்றும் விடுதலையை யாரிடமும் ஒப்படைக்க வேண்டியதில்லை. அரசிடம் தனி மனிதனின் அனைத்து உரிமைகளை சமர்ப்பிக்க வேண்டியதில்லை. தனியுரிமை என்பது மனிதனின் மாண்புடன் ஒன்றிணைந்ததாகும். தனியுரிமையைப் பாதுகாப்பதற்கு அரசமைப்பின் உறுப்பு 21-இல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது வாழ்வுரிமை மற்றும் தனிநபர் சுதந்திரத்தின் உள்ளார்ந்த பகுதியாகும். இந்த உரிமைகள் அரசமைப்பின் பகுதி – III-இல் இடம் பெற்றுள்ளது.

### மாற்றுப்பாலினத்தவரின் உரிமைகள் (Rights of Transgenders)

மாற்றுப்பாலினத்தவர் என்பவர் யார்? அவர்களை நீங்கள் பார்த்து இருக்கீறீர்களா? மாற்றுப்பாலினத்தவர் என்போர் எந்த வயதினராகவும், சாதாரணமாக ஆண், அல்லது பெண் போன்றும் இருப்பார்கள். ஆனால் அவர்கள் தங்களது குணாதிசயங்களில் ஆடவர் அல்லது மகளிரிடமிருந்து மாறுபட்டு காணப்படுவார்கள். அவர்கள் காலங்களைக் கடந்தும் அனைத்து பண்பாடுகள், இனம் மற்றும் அனைத்து வகுப்புகளிலும் இருக்கிறார்கள். வெகு சமீப காலங்களில்தான் அவர்களின் பிரச்சனைகள் பேசப்படுகின்றன. அவர்கள் இப்போது 'மூன்றாம் பாலினம்' என்று அழைக்கப்படுகின்றனர். உச்சநீதிமன்றமானது மத்திய – மாநில அரசுகளுக்கு ஓர் உத்தரவை வழங்கியுள்ளது. அதில் இவர்களின் பாலின அடையாளத்தினை சட்ட பூர்வமாக அங்கீகரிக்கும்படி கூறியுள்ளது. இவர்களுக்கும் மற்றவர்களுக்கு அளிக்கப்பட்ட அனைத்து அடிப்படை உரிமைகளையும் வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இவர்கள் பொது நலம் மற்றும் சுகாதாரம், சமூக – பொருளாதார உரிமைகளாகிய அனைத்தும் பெறும் உரிமையுடையவர்கள் ஆவர்.

### அரசின் நேரடி வழிகாட்டி நெறிமுறைகள் (Directive Principles of State Policy)

அரசின் நேரடி வழிகாட்டி நெறிமுறைகள் இந்திய அரசமைப்பின் பகுதி நான்கில் இடம் பெற்றுள்ளது. இதில் அரசியல், சமூக, பொருளாதார திட்டங்களை உள்ளடக்கி அரசுக்கு வழிகாட்டக்கூடிய பல மக்கள் நலக்கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இந்த நெறிமுறைக் கோட்பாடானது மனித நலன் சார்ந்த சமதர்ம நோக்கினைக் கொண்ட ஒரு செயல் திட்டத்தை உருவாக்கிக் கொடுத்துள்ளது. அரசின் நேரடி வழிகாட்டி நெறிமுறைகளில் போதிய அளவிற்கு தற்போதைய அரசாங்கங்களுக்கு நேரடி வழிகாட்டி நெறிமுறைகள் கூறப்பட்டுள்ளன. அதனை அரசு நடைமுறைப்படுத்தி ஆணுக்கும், பெண்ணுக்கும் சரிசமமான வாழ்வாதாரங்களை உருவாக்கித் தர வேண்டும் என இச்சட்டம் கூறுகிறது. இது ஆணுக்கும், பெண்ணுக்கும் சரிசமமான ஊதியத்தை வழங்குகின்றது. இந்த நேரடி வழிகாட்டி நெறிமுறையில் உள்ள கொள்கையின்படி அனைவருக்கும், போதிய ஓய்வு, வாழ்க்கை தரம், மற்றும் சமூக, பண்பாட்டு வாய்ப்புகள் போன்றவை உறுதி செய்யப்படுகின்றன.

அரசின் வழிகாட்டி நெறிமுறைகளில் காந்தியக் கொள்கைகள் இடம் பெற்றுள்ளன. அவற்றின்படி குடிசைத் தொழில்கள் தனிநபரின் அடிப்படையிலோ அல்லது கூட்டுறவு அடிப்படையிலோ கிராமப்புற பகுதிகளில் ஊக்குவிக்கப்பட வேண்டும் என கூறுகிறது. மேலும் காந்திய கூற்றுப்படி மதுவிலக்கு அமல்படுத்தப்பட வேண்டும் என கூறுகிறது.

அரசின் நேரடி வழிகாட்டி நெறிமுறைகளில் இடம் பெற்றுள்ள சுதந்திர மக்களாட்சிகொள்கையின்படி அனைவருக்கும் 'பொது குடிமைச் சட்டம்' கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது மேலும் 6 வயது முதல் 14 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு இலவச கட்டாய



11th Std Political Science Tamil_Unit-4.indd 118 6/20/2018 7:16:24 PM